நாட்டரசன்கோட்டை

அருள்மிகு கண்ணுடைய நாயகி அம்மன்

கும்பாபிஷேக

நகரத்தார் திருப்பணி மலர்



1-5-1989

உ
சிவமயம்
ஸ்ரீ கண்ணுடையநாயகி அம்மன் துணை

அருள்மிகு
கண்ணுடையநாயகி அம்மன் கும்பாபிஷேக

நகரத்தார்
திருப்பணி மலர்

பதிப்பாசிரியர் :-
சுப. இராம. சுப. இராமநாதன் செட்டியார்
துணைப் பதிப்பாசிரியர் :-
நா. சே. நாராயணன்

1·5·1989
நகரத்தார்
நாட்டரசன்கோட்டை,
623556 - பசும்பொன் மாவட்டம்.

பொருளடக்கம்

பக்கம் எண் :

63-1

உ

சிவமயம்

ஸ்ரீ கண்ணுடையநாயகி அம்மன் துணை

திருப்பணிக்குழு

தலைவர் : திரு. கயி. ஆறு. ஞா. ஆறுமுகம் செட்டியார் அவர்கள்

துணைத்தலைவர் & பொருளாளர் : திரு. பழ. வீர. கண. ச. கண்ணப்ப செட்டியார் அவர்கள்

செயலாளர் : திரு. ராம. உ. உ. கருப்பையா செட்டியார் அவர்கள்

உறுப்பினர்கள்

1. திரு. செவு. சித. ஆவி. சிதம்பரம் செட்டியார் அவர்கள்
2. ,, நல. வே. குமரப்ப செட்டியார் அவர்கள்
3. ,, சுப. ராம. மெ. நடராசன் செட்டியார் அவர்கள்
4. ,, அரு. சேவு. கரு. ஆவிச்சி செட்டியார் அவர்கள்
5. ,, சுப. ராம. சுப. ராமனுதன் செட்டியார் அவர்கள்
6. ,, சுப. கி. வே. சா. ஏகப்ப செட்டியார் அவர்கள்
7. ,, Y. சத்தியமூர்த்தி செட்டியார் அவர்கள்
8. ,, மு. கண. ராம. நா. சே. நாராயணன் செட்டியார் அவர்கள்
9. ,, பெரி. அரு. கண. ராமசாமி செட்டியார் அவர்கள்
10. ,, இராம. சிவசுப்பிரமணியன் செட்டியார் அவர்கள்
11. ,, சிக. ராம. ராம. சோம. வெள்ளையப்ப செட்டியார் அவர்கள்
12. ,, நா. வயி. வயிரவன் செட்டியார் அவர்கள்
13. ,, கண. க. சொ. கண. முருகப்ப செட்டியார் அவர்கள்
14. ,, முத்து. க. ஆவி. சித. நட. சிதம்பரம் செட்டியார் அவர்கள்
15. ,, ரெ. ராதா கிருஷ்ணன் செட்டியார் அவர்கள்
16. ,, சுப. ராம. லெ. ராம.கி. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள்
17. ,, ச. ராம. ச. நா. ராமனுதன் செட்டியார் அவர்கள்
18. ,, மு. பழ. நட. அண்ணாமலை செட்டியார் அவர்கள்
19. சிவத்திரு. சுப. அ. நா. கரு. சுப. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள்
20. திரு. ப. ப. வே. அண்ணாமலை செட்டியார் அவர்கள்
21. ,, லெ. மா. மகாதேவன் செட்டியார் அவர்கள்
22. ,, வெ. கண. கண்ணப்ப செட்டியார் அவர்கள்
23. ,, சுப. அ. நா. மு. ராம. கண்ணப்ப செட்டியார் அவர்கள்
24. ,, ஆறு. கண. இராதாகிருஷ்ணன் செட்டியார் அவர்கள் (சின்னராதா)

★★

திருக்குட நன்னீராட்டு: 1—5—89

மண்டலாபிஷேகம் : 11—5—89

மலர் வெளியீடு : 14—6—89

எங்களூர் தெய்வங்கள்

கோயில்கள்

1. மஞ்சணத்தி விநாயகர் கோயில்
2. தேசிக விநாயகர் ,கோயில்
3. மாணிக்க விநாயகர் கோயில்
4. சித்தி விநாயகர் கோயில்
5. செங்கமலத்தான் கீழ்கரை விநாயகர் கோயில்
6. செங்கமலத்தான் தென்கரை விநாயகர் கோயில்
7. மடத்தூரணி விநாயகர் கோயில்
8. தேரோடுவீதி மேல்புற விநாயகர் கோயில்
9. கண்ணுடையநாயகி அம்மன் கோயில்
10. செங்கமலத்தான் காளியம்மன் கோயில்
11. செங்கமலத்தான் கீழ்கரை சுடுகாட்டுக்காளி
12. கரிகாலசோழீஸ்வரர் கோயில்
13. பிரசன்ன வேங்கடாசலபதிப் பெருமாள் கோயில்
14. ஊர்காவலன் கோயில்
15. பெரியகருப்பண்ண சுவாமி கோயில்
16. ஆலடிக்கருப்பன் கோயில்
17. குருநாதன் கோயில்
18. பஞ்சமீனத்தி சேவுகராய ஐயனர்
19. வெய்யில் உகந்த ஐயனர்
20. மாரியம்மன் முனைக்கொட்டுத் திண்ணைகள் 18


மடங்கள்

1. ஐயாக்கள் மடம்
2. யாழ்ப்பாணத்துச்சாமி மடம்
3. அறந்தாங்கிச்சாமி மடம்

யாகசாலை அலங்காரம்



மூன்றும் கால யாக பூஜை வேதிகை அலங்காரம்



ஐந்தாம் கால யாக பூஜை வேதிகை அலங்காரம்.

அம்மன் பணியால் சிறப்புற்ற அமரர்கள்



முதல் ஹானரரி சூப்பிரண்டெண்டாகத் தொண்டாற்றிய
திருவாளர் சுப.அ.சுப. சுப்பிரமணியஞ் செட்டியார் அவர்கள்



23—8—1939 முதல் 1983ம் வருடம் வரை இரண்டாம்
ஹானரரி சூப்பிரண்டெண்டாகத் தொண்டாற்றிய திருவாளர்
முத்துக. ஆவி. சித. ஆவிச்சி செட்டியார் அவர்கள்

அருள்மிகு கண்ணுடையநாயகி அம்மன் கோயிலை ஆளுகின்ற
சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம்
இளைய பாம்பரை அறங்காவலர் அவர்கள் காப்பாளர்



மேதகு ராஜகுமாரி ராஜலெட்சுமி ரேகுராஜ் அவர்கள்

அம்மன் தொண்டில் ஆன்றோர்கள்



S, ரத்னகரன் B. A., B. L.
தேவஸ்தான மேலாளர்,
சிவகங்கை சமஸ்தானம்.



S. முத்துச்சாமி
தேவஸ்தான கண்காணிப்பாளர்
சிவகங்கை சரகம்.




மூன்ருவது ஹானரரி சூப்பிரண்டெண்டாகத் தொண்டாற்றிவரும் சத்திரம்
பெரி. அரு. கண. ராமசாமி செட்டியார் அவர்கள்

திருப்பணியை நெறிப்படுத்திய சீரர்ளர்கள்



தலைவர்
கயி- ஆறு. ஞா. ஆறுமுகம் செட்டியார்



துணைத்தலைவர், பொருளாளர்
பழ. வீர. கண. ச, கண்ணப்ப செட்டியார்



செயலாளர்
ராம. உ. உ. கருப்பையா செட்டியார


மலர்க் குழு



சுப. இராம. சுப. இராமநாதன் செட்டியார்
பதிப்பாசிரியர்



நா. சே. நாராயணன்
துணைப் பதிப்பாசிரியர்



முன்வரிசை: 1, வெ. கண. கண்ணப்ப செட்டியார், 2—, 3—, 4. குப. அ. நா. மு. ராம. கண்ணப்ப செட்டியார்.

நடுவரிசை: 1. சத்திரம் பெரி. அரு. கண. ராமசாமி செட்டியார், 2 சுப. ராம. சுப. இராமநாதன் செட்டியார், 3 நல. வே. குமரப்ப செட்டியாா, 4 செவு. சித. ஆவி. சிதம்பரம் செட்டியார், 5 சுயி. ஆறு. ஞா. ஆறுமுகம் செட்டியார், 6 பழ. வீர. கண. சு. கண்ணப்ப செட்டியார், 7 சுப. ராம. மெ. நடராஜன் செட்டியார், 8 கண. க. சொ. கண. முருகப்ப செட்டியார், 9 அரு. சேவு. கரு. ஆவிச்சி செட்டியார், 10 Y. சத்தியமூர்த்தி செட்டியார்.

மூன்றும் வரிசை: 1 மு. கண. ராம. நா. சே. நாராயணன் செட்டியார், 2 ப. ப. வே. அண்ணுமலைசெட்டியார், 3 ஆறு. கண. இராதாகிருஷ்ணன் செட்டியார் (சின்ன ராதா), 4 ச. ராம. ச. நா. இராமநாதன் செட்டியார், 5 சுப. கி. வே. சா. ஏகப்ப செட்டியார், 6 முத்துக. ஆவி. சித, நட. சிதம்பரம் செட்டியார், 7 சிக. ராம. ராம. சோம. வெள்ளையப்ப செட்டியார், 8 நா வயி வயிரவன் செட்டியார், 9 குப. கி. ரெ. இராதாகிருஷ்ணன் செட்டியார், 10 ஆ, வீர. ஆ. இராம, சிவசுப்பிரமணியன் செட்டியார், 11 சுப. ராம. லெ. ராமகி. சுப்பிரமணியன் செட்டியார், 12 லெ, மா, மகாதேவன் செட்டியார், 13 மு. பழ. நட. அண்ணுமலை செட்டியார், 14 சிவத்திரு. குப. அ. நா. கரு. குப. சொக்கலிங்கம் என்ற கருப்பையா செட்டியார்.

கும்பாபிஷேகத் திருவீதிஉலா





கும்பாபிஷேகத்தன்று அருள்மிகு கண்ணுடையநாயகி அம்மன் உலாவரும் திருமேனி அலங்காரமும்
வெள்ளி ரதத்தில் திருவீதி உலாவருதலும்.



அருள்மிகு கண்ணுடையநாயகி அம்மன்

ஸ்ரீ ராம் ஆப்செட் பிரிண்டர்ஸ்
சிவகாசி.

உ

ஸ்ரீ ராம ஜெயம்

முன்னுரை

பேராசிரியர் திரு. சுப. ராம. சுப. இராமனுதன் செட்டியார் 'சுபராம்'

பதிப்பாசிரியர்

அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்த அன்னை கண்ணுடையவள் திருக்கண்ணேக்கினுல் முகிழ்த்து மலர்கின்ற இம்மலரை உங்கள் திருமுன் படைப்பதிலே பெருமகிழ்ச்சி யடைகின்றேன்.

அண்ணுமலை, மதுரை காமராசர் பல்கலைக் கழகங்களிலே பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்று ஊர்வந்த என்னை இப்பணியிலிடுபடச் செய்தாள் அருட்சக்தி கண்ணுடைய நாயகி. என்னே அவள் என்னைப் பணிகொள்ளுமாறு என்று வியந்து அவள் தண்ணருட் பார்வை என்றும் என்பாலிருக்க அருள் செய்ய வேண்டுமென்று அவள் அடிகளை வணங்கு கின்றேன்.

இப்பொழுது நகரத்தார் பெருமக்கள் என்பால் அன்பு கொண்டு என்னை இப்பணி ஏற்கச் சொன்னுர்கள். அப்பணி தலைமேற்கொண்டேன். நகரத்தார் காட்டும் அன்பிற்கு நான் என்றும் நன்றிக்கடன் பட்டுள்ளேன்.

இம்மலரில் மிக அரிய, இதுவரை பலருக்குத் தெரியாத பலர் கேள்விப் பட்டிராத செய்திகள் இடம் பெறுகின்றன. அருள்தரு கண்ணுடையம்மன் திருக்கோயில் திருவிழாபற்றிய தொகுப்பும், திருவிழா காலத்தில் அம்மன் திருஉலா வருகின்ற படங்களும் இடம் பெற்றுள்ளன,

கருவறையிலுள்ள அம்மனின் அருளுருவம் அமைந்த படம் வேண்டி நின்ருர்கள். ஆயிரக்கணக்காஞேர். அவள்படம் கிடைக்கவில்லையே என அவளை வணங்கவந்த உள்ளூர், வெளியூர்ப் பெருமக்கள் ஏங்கி நின்றனர். சிவகாசியிலுள்ள ஸ்ரீ ராம் அச்சகத்தார் (Sri Ram Offset Printers) தங்கள் ஓவியரை அனுப்பி அம்மனின் திருவுருவத்தை வண்ண ஓவியமாக எழுதச்செய்தார்கள். அத்திருவுருவம் இம்மலரில் பல வண்ணப்படமாகவந்துள்ளது. இப்படத்தை தனியாக எடுத்து கண்ணுடிச் சட்டத்தில் வைத்து 'வழிபாடு' செய்யலாம். 1988ஆம் ஆண்டு 'கல்கி' தீபாவளி மலரில் "நாட்டரசன்கோட்டை நாயகி" என்று தலைப்பிட்டு வந்த வண்ணப்படத்திலும் இது சிறப்புற அமைந்துள்ளது என்பது பலருடைய கருத்தாகும்.

அருள்தரு கண்ணுடையம்மன் பள்ளு இதற்குமுன் 1976ல் நடைபெற்ற திருக்குட நீராட்டு விழா மலரில் முழுதும் வெளியிடப்பெற்றுள்ளது. அதனை மறுபடியும் இம்மலரில் முழுதும் வெளியிடவில்லை. ஊரைப்பற்றியும், கோயிலைப்பற்றியும் சொல்கிற செய்திகள் மிகுந்துள்ள அப்பள்ளில் உள்ள 'முயிற்சிந்து' சேர்க்கப்பெற்றுள்ளது. அன்னை கோயிலுக்குச் செல்கின்றவர்கள் பாடிப் பரவுவதற்காக "முளைப்பாட்டும்" "கும்மிப்பாட்டும்" அப்பள்ளி லிருந்து வெளியிடப்பெறுகின்றது. அன்னையின் அருள் வேண்டி நிற்போர் இவ்விரண்டு

பகுதிகளையும் மனனம் செய்து கொண்டு அவளை வழிபடும் பொழுது சொல்லிப் பயன் பெறலாம் சென்ற மலரில் இவ்வூரைச் சேர்ந்த கண்ணனந்த சுவாமிகளின் "கண்ணுடையம்மன் வாலையந்தாதி முழுதும் அச்சிட்டுள்ளார்கள். இம்மலரில் அந்நூலிலிருந்து சிலபாட்டுக்கள் இடம் பெற்றுள்ளன. இவ்வூரில் வாழ்ந்த ஐயாக்கருப்பன் செட்டியார் கண்ணுத்தாளை பற்றி பாடிய பிரபந்தங்கள் சிலவற்றிலிருந்து சில பகுதிகளைக் கொடுத்துள்ளோம். பள்ளுப் பாடிய முத்துக்குட்டிப் புலவரும் மேற்குறிப்பிட்ட இவருவரும் இவ்வூரில் வாழ்ந்து அன்னையைப் பாடியவர்கள் என்பது நினைவிற்கொள்ளவேண்டிய ஒன்ருகும்.

முத்துக்குட்டிப்புலவர் இவ்வூர்க் கருப்பண்ண சுவாமியினைப் பாடிய 'பெரிய கருப்பண்ண சாமி பதிகம்' என்ற நூலைச் சேர்த்துள்ளோம். இவர் சிவகங்கை மன்னருடைய அவைக்களப் புலவராகத் திகழ்ந்தார். அப்பொழுது அவர் சொல்லிய 'வசன சம்பிரதாயக்கதை' என்ற அரிய உரை நடையில் அமைந்த விநோதமான கதையினை இம்மலரில் வெளியிட்டுள்ளோம். அந்நூலின் ஒரே ஒரு பிரதி இவ்வூர் பாரதி வாசகசாலையிலிருந்தது. மிகப் பழமை ஆன நூல், தாள்கள், ஒடிந்து தூள் தூள் ஆகும் நிலைமையிலிருந்தது. அதற்கு உடனடி நகல் எடுத்தோம். அவ்வெழுத்துக்களைப் பார்த்து அச்சேற்றுவதற்கு மிகவும் சிரமப்பட்டிருக்கிறோம். நம் ஊர்ப் புலவர் எழுதிய நூல் அழிந்து போகக் கூடாது அதனைக் காப்பாற்ற வேண்டுமென்ற நோக்கத் தோடு இதனைச் செய்துள்ளோம். அச்சுப் புத்தகத்தில் இருந்தபடியே பதிப்பித்துள்ளோம். திருத்தங்கள் எதுவும் செய்யவில்லை. இந்நூலைப் பற்றித் தெரிந்த ஒரு புத்தக வெளியீட்டாளர் நம்மலரில் வந்தவுடன் ஒரு பிரதி கொடுங்கள் நான் வெளியிடுகிறேன் என்ருர். அதன் பழமையினையும் அருமையினையும் நோக்கி இம்மலருக்கு அதுவே சிறப்பைத் தருவதொன்ருகும்.

நாட்டரசன்கோட்டையினைக் குறிப்பிடும்பொழுது புலவர் பள்ளில் 'வந்த நாட்டரசன் கோட்டையுள்ள வடகலை வேள்வி நாடெங்கள் நாடே' என்று பாடுகின்ருர். அவ்வடகலை வேள்வி நாடு எது என்பதைத் தொல் பொருளியல் கல்வெட்டியல் துறையில் மதுரையிற் பணியாற்றும் திரு. வேதாச்சலம் அவர்கள் தெளிவாகச் சான்றுகளுடன் இம்மலரில் ஒரு கட்டுரையில் விளக்கியுள்ளார். நாட்டரசன் கோட்டையினைச் சேர்ந்த எட்டு ஊர்கள் எவை என்பதனை வரை படங்களுடன் இம்மலரின் பதிப்பாசிரியர் (அடியேன்) விளக்கியுள்ளார். அவர்க்குச் சான்ருக நின்றது பேராசிரியர் டாக்டர் ஆ.த. முத்தையா அவர்களின் 'பாகனேரி நாட்டு மக்களின் மரபும் பண்பாடும்' என்ற அவருடைய முனைவர் (டாக்டர் Ph. D) பட்டத்திற்குரிய ஆய்வேடாகும். அவர் அன்புடன் அந்த ஏட்டைப்பயன்படுத்திக் கொள்ள என்னிடம் கொடுத்தார்கள். அவர் கூறும் செய்திகளையும் அவர் ஆய்வேட்டிலுள்ள வரைபடங்களையும் வெளியிட்டுக் கொள்ள இசைவு தெரிவித்துள்ளார்கள்.

எங்களூர்ச் சிவன்கோயிலில் முன் கோபுரத்துக் கட்டுமானப் பகுதியில் பல கல்வெட்டுக்கள் காணப்பெறுகின்றன. அவைகளைத் தெரிந்து வெளியிடப் பல்லாண்டுகளாக முயன்றேன். இப்பொழுதுதான் கரிகால சோழீசுரர் திருவருளாற் கை கூடிற்று. இக்கல் வெட்டுக்களை வாசித்து உதவுவதற்காக மதுரையிலிருந்து சிரமத்தைப் பொருட்படுத்தாது அன்போடு வந்தார்கள். மதுரையில் தொல்பொருளியல் கல்வெட்டியல் துறையிற் பணியாற்றும் அன்பர்கள் திருவாளர்கள் போஸ். அவர்களும், திரு. வேதாசலம் அவர்களும் அக்கல்வெட்டுக்களைப் பற்றிய கட்டுரை அவர்கள் இருவரும் எழுதியது இம்மலரில் உள்ளது. இவர்கள் இருவருக்கும் நண்பர் டாக்டர் ஆ.த. முத்தையா அவர்களுக்கும் நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன். அவர்களுக்கு என் நன்றி உரியதாகுக.

இன்னும் பல கவிதைகளும், கட்டுரைகளும் செய்தித் தொகுப்புகளும் உள்ளன. அவைகளை எல்லாம் கொடுத்துதவிய பெருமக்களுக்கு என் நன்றி உரியதாகுக. விளம்பரங்கள் இல்லையென்றால் இம்மலர் தோன்றுவது ஏது? தோன்றாத் துணையாய் உள்ள அன்னையின் பால் பேரன்பு கொண்டு பெரும் பொருள் கொடுத்து விளம்பரங்கள் தந்துதவிய அக் கொடையாளர்களுக்கு எங்கள் நன்றி,

இம்மலர் உரிய காலத்தில் வருவதற்கும் சிறப்புற நன்கு அமைந்தமைக்கும் பெரும் பொறுப்பேற்று உதவிய திரு. மு. கண. ராம. நா. சே. நாராயணன் செட்டியாரவர்களுக்கும், எதிர்பாராத விதமாக இம்மலர்ப் பதிப்பின்போது உடனிருந்து உதவிய இவ்வூர் சிவத்திரு. குப. அ. நா. கரு. குப. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் மிகப் பொறுப்புடனும் அன்புடனும் சோர்வு பெறுமற் பணி புரிந்தமைக்கும் பாராட்டி இவர்கள் இருவருக்கும் என்னுடைய மனம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்தட்டுப்பாடு உள்ள இக்காலத்தில் எங்களூரைச் சேர்ந்த சக்தி விநாயகர் அச்சக உரிமையாளர் திரு. மா. கண. மா. வெ. மாணிக்கம் செட்டியாரவர்கள் குறித்த காலத்தில் இம்மலரை அழகுற அச்சிட்டுக் கொடுத்து உதவினார்கள். ஊர் சொக்கநாதபுரமாக இருந்தாலும் எங்களூராரைப் போன்று சிவகாசி ஸ்ரீ ராம் ஆப்செட் அச்சக உரிமையாளர் திரு. நா. வயி. நாராயணன் செட்டியாரவர்களும், அவருடைய மக்கள் இராமநாதன் ஆகியோரும் அம்மன் படத்தையும், மலரின் அட்டைப்படத்தையும் கண்கவரும் வகையில் அச்சிட்டுக் கொடுத்தார்கள். அம்மன் திருவுருவம் வரைவதில் உடனிருந்து உதவியவர் இவ்வூர் திரு. நல. சுப. குமரப்ப செட்டியார் அவர்கள். அழகான நிழற்படங்களை எடுத்துக் கொடுத்தவர்கள் காரைக்குடி சுந்தரம் ஸ்டுடியோ & சிவகங்கை அருண் ஸ்டுடியோவினர் ஆவர். இவர்கள் எல்லோருக்கும் மலர்க்குழுவின் சார்பிலும் திருக்குட நன்னீராட்டு விழா குழுவினர், நகரத்தார் சார்பிலும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருக்குட நன்னீராட்டு விழாக் குழுத்தலைவர் திரு. கயி. ஆறு. ஞா. ஆறுமுகம் செட்டியாரவர்களும், துணைத்தலைவரும் பொருளாளருமான திரு. பழ. வீர. கண. சு. கண்ணப்ப செட்டியாரவர்களும் செயலாளர் திரு. ராம உ. உ. கருப்பையா செட்டியாரவர்களும் பெரிதும் உதவினார்கள், ஊக்க உரை தந்தார்கள். அவர்களுக்கு மலர்க் குழு சார்பில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உ

சிவமயம்


திருப்பணி பற்றிய செய்தி

கயி. ஆறு. ஞா. ஆறுமுகம் செட்டியார்

தலைவர்

திருப்பணிக்குழு

நாட்டரசன்கோட்டை



அருள்தரு கண்ணுடையநாயகி அம்மனுடைய திருக்குட நன்னீராட்டு விழா அவளுடைய திருவருளால் நன்கு நிறைவேறியுள்ளது. அதற்குக்காரணம் அவ்வன்னையின் திருக்கண்ணோக்கு, நகரத்தார் பெருமக்களின் பொருளுதவி, தங்கநன்கொடை, பொதுமக்களுடைய ஒத்துழைப்பு ஆகியவைகளாகும்.

இச்சமயத்தில் திருக்குட நீராட்டுவிழா அமைந்த முறையினைச் சொல்வது பொருத்தமாயிருக்கும். நாட்டரசன் கோட்டை நாயகியின் திருக்குட நன்னீராட்டு விழா 6—9—1976ல் சீரும் சிறப்புடன் நிகழ்ந்தது. அது நிகழ்ந்து சரியாகப் பன்னிரெண்டு ஆண்டுகள் முடிந்த மறுநாளில் அவள் கோயில் விமானத்திலிருந்த தங்கக் கலசங்கள் திருட்டுப் போய்விட்டன. ஊரே சோகத்தில் மூழ்கியது. தங்கள் தங்கள் வீட்டிலேயே திருட்டு நடந்தது போன்று ஊரார் துயரத்தில் மூழ்கினர். பின்னர் ஊரார், முயற்சியினாலும் காவல் துறையினரின் திறமையினாலும் சில வாரங்களிலேயே கலசங்களை பெற்றனர். கலசங்கள் திருடு போனதைப் பற்றியும், கிடைத்த முறைபற்றியும் நகரத்தார் சிந்தித்தனர். 12 ஆண்டிற்கு ஒரு முறை மூர்த்திகளுக்கு மருந்து சாத்தி திருக்குட நீராட்டு விழா நடத்த வேண்டுமென்பது விதியாகும். தனக்கு 12 ஆண்டுகள் முடிந்தவுடன் திருக்குட நீராட்டு நடத்த வேண்டுமென்று அம்பிகையின் திருவுளம் போலும். அதற்காகத்தான் அன்னை "திருட்டுப்போகச் செய்த" திருவிளையாடலைச் செய்துள்ளாள் என்று நகரத்தார் முடிவு செய்தார்கள்.

திருக்குட நன்னீராட்டு செய்வதற்காக நகரத்தார்கள் கூடினார்கள். 1976ம் ஆண்டில் செய்தது போன்று திருக்குட நீராட்டு விழா நடத்தப் பெரும் பொருட் செலவுவரும். இக்கால நிலையில் அதற்குப் பொருள் தேடுவது அரிதாகும். அதனால் கலசங்களைத் தங்கத் தண்ணீரில் நனைத்து மூர்த்திகளுக்கு மருந்து சாத்தித் திருக்குட நீராட்டு விழாவினை நடத்துவது என்று முடிவு செய்து அதற்கு ஏறத்தாழ இவ்வளவு தொகை செலவாகுமென்று கணக்கிட்டு

அத்தொகை சேருகின்ருர் போன்று நன்கொடை எழுதத் தொடங்கினுர்கள். ஊருக்குள் நகரத்தார்களில் ஆண்களேயும் பெண்களேயும் சந்தித்து இம்முடிவினேச் சொல்லியபொழுது அவர்கள் எல்லாம், கோபுரங்களுக்கு வர்ணம் வைத்துத்தான் செய்யவேண்டும். கலசத்தினேத் தங்கத் தண்ணீரில் நனேத்து வைக்கக் கூடாது. முன்போல அதைச் செய்ய வேண்டும். என்ருர்கள். பெருந்தொகை செலவாகும் என்று இராசகோபுரம் நீங்கலாக வர்ணம் வைக்க எண்ணினேம். அதற்கும் வைக்க வேண்டும் என்ற நிலேமை ஏற்பட்டது. அதற்கும் சேர்த்து வைப்பது என்று முடிவு செய்து வேலே நடைபெறத் தொடங்கியது.

கலசத்தின் தேவைக்கு பெண்கள் மனமுவந்து முன்வந்து தங்கம் கொடுத்தார்கள். நகரத்தார் பெருமக்கள் உளமகிழ்ந்து நிதி உதவினர். இவர்கள் தவிர மாதச்சம்பளம் பெறும் அன்பர்களும் நாங்கள் எதிர்பார்த்ததற்கும் மேலாக பொருள் வழங்கினர்.

மலேசியா, சிங்கப்பூர், அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், புருனே அரபு நாடுகளில் வசிக்கும் இவ்வூர் அன்பர்களும் இளேஞர்களும் தாராளமாக நிதிவழங்கி உதவினுர்கள்.

இத்திருக்குட நீராட்டு விழாவினே ஒட்டி கோயிலில் செய்த பணிகள் சிலவற்றைக் குறிப்பிடுவது பொருத்தமுடையதாக இருக்கும். தங்கக்கலசம் அடிக்கடி திருட்டுப் போவதனுல் அக்கலசத்திற்கு பாதுகாப்புச் செய்ய எண்ணினேம். அம்மன் விமானத்தின் மேல் உள்ள தங்கக் கலசங்கள் மூன்றிற்கும் இரும்புக்கம்பி வலேப்பாதுகாப்புப் போட்டுள்ளோம். அம்மன் கோயில் மேல்த்தளம் பெரிய அளவில் பழுது பார்த்துச் செப்பனிடப் பட்டிருக்கிறது. இராசகோபுரத்தின் மேல் உள்ள விளக்கும் சுற்றியுள்ள விளக்குகளும் ஒழுங்காக எரியுமாறு பெரும் பொருட் செலவில் திருத்தி அமைக்கப் பெற்றுள்ளது. மூலஸ்த் தானத்தில் அம்மனுக்கு பின்புறம் சலவைக்கற்கள் பதிக்கப் பெற்றுள்ளன. சந்நிதானத்தில் அம்மனுக்கு இருபுறமும் சரவிளக்குகள் வைக்க ஏற்பாடாகியுள்ளது. கொடி மரத்தைச் சுற்றியும் சலவைக்கற்கள் பதிக்கப் பெற்றுள்ளன.

நாட்டரசன் கோட்டையைச் சேர்ந்தவனுயிருந்தாலும் பல்லாண்டுகளும், மற்றைய ஆண்டுகளில் பெரும் பகுதியை வெளியிடத்தில் இருந்து வரும் என்னே இத்திருப்பணியில் ஈடுபட வைத்த அன்னே கண்ணுத்தாளின் அருளிற்கு நான் என்றும் பாத்திரனுக இருக்க அருள் செய்ய வேண்டும் என்று அவளேப் பிரார்த்தித்துக் கொள்கிறேன். என்பால் அன்பு கொண்டு இத்தலேவர் பொறுப்பினே எனக்கு அளித்த இவ்வூர் நகரத்தார் பெருமக்களுக்கு நன்றியுடையவனுக இருக்கிறேன். என்னுடன் முழுநேரம் இருந்தும் என்னிலும் அதிக நாட்கள் அதிக நேரம் செலவிட்டு இப்பணி நன்கு நிறைவேற உதவிய துணேத்தலேவராயும் பொருளாளராயும் உள்ள திரு. பழ. வீர. கண ச. கண்ணப்ப செட்டியார் அவர்களுக்கும், எல்லோரிலும் மிக்குச்செயலாளராக இருந்துசெயலாற்றி உதவிய திரு. ராம உ. உ. கருப்பையா செட்டியார் அவர்களுக்கும், எவ்வகையில் நன்றி செலுத்துவது என்றே தெரியவில்லே ! திருக்குட நன்னீராட்டு செயற்குழு உறுப்பினர்கள் யாவரும் ஒல்லும் வகையெல்லாம் உதவி ஞர்கள். அவர்கள் யாவருக்கும் என்னுடைய நன்றியினேத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலசங்களில் தங்கத்தகடுகள் வைக்கும் பொழுது கூடவே இருந்து தன்னுடைய முந்தைய அனுபவங்களினுல் பெரிதும் உதவிய திரு. சோம. வெள்ளேயப்ப செட்டியார் அவர்களுக்கும், மதுரையிலிருந்து வானெலி நிலேயத்தார் இங்குவந்து ஒலிபரப்ப ஏற்பாடு செய்து அப்பணி செம்மையாக நடைபெற உதவிய திரு. சுப. ராம. சுப. ராமனுதன் செட்டியார வர்கள் (பேராசிரியர் 'சுபராம்') அவர்களுக்கும், இம்மலர் நல்ல முறையில் வெளிவர உதவிய பதிப்பாசிரியர், பேராசிரியர் திரு. சுப. ராம. சுப. ராமனுதன் செட்டியார் (பேராசிரியர் 'சுபராம்) அவர்களுக்கும், துணேப்பதிப்பாசிரியர் திரு. மு. கண. ராம. நா. சே. நாராயணன் செட்டியார் அவர்களுக்கும் என் நன்றி உரியதாகுக.

இவ்விழா மிகச்சிறப்புற நடைபெற உதவியவர்கள் இக்கோயில் பரம்பரை அறங்காவலராயுள்ள மேதகு. இராஜகுமாரி ராஜலெட்சுமி ரெகுராஜ் ஆவார்கள். சந்தித்தபொழுது எல்லாம் இன்னுரை கூறி ஊக்கப்படுத்தினார்கள். இராணி அம்மாள் அவர்கள் திருக்குட நன்னீராட்டு விழாவிற்கு வந்தும், அதற்கு முன்னர் யாகசாலைக்கு வந்தும் சிறப்பித்தார்கள் அவர்களுக்குத் தனித்தமுறையில் நான் கடமைப்பட்டுள்ளேன், நன்றியுள்ளவனாக இருக்கிறேன்.

தேவஸ்தான மேலாளர் திரு. S. இரத்னாகரன் B.A., B.L., அவர்களும், சரகக்கண்காணிப்பாளர் திரு. S. முத்துச்சாமி அவர்களும் வேண்டும் பொழுதெல்லாம் பெரிதும் உதவினார்கள். அவர்களுக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலசத்தில் தங்கம் வைப்பதற்கு வழிகாட்டி உதவிய அறநிலையத்துறையைச் சேர்ந்த திரு. வைத்தியநாதன் அவர்களுக்கும் திரு. அருணாச்சலம் அவர்களுக்கும், திரு. பத்மநாபன் அவர்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடமுழுக்கு விழாவில் எல்லா வகையாலும் ஒத்துழைப்புத் தந்த கோயில் கௌரவ கண்காணிப்பாளர் சத்திரம் திரு. பெரி. அரு. கண. ராமசாமி செட்டியார் அவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருக்குட நன்னீராட்டு விழாவிற்கு நாளைக் குறிப்பிட்டு வேலைகள் நடைபெற்று வந்தன. ஆனால் குளங்களில் தண்ணீர் இல்லை. குடிக்கக் கூடத்தண்ணீர் இல்லை என்னும் நிலைவரும் போலிருந்தது. கவலை பெரிதாயிற்று. அந்நிலையில் இவ்வூர் அன்பர்கள் சிவத்திரு. குப. அ. நா. கரு. குப. சொக்கலிங்கம் என்ற கருப்பையா செட்டியாரவர்களும் அவர் மைத்துனர் திரு. லெ. மா. மகாதேவன் செட்டியாரவர்களும் 'விராட பருவம்' படிக்க ஏற்பாடு செய்தார்கள். ''பொற்கிழிக் கவிஞர்'' 'காசி ஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரம் செட்டியாரவர்கள் கேட்பார் உள்ளங்களைப் பிணிக்கும் வகையில் மூன்று நாட்கள் 'விராட பருவம்' படித்தார்கள். மழையும் நன்கு பெய்தது. ஊர்செழித்தது. கவலை மறைந்தது எல்லாம் கண்ணுடையாள் கருணை !

தங்கள் வீட்டுக் காரியம் போல நினைத்து முழுமனதுடன் யாகசாலை, திருக்குட நன்னீராட்டு விழா நடைபெற்ற எல்லா நாட்களிலும் மின்சாரம் தடையின்றி கிடைக்க ஏற்பாடு செய்த எங்கள் சரக மின்சாரத்துறையைச் சார்ந்த அனைத்துப் பணியாளர்களுக்கும் அம்மன் அருள் என்றும் துணை நிற்க வேண்டிப் பிரார்த்திக்கிறேன்!

திருக்குட நீராட்டுவிழா அமைதியாக நடைபெற உதவிய காவல்துறையினரின் பணியும் பாராட்டுக்குரியது.

கும்பாபிஷேகம் இனிதே நடைபெற நாள் குறித்துத் தந்த திருவாடானை டாக்டர். ஐயாமணி சிவாச்சாரியார் அவர்களுக்கும் யாகசாலை வைதீக நிகழ்ச்சிகள் செம்மையாக நடைபெறச் செய்த சர்வசாதகம் திருவாடானை கணேச சிவாச்சாரியார் அவர்களுக்கும் பிரதான குண்டத்தில் நிறைவாக யாகமியற்றிய எங்களூர் குருக்கள் ஐயா காளீஸ்வர சிவாச்சாரியார் அவர்களுக்கும் ஏனைய சிவாச்சாரியார் அவர்களுக்கும் உளம் நிறைந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

கோயில் பூசாரிகளுக்கும் கோபுர வேலைகள் அழகுறச் செய்து முடித்த ஸ்தபதிகள்களுக்கும் மற்றும் தங்கள் தங்கள் துறைகளில் சிறப்புறப் பணியாற்றிய அனைவருக்கும், பொருள் கொடுத்தும், தொண்டாற்றியும், நற்சொற்களால் பாராட்டியும் உதவிய அனைவருக்கும் என்னுடையஉளம் நிறைந்த நன்றியினைத் தெரிவிந்துக்கொள்கிறேன்.

திருக்குட நன்னீராட்டு விழா நிகழ்ச்சியினை தொலைக்காட்சி மூலமும், வானொலி மூலமும் ஒளி, ஒலி பரப்பினால் வர இயலாதவர்க்கும், வெளியூரில் உள்ளவர்க்கும் நலம் பயக்கும் என்று அவர்களை அழைத்தோம். மதுரை வானொலி நிலையத்தார், நிலைய இயக்குனர் திரு. விஜயதிரு வேங்கடம் அவர்களுடன் வந்திருந்து நேர்முக வர்ணனை செய்தனர். டாக்டர் மோகன் அவர்களும், விஜயலெட்சுமி நவநீதகிருஷ்ணன் அவர்களும் நேர்முக வர்ணனையை அழகாக, மிகக்கவர்ச்சியாக கேட்போர் உள்ளம் பக்தியில் திளைக்கும்படி செய்தார்கள். இந் நேர்முக வர்ணனையில் பங்கு பெற்ற நிலைய இயக்குனர்க்கும், வர்ணனையாளர்களுக்கும் அவர்கள் குழுவினர்க்கும் எங்கள் மனமார்ந்த நன்றி !

திருக்குட நன்னீராட்டு விழா நிகழ்ச்சிகள் பிற்காலத்தில் வருகிறவர்களுக்குத் தெரிவதற்காக ஒரு மலர் வெளியிட எண்ணினோம். விளம்பரம் வேண்டிச் சென்றோம் பொது மக்களிடம். சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரை உள்ள ஊர்களிலிருந்து பல திறப்பட்ட மக்களிடமிருந்தும் விளம்பரங்கள் வந்தன. உலக அன்னையாம் அருட்பெரும் சக்தி கண்ணுடையவளுக்காக நாங்கள் எதிர்பார்த்ததற்கும் மேலே வந்தன. திருக்குட நன்னீராட்டு விழாவிற்கு பொருள் இவ்வூர் நகரத்தார் பெருமக்களிடமிருந்து போதிய அளவு வந்ததனால் விளம்பரத்தின் மூலமாக வந்த தொகையில் பெரும் பகுதியை பயன்படுத்தும் சூழ்நிலை ஏற்பட்டது. அதனால் மலரும் திருவுடையதாக அமைந்தது.

சில ஆண்டுகளுக்கு முன்னர் அம்மனுக்கு சொர்ண அங்கி செய்ய நகரத்தார் முற்பட்டு, தங்கம் சேர்ந்த அளவிற்கு செய்திருந்த பகுதிகளை மட்டும் திருக்குட நன்னீராட்டு விழாவன்று சாத்திய பொழுது அம்மன் கண்கொள்ளாக் காட்சி அளித்தாள் ! மற்ற பாகங்களை செய்ய முயற்சி மேற்கொள்ளப் பெற்றுள்ளது. தேவஸ்தான அறங்காப்பாளர் மேதகு இராணி அம்மாள் அவர்களும், தேவஸ்தானக் கருவூலத்திலிருந்து அதற்கு வேண்டிய தங்கம் தருவதாக இசைந்துள்ளார்கள். இந்த பொன்னான பணியும் விரைவில் நன்கு நிறைவேற அருள் செய்யுமாறு அன்னையின் திருவடிகளை வணங்குகிறேன்.



உ

நகரத்தார் நற்பணி!



ராம. உ. உ. கருப்பையா

செயலாளர்

கும்பாபிஷேக திருப்பணிக்குழு

நாட்டரசன்கோட்டை.

அருள்மிகு கண்ணுடையநாயகி அம்மனுக்கு 1938ம் ஆண்டில் கும்பாபிஷேகம் நடத்தியதன் பின்னர், 38 ஆண்டு கால நீண்ட இடைவெளிவிட்டு 1976ம் ஆண்டில் கும்பாபிஷேகம் நடத்திய நகரத்தார்கள், 13 ஆண்டு கால இடைவெளிக்குள்ளேயே கும்பாபிஷேகம் நடத்தியதன் காரணம் பற்றி சிறிது சிந்திப்போம்.

கலசத்திருட்டு :-

ஸ்ரீ கண்ணுடையநாயகி அம்மனின் கருவறைக் கோபுரத்தில் உள்ள மூன்று தங்கக் கலசங்களில் ஒன்றினை முழுமையாகவும், மற்றைய இரண்டு கலசங்களில் உள்ள சிலபாகங்களில் தங்கத்தைச் சுரண்டியும் திருடர்கள் எடுத்துச் சென்ற 15 நாட்களுக்குப்பின்னர், தங்கக்கலசத்தைக்கண்டு பிடிப்பதற்காக, அம்மன் கோவில் மண்டபத்தில் ஊர்மக்களின் கூட்டம் கூடியது.

அக்கூட்டத்திற்கு வருகை தந்த கோயில் கௌரவ கண்காணிப்பாளர் சத்திரம் கண. இராமசாமி செட்டியார் அவர்கள், "தங்கக் கலசமாக இருப்பதால் அடிக்கடி களவு போகிறது, மேலும் இப்போது களவுபோன கலசத்தைக் கண்டு பிடிப்பதும் கஷ்டம், எனவே தாம்பரக் கலசங்களாக இருந்தால் திருடர்களின் தொல்லையும் இருக்காது, மேலும் கலசம் இல்லாமல் காப்புக்கட்டி திருவிழா நடத்தமுடியாது, ஆகையால் உடனே, மூன்றையும் தாம்பரக் கலசங்களாகவே வைக்கவேண்டியது" என்ற இராணி அம்மாளின் உத்தரவுக்கிணங்க தேவஸ்தானமும் அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறது, என்ற செய்தியைச் சொன்னதும், என் உடல் புல்லரித்தது. அம்பாள் என்முன் நிற்பது போலவும் தோன்றியது. உடனே நான் 21 நாட்களில் கண்டுபிடித்து தங்கக்கலசத்தையே வைப்போம். தாம்பரக்கலசம் வைக்கவேண்டாம்

என்று சொன்னேன். கூட்டமும் இதனை ஏற்றுக்கொண்டு தேவஸ்தானத்தின் தாம்பரக்கலசம் வைக்கும் எண்ணத்தைச் சில நாட்கள் நிறுத்தி வைக்கும்படி கௌரவ கண்காணிப்பாளரைக் கேட்டுக் கொண்டது. அவர்களும் கூட்டத்தின் கருத்தை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டார்கள். அப்போதே கலசத்தைக் கண்டுபிடிப்பதற்காக மட்டுமே என ஒரு குழுவினையும் கூட்டம் தேர்ந்தெடுத்தது.

கலசமீட்பு :

கூட்டத்தின் மறுநாள் குழுவிலிருந்து நான், வல்லநாட்டுச்சாமி ச. பெரியகருப்பன் செ. மாதவன், சொக்கலிங்கம், சின்னராதா ஆகிய அறுவரும் தேவஸ்தானக் கண்காணிப்பாளர் திரு. S. முத்துசாமி அவர்களுடன் சென்று காவல்துறையினருடன் ஒத்துழைக்கத் துவங்கினோம். 14வது நாள் கலசம் கண்டுபிடிக்கப்பட்டது.

காவல்துறையினர் திருடர்களை நாட்டரசன்கோட்டை கூட்டி வந்து திருடிய விதம் பற்றிய விபரங்களைச் சேகரித்தபோது, பொதுமக்களும் திருடர்களைப் பார்க்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

நீதிமன்றத்தில் முதல் விசாரணை நாள் அன்றே நீதிபதி அவர்கள் வழக்கு முடியும் வரை கலசத்தில் எந்தவித மாற்றமும் செய்யாது பாதுகாக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில், தேவஸ்தானக் கண்காணிப்பாளர் திரு. S. முத்துசாமி அவர்களிடம் ஒப்புதல் எழுதி வாங்கியதில் நானும், ச. பெரியகருப்பனும், சொக்கலிங்கமும் சாட்சிக் கையெழுத்துப் போட்டு, கலசத்தைப் பெற்றுக்கொண்டு, உடனே டாக்சி பிடித்து தேவஸ்தான மேலாளர் திரு. S. ரத்னகரன் அவர்களையும் எங்களுடன் அழைத்துக்கொண்டு நாட்டரசன்கோட்டை வந்து அம்மன் கோவில் கருவறையில் உள்ள பெட்டகத்தில் வைத்து பூட்டி விட்டோம். நீதிபதி அவர்களும் நான்காவது நாள் விசாரணையுடன் வழக்கை முடித்துவிட்டார்கள்.

குழு கலைக்கப்பட்டது

அம்மன் அருளால் எளிதில் முடிந்த இப்பணியை உடன் கூட்டம் கூட்டி விளக்கம் தந்தோம். கூட்டத்தில் கும்பாபிஷேகம் செய்வதுபற்றி பலவாறான கருத்துக்கள் கூறப் பட்டது. ஆனால், இந்தக்குழு அமைக்கும்போதே கலசத்தைக் கண்டுபிடித்ததும் இந்தக் குழுவின் பணி முடிந்தது என்றும் ஊருக்கு வேறு நல்ல பணிகள் செய்யவேண்டும் என்றாலும் வேறு ஒரு குழுவைத்தான் நியமித்துக்கொள்ள வேண்டும் என்றும் முதல் நாள் கூட்டத் திலே செய்த முடிவை அடிப்படையாக வைத்து கும்பாபிஷேகம் பற்றிப் பேசாது, குழுவுக்கு வாழ்த்துக் கூறியதோடு கூட்டம் நிறைவுற்றது.

செலவு

ஊர் பொதுமக்கள் கலசத்தைக் கண்டுபிடிப்பதற்காக மட்டுமே என்ற எண்ணத்தில் தாராளமாக நன்கொடை தந்ததால்தான் குழுவால் இச்செயலினை எளிதாகச் செய்ய முடிந்தது. கடைசியில் மீதம் இருந்த சிறு தொகையினையும் அம்மனுக்கு அபிஷேகம் செய்து குழுவினர் அம்மனின் அருளுக்கும் பாத்திரர்கள் ஆனார்கள்.

திருப்பணிக்குழு

திருவிழாவிற்கு முன்னர் கும்பாபிஷேகம் செய்யவேண்டும் என்பதால், நகரத்தார் களும் 18—1—89 அன்று கூடி கலசத்திற்கு மட்டும் தங்கம் வசூலித்து வேலைகள் பார்த்து

ஸ்தாபிதம் செய்து, அம்மனுக்கு மட்டும் மருந்து சாத்தி சுருக்கமாகக் கும்பாபிஷேகம் செய்வது என்று ஒரு முடிவுக்கு வந்த கட்டத்தில், கலசமீட்பிற்காக முதல் ஊர்க்கூட்டத்தில் தோன்றியது போலவே இன்றும் அம்மன் என்முன் நிற்பது போலத் தோன்றியது. உடனே நானும் எல்லாக்கோபுரங்களுக்கும் பஞ்சவர்ணம் வைத்து, எல்லாச்சாமிகளுக்கும் மருந்துசாத்தி, கோயிலையும், புதுப்பித்துத்தான் கும்பாபிஷேகம் செய்ய வேண்டும் என்று சொன்னேன். தெய்வப்பணியில் குன்றாத ஆர்வமுடைய நகரத்தார்களும், பணம் வசூல் ஆனால் அவ்வாறே செய்யலாம் என்று முடிவு செய்து திருப்பணிக்குழுவையும் தேர்ந்தெடுத்தார்கள். அம்மன் அருளால் நிதி நிலை நிலைமை நன்கு தென்பட்டதால், ஏதும் விடுபடாமல் பூரணமாகக் கும்பாபிஷேகம் செய்வது என்று 28—1—89ல் கூடிய திருப்பணிக்குழு முடிவு செய்தது.

கும்பாபிஷேக நாள்

12—5—89ல் வைகாசித் திருவிழாவிற்குக் காப்புக்கட்ட வேண்டிய திருப்பதால், திருவாடானை டாக்டர் அய்யாமணி சிவாச்சாரியார் அவர்களை அழைத்து வந்து சிவன் கோவிலில் வைத்து மிகுந்த ஆராய்ச்சியின் பேரில் நாள்பார்த்து, அம்மன் அருளால் கும்பாபிஷேகம் செய்வதற்கு 1—5—89 என்று நாள் அமைந்தது.

கும்பாபிஷேகம் -- மண்டலாபிஷேகம்

1—5—89ல் கும்பாபிஷேகமும், 12—5—89ல் காப்புக்கட்ட வேண்டும் என்பதால் 11—5—89ல் மண்டலாபிஷேகமும் அம்மன் அருளால் இனிதே நடந்து முடிந்தது.

நகரத்தார் நற்பணி

தேவஸ்தானம் தாம்பரக்கலசம் வைக்க எடுத்த முடிவும், திருவிழா நடைபெற வேண்டும் என்ற பக்தியுமே இக்கும்பாபிஷேகத்தை நகரத்தார்கள் செய்யக் காரணம் என்பதே உண்மையாகும் என்று நிறைவுற்ற நிலையில் கும்பாபிஷேகப் பணிசெய்த காலத்தில் நடந்த ஒரு உண்மை நிகழ்ச்சியினையும் கூறுகிறேன்.

அன்னையின் அருள்

ஒருநாள் யாகசாலைக் கொட்டகைக்காக நடைபெற்ற வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தேன். அப்போது ஒருவர் வந்து, தன்யானைக்கு ஒரு கண் தெரிவதில்லை என்றும் மேலும் அந்தக் கண்ணில் இருந்து தண்ணீராக வடிகிறது என்றும் கூறி மிகவும் வருத்தப்பட்டார். அவருக்கு ஆறுதல்கூறி, இப்போதே இரண்டு கண்மலர்கள் வாங்கி, அம்மனுக்கு சாத்தி, அர்ச்சனை செய்து, தேங்காய் பழம், வெற்றிலை பாக்கு விபூதி பிரசாதம் முதலியவற்றை யானைக்குக் கொடுத்துவிட்டு, அம்மனுக்கு சாத்திய இரண்டு கண்மலர்களையும் வாங்கி, யானையின் கண்களில் வைத்து எடுத்து உண்டியலில் சேர்த்து விட்டு, அம்மனின் அபிஷேகத்தீர்த்தத் தொட்டியிலிருந்து தீர்த்தத்தை எடுத்துக்கொண்டுபோய் தினமும்காலையில் யானையைக் குளிப்பாட்டியதும் கண்ணில் தீர்த்தத்தைத் தெளித்து வாருங்கள். ஒரு வாரத்திற்குள் அம்மன் அருளால் குணமாகும் என்று கூறி அனுப்பி வைத்தேன். ஒரு வாரம் கழித்து யானைக்காரர் வந்தார். யானைக்கு கண் நன்றாகத் தெரிவதாகவும், தண்ணீர் வடிவதில்லை என்றும் நாத்தழு தழுக்கக்கூறி அம்மன் அருளை வியந்து நின்றார். நானும் அம்மன் அருளால் கண் ஒளி பெற்ற யானையுடன் வந்து கும்பாபிஷேகத்தில் கலந்துகொண்டால் மேலும் நன்மை உண்டாகும் என்று கூறினேன். அவரும் அதன்படியே வந்து கும்பாபி

ஷேக 6 நாள் நிகழ்ச்சியிலும் ஆர்வமுடனும், பக்தியுடனும் குணமடைந்த யானையுடன் கலந்து கொண்டார்.

மனிதர்களுக்கு மட்டும் அல்ல விலங்கினத்திற்கும் கண்ணுடைய அம்மன் அருளால் கண்பார்வை கிடைக்கும் என்பதற்கு இம்மலர் 136ம் பக்கத்தில் எனக்கும், யானைக்கார ருக்கும் நடுவில் நிற்கும் யானையே உண்மையான சாட்சியாகும்.

கலசமீட்பிற்கான கூடிய முதல் ஊர்க்கூட்டத்திலும், கும்பாபிஷேகத்திற்காக கூடிய முதல் நகரத்தார் கூட்டத்திலும் அம்மன் திருஉருவை நேரில் கண்ட உணர்வால் நான்கூறியபடி முறையே 21 நாட்களில் கலசம் கிடைப்பதற்கும் பூரணமான நிறைவுடன் கும்பாபிஷேகம் நடப்பதற்கும் துணைநின்ற அன்னை கண்ணுடையவளின் கருணை மேலும் என்னை இறைப்பணியில் தொண்டாற்றும் தொண்டர்களுக்கு தொண்டு செய்யும் பேற்றை அருளப் பிரார்த்திக்கின்றேன்.

❋ ★ ❋

உ

இன்ப நிலை



சத்திரம்

பெரி. அரு. கண. இராமசாமிசெட்டியார்

கௌரவ கண்காணிப்பாளர்

நாட்டரசன்கோட்டை மிகவும் சீரும், சிறப்பும் உடைய பேரூராகும். இதன் சிறப்பிற்குக் காரணம் இங்கே கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள கண்ணுடையநாயகி அம்மனே ஆகும். இவ்வம்மன் திருவருளால் உயர்வு பெற்று விளங்குவோர் பலர். நம் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் ஆண்டு முழுவதும் இத்திருக்கோயிலுக்கு வந்து அம்மனை வழிபட்டுச் சென்று பேறு பெற்றோர் பலர். இதன் பழமைக்கு இவ்வம்மை மீது பாடப்பட்ட ''கண்ணுடையம்மன் பள்'' என்னும் நூலைச் சான்றாகக் கூறலாம்.

இத்திருக்கோயில் சிவகங்கை தேவஸ்தானத்தைச் சேர்ந்தது. இதன் நிர்வாகப் பொறுப்பைத் தேவஸ்தானத்தினர் இவ்வூர் நகரத்தார் பெருமகனார் ஒருவரைக் கவுரவக் கண்காணிப்பாளராக (Honourary Superintendent) ஆக நியமித்துப் பார்த்து வரச் செய்தனர். உயர்திரு. சுப. அ. சுப. சுப்ரமணியன் செட்டியார் அவர்களும், உயர்திரு. முத்து. க. ஆவி. சித. ஆவிச்சி செட்டியார் அவர்களும் முறையே பார்த்த இப்பதவியை, மூன்றாண்டுகட்கு முன்பு சிவகங்கை தேவஸ்தானத்தினர் எனக்குத்தந்து, இத்தெய்வத் திருப்பணியில் ஈடுபடச் செய்தமை குறித்துப் பெரிதும் பெருமை அடைகிறேன், என் தந்தையார் சத்திரம். உயர்திரு. பெரி. அரு. கண. கண்ணப்ப செட்டியார் அவர்கள் இத்திருக்கோயிலின் மீது கொண்ட பற்றுதலும், பாசமும்தான் எனக்கு இத்தெய்வத் திருப்பணிப்புரியும் பேற்றைப் பெற்றுத் தந்தது என்றால் அது மிகையாகாது.

நான் இப்புனிதப் பணியை ஏற்ற நாள் முதலாக, தேவஸ்தானத்தினர், ஆலய நிர்வாகிகள், ஆலய ஊழியர்கள், நகரத்தார் பெருமக்கள், ஊர்ப் பெருமக்கள் எல்லாரும் தோளோடு தோள்நின்று உதவி வரும் அன்பினை நான் நன்றிக் கடனுடன் பாராட்டி மகிழ்கிறேன், இவ்வூக்க மிகுதியே என்னை ஆலயத்தின் ஆக்கப்பணி வளர்ச்சிகளில் ஈடுபடச் செய்தது.

திருக்கோயில் சொக்கட்டான்காய்ச்சேரி மண்டபத்தில் மின்விளக்குகள் போட்டும், திருக்கோயிலுக்குள் அமைந்துள்ள வாகன அறைகள் அனைத்திற்கும் புதுக்கதவுகள் போட்டுப் புதுப்பித்தும் அன்னையின் நித்தியப்படி அபிஷேகத்திற்கு ஒரு கேணியும் அன்பர்களைக் கொண்டு அமைக்கச் செய்தேன். இதுபோது அன்னையின் திருக்குட நன்னீராட்டு விழாவிலும், ஒத்துழைத்து எனது பணியைப் புரிந்தேன். அன்னைக்குச் சொர்ண அங்கித் திருப்பணியையும் விரைவில் செய்து முடிக்க என்னால் இயன்ற உழைப்பை ஆற்றுவேன்.

அன்பர் பணிசெய்ய ஆளாகிவிட்ட எனக்கு இன்பநிலைகள் தானே வந்து எய்தும் திறத்தை எண்ணி எண்ணிப் பூரிப்படைகிறேன்.

PRIVATE SECRETARY
To His Hoiiness Sri Jegadguru
Shankaracharya, Dakshinamnaya
SRI SARADA PEETHAM
SRINGERI - 577 139 (Karnataka)

Ref. No. D 7/1081
Camp : Sringeri
Date 26—4—89

வாழ்த்துரை

நீங்கள் அனுப்பிய கடிதமும் கும்பாபிஷேகப் பத்திரிகையும் கிடைத்து ஸ்ரீ ஸ்ரீ மஹா ஸந்நிதானம் அவர்களின் பாத கமலங்களில் உங்கள் நமஸ்காரங்களுடன் ஸமர்ப்பிக்கப் பட்டது. மேற்படி நன்னீராட்டு விழாவும் அதை ஒட்டி நடக்கும் மலர் வெளியீடும் நிர்விக்னமாகவும், சிறப்பாகவும் நடந்து அதில் பங்கு கொள்ளும் ஆஸ்திக மஹாஜனங்கள் எல்லோரும் க்ஷேமமாகவும், ச்ரேயஸ்ஸுடனும் வாழ அனுக்ரஹித் தளித்த மந்திராக்ஷதையும் ஸ்ரீ சாரதா சந்த்ரமௌளீஸ்வரர் பிரஸாதமும் இத்துடன் அனுப்பியிருக்கிறோம்.

இப்படிக்கு,
PRIVATE SECRETARY

உ

கயிலைமாமுனிவர் — சிவசிவ

ஸ்ரீ ல ஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித்
தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
அதிபர், ஸ்ரீ காசிமடம்
கடித எண். 5146/89

திருப்பனந்தாள் - 612504
(தஞ்சை மாவட்டம்)
தேதி 22—4—1989

வாழ்த்துரை

நாட்டரசன்கோட்டை ஸ்ரீ கண்ணுடையநாயகி அம்மன் திருக்கோவிலில் நிகழ்ந்த குடமுழுக்கையொட்டி விழா மலர் ஒன்று வெளியிடுவதறிந்து மகிழ்ச்சி.

'அளப்பில கீதம் சொன்னார்க்கு அடிகள்தாம் அருளுமாறே' என்றும், 'உளங்கனிந்த போதெல்லாம் உவந்து வந்து பாடுமே'-என்றும் சான்றோர் கூறியபடி, அன்போடுருகி அகங் குழைவார்க்கு எம்பிரான் அருள் நிச்சயம் கிட்டும்.

தமிழும் இனிமையும் போலப் பண்ணும் பரதமும் போலப் புதுமையும் இனிமையும் மிளிர்ந்திடும் பொன்மலராய் மலர் வெளிவரச் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

'வாழி அவன் சீர்பாடும் வாய்'

சுபம் — சிவசிவ

கோவிலூர் மடாலயம் ஆண்டவர் மன்றம்
(பதிவு எண் S 35 of 1972)

தந்தி நிலயம் : காரைக்குடி.
தொலைபேசி எண் :
காரைக்குடி. 2646.

கோவிலூர் - 623 319
மானகிரி வழி
(ப.மு. மாவட்டம்)
21—4—89

வாழ்த்து

கண்ணுன வேதமெலாம் கனிந்து கூடும். கண்ணுடைநாயகித்தாய் குடநீராட்டு இன்பமுடன் எத்திக்கும் போற்றிப்புகழ இனிது நடைபெற எம்மாசி கூறுகின்ரேம். எம்மை இரண்டறகலந்துள்ள என்னம்மை திருநெல்லைத்தாயின் திருவருளால் கண்ணுடைநாயகித் தாய் குடநீராட்டு விழாவும் சீரும் சிறப்புடன் நடைபெற்று நாடும் ஊரும் மக்களும் நல்ல உடல் நலத்துடன் சகல நலன்களும் பெற்று வாழ்வாங்கு வாழ வாழ்த்துகின்ரேம்.

கோவிலூர் மடாலயம் ஆண்டவர் மன்றம்

உ

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம் — தருமபுரம்

26-வது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிகஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

மயிலாடுதுறை (அஞ்சல்) 609 001.

29—4—89

"ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே"

இறைவன் தன் இடப்பாகத்தே அம்மையைக் கொண்டு விளங்குதல் போல உலகம் ஆண் பெண் வடிவாய் அமைந்தது. காலம் இட்டு பொருள்கள் ஆகிய அனைத்துமே ஆண் பெண் வடிவோடு விளங்கக் காணலாம். ஆண் வன்மையாகவும் பெண் மென்மையாகவும் இருத்தல் போல நம் உடலிலும் வலப்பாகம் பெரிதாகவும் வன்மையாகவும், இடப்பாகம் சிறிதாகவும் மென்மை உடையதாகவும் அமைந்துள்ளது. சிவபிரானுடைய கருணையை அருளைச் சக்தி எனக் கூறுகிரேம்.

குழந்தைகள் தாயை மிகுதியாக நேசித்தல் போல மக்களும் அம்பிகையிடம் மிகுதியாகப் பக்தி செய்கின்றனர். அம்பிகை தீயவர்களை அழிக்க மேற்கொண்ட கோப வடிவில் காளி விளங்குகின்ருள்.

நாட்டரசன் கோட்டையில் கண்ணுடையநாயகி என்ற திருப்பெயரோடு புகழ்பெற்று விளங்கும் அவ்வன்னையின் ஆலயம் அன்பர்களால் திருப்பணி செய்யப்பெற்று குடமுழுக்கு நிகழ்த்தப் பெறுவதறிந்து மகிழ்கிரேம்.

மகாகும்பாபிஷேகம் இனிது நிகழவும் அன்பர்கள் நீடு வாழவும் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்ரேம்.

உ

திருக்கயிலாய பரம்பரை

ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாசதேசிக பரமாசாரியசுவாமிகள்

குருமகாசந்நிதானம் திருவாவடுதுறை ஆதீனம்

திருவாவடுதுறை-609 803

(தஞ்சாவூர் மாவட்டம்)

நாள்: 26—4—89

ஆசியுரை

நாட்டரசன் கோட்டையில் அருள்மிகு கண்ணுடையநாயகி அம்மன் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு விழா நடைபெறவுள்ளமை அறிந்து மகிழ்கிரேம்.

உலகெலாம் இன்புற்று வாழ, வேண்டும் வரமெலாம் அருளும் அருள்மிகு கண்ணுடையநாயகி அம்மை திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுவிழா இனிது நடைபெறவும், மலரவுள்ள விழாமலர் தெய்வத் திருவருள் மனங்கமழ மலர்ந்து உலகு இன்புறவும், இவ்வினிய பணியில் மெய்யன்போடு ஈடுபடும் அன்பர்களும் வழிபடும் அன்பர்களும் நலன்களெல்லாம் எய்தி மேன்மை பெறவும் நம் ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ ஞானமா நடராஜப் பெருமான் திருவடி மலர்களைச் சிந்தித்திருக் கின்ரேம்.

கோடி முறை கும்பிடுவோம் ● இராம. சேதுநாராயணன்

(துணைவேந்தர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)

ஆட்டுவிக்கும் பெருஞ்சக்தி அகிலாண்ட நாயகிதான்
நாட்டரசன் கோட்டையிலே நலம் காக்கும் கண்ணாத்தாள்
பாட்டரசன் கம்பன் பாடித்திரிந்த இடம்
நாட்டரசன் கோட்டை அன்னை நாடியிருக்கும் இடம்
அணிமணியாள் குங்குமத்தாள் அழகு மலர் முகத்தாள்
பணிந்துருகும் பக்தர்க்குப் பரவசத்தைத் தான் தருவாள்
தேவியவள் பெயர்சொல்லத் தீவினைகள் தூளாகும்
சேவைகளைச் செய்துவரத் தீராத நோய் தீரும்
வெற்றியுருவானவளை வீர வடிவானவளைக்
கற்றாவின் மனம் போலக் கசிந்துருக நன்மைவரும்—ஆம்
''என்னாத்தா'' எனச்சொல்லி இதயங் கசிபவரைக்
கண்ணாத்தாள் காத்திடுவாள் கவலையெல்லாம் தீர்த்திடுவாள்
காலையிலே நோயென்று கையெடுத்துக் கும்பிட்டால்
மாலையிலே சீராக்கும் மகத்துவம் படைத்த மகள்
கண்நோய்கள் எதுவரினும் காப்பாற்றும் தெய்வமகள்
கண்ணுக்குக் கண்ணாகக் காசினியோர் வணங்குகிறார்
சக்தி இல்லையெனில் சகந்தினிலே இயக்கமில்லை
சக்தி உடனிலையேல் சிவத்திற்கும் பெருமையில்லை
சக்தி நமதானால் சாதனைகள் நமதாகும்
சக்தி ஒளி கிடைத்தால் தெளிவு பிறந்துவிடும்
சக்தி துணையிருந்தால் சரித்திரம் படைத்திடலாம்
சக்தி கண்மலர்ந்தால் சங்கடமாம் இருள்தொலையும்
சக்தி அருளிருந்தால் சஞ்சலங்கள் ஓடிவிடும்
சக்தி உளமிருந்தால் சர்வநலம் கூடிவரும்
வரிசைமிகுந்துவர வண்ணமணி ஆயிழையார்
சரஞ்சரமாய் வந்து தினம் சக்தியினைப் போற்றுகிறார்
மாவிளக்குப் போட்டுக் கண்விளக்கு ஏற்றுகிறார்
பூவிளக்கம் தந்தருளப் புகழ்த்தாயை ஏற்றுகிறார்
மாக்கோலம் தாம்இட்டு மனக்கோலம் காட்டுகிறார்
பூக்கோலக் காரியிடம் பூரிக்க வரம் பெறுவார்
மஞ்சள் பாவாடையிலே மாதா பொலிகின்றாள்
மஞ்சள் மலர்ஆடி மகிழ்ச்சி முகம் காட்டுகிறாள்
''அஞ்சேல்'' என யாருக்கும் அபயம் அருள்கின்றாள்
நெஞ்சில் அவளை வைத்தால் நிம்மதியைத் தருகின்றாள்
தாயே துணையென்றால் தலைமாட்டில் அவளிருப்பாள்
வாயாரத் துதிப்பவர்க்கோ வாழ்க்கையெல்லாம் துணைவருவாள்
கண்ணாத்தாள் திருப்பெயரைக் கனிவோடு உச்சரிக்க
எண்ணம் மிகுந்தவர்கள் இப்பகுதி வாழ்பவர்கள்
உள்ளமெல்லாம் கண்ணாத்தாள் ஒளியூட்டி நிற்பதனால்
இல்லமெங்கும் கண்ணாத்தாள் எனும் பெயரில் பெண்மக்கள்
குங்குமத்தாள் கோயிலுக்குக் குடநீராட்டு விழா
எங்கெங்கும் மாந்தர்குழாம் இசைபாடும் மனமெல்லாம்
மண்ணில் நல்ல வண்ணம் வாழவழி செய்பவளைப்
பெண்ணின் பெருவடிவைப் பேரருளைக் கும்பிடுவோம்
ஆடல்வல்லானை ஆட வைத்த நாயகியின்
பீடு சொல்லப் பாடிடுவோம் பெருமையெல்லாம் கூடிடுவோம்
காவல் தேவதையாம் கண்ணாத்தாள் திருவடியை
நாவாரப் போற்றிடுவோம் நலமுடனே வாழ்ந்திடுவோம்
காதல் நிறைவாகிக் கசிந்து கண்ணீர்மல்கி
மாதுளம்பூ நிறத்தாளை மனதாரக் கும்பிடுவோம்
பாவக் கலிதொலையப் பக்தியுடன் ஆத்தாளின்
கோவிலுக்குச் சென்று கோடிமுறை கும்பிடுவோம்.

உ

கண்ணுடைய அம்மன் பள்ளு

(ஒரு பகுதி)

ஆசிரியர் : முத்துகுட்டிபுலவர்

(இவர் வரலாறு பிறிதொரு இடத்தில் இம்மலரில் உள்ளது)

விருத்தம்

நீடுபெருஞ்செல்வம் நிறையுங்கலைவேள்வி
நாடுபுகழ்கண்ணுடைய நாச்சியார்பள்ளிசைக்கே
ஏடுமெழுத்தாணியுமுன் னேந்துமகமேருவுந்தன்
கோடுமெனக்கொண்ட மதக் குஞ்சரந்தாள் காப்பாமே.

கலிப்பா

நற்றமிழ்சேர் கண்ணுடைய நாயகியாளென்னை யன்பாய்ப்
பெற்றவள்சேர் நாட்டுவளம் பேர்விளங்கச் சொல்லியபின்
கொற்றமத வேள்குயிலைக் கூவாய் குயிலேயென்
றுற்றதிருப் பள்ளியர்வந் துள்ளமகிழ்ந் தோதுவரே

குயிற்சிந்து

சுகந்தமலர்ச் செழுங்கமலக் கண்ணுடையாள் சந்நதிநற்
சொர்ணமயமாய்த் துலங்கக் கூவாய்குயிலே
மகிழ்ந்து செய்யுங்களியாட்ட வைகாசித் திருநாளும்
மாறுமல் விளங்கவென்று கூவாய்குயிலே
ஜெகந்துதிக்குஞ் சிவன்கோயிற் கோபுரமுங் குறைமுடித்து
திருத்தேர் கொண்டருளவே கூவாய்குயிலே
உகந்த பெருமாள்கோயில் திருமதிலுமண்டபமும்
உபயபூசை நடக்கக் கூவாய்குயிலே

வயனிருவர் பரவுமுத்துவடுக நாதேந்த்ர துரை
மார்க்கண்டன் போலிருக்கக் கூவாய்குயிலே
உயர்குழந்தைத் துரையரசு அரசுகள் குமாரவர்க்கம்
உகந்துபெற வரந்தரவே கூவாய்குயிலே
தயவுள்ள மெய்ஞ்ஞான துரைதர்ம சமஸ்தானபதி
தழைத்தோங்கி வளரவே கூவாய்குயிலே
நயமிகு கண்ணுடையவட்கு இலுப்பைக்குடியூர் கொடுத்த
ராஜசிங்க மிவனென்று கூவாய்குயிலே

படியிலுயர் வேதியரும் பசுக்குலமு மிசைக்கவிசொல்
பாவலரு மிகவாழ்க் கூவாய்குயிலே
கொடியேற்றத் திருவிழாபரம்பர மண்டலபுருடக்
குருக்கள்வந்து நடத்தவே கூவாய்குயிலே
நெடியதடம்புவி வாழ்கத்தான தலம்பரிகலத்தார்
நிறைவாழ்வு பெற்றிருக்கக் கூவாய்குயிலே
அடியடி வாழைகளான அர்ச்சனை செய்பாரசைவர்
அனைவோரு மிங்கிருக்கக் கூவாய்குயிலே

சட்டமொடு மழைசொரிய ஊர்க்கிடையில் நிலம்விளையச்
சாணுன்குளம் பெருகக் கூவாய்குயிலே
சிட்டர்புகழிலுப்பைக் குடிசெந்நெற் குடிமுதலான
தேவதாயம் விளையக் கூவாய்குயிலே
அஷ்டதிக்கும் பிரண்டைக்குளம் பேய்வெட்டி காளையுழ
வடயோலைக் கதிகம்வரக் கூவாய்குயிலே
கட்டளையாய்த் திருவிழாக் காணிக்கை மூன்றுபணங்
கனிந்துதருங் குடிதழைக்கக் கூவாய்குயிலே

சதிரில்வரும் பயிற்பார்வை யெண்பதுக்கெண்பது வரைக்கும்
தானியங்கள் தொகைபிறக்கக் கூவாய்குயிலே
கதிர்விளையும் பண்ணைமுதற் கட்டுக்கிடை ஊர்க்கூர்நெற்
களஞ்சியமென்மேலும் வைக்கக்கூவாய்குயிலே
அதிகதிருவாபரணம் பூசைமிச்சம் வருஷமொன்றுக்
கையாயிரம் பொன்காணக் கூவாய்குயிலே
பொதிபொதியா யரிசிவிட்டுத் திருநாள்மண்டபம் நடத்தும்
புண்ணியர்கள் மிகவாழ்கக் கூவாய்குயிலே

தேவாதிதேவர் பணிகண்ணுடையவள் நாடு
தென்பனைசையூர் செழிக்கக் கூவாய்குயிலே
பூவாசங்குலவு பஞ்சமாதேவி கீழக்குளம்
பூத்தகுடி பொலிபொலியக் கூவாய்குயிலே
கூவாணி வீருணிகண்டங்காத்தான் சோழன்
கோட்டை நிலஞ்சுதையாகக் கூவாய்குயிலே
நாவாணர்துதி செய்யும் பெருமாளம்பலத்தாடி
நஞ்சை புஞ்சைவிளையவே கூவாய்குயிலே

கனவிசையரகுநாதச் சேதுபதிசெய்த கொடிக்
கம்பமண்டபம் திகழக் கூவாய்குயிலே
புனிதமுறு சந்நிதிமுன் முகப்புமண்டப முடித்த
புகழ்நகரத்தார் விளங்கக் கூவாய்குயிலே
தனது யீஸ்வரவருஷம் புதுத்தேர்வைத்திடு நகரம்
தழைக்கு மூரவர் வாழ்கக் கூவாய்குயிலே
மனமகிழுங் கோபுரமுங்கட்டி வைத்தவூர்வணிக
மகராசர் குலம்வளரக் கூவாய்குயிலே.

இலகுதிருவிளக்கு பயம் நிலங்கொடுத்தோர் பணங்கொடுத்தோர்க்
கினியவரங் கொடுக்கவென்று கூவாய்குயிலே
பலவுபயம் நகைகள் திருப்பணிவுபயம் நடத்தினவர்
பலவுபயம் பெற்றிருக்கக் கூவாய்குயிலே
குலவு தனிக்களியாட்டமுன்பு கொடுத்தவரின்னங்
கொடுப்பவர்கள் குலம்வாழ்கக் கூவாய்குயிலே
உலகறியச் சூலம்போட் டபிஷேகப்பாற் பசுவிட்
டுண்மைசெய்தோர் நன்மைபெறக் கூவாய்குயிலே.

திங்கள்தோறு மழைசொரியத் தேசமெல்லா மிகவிளையத்
தின முமக விலையேறக் கூவாய்குயிலே
எங்கு நிலமான வடகலைவேள்வி நாடுநகர்
ஏழூர்ப்பத்துஞ்செழிக்கக் கூவாய்குயிலே
சங்கநிதி நாட்டரசன் கோட்டை வளர்நாடுநகர்
சகலஜனமுந்தழைக்கக் கூவாய்குயிலே
மங்களகல்யாண சுபசோபனம் பெற்றுலகேழும்
வாழிமிகவாழியென்று கூவாய்குயிலே.

கலிப்பா

ஊரவர்கள் நாளிட்டு கந்தமணிப் பொன்னிலங்கக்
காரமிகுசெல்வக் களியாட்ட வீடுதனில்
ஆரமுலைமின்னார்கள் அம்மைபுகழ் பாடியபின்
சூரநிதம்வந்து முளைகொட்டி விளையாடுவரே

முளைப்பாட்டு

கட்டழகி யுத்தமியாங் கண்ணுடைய நாயகிமேல்
இஷ்டமிகு செந்தமிழா லின்பமுளைப் பாட்டுரைக்க
சிஷ்டர்புகழ் தென்பனசைத் தேசி விநாயகனார்
அஷ்டதிசை போற்றுமத யானைமுகன் காப்பாமே
பூமடந்தை நாமடந்தை புவிமடந்தை புகழ்மடந்தை
மாமடந்தை யென்னவரு மலர்மடந்தை மாதரசி
மாதரசி வாழ்வரசி மண்ணரசி விண்ணரசி
சீதரனார் சோதிரியாந்தெய்வப் பிராமணத்தி
தெய்வப் பிராமணத்தி சீதேவி நாச்சியார்
மெய்வாய்த்த பூங்கரும்பு விள்ளரிய தெள்ளமிர்தம்
தெள்ளமிர்தந் துள்ளமிர்தந்தேறப் பழுத்தகனி
பிள்ளைகளாய் மூவரையும் பெற்றெடுத்த பேடைமயில்
பேடைமயி லெனவிளங்கும் பேருள்ள பிடாரியம்மன்
ஊடுருவப் பார்வைசெய்யும் உண்மையுளோர் கண்டபொருள்
கண்டபொரு ளன்புடையோர் கருணைப் பெருக்காறு
தொண்டர் மனக்கோவிலுக்குத் தூண்டா மணிவிளக்காம்
மணிவிளக்காம் விலைமதியா மாற்றதிக மானதங்கம்
பணிவிளக்காஞ் செம்மலைமேல் பச்சைப் படர்ந்தகொடி
கொடியிடையாள் பிடிநடையாள் கும்பிடுவோர் குலதெய்வம்
வடிவழகு பூத்தகடல் மலையரசன் வளர்த்தகிளி
வளர்த்தகிளி சமர்த்திமகள் வள்ளியம்மை மாமியார்
முளைத்தெழுந்த கணபதிக்கு முருகனுக்கு மொருதாயார்
ஒருதாயா ரிவளெனவே உலகமெல்லா மீன்றகன்னி
விருது மகிடாசுரனை வென்றவளும் வீரசக்தி
வீரசக்தி வீரதுர்க்கை வேதாளக் கொடியிடையாள்
பாரசக்தி கோரருத்ரி பரமசிவன் கண்ணாட்டி
நாட்டிலுயர் கலைவேள்வி நாடுடையாள் நகருடையாள்

தேட்டிலுயர் வணிகருள்ள தென்பனசை மாநகராள்
மாநகராள் பாரசைவர் வங்கிசமே பூஜைசெய்யும்
நானிலஞ்சேர் பூலோக நாயகியாங் கண்ணுடையாள்
கண்ணுடைய நாயகிக்குக் கண்குளிரப் பார்த்திருக்கும்
எண்ணரிய நவநிதியும் இசைந்துவைத்த பொக்கிஷமாம்
பொக்கிஷஞ் சேராபரணம் புதுவயிரத் தேர்த்திருநாள்
மிக்கபொரு ளுள்ளதெல்லா மிகத்தேடி வைத்தவர்கள்
வைத்தவர்கள் முத்தமிழை வளர்த்தவர்கள் மரபுடையோர்
எத்திசையுங் கொண்டாடும் ஏழூநகர் வாழ்வணிகர்
வாழ்வணிக ரம்பலமும் வளர்குடியும் பலகிளையும்
சூழ்வணிக ரூரவர்கள் சொன்னபடி நன்னயமாய்
நன்னயமாய்க் களியாட்டம் நடத்துதற்கு நாள்குறித்து
மின்னுமணிக் களியாட்ட விடுகட்ட வேணுமென்று
வேணுமென்று நாட்டவரில் மிக்கான கிளைப்பிரிவில்
காணிகொண்டு மதுவெடுக்குங் கன்னியர்கள் மனைதனிலும்
மனைதழைக்கும் மூர்க்கணக்கன் மகிபாலன் மனைதனிலும்
அனுதினமுந் திருப்பதி ஐயங்கார் சொற்படியே
சொற்படியே யங்குமிங்குஞ் சுபதினத்தில் தச்சுசெய்து
விற்பனஞ்சேர் கண்ணுளன் விஸ்வகுல தெய்வதச்சன்
தச்சப் பிச்சஞசாரி தனதுகொலுச் செல்லனுந்தான்
வச்ரமணி மாளிகையாம் வாசலிலே நடைகூடம்
கூடநின்று முகூர்த்தமிட்டுக் கோடிபொன் னேத்திசெய்து
நீடியபூம் பந்தரிட்டு நிறைமலரா லலங்கரித்து
அலங்கரித்த திருமணியி லம்மனைப்போ லுருவெழுதி
துலங்குதெரு வீதியெல்லாந் தோரணங்கள் மிகநிரைத்து
நிரைத்துவரும் விபவஷு நிறைந்தகளி யாட்டத்துக்கு
விருதுரைக்கும் பதின்மூன்றும் விக்கிரம வருடமதில்
வருஷமுதற் றிங்களென வந்த சித்திரைமாதம்
திருவள ரேழாந்தேதி சேருமுதற் செவ்வாயில்
வாய்த்த திருக்கோயிலுக்கு மற்றுமுள்ள கோயிலுக்கும்
சாத்தெண்ணெ யமுதுபடி சகலசிறப்புங் கொடுத்து
தன்னசரிற் பெண்களெல்லாந் தயிலமிட்டு நீராடி
பொன்னுடமை பொற்புடவை பூஷணங்கள் மிகப்பூண்டு
நளபாகமாய்ச் சமைத்த நல்லமுது கறிவகைகள்
வளமான போஜனங்கள் வற்கவகை தானருந்தி
பங்கயம்போல் முகமலர்ந்து பாக்கிலையுந் தான்பருகி
குங்குமமுஞ் சந்தனமுங் குழைத்து மிகப்பூசி
தெண்ணீரிலே விளைந்த சீரகச்சம்பா விரையாம்
தொண்ணூறு கோட்டைவிரை சொரிந்து கடகத்தளந்து
கொட்டு முழக்குடனே குரவையிட்டுக் கோயில்முன்னே
சட்டமுடன் கொண்டுவந்து தளவிசையின் மேல்விரித்து
விந்தையுடன் சந்நிதியில் விரபட்டன் மனமகிழ்ந்து
சந்தனம் விபூதிதரச் சகலஜனமுந் தரித்து
காதலுடன் மீளவந்து களியாட்ட வாசலிலே

கோதையர்கள் சேரமுளைக் கொட்டி விளையாடுவரே
நல்லதொரு செவ்வாய்க்கு நாலானுள் வெள்ளிதனில்
மெள்ளவந்து வாரியதை விரைகளெல்லாம் கோட்டைகட்டி
உற்றபெருந் திருக்குளத்தில் உள்ளபடி நனையவைத்து
மற்றவெள்ளிக் கைந்தாநாள் வருமிரண்டாஞ் செவ்வாயில்
நனைத்தவிரைதனைச் சொரிந்து நாச்சியார் மண்டபத்தில்
கனத்தபுங்கந் தழைமேலே கன்னியர்கள் தெளித்தனரே
உம்பருடன் தெளித்தமுளை உத்தமிகண் ணுள்ளவளை
நம்பினவர் கிளைபோலே நாளுக்குநாள் வளர்ந்ததுவே
முந்துமுளை வளர்ந்ததற்பின் மூன்றுஞ் செவ்வாய்தனிலே
வந்துமுளைவாரி யதைமறுதளத்தின்மேல் விரித்து
செய்வாய்க்கி நாலாநாள் தெள்ளியதோர் வெள்ளிதனில்
கொவ்வையிதழ் மின்னார்கள் கூடிவந்து முளைவாரி
கண்டிருகண்களிகூர்ந்து களியாட்டவாசலிலே
கொண்டுவந்து மாவெடுத்துக் குடத்திலிளநீர் பெருக்கி
தேனைக் கலந்தெடுத்துக் திரைவளைத்துப் பானைவைத்து
பானைக்கு மூன்று சிருய்ப் பக்கமதில் வைத்திடவே
புனிதமுள்ள தேவி மதுப்பொங்கி வழிந்திடுமாம்
இனியதொரு சுபதினத்தில் இருபத்திரண்டாநாள்
நறுமணங்கள் கமகமென நாலாஞ் செவ்வாய்தனிலே
பிரீதியுடனொரு சோட்டுப் பெண்களெல்லாம் நீராடி
பட்டுடுத்திப் பணிபூண்டு பரிமளங்கள் கமகமெனப்
பொட்டுமிட்டுக் களியாட்டப் புதுவீடு முன்புவந்து
நெடுநிலத் தோரதிசயிக்க நிறைந்திருக்கு மதுக்குடத்தை
நடுவிருக்குமொரு குடத்தை நாச்சியார் குடமெனவே
முறைமுறையாய்த் தெண்டனிட்டு முதல் மதுவைத்தானெடுத்து
நிறைகுடங்களாயிரமாம் நீலக்குடமாயிரமாம்
சிறுகுடமும் பெருங்குடமுஞ் செம்பொற்குடமாயிரமாம்
நிறுக்கவொண்ணு வெள்ளிக்குடம் நீலக்குடமாயிரமாம்
பச்சைக்குடமாயிரமாம் பவளக்குடமாயிரமாம்
இச்சைப்படியொரு கோடியினிய மதுக்குடம்வரவே.
பேரிகையும் பூரிகையும் பெரியதவில் மத்தளமும்
வீராணம் பதினெட்டு மேளவாத்திய முழங்க
நடக்குமுயர் சங்கீதநட நாடகசாலை
இடைக்கியங்களாலவட்டம் இசைந்தகுடைகவரிகுஞ்சம்
மதயானை மனுவரசு மண்டலிகர் புடைசூழ
பதினுயிரந்தீவட்டி பகல்வத்தி நின்றிலங்க
சாந்தொடு பன்னீர் சுகந்தஞ்சாம்பிராணி கமகமென
பூந்துகிலின் பாவாடை பொரிவாணம் பூச்சிதற
ஜெகராஜர் மகிழ்வணிகர் தெருவீதிதனைச் சூழ்ந்து
மகராஜி கண்ணுடையாள் மதுக்குடங்கள் வந்ததுவே
ஊரணிக்குட் பெலீபீடம் ஒற்றைப்பனையடியில்
வாரணிந்த கொங்கைமின்னுள் மதுக்குடங்கள் வந்ததுவே
சொன்னபடி திசைநோக்கித் துள்ளுமறிப்பலிகளிட்டு

சன்னதிமுன் வந்துநின்று சாம்பிராணித் தூபமிட்டு
பத்துலட்சங் குட்டிவெட்டிற் பனியளவு குருதியுண்டோ
மெத்தப்புதுமையென்று விண்ணவர் பூமலர்சொரிய
கண்ணுடையாள் திருவிருப்பிற் கண்ணுடையாள் மதுக்குடத்தை
கண்ணுடையாள் முன்புவைத்துக் கன்னியர்கள் போற்றுவரே
வடக்குவாய்ச் செல்லியம்மை மாதாவே பூசைகொள்வாய்
அடைக்கலங்கள் காத்திடுமென்னுத்தாளே பூசைகொள்வாய்
பூசைகொள்வாய் பூசைகொள்வாய் பூங்குயிலே பூசைகொள்வாய்
ஈஸ்வரியே பூசைகொள்வாயென்று மிகவேபணிந்து
நாலுதிக்குஞ்ஜனங்கள் வரநகரமெல்லாஞ் சூழ்ந்துவர
வாலிபமாய் மங்கையர்கள் மனியில் வந்தார் சோபனமே
பார்வாழி சந்நிதிமுன் பரிகலமுந்தான்வாழி
சீர்வாழி பேர்வாழி தென்பனசையூர்வாழி
மனுவரசு சேருமுத்து வடுக நாதேந்த்ரதுரை
அனுதினமும் புவிபுரக்க அரசுபெற்று வாழியவே
சகல குணமதியூகி தாண்டவ ராயேந்த்ர துங்கன்
புகழ்வளர மதிவளரப் பூவுலகில் மிகவாழி
வாழிமிக நாடுநகர்வாழ் வணிகர் கிளைவாழி
வாழி முளைத்தமிழ் வாழிவாழிமிக வாழியவே

முளைப்பாட்டு முற்றும்

★

கலிப்பா

தாயிலுமெய்யன் புளதாய் தண்ணளிசேர் கண்ணுடையாள்
கோயில் முளைப்பாட்டுரைத்துக் கொட்டி விளையாடியபின்
வாயிதழ் செந்தேனொழுக வாலிபமின்னார் வகுப்பில்
ஆயிரம்பேர் கும்மியடித்தன் பின் விளையாடுவரே

★

கும்மிப்பாட்டு

செந்தாமரைத் திருக் கண்ணுடையாளம்மன் சீதேவிமேற் கும்மிப்பாட்டுரைக்க
கொந்தாருங் கூந்தல் மடவாரேயிங்கே கும்மி யடிப்போம் வாருங்கடி
கும்மியடித்துக் கவிபடித்து அம்மன் கோயில் களியாட்ட வாசலிலே
ரம்மியமாக விளையாடினால் மிக நன்மைதருவாள் கண்ணாத்தாளடி
கண்ணாத்தாளைப்போலே தெய்வமுண்டோ அவள் காரணக் காட்டிசிபோல் காட்சியுண்டோ
விண்ணாட்டிலுள்ளவர்க்கானாலு மிந்த மெய்யதுவுண்டோடி தோழிப் பெண்காள்
மெய்யதுசொன்னால் மலைபோலே பெண்காள் வேடிக்கை சொர்ணச் சிலைபோலே
துய்யவள் கண்ணுள்ள நாச்சியார்புகழ் சொல்லத்தொலையாது தோழிப்பெண்காள்
சொல்லச் சொல்லவரும் நாட்டமடிவந்து சூழும்வெகு ஜனக் கூட்டமடி
செல்லத்துரைச்சி கண்ணாத்தாளுக்கு மனத்தேட்ட மெல்லாங் களியாட்டமடி
தேட்டமெல்லாங் கண்ணாத்தாய் மேலே அவள் சித்தமெல்லா மிந்தச் சேய்மேலே
தோட்டமெல்லா மலர்கொய்தெடுத்து நாமே சூட்டுவோம் வாருங்கள் தோழிப்பெண்காள்
சூட்டவுமல்லிகைப் பூவிருக்கும் தீர்த்தத் தொட்டி யடுத்தொருமாவிருக்கும்

கூட்டுறவாய்த் தென்னங்காவிருக்குந் தேவி கோவி லடையாளம் பாருங்கடி
கோயிலுடையாள் குளமுடையாள் பொன்னின் கோபுரவாசல் வளமுடையாள்
தாயிலும் நல்லவள் கண்ணுடையாளெழு தாரணி காணியுடை யாளடி
காணிக்கிவாய்த்த மகராசி தெய்வக் கள்ளிச்சி ஞானக் கருமறத்தி
மாணிக்கச் செட்டிச்சி கண்ணுத்தாளிந்த வையமெல்லாம் பெற்ற மாதாவடி
மாதாவென்று லம்மன் தானிவளே சிவன் வாழ்வு தருமலை மானிவளே
சூதாந்தனத்தினங் கண்ணுடையா ளன்பு சொன்னல் வெண்தாமரை மின்னுளடி
மின்னே நமக்கென்ன தாட்சியடி இனி மேலும் வரும் பொருளாட்சியடி
கண்ணுலே காண்கலாங் காட்சியடிகண்ணுத் தாயாரே பூலோக சாட்சியடி
பூலோக மானதோர் மங்கையடிபுவி பூத்து முதிராத கொங்கையடி
கோலாகலமலர் மங்கையடி அம்மன் கோதண்ட பாணியார் தங்கையடி
கோதண்டமா மலர் வாளியடி அண்ட கூடமிவள் பதந் தூளியடி
மூதண்ட பத்திரகாளியடி அம்மன் மூவர்க்குந் தான் முதலாளியடி
தான்முதலாளியாய் வந்தாளடி தந்து தந்தியைக் கந்தனைத் தந்தாளடி
தான்முதலாயுள்ள கண்ணுடையா ளிங்கே வந்தாள் நம்மையுகந் தாளடி
நம்முலகெங்கும் நடுநீரில் வைத்து நனைத்த நெல்லு முளைப்பதுண்டு
அம்மனதிசயங் கண்டியளோ வென்னி ரவித்த நெல்லு முளைக்குதடி
நெல்லு முளைக்குங் களியாட்டந்தனில் நேர்ந்து விடுங்கன துள்ளிமறி
சொல்லு முன்வந்து பெலியிடவேயொரு சொட்டத்தனை ரத்தந் தோணுதடி
தோணுமல்வீட்டினில் வைத்திருந்து பெண்கள் ஜோடிப்புக்கேட்கக் கொடாத பொருள்
காணுமற்போகவுங் கண்டிடவுந் தேவி காரணங்காட்டவுங் கண்டோமடி
கண்டு கண்டுள்ளங் களிகூர்ந்துதேவி கண்ணுள்ள நாச்சியார் காரணத்தை
அண்டர் முனிவர் நவநாதிசித்தர்க ளாரறி வாரடி தோழிப்பெண்காள்
ஆரறி வாளிவள் நீதியடிகளி யாட்டத் திருநாள் முன்னுதியடி
சோருமனத்தர் விரோதியடி அம்மன் தூணி லுதித்த செஞ்ஜோதியடி
தூணைத் துரும்பாக வாட்டுவதும்பின் துரும்பை தூணுக நாட்டுவதும்
காணுப் புதுமைகள் காட்டுவதும்தேவி கண்ணுடையம்மன் கடாக்ஷமடி
கண்ணுடையம்மன் கருணைவைத்தாற் பண்டு காய்ந்த மரமுங் கனிசொரியும்
பெண்ணுடனுணும் பெறுவார்கள் அம்மன் பேரிடப் பேரிடப் பிள்ளையடி
பேரிட்டுக் கும்மியடியுங்கடி சற்றும் பிந்தாமற் கும்மி யடியுங்கடி
நேரிட்டுக் கும்மியடியுங்கடி பெண்காள் நித்தமுங் கும்மி யடியுங்கடி
நித்தமுங் கண்ணுள்ள நாயகியை உங்கள் நெஞ்சகந் தன்னில் நினைந்துகொண்டு
வர்த்தனைக் கும்மியடியுங்கடி நல்ல வடகலை வேள்வி நாட்டுப்பெண்காள்
நாடுநகரமும் பொன்னுலே வரும் நாலூர் ஜனங்களும் பொன்னுலே
ஆடல்பாடலும் பொன்னுலே களி யாட்டப் பூமனை பொன்னுலே
பூவிரிபந்தலும் பொன்னுலே கண்டு பூசிக்கும் பேர்களும் பொன்னுலே
தேவிமதுக்குடம் பொன்னுலே வைத்த தென்னம் பாளையும் பொன்னுலே
பொன்னுன பூங்கோயில்க் கண்ணுடையாளம்மன் பூங்குயில் வாழி புகழ்வாழி
நன்னுடுவாழி நகர்வாழி அம்மன் நாட்டரசன்கோட்டை வாழியவே

கும்மிப்பாட்டு முற்றும்

நாட்டரசன் கோட்டை

பெரிய கருப்பணசுவாமி பதிகம்

ஆசிரியர்

முத்துக்குட்டிப் புலவர்

சீருலவு செந்தமிழ் விதம்பெறப் பாடித் தினந்தின முனைத் துதிக்கச்
செல்வமிக வுண்டாக நல்வரிசை யாகநிதி தேடினது சில வழிக்கக்
காருலவு முனதழகு கண்டு தரிசிக்கக் கருத்தி லுனையே நினைக்கக்
கயவரைத் துதியா திருக்கக் கலிக்கடல் கடக்கவுங் கருணை புரிவாய்
தாருலவு பைந்துழாய் தழுவுமணி மார்பனுயர் தமிழுக்கு முன் சென்றவன்
சங்குசக் ராயுதன் பஞ்சவர்க் கன்பன் றடங்கட லடைத்த முகிலாம்
பேருல களந்ததிரு நெடுமால் வரத்தில் வரு பேர்பெரிய மேகவர்ண
பெருகுமலற் புனல்வாவி திகழ்பனைசைப் பதிமேவு பெரியகருப்பண சுவாமியே. (1)

ஒருபெரிய சிகைதா டிருக்குமொரு கொண்டையுட னொளிவிடுஞ் சந்திர காவி
யுருமாலின் விடுசங்கு தொங்கலின் மோடியுட னுத்தண்டமூர்க் கங்களும்
முருகுமேல்முரு சொரி முத்துக் கடுக்கனு முறுக்கிவிடு மேல் மீசையும்
முத்துமா லிகைபதக் கன்சரப் பணிதாம் முன்கைவளை கைச்சர முடன்
மருவுகை யரிவாளு மைச்சல் லடத்தின்மிசை வாங்குசமு தாடு சேர்த்து
வைத்திருக் குங்கருங் கச்சையுஞ் சோமனுட வல்லவாட் டுல்லாச மும்
பெருமையுள வீரதண் டையுமாக வந்துனது பேருலகு காட்சி தருவாய்
பெருகுமலற் புனல்வாவி திகழ்பனைசைப் பதிமேவு பெரியகருப்பண சுவாமியே. (2)

திரும்புந் திசைக்கெலாம் வந்துமுன் னிற்பாய் தியானிக்க வந்துதவு வாய்
சில்லறைப் பயமிகு வழிக்குவழி விடுதுணைச் சேவகனு மாகவரு வாய்
கரும்புந் தெவிட்டாத கனியுமென ரசமொழுகு கவிசொல்ல வந்து கேட்பாய்
கவிசொன்ன பேர்கேட்ட வரமுங் கொடுப்பாய்நீ கண்கண்ட தெய்வ மையா
விரும்புந் தவம்பெற்ற காமாட்சி யம்மன்முதல் வீரபத் திரன்மு னேடி
மெய்ச்சமய வரசுமுனி சோணையிரு ளன்காளி வெம்பேச்சி ராக்காயி யாம்
பெரும்பத்தி சூழுமுயற் சாலேதனி லாலயம் பெறவிற் றிருந்த துரையே
பெருகுமலற் புனல்வாவி திகழ்பனைசைப் பதிமேவு பெரியகருப்பண சுவாமியே. (3)

குடியா தரித்துப் பலன்பாக் கியந்தருங் குலதெய்வ நீயாகை யாற்
கும்பிட்டு வாழ்த்தியுனை நம்பிக்கை யாகக் குறித்து நிதமுந் துதித்தால்
துடியான பூதப் பசாசுக ளருட்டாது சோரபய மும் வராது
துன்பவினை வன்பிணிக ளண்டாது விபரிதச் சொற்பனங் காண்பி யாது
கடியாது சர்ப்பங்கள் தையாது படையம்பு கட்டாது கால பாசம்
கரடிபுலி நலியாது கடுவா பொடாதுவன் கலியெனும் புலி தொடாது
பிடியாது பேய்பில்லி சூனியமு மணுகாது பெலமுனது சலுகை யையா
பெருகுமலற் புனல்வாவி திகழ்பனைசைப் பதிமேவு பெரியகருப்பண சுவாமியே (4)

வாட்டப் படுத்திவிடு நாட்டுப் பிணிக்குளொரு வன்பிணி தொடுத்தவுடனே
மானிடப் பேய்களை மனப்பேய் பிடித்திட வழிப்பேய் பிடித்த தென்று
வீட்டிற் படைக்கின்ற தெய்வமோ தெய்வகுறை வேறுமுண் டோசொ லென்ன
விடெங்கு மாட்டுமொரு கோடாங்கி கேட்டிட மிலேச்சனென் றவ னறிந்து
போட்டுக் கொடப்பா தனிப்பூஜை யென்னப் பொருட்சேத மாக்குவிக்கும்
புலையாட்டி லேதிரிந் தலைவதெல்லாம் வெறும் பொய்யன்றி மெய்யு முளதோ
பேட்டுச் செழுங்குருகு மிளமீன் றசைக்குருகு பிள்ளைபெண் குறுகு மறுகும்
பெருகுமலற் புனல்வாவி திகழ்பனைசைப் பதிமேவு பெரியகருப்பண சுவாமியே. 5

கரும்பூனை கருநரி கருங்கிடாய் கருமந்தி கருநாய் கருங்கரடி போற்
கனதொழி லிடும்பேய்க டனிவழி யிருட்டினிற் கண்ணிலே சங்க டிக்க
வரும்போது முத்துக் கருப்பே கருப்பையா வாவென்று சொல் லறியா
மானிடப் பதர்களைச் சருவிப்பிடித்துவெகு வாட்டப் படுத்து வித்துத்
தரும்பூஜை யென்னடா தம்பியென் றுடுமொரு சண்டிப் பசாசுகளை நீ
சாட்டையடி வலுவிலொரு மூட்டுமூட் டும்பொழுது தவிடுபொடியாய் நொறுங்கிப்
பெரும்பூத முன்றெட்ட பேயுமொரு பேயைப் பிணைக்கொடுத் தோடி விடுமே
பெருகுமலற் புனல்வாவி திகழ்பனைசைப் பதிமேவு பெரியகருப்பண சுவாமியே 6

நிறையாயுள் பவுஷுநற் புத்ரரும் பெறவேண்டு நின்பெயர் தரிக்கவேண்டும்
நீயெங்கள் குலதெய்வ நாங்கணின் குடியென்று நேசித்து வந்த பேர்க்குக்
குறைதவிர வேதெய்வ வில்லிடையு மற்றுள்ள குடிலமுந் தீர்த்து நானே
குஞ்சுதந் தேனென்று திருநீறு நீதரக் கும்பிட்டு வாங்கு மடியார்
முறைமுறை மிகுந்துநல் லாண்பெண்க ளைப்பெற முழுக்குடிக ளாக்கு வித்து
முத்துக் கருப்பன் கருப்பாயி யென்னவே முப்பெயரு நீகொள்ளு வாய்
பிறைநுதற் கனியிதழ்ப் பெண்களிரு கண்களிற் பெருகிடுங் கயல் குதிக்கும்
பெருகுமலற் புனல்வாவி திகழ்பனைசைப் பதிமேவு பெரியகருப்பண சுவாமியே. 7

கச்சிநக ரென்றுமுயர் காஞ்சிபுர மாதேவி காமாட்சி வர புத்திரன்
கம்பையாற் றங்கரைக் கழுவேறி யேநின்று காத்தவன் காத்த முத்தன்
இச்சைதரு மாரியப் பூமாலை யைச்சிறை யெடுக்கவடி வங்கொள் காத்தான்
இந்துமுலை மங்கையர்கள் பந்துமுலை மஞ்சன்மனை மேறுவிர கங்கொள் காத்தான்
மெச்சுமொரு கம்பளத் தொட்டியச் சின்னனை வென்றடிமை கொண்ட காத்தான்
வேரிகுங் குமகளப கஸ்தூரி கமகமென வேருடன் மருக் கொழுந்து
பிச்சிமல் லிகைமாலை யணிபுயக் காத்தான் ப்ரதான மைத்துன ராயனே
பெருகுமலற் புனல்வாவி திகழ்பனைசைப் பதிமேவு பெரியகருப்பண சுவாமியே. 8

முருக்கிதழ் மடர்தைய ரலங்கார கேளிக்கை முறைபுரிவ தொரு பாரிசம்
முரசுதுடி பூரிகை லவண்டை தவில் மத்தள முழங்குதொனி யொரு பாரிசம்
நெருக்கமிகு சந்தடி விலக்கிவெகு சனம்வந்து நிற்கின்ற தொரு பாரிசம்
நேத்திக் கடன்சொன்ன காணிக்கை யிதுவென்று நிதிசொரிவ தொரு பாரிசம்
பருக்குமிள நீர்முலைப் பெண்கள் சங்கீதம் படிக்கின்ற தொரு பாரிசம்
பலகுடி கடன்மனக் குறைதீர்ந்திடக் கேள்வி பகர்கின்ற தொரு பாரிசம்
பெருக்கமுடனே கொலு விருக்குநின் கீர்த்தியைப் பேசுதற் கெளிதா குமோ
பெருகுமலற் புனல்வாவி திகழ்பனைசைப் பதிமேவு பெரியகருப்பண சுவாமியே. 9

தீவட்டி யுடன்மிக்க பகல்வர்த்தி நிரையிட்ட சிங்காரமொரு பாரிசம்
தீபதூ பப்புகைச் சாம்பிராணி வாசமொடு தெய்வங்க ளொரு பாரிசம்
வாய்விட் டதட்டித் திருட்டுப் பசாசுகளை வகைகேட்ப தொரு பாரிசம்
வகைகேட் டுறுக்கிச் சவுக்கடியி னுன்மாறு மாறென்ப தொரு பாரிசம்
நீவிட்டு விடுசாமி போறெ னெனப்பேய்க ணின்றழுவ தொரு பாரிசம்
நெற்றிமயிர் சுற்றிநிலை யாணியி லறைந்துதிரு நீறணிவ தொரு பாரிசம்
பேய்வெட்டி காளிதரு காளிமேற் சன்னதம் பிரதான கேள்வி யையா
பெருகுமலற் புனல்வாவி திகழ்பணைசைப் பதிமேவு பெரியகருப்பண சுவாமியே 10

ஆருமறி வார்களுன் சன்னதி விசேஷமென் னையனே யுனை நினைந்தால்
அடியோடு பட்டமர முந்துளிர்த் துத்தழைந் தன்றுபூத் தன்று காய்க்கும்
ஊருமில குங்காண நெடுநாளு மலடிருந் துருகிவெகு தெய்வங்கள் பால்
ஓடியா டித்திரிந் தொன்றுமா காமல்விட் டுனதுசாலைக்கு வந்து
தாருமை யாஒரு குழந்தையென் றவரவர் தவஞ்செய்ய நீயிரங்கிச்
சந்தான பாக்கியந் தந்தம்நீ பெறுவது தலைப்பிள்ளை யாண்பிள்ளையாம்
பேருமது முத்துக் கருப்பனென் றேவரப் பிரசாத நீகொடுப்பாய்
பெருகுமலற் புனல்வாவி திகழ்பணைசைப் பதிமேவு பெரியகருப்பண சுவாமியே. 11

துலுக்கித் துலுக்கிவெகு கோட்டாலை கொண்டுதலை சுற்றியண் ணாந்து பார்த்துச்
சும்மா பவுந்தமிட் டமுதுவயி றெக்கித் துணுக்கென் றுடம்பை வாட்டிக்
குலுக்கிக் குதித்திடும் வலுப்பசா சுகளைநீ கொண்டுவா சமயா வெனக்
கொண்டுவந் தேன்சாமி யென்றவன் சொல்லவுங் குண்டுமண் டாயிருக்கிப்
புலிக்குட்டி சமயனே புளியாக்கை வாங்கென்ற போதிற் பயந்து போரேன்
போரேனென் னையனே யென்றுசில கும்பிடுகள் போட்டுமுன் கெஞ்சி யோடப்
பிலுக்கிட்ட பேய்களை யடிக்குத் துரத்தும் ப்ரசண்ட வுத்தண்ட ராயா
பெருகுமலற் புனல்வாவி திகழ்பணைசைப் பதிமேவு பெரிய கருப்பண சுவாமியே 12

உருமைக் கருப்பனொரு சோணைக் கருப்ப னுருளதே ரடிக் கருப்பன்
உயரமுகர் கோயில்பதி னெட்டாம் படித்துறை யுறங்காப் புளிக் கருப்பன்
அருமைக் கருப்பன்மலை யாளக்கருப்ப னிசை யமரா வதிக் கருப்பன்
அலைகடலி நீருண்டிருண்ட மேகங்களு மருண்ட மேனிக் கருப்பன்
கருணைக் கருப்பனமற் சமயக் கருப்பன் கடுஞ்சங் கிலிக் கருப்பன்
கட்டாணி முத்துக் கருப்பனென் றுலகிற் கருப்பன் கருப்ப னெனவே
பெருமைக் கிசைந்துவெகு பேரிட்டு விளையாடு பேர்க்கார நீ யொருவனே
பெருகுமலற் புனல்வாவி திகழ்பணைசைப் பதிமேவு பெரியகருப்பண சுவாமியே. 13

விறுசிங் களமீழ மலையாள மியாழ்ப்பாண மிருகலிங் கங் கன்னடம்
மிக்கமக தங்குருகு டில்லி வங்காளம் விதற்பகுச் சலம ராடம்
கூறுமைம் பத்தாறு தேசமும் திசைகாவல் கொண்டகாவற் கார நீ
கொல்லிமலை முதலான மலைகளெல் லாமுனது கோட்டைத் தளங்க ளையா
நூறுபொன் சிலவினுந் தீராத பிணிகளை நொடிக்குளே தீர்த்து விட்டு
நூதனக் குடியான சீதனக் குடியென்று நூருயிரங் கோடி யாம்
பேறுதந் தாட்கொண்டு குடிகொண்டு வந்துனது பேர்கொண்ட கோலா கலா
பெருகுமலற் புனல்வாவி திகழ்பணைசைப் பதிமேவு பெரியகருப்பண சுவாமியே. 14

அஞ்சலென் றுதவுமென் னுண்டவன் றுணையென் றருத்தமிழினல் புகழ்ந்தால்
அல்லல்வினை பாய்விடுந் தொல்லையிற் றெட்டவற் பப்பிசா சுகள் போய் விடும்
சஞ்சலம் போய்விடு மனப்பயம் போய்விடுந் தாங்கொணுக் கலிபோய் விடும்
தாபந்த முடன்மெலிவு குறைகளும் போய்விடுஞ் சனிதோஷ மும்போய் விடும்
வஞ்சகம் போய்விடும் பொய்களவு போய்விடு மகாபாதகம் போய்விடும்
வன்பிணிகள் போய்விடு மெவர்க்குமிஃதுண்மையே மற்றுமொரு பாய முண்டோ
பிஞ்சிளம் பருவக் குரும்பையென வளர்தனப் பெண்கள் மோகன வொய்யாரா
பெருகுமலற் புனல்வாவி திகழ்பணைசைப் பதிமேவு பெரிய கருப்பண சுவாமியே. 15

உன்புகழ் நினைந்துனைக் கொண்டாடி யனுதினமு முனது பெயரைத் துதித்தால்
உள்ளன்பு வருமனதி லுற்சாகம் வருமுத்தி யோகவதி செயமும் வரும்
அன்புவரும் நல்லறிவு வருமுறவு வருமென்று மனுகூல காரியம் வரும்
அன்னமிட மனம்வருங் கவிசொல்லு மதிவரு மனேகமரி யாதையும் வரும்
இன்பநிதி வருமுனது சித்தந் திரும்பினு லல்லாம் வெருங் காணயா
இடைவழியி லென்னவரு மோவென மயங்கியே யேழைகள் பயந்து நொந்து
பின்புவர முன்புவந் தொருவருக் கிருவராய்ப் பேசிவரு துணையா ளனே
பெருகுமலற் புனல்வாவி திகழ்பணைசைப் பதிமேவு பெரியகருப்பண சுவாமியே. 16

ஆசைவைத் திடுபெண்கள் காசலைக் காரநீ யஞ்சனக் காரர் குருநீ
அன்பருக் கன்பன்நீ மந்திரக் கட்டினி லடங்காத பொலி யெருதுநீ
பூசுமெய்ப் பரிமள ஜவாதுகம கமெனவரு புனுகுமா டைக் காரநீ
யொய்யென் றுனைச் சொன்ன பொய்யர்வா யிற்புழுதி போடுமாயக் காரநீ
வாசிசேர்த் தஞ்சுபண மலையாள தேசமுதல் வரிவாங்கு மதி காரநீ
வண்டற்கு வண்டன்முழு முண்டற்கு முண்டன் வலுக்காரர் கோடை யிடிநீ
பேசுதொட் டுயவிருது கப்பளத் தார்க்கொரு பெலக்கார நீகா ணய்யா
பெருகுமலற் புனல்வாவி திகழ்பணைசைப் பதிமேவு பெரியகருப்பண சுவாமியே. 17

வெள்ளைகண் டிடமெலா மலுவலிட் டதிலே வெறும்பிலுக் குப்பி லுக்கு
வெண்முட்டை கருவாடு செங்குட்டி சாராயம் வேணுமென் றெத்தி வாங்கிக்
கொள்ளைகொண் டுண்டுதிரி யும்பேய்கள் வாயின்முக் குறுணிமண் போட் டறைந்து
கோடங்கி சொன்னவ னுடுக்கையும் நொறுக்கிவன் குறடாவி னலடித்துக்
கள்ளவன் பேய்களை மிதித்தேறு வாயுனது காணிக்கை நேர்ந்து வைத்தாற்
கருமலடன் மலடியும் மறுவருடம் வருபோது கைப்பிள்ளை யுடன்மூவ ராய்ப்
பிள்ளையுந் தாயும் பிதாவுநின் சாலையிற் பேரிட வரப்பண்ணுவாய்
பெருகுமலற் புனல்வாவி திகழ்பணைசைப் பதிமேவு பெரியகருப்பண சுவாமியே. 18

சந்தான வாக்கியம் வேணுமென் றெருகோடி தானதர் மங்கள் செய்து
தரைமெழுகி யுண்டுமொரு சாரமில் லாமற் சலித்துனது சன்னதிக்கு
வந்தா தரித்துத் தவங்கிடக் கும்பெண்கள் வயிறு மனமுங் குளிரவே
மதலைதந் தோமென்று சொர்ப்பனஞ் சாதிக்க வந்து கெர்ப்பந் தரித்து
நந்தாமன் மைந்தரைப் பெற்றிடுக்கிக் கொண்டு நாடிவந் துன்சாலையின்
நாலுதிசை யும்பிள்ளை தொட்டில்கட் டிக்கொண்டு நல்லன்னை தாலாட்டவே
பிந்தாத செல்வமிது வென்றே மகிழ்ந்து நீ பெருமையுடன் வீற்றி ருப்பாய்
பெருகுமலற் புனல்வாவி திகழ்பணைசைப் பதிமேவு பெரிய கருப்பண சுவாமியே. 19

சுற்றிவரு பில்லிப் பசாசுகள் குடோரிவன் றெட்டியப் பேய்க ளுயன்
துஷ்டநிஷ் டூரமிகு ராட்க்ஷசப் பேயைத் துணிக்கிட வதைத்த ராயன்
கற்றவர் துதித்திட நினைத்திட வரந்தருங் கலியுக வெரப்ர சாதன்
கட்டாத காளைமரு வொட்டாத கெப்புலி கலங்காத வீரசிங்கம்
உற்றவே லைக்குதவு சமயசஞ் சீவிநல் லுத்தண்ட கோலா கலன்
உலகெலாந் திரிகின்ற மதயானை யென்றுலக முனையுரைக் கின்ற வதனால்
பெற்றவர முற்றுநீ தந்தவர மல்லாது பின்னைவர மேதை யனே
பெருகுமலர் புனல்வாவி திகழ்பனைசைப் பதிமேவு பெரிய கருப்பண சுவாமியே [20]

நெறுநெறென வேபற் கடித்துச் சுராபான நீகுடித் தேப்ப மிட்டு
நெட்டிவிட் டுச்சிறிது கொட்டாவி யிட்டுநீ நிமிட கரப் படுத்தித்
திறுதிறென வேவிழித் தாடும்வன் பேய்களைத் தெண்டித் தடித் துறுக்கித்
திருப்பாணி யாலே யிருப்பாணி தைத்துநீ சிவனென வரிந் திருக்கி
அறுகுறை வராமனிறை சந்ததி வரங்கொடுத் தவரவ ரிடத்தில் வந்தே
யாண்பிள்ளை பெறுவதென் மைத்துனன் காத்தமுத் தையனுட பேரி டப்பா
பெறுவதே பெண்பிள்ளை காமாட்சி யென்றுநீ பேரிடென் றுறுதி சொல்வாய்
பெருகுமலர் புனல்வாவி திகழ்பனைசைப் பதிமேவு பெரிய கருப்பண சுவாமியே. [21]

தார்கொண்ட திண்புயன் சசிவர்ண பூபதி சமஸ்தானம் வளர வந்த
தளதந்திரி யுயர்முத்து வடுகநா தேந்த்ரதுரை சமுகமெச் சியப்ர தானி
ஏர்கொண்ட வளமுல்லை வந்தகாத் தவராய னுதவுகு ரியநா ரணன்
உற்றதாண் டவராய பூபதி சகோதர னுபாயமதி யூகி மந்த்ரி
சீர்கொண்ட புகழாளி ராமகிர்ஷ ணேந்த்ரனிரு திண்புயந் தனி லிருந்து
சென்றதிசை வென்றுவரு சாமிகா ரியநிறை செலுத்தச் செயங் கொடுத்துப்
பேர்கொண்டு முன்னின்ற குலதெய்வ நீயுனது பெருமையைப் பேச வெளிதோ
பெருகுமலர் புனல்வாவி திகழ்பனைசைப் பதிமேவு பெரியகருப்பண சுவாமியே. [22]

சன்னதிப் பூஜை பரம்பர முகந்திடுந் தனது பூசாரி மேகன்
தந்தகாத் தவராயன் வந்துபூ ஜைசெயுஞ் சட்டமு மலங்கா ரமும்
அன்னதரு வெறுநடுக் காட்டுத் தியாகிநல் லாயர்குல திலக னெனவே
யாண்டவன் பெயர்கொண்ட பேய்வெட்டி காளைமே லாவேசம் வரு மகிமையும்
சொன்னபடி யவரவர்க் கின்னபடி யென்றுதான் சொல்லுமொரு கேள்வி முகமும்
சூழ்ந்தி யற்புதமு முன்னுடைய மகிமையுஞ் சொல்லுதற் கெளிதா குமோ
பின்னுமொரு தெய்வங்க ளின்புதுமை பொன்மகப் பேறுதந் தாள வசமோ
பெருகுமலர் புனல்வாவி திகழ்பனைசைப் பதிமேவு பெரியகருப்பண சுவாமியே. [23]

தேருத லியென்ப தனுகாம லுலகஞ் செழிக்கமழை மாரி பொழியச்
செகதலந் தழையமறை யந்தணர்கள் வாழ்கமிகு தெய்வசன் னிதி விளங்க
வீரகமதயானை நிறைகண்ட வணிகேசர் மேருவை யுரைத் தறிந்தோர்
மிக்கதெய் வங்கள்குரு தாய்தந்தை யல்லாமல் வேந்தரைக் கும்பி டாதார்
மாறுத புகழ்பெற்ற வேழுநகர் மரபுள்ள வணிகர் நகரப்ர தாபர்
வளர்குடிக ளாகநின் குடியென்று கொண்டாடி மைந்தரொடு வாழ்வு பெற்றுப்
பேறுன செல்வந் தழைக்கநின் கருணையருள் பெருகுசன் னிதி வாழியே
பெருகுமலர் புனல்வாவி திகழ்பனைசைப் பதிமேவு பெரியகருப்பண சுவாமியே. [24]

முற்றும்.

உ

கண்ணுடையம்மன் வாலையந்தாதி

கண்ணாநந்த சுவாமிகள்

விந்தாகிவிந்தினுருவாகிநாதம்விளங்குபதி
இந்தாகியைந்தும்பிறந்ததுள்ளேமதியென்றறிய
மந்தாகினியடன்மூன்றையுங்கூட்டிமெய்வாலையுரு
வந்தாதிபாடவும்வந்தாள்கண்ணுள்ளமனோன்மணியே. 1

மணியேமரகதம்வாழ்மயிலேவிளைவானவிந்துத்
தொனியேமிகுமிதழாயிரத்தெட்டினிற்சொக்குகின்ற
கனியேயடிமைக்கருத்தேநிறைந்தகமலவல்லி
இனிதேனுகந்தபடியேதெரிமனமீய்ந்தருளே. 2

அருளேயடங்கியவட்டத்திலோமெனவாடிநின்ற
பொருளேசிவாயம்புகுந்தெழுத்தேயைந்துபூப்பரித்து
இருளேவராமலுமூலத்திலர்சித்திகபரமீய்ந்
தருளேசுழிவெளியக்கினியாகிநின்றாளெனையே. 3

தரியேனொருவரைச்சிந்தையுளேவுன்னைத்தான்விரும்பிப்
பிரியேனென்றாளுமருள்வாலைதீட்சையைப்பெற்றதினால்
மரியேனிருபத்தோராயிரத்தருனூருள்ளமட்டும்
முரியேனுனதருட்பெற்றேன்சிவாயமுகந்தெழுத்தே 7

உண்டேனுனதுமுலைப்பாலைமெய்யறிவொன்றுதற்கு
விண்டேன்செகத்தையடங்காதவெட்டவெளியைமனங்
கொண்டேனுனதுகுறிப்பறிந்தேனருட்கூடவழி
கண்டேன்கண்ணுள்ளகண்ணாநந்திபாதங்கருத்தினிலே. 33

பூரணிகண்ணுள்ளகண்ணாயிரம்பெற்றபொற்கொடியே
யாரணிபூரணியம்மாவுனதுயடியிணையே
பேரணியெந்தனக்கெந்நாளுமூலப்பிரணவத்தின்
சீரணியாகவிருந்தாள்மெஞ்ஞானசிவசத்தியே. 73

சத்திமாதங்கிசர்வாபர்ணத்திதற்பரத்தி
முத்திமுதலெனுமூலத்தியக்கினிமுப்புரத்தி
சித்திவித்தாதிசிவகாமிதில்லைச்சிதம்பரத்தி
புத்திதிருத்தியெனையாள்கண்ணுள்ளபுராதனியே. 74

சார்ந்தவளேசிவன்பங்காயிடப்புரந்தங்கியன்பு
கூர்ந்தவளேவெளிகொண்டவளேமதிகொண்டமட்டும்
சேர்ந்தவளேநிலைநின்றவளேநின்றுவொன்றில்மனந் 91
தேர்ந்தவளேயருட்கண்ணாயிரம்பெற்றசின்மயமே.

மும்முதல்காட்டிவெளிகாட்டிவானமுடிவுசொல்லி
யம்முதல்காட்டுமுத்தாநந்தியேயைந்துமூன்றுமொன்றாய்
நம்முதல்காட்டிநடுவனைக்காட்டிநலம்பெறவே
யும்முதல்காட்டியெனையாள்கண்ணுள்ளவுலகம்மையே. 96

துரைமகள்நீபுவிராஜர்க்குப்பொன்முடிசூட்டுவள்நீ
வரைமகளானமலைமகள்நீதிருவாழ்பனசை
நிறைமகள்நீகண்ணுடையவள்நீசிவனின்றசொல்லை
யுரைமகள்நீரவியொன்றாகச்சந்திரனுற்றவிந்தே. 100

கண்ணுடையம்மை மாலை

ஆசிரியர்
நா. கருப்பன் செட்டியார்
(ஐயாக்கருப்பன் செட்டியார்)
நாட்டரசன் கோட்டை.

திருமா துஅணிசெயப் பாமகள் மேவத் தினந்தினமும்
அருமா தவரும் மிகுயோகு செய்திட அம்குணக்கின்
வரும்ஆ தவன் கண்டு பங்கயம் பூப்ப வளர்பனசைப்
பொருமா தர்ஆர்ந்த கண்ணு னந்தி பொற்பதம் போற்றுவனே

மணம்காதம் வீசுஅலர்க்காக்கணம் சூழும் பனசைவந்து
வணங்காத வல்நெஞ்சருக் குஅரியாய் உனைவாழ்த்தும் என்பால்
சுணங்காது அருள்செயத் தோற்றியும் அந்தகன் தொல்பிணியால்
அணங்காது தீர்த்து என்னை ஆள்வாய் கண்ணுனந்தி யம்பிகையே

நாலாறு கலைதெரி நாவா ணரும்அற நன்னெறிசேர்
மேலாம் அறிவினரும் துறவோரும், வில்வேள்வடிவக்
கோலா கலக்குமர ரும்திருமின் என்கோதையரும்,
மாலாய உறைந்திடும் தென்தாலம் வாழுங்கண் ணுனந்தியே

சுஆ லையங்களிற் சென்றே அலைந்துகை கூப்பிநின்று
தேவா எனக்குஅருள் செய்என வேண்டிட ஓர்செயலும்
மேவாமல் உன்னிடம் வந்திடுவோர்வினை தீர்த்திடுவாய்
பூவா சனைமன் பனசைப் புரியில்கண் ணுனத்தியே

வஞ்சந் தவவடி வாகிமுன் ஏய்வனம் வந்துமிகை
மிஞ்சத் தவறும் மிதிலேசன் மாமகள் பால்விளைத்த
கொஞ்சத் தவன்உயிர் கொன்றேற்கு இளையகுணக்கடல்என்
நெஞ்சத் துஅவம்த விர்த்து ஆள்வை, நல் நீலி கண் ணுனந்தியே

கண்ணுடையம்மை பதிகம்

பூரணி, பராசத்தி, திரிசூலி, கௌமாரி, புவனம்எங் கனுநிறைந்த
புங்கநவ கோணி,திரி நயனி,யரி வாகனி, புனிதசங்கரி, குமாரி
நாரணி மதங்கிபை ரவி,நீலி, யபிராமி, நான்மறைத் தலைவிதேவி,
நம்புமடியார்களுக்கு உதவிய சாட்சரி, நற்கருணை வாரி, வாலை
தார்அணிந் திடுகன்னி, சுந்தரி, சவுந்தரி, தக்கபஞ் சாக்கரத்தி
தற்பரா னந்தி, உமை, கங்காளி, வேதாளி, தாண்டவம் அது ஆடுசெல்வி,
காரணி, அனந்தகுண கல்யாணி, சாமுண்டி, கனமகிட அசுரவைரி,
கஞ்சா சனன்,குலிசன் அஞ்சாயுதற்குஅரிய கமலைபன சைக்கணுமையே

அண்டர்கட் குஅரிதான மானிடப் பிறவிதனில் யான்அடிமை வந்து உதித்தும்
அத்துவித சாத்திரத்து உண்மையை அறிந்து நின்அடியிணைக்கு ஆளாகிடுந்
தொண்டர்பணி செய்யவறி யாமலே வாரித்துரும்பாக நித்தநித்தம்
தொல்உலகில் வாடுவது மதியீனமோ, மெய்மை தோயாமலோ, அல்லது
முண்டக மலர்ப்போதன் அன்றுஎழுதி வைத்ததோ முன்செய்த தீவினையதோ
மூடன்அறி யேன்இதைத் தேறுதற்கு இன்றுநீ முழுமதியெனத் தோற்றுவாய்
கண்டவர்க ள்தம்சிரம் வீட்டியவராகியே கருணைவைத்து எனைஆளுவாய்
கஞ்சாசனன் குலிசன் அஞ்சாயுதற்குஅரிய கமலைபன சைக்கணுமையே

கண்ணுடையம்மை கும்மி

மாமதிவைகாசித் தேருடையாள்ஆடி மாதமுளைக்கொட்டுச் சீருடையாள்
பூமனுங்கோலமதிக் கோலாட்டம்தையிற் பூசம்எண்ணெய்க்காப்பு நாட்கூட்டம்
அங்கையற்கண்ணி யெனக்கூறியருள் ஆருங்கண்ணம்மை யெனத்தேரி
சிங்காரக்கும்மி தானடித்தால்நிதம் தேவிபெரும்புகழே படித்தால்
செல்வமதிகமா வந்திடுமேமிகச் சிறப்பு மென்மேலுந் தந்திடுமே
வல்பிணியாஞ்சுரம் ஏகுமே சயம் வயுற்றுவலியும் போகுமே

முடுகு

சித்தத்தினின் மெத்தத்துயர் பற்றித்தனு சுற்றிக்கொடு தீவினை செய்யுஞ் சொரிசிரங்கும்
நத்திப்புனல் தத்திப்பெரு வத்திக்கிணை யொத்திப்படி நாடுஞ்சிலந்தி வகைகளுமே
ஈழைபிளவையு நீரிழிவும் வயிறு ஏற்றம்பெருமலத் தின்கழிவுங்
கூழையுதிர்தலு நீர்ச்சிறுப்புந்துடை வாளைகொடுந்துய ராம்வெறுப்பும்
பாண்டுகிரந்தியும் வீக்கமும்ஏகப் பற்றும்பவுந்திர நோக்கமும்
நீண்டதலைவலி வாதமேநிலை நீங்கியோடுமே காதமே
மூலகிராணிகண் குந்தமுஞ்செவி மூடல்ஊமை முடதொந்தமுஞ்
சாலமலடுகன் னத்தோட்டம்வயிறு தன்னிற்பொருமி வரும்வாட்டம்
குட்டமுடன் கண்ட மாலைகளுங்காசக் கூட்டமதாம் பெருஞ் சூலைகளும்
வெட்டையுங்குன்மநி கணைவலிப்பும்பேதி மீரியபீனசத் தின்வலிப்பும்
பின்னும்பல பிணி கால்ஓய்வுமிகு பேதச்சலவை பெருவாய்வும்
மன்னுங்குளிரு கபகோழைமிகு வாதணைசெய்திடுங் காதுஊனை
இப்படிநோயுங்கண் ணேய்தீர்ப்பாள்நாம் நாளென்றுஞ்சிறந்திட வேகாப்பாள்
செப்பமுடன்கும்மி செப்பும் பெண்காள்நீங்கள் சீர்பெற வாழியைச் சொல்லுங்கடி
பூவைகண்ணம்பிகை தான்வாழிகங்கை பூண்டசோமீசர் மிகவாழி
பாவையெனுஞ்சிவ காமியுமேஅருள் பண்ணவர்சித் தர்களும்வாழி
அஞ்சனமேனி திகழ் வேங்கடாசல மாகும்பெருமாளுந்தான்வாழி
வஞ்சகமில்ஏழு நகரெனவேநிதி வாழும் வணிகரெலாம்வாழி
வேதியர்வாழி தமிழ்வாழி யென்று மேவியநாடு நகர்வாழி
ஓதியபாவலர் தர்ன்வாழிகுமி உவந்துரைப்போரும் வாழியவே

பெரிய கருப்பண்ண சுவாமிபேரில் பதிகம்

திருவுலவு நவரத்ந மகுடவில்நுதல் தன்திலகசேவை மதிவதன நகையுஞ்
சீர்கருணையுங் கொடியபரர்வையு நிறைந்தபூத் திட்டியுஞ் செந்தகர்க் கோட்டு
உருவென முருக்கு வலுமீசையு மலைப்புயத்துஉத் தரிகவல்லவாட்டும்
ஒளிமிகும் அலங்கிரிதஆ பரணம் ஊர்ச்சல்லடத் தோடிருக்கு கச்சும்
மருவலர்தனைச் செகுக்கின்ற தண்டு அரிவாளும் மஞ்சு காயாவின் மலரும்
மருவுதனு கண்டுஉனது தாள்மலர் வணங்கவே வாய்மையொடு கருணைபுரிவாய்
கருதரிய பூசுரர்கள் அரசர் தனவைசியருங் கைகுவிக்கின்ற இறைவா
கனகநிரை முகில்கள்உறை தருபனசையிற் பெரிய கருப்பண்ணசாமி முகிலே.

கண்ணுடையம்மன் திருத்தசாங்கம்

பேராசிரியர், இராம சிவசுப்பிரமணியன் M A., M. Phil. B.T.
ஸ்ரீ சேவுகன் - அண்ணுமலை கல்லூரி, தேவகோட்டை விரிவு-623 303.

நாமம்
பச்சைப் பசுங்கிளியே! பாசத் தொடர்புடனே
இச்சையாய் யான்பாட இங்கிதமாய்ச் — செச்சை
அணிந்தாள் திருப்பேர் அணித்தே உரையாய்!
கணித்தேன் அவள்கண் ணுத் தாள்.

நாடு
காஞர் மொழிக்கிள்ளாய்! காரியக் காரியவள்
தேனர்பொன் நாட்டைத் தெளிவிப்பாய்! — வானுர்ந்த
கோட்டைநற் கொத்தளங்கள் கோபுரங்கள் கோயில்சூழ்
நாட்டரசன் கோட்டையாம் நாடு.

நகர்
இன்மழலைப் பைங்கிள்ளாய்! இன்னுயிர்க் கண்ணுடையாள்
நன்மை வழங்கும் நகரெதுவோ? —தொன்மைப்
பனசைப் பதியவள் பண்பார் பழம்பதியாம்
கன்னல்சூழ் கம்பன் நகர்.

ஆறு
பாலுண்ணும் பைங்கிளியே! பார்புகழப் பாய்ந்தோடிச்
சேலும் கெளிறுமே சேர்ந்துகளும் — கோலமிகு
ஆறெதுவோ கூருய்! அழகொளிரும் கண்ணுத்தாள்
பேறுயரும் பேரருளே ஆறு.

மலை
காவியக் கம்பனும் கண்ணுடை யம்மனும்
மேவிய பொன்னகர் மேன்மைமிகு — ஒவியப்
பைங்கிள்ளாய்! உன்தேவி பைந்நாகம் பார்த்துரையாய்!
பைந்தமிழர் சொன்மலையே பார்.

ஊர்தி
மூக்குச் சிவந்தவளே! வாக்குத் தவருத
நாக்கு உடையாள் நலமாகப் — போக்கு
வரத்திற்குப் பூரித்து ஏறுமூர்தி கூருய்!
உரத்தின் உயராளி தான்.

படை
கண்ணுடையாள் சந்நிதியில் விண்ணதிர ஆர்த்தெழும்
பண்ணுடைய பல்படை கூருய்நீ — வண்ணமுறு
அஞ்சுகமே! ஆர்க்கும் அணிசூலம், அஞ்சுடர்
விஞ்சுபுகழ் வாட்படையே பார்.

முரசு
நாவாணர் போற்றும் நளினமொழி நற்சுகமே!
நான்கான வேதக்கண் ஞானே தயதேவி
முன்றிலிடை ஓசை வளர்முரசம் ஓதுவாய்!
வென்றிப் புகழ்ஒலியே காண்.

தார்
வாராய் இளஞ்சுகமே! வந்திப்பார்க் கென்றுமிடர்
தாராள் புனையுமணித் தார்கூருய்! — பாரோர்தாம்
போற்றும் பசும்புனல் பொங்குமநற் செங்கமலப்
பொய்கையுறு பங்கயங்கள் தாம்.

கொடி
கொடிப்பவள வாய்க்கிள்ளாய்! குற்றமும் தீங்கும்
மடிப்பவளாம் வெல்கொடிதான் மற்றென்? — அடிபணிவார்
அல்லல் அறவே அகற்றி அழகொளிரும்
மல்லல் வயிரக் கொடி.

எங்களூர்ப் புலவர்கள்

(பேராசிரியர் 'சுபராம்' என்ற சுப. ராம. சுப. இராமனாதன் செட்டியார்)

கம்பர் :-

அருள்மிகு கண்ணுடையநாயகி அம்மன் அருளாட்சி செய்யும் இந்த நாட்டரசன் கோட்டை எனும் ஊருக்குத் தென்பனசை என்று மற்றொரு பெயர் உண்டு. கவிச்சக்கரவர்த்தி கம்பர் இங்கு வாழ்ந்து மறைந்த நிலையில் அவருடைய சமாதியைக் கொண்டுள்ள இந்த ஊரினை இக்காலத்தார் பாட்டரசன் கோட்டை என்று அன்போடு அழைக்கின்றார்கள்.

கம்பருடைய பெருமையினை "விரிப்பின் பெருகும். தொகுப்பின் எஞ்சும்". இவர் புகழை இக்காலப் புலவர்கள் "கம்பனை மறந்தால் தமிழேது" என்றும் "அம்புவிக் கவிஞருள் அரசாகும்" என்றும் "இன்னொரு கம்பனும் வருவானோ இப்படியும் கவி தருவானோ" என்றும் "கம்பனென்றொரு மானிடன் வாழ்ந்ததும்" என்றும் பல படியாகப் பாராட்டுவார்கள். அருள்தரு கண்ணுடையம்மனுக்கு வழிபாடு செய்யும் உவச்சர் மரபினைச் சேர்ந்தவர் இவர். அவருடைய கம்பர் சமாதி இவ்வூரில் உள்ளது. அதன் நிழற்படம் இம்மலரில் உள்ளது. ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த இவ்வூரைச் சேர்ந்த முத்துக்குட்டிப் புலவர் என்பவர் அருள்தரு கண்ணுடையம்மன் பேரில் பாடிய "கண்ணுடையம்மன் பள்ளு என்ற நூலில் இக்கோயிலைக் குறிப்பிடுக்கிறார்.

"கம்பனார் கோயில் செம்பொன்னால் வேய்ந்தோர்" என்கிறார்.

இந்த நாட்டினை, "கம்பர் வந்து துதிக்கின்ற நாடு" ன்கிறார். இராமாயணம் பாடிய கம்பர் தான் இவர் என்பதை வலியுறுத்தும் முகமாக,

"கனகவில்லி தன்வில்லை ஜனகன் மகள் பொருட்டாற்
காரானை போல் வளைத்த ஸ்ரீ ராமனார்
புனல் சூழிலங்கை சேனை முனை வாளாலமர் வென்ற
புகழைத் தமிழ்க்கடலாய் மகிழச் செய்தோன்
மனதுபூரிக்குங் கம்பர் பனசைமாநகர் தேடி
வந்தநாள் முதற்பண்ணை சொந்தமுள்ளோன்"

என்று பாடியுள்ளார்.

முத்துக்குட்டிப் புலவர் :-

இவர் இவ்வூரைச் சேர்ந்தவர். ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த புலவராவார். சைவ வேளாளமரபினர். இவ்வூருக்கருகிலுள்ள கண்டனிப்பட்டியில் இருந்து வந்தாரென்பர். பிறந்த ஊர் உருளிக்கோட்டையாகும். இவர் காலத்தில் சிவகங்கைப்பகுதியினை ஆண்டு வந்த அரசர் இரவிகுலமுத்து வடுகநாததுரை ஆவார். அவருடைய அரசு அவைப்புலவராகவும் இவர் திகழ்ந்ததாகத் தெரிகிறது.

இவர் அருள்தரு கண்ணுடையநாயகி அம்மன் பேரில் "கண்ணுடையம்மன் பள்ளு" என்ற ஓர் அரிய நூலைப்பாடியுள்ளார். இப்பள்ளு, "முக்கூடற் பள்ளு' திருமலை முருகன் பள்ளு" முதலிய பள்ளுப் பிரபந்தங்களோடு ஒத்து எண்ணப்படக்கூடிய இலக்கியநயம் மிகுந்தது. இப்பள்ளில் இவ்வூரைப் பற்றிய செய்திகளும், கண்ணுடையம்மன் கோயில் மரபு

பற்றிய செய்திகளும் அவர் காலத்துப் பழக்க வழக்கங்களும் சொல்லப் படுகின்றன. இப் பள்ளுப்பிரபந்தம் 1976ம் ஆண்டு அருள்தரு கண்ணுடையம்மனுக்கு நடைபெற்ற திருக்குட நன்னீராட்டு விழாவினை ஒட்டி வெளிவந்த மலரில் இடம் பெற்றிருந்தமையால் அதனை இங்கு முழுதுமாக வெளியிடவில்லை. அதில் ஒரு பகுதியாகிய 'குயிற் சிந்து' முளைப்பாட்டு, கும்மிப்பாட்டு' ஆகியவை பிறிதோரிடத்தில் இம்மலரில் வெளியிடப்பட்டுள்ளன. நான் சிறுவனாக இருந்த காலத்தில் இவ்வம்மன் கோயிலுக்கு வருகின்றவர்களில் எழுந்தறிவில்லாத பெண்கள்கூடச் செவிவழியாக இப்பகுதியினைக் கேட்டு மனனம் செய்து கண்ணுடையம்மனை வழிபடுகின்ற போது பாடுவதைக் கேட்டிருக்கிறேன். இக்காலத்தில் இவ்வூரில் வாழ்கின்ற இளைஞர்களுக்கு இப்படி ஒரு நூல் இருப்பதே தெரியாத நிலை ஏற்பட்டிருப்பது வருந்துதற்குரியது. மறுபடியும் எல்லோரும் இக்கோயிலுக்குச் செல்கிற போது இப்பகுதியினைப் பாடி வழிபட வேண்டுமென்பதற்காக இம்மலரில் இவை கொடுக்கப் பட்டுள்ளன.

இப்புலவர் அருள்தரு கண்ணுடையநாயகி அம்மனிடத்தில் அழுத்தமான பக்தியுடையவர். அவ்வம்மனைத் தவிர பிற தெய்வத்தை வழிபடுவதில்லை. இவ்வூரில் கருப்பையா கோயில் என்றொரு கோயில் உள்ளது. அதில் உறையும் அருள்தரும் கருப்பையா இவர் காலத்தில் ஆற்றல் வாய்ந்த தெய்வமாக இருந்தது. (இத் தெய்வத்தைப் பற்றிய செய்தி இம்மலரில் பிறிதொரு இடத்தில் உள்ளது.) அத்தெய்வத்திற்கு இப்புலவர் தன்னைப் பாட வேண்டும் என்ற அவா இருந்தது. அதனல் இவருக்கு கண்டமாலை என்னும் நோயினை வரும்படி செய்தது. (இது கழுத்தைச் சுற்றி ஏற்படுகின்ற நோயாகும்) இவர் அம்மனிடம் சென்று பலபடியாக உருக்கமாகத் தன் நோய் நீங்க வேண்டுமென்று வேண்டினார். ஆனல் அம்மனுடைய அருள் கிடைக்கவில்லை. புலவர் வருந்தினார். ஒருநாள் இவருடைய கனவில் அம்மன் தோன்றி இது அருள்தரு கருப்பையாவால் ஏற்பட்டது. அவரைப்பற்றி நீ பாடினால் உன்னுடைய நோய் நீங்கும் என்று சொன்னது. அதற்கேற்ப இவர் அத்தெய்வத்தின் பேரில் "கருப்பணசாமி பதிகம்" என்றொரு நூலை இயற்றினார். நோயும் நீங்கிற்று (இந்நூல் பிறிதோர் இடத்தில் உள்ளது)

இவரை ஆதரித்த சிவகங்கை மன்னர் ஒரு மகாசிவராத்திரி அன்று தான் கண்விழித்திருப்பதற்காக ஒரு கதை விடியுமளவும் சொல்ல வேண்டுமென்றும், அது ஒரு புது மாதிரியான கதையாக இருக்க வேண்டுமென்றும் சொன்னார். அதற்கேற்ப இவர் "வசன சம்பிரதாயக் கதை" என்ற ஒரு கதையினைச் சொன்னார். (அது இம்மலரில் பிறிதொரு இடத்தில் வெளியிடப்பட்டுள்ளது) மன்னரும் புலவருடைய திறமைக்கு வியந்து பாராட்டி அவருக்கு சாத்தசேரி என்ற ஒரு கிராமத்தில் ஒரு பகுதியினை முற்றூட்டாக வழங்கினார். அக்கிராமம் இப் பகுதியில் கண்டனிப்பட்டிக்கு அருகில் உள்ளது. புலவர் அரசர் பரிசாக அளித்த கிராமத்தைப் பார்த்தார். அவர் எதிர்பார்த்தபடி அக்கிராமம் வளமானதாக இல்லை. புலவருக்கு வருத்தந்தான். அக்கிராமத்தின் நிலையை அழகாகப் பாடுகிறார்.

"கொம்பிரண்டும் இல்லாத மோளைக் கண்மாய்
குளிக்காலும் இல்லாத சாத்தசேரி
வம்புபண்ணிப் பெருங்கரையான் வெட்டும் ஏந்தல்
வாழ்க்கைக்கு உதவாத உவட்டுப் பொட்டல்"

அக்கிராமத்துக் கண்மாய்க்குத் தண்ணீரைத் தாங்கி வைத்துக் கொள்ளக்கூடிய கரையாகிய கொம்பு இல்லை. கண்மாய்க்கு மழை பெய்தால் தண்ணீர் கொண்டு வருகின்ற குளிக்காலும் இல்லை. பயிர் செய்தால் அப்பயிரினை கரையான் வெட்டிவிடும். நிலத்தின் தரமோ முழு உவடு

இப்புலவரின் சமாதி சிவகங்கை காளையார் கோயில் நெடுஞ்சாலையில் சாலையோர மாகக் கண்டனிப்பட்டிக் கிராமத்திற்கு அருகாமையிலுள்ளது. அதன் நிழற்படம் இம்மலரில் இடம் பெற்றுள்ளது. அக்கிராமத்தார் இவருக்கு ஆண்டு தோறும் குருபூசை நடத்துகிறார்கள்.

ஒருமுறை சிவகெங்கை மன்னர் மூடு பல்லக்கில் சிவகெங்கையிலிருந்து காளையார் கோயில் சென்று கொண்டிருந்த பொழுது பிள்ளையவர்களைச் சந்திக்க நேர்ந்தது. பிள்ளையவர் களைப் பார்த்து உமக்குப்பிள்ளையுண்டா என்று கேட்டார். புலவர் தனக்குப் பிள்ளையில்லை யென்றார். சிறிது தூரம் சென்ற பின் அம்மன்னரிடம் உழுது கொண்டிருந்த ஒரு சிறுவன் வந்து அழகான பாடல் ஒன்றைப்பாடினான். அவனை நீ யார் என்று மன்னர் கேட்டார். நான் முத்துக்குட்டிப்புலவருடைய மகன் என்று சொன்னான். புலவர் தனக்குப் பிள்ளையில்லை என்று சொன்னாரே இவன் அவருடைய மகன் என்று சொல்கின்றானே என்று மன்னர் சிறிது குழப்பம் அடைந்தார். பின்னர் சிறிது காலத்தில் அச்சிறுவன் இறந்து போனான். இறைவனுடைய திருவருளால் பின் வரப்போகின்ற நிகழ்ச்சியினை முன்னரே தெரிந்து கொள்ளும் ஆற்றல் இவரிடம் உள்ளதை எண்ணி மன்னர் மகிழ்ந்தாராம்.

இவருடைய உறவினர்கள் அழகர் கோயிற்பகுதியில் இருந்து வருவதாகத் தெரிகிறது. இவருக்கு ஆடிமாதம் குருபூசையினைக் கண்டனிப்பட்டி ஊர்மக்கள் நடத்துகிறார்கள். அவ்-ஊரிலுள்ள தீப்பாய்ந்த அம்மனுக்கு திருவிழா நடந்து முடிந்தபின் மஞ்சுவிரட்டு நடத்தி இவருக்குக் குருபூசை நடத்துகிறார்கள்.

இக்குருபூசையினை முன்னர் நாட்டரசன் கோட்டையைச் சேர்ந்த மீ. சித. சிதம்பரம் செட்டியார் வகையரு செய்து வந்திருக்கின்றனர். ஜமீன் ஒழிப்பிற்குப்பின்னர் கண்டனிப்பட்டி ஊர்மக்கள் இதனைச் செய்து வருகின்றனர்.

இவர் சமாதியுள்ள இடத்தினைச் செப்பனிட்டுச்சீர் செய்ய மண்ணையகழ்ந்த பொழுது (இவருடைய சமாதிப்பகுதியினைத் தோண்டிய பொழுது) தோண்டிய கைகளெல்லாம் நறுமணம் வீசத் தொடங்கிற்றாம். அந்தமணம் ஒருவாரம் வரை இருந்தது என்கிறார்கள். சமாதியில் சந்தனக்கட்டைகள் விறகுக் கம்புகளைப் போன்று பெரிது பெரிதாக வைத்திருக்கிறார்கள். சமாதியினை அகழ்ந்தபொழுது அக்கம்புகளெல்லாம் பாம்புகள்போல் தோற்றமளித்திருக்கின்றன. அந்நிலையல் அப்படியே குழியினை மூடிவிட்டார்கள். இச்செய்தியினைக்கண்டனிப்பட்டி ஊர்மக்கள் சொல்கிறார்கள்.

கண்ணுநந்த சுவாமிகள் :

இவர் கண்ணுடையம்மன் வாலையந்தாதி, என்ற நூலை இயற்றியுள்ளார். இவ்வந்தாதியினை உலகம் உய்யத்தந்த கண்ணுநந்த சுவாமிகள். பிரமச்சரியம் காத்து, துறவறம் ஏற்று அருள்மிகு தேசிக விநாயகர் நாட்டரசன் கோட்டையில் கோயில் கொண்டிலங்கும் தீர்த்தக் குளத்தின் தென்கரையில், தன் துறவறம் சிறக்க மடம் அமைத்து, அதில் கண்ணுடையம்மன் உபாசகராகவே வாழ்ந்து, தனது சமாதி நாளைக் குறிப்பிட்டு, அந்நாளிலேயே சமாதிநிலை எய்திய பெரும் மகானாவார். இவரது பரம்பரையில் வந்த ஒருவரும் துறவறம் ஏற்று, அம்மடத்தில் இருந்து நித்திய பூஜை, குருபூஜை முதலியவற்றை முறையாகச் செய்து வந்திருக்கிறார். பின்னர் அந்த வழிமுறையில் வந்தவர்கள் குருபூஜை மட்டும் செய்து வந்திருக்கிறார்கள். காலத்தால் குருபூஜை செய்யும் பழக்கமும் அப்பரம்பரையினரிடமிருந்து மறைந்துவிட்டது. தற்போது இவரது எட்டாவது தலைமுறையினர் எனப்படுபவர்கள்

இருக்கிறார்கள். இவர் விஸ்வகர்மாகுலத்தினர் எனப்படும் ஆசாரியார் மரபினர். கோயில் கட்டும் பணியில் சிறந்த ஸ்தபதிகளாக விளங்கும் இவர்கள் தம் குல நாயகரின் மடத்தைக் காப்பாற்றாது விட்டுவிட்டபடியால், அதுவும் மிகுந்த இடிபாடுகளுக்கிடையில், நாம் காணக் கூடியதாக இருக்கிறது. அதன் நிழற்படம் இம்மலரில் உள்ளது. இந்நகர் ராம. நா. கண்ணப்ப செட்டியாரவர்களின் இறை உள்ளம் இவ்வந்தாதியினை 1916ல் நூல் வடிவமாகப் பக்தி உலகினுக்குத் தந்துள்ளது.

இவ்வாலையந்தாதி 1976ம் ஆண்டு அருள்தரு கண்ணுடையநாயகி அம்மன் திருக்குட நன்னீராட்டு விழா நடத்தியபோது வெளிவந்த மலரில் முழுதும் இடம் பெற்றுள்ளது. இம்மலரில் ஒருசில பாக்கள் வெளியிடப்பட்டுள்ளது. இப்புலரைப்பற்றி மேற்கண்ட செய்தி மேற்குறிப்பிட்டு உள்ள மலரில் அதன் பதிப்பாசிரியராகிய திரு. நா. சே. நாராயணன் அவர்களால் கொடுக்கப் பெற்றிருந்தது.

ஐயா கருப்பன் செட்டியார் :-

இவ்வூரில் வாழ்ந்த மற்றொரு புலவர் நகரத்தார் மரபினைச் சேர்ந்த நாராயணன் செட்டியார் மகன் கருப்பன் செட்டியாராவார். இவர் சென்ற நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் பாடிய கீழ்க்கண்ட பதினோரு பிரபந்தங்கள் பல்வேறு காலங்களில் ஒன்றும் பலவுமாக வெளியிடப் பெற்றுள்ளன. பின்னர் இவ்வூர் அருள்தரு சிவகாமி அம்மன் உடனாய கரிகால சோழீசர் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு விழா 1985ல் நடைபெற்ற போது அவரது பேரன் நா. கரு. சிவ. கருப்பன் செட்டியாரவர்கள், முதல் எட்டு நூல்களையும் தொகுத்துப் 'பனசைப் பதிமாலை' என்ற பெயரில் விலையில்லா வெளியீடாக அச்சிட்டுப் பலருக்கு இலவசமாக வழங்கினார். அந்நூலில் அருஞ்சொற்களுக்கு இக்கட்டுரையாசிரியர் குறிப்புரை எழுதி அந்நூலைப் பதிப்பித்தார்.

நூல்கள் :-

1. திருப்பனசைச் சோழீசர் மாலை
2. திருப்பனசைச் சோழீசர் பதிகம்
3. திருப்பனசைக் கண்ணுடையம்மை மாலை
4. திருப்பனசைக் கண்ணுடையம்மை பதிகம்
5. திருப்பனசைக் கண்ணுடையம்மைக் கும்மி
6. திருப்பனசை வேங்கடாசல மாலை
7. திருப்பனசை இராமாநுஜ திரிதச வெண்பா
8. நாட்டரசன் கோட்டை யென்னும் பனசை நகர் பெரிய கருப்பண்ண சுவாமி பேரில் பதிகம்
9. குன்றக்குடிக்குமரன் பதிகம்
10. பாகனேரி புல்வாய்நாயகி அம்மன் பதிகம்
11. அரண்மனை சிறுவயல் மும்முடி நாயர் பதிகம்



நவக்கிரக ஹோம வழிபாடு



பாலிகைக்கு மண் எடுத்தல்

திருக்குடவழிபாடும்-வரவேற்பும்




திருவருட்கலை இறக்கத் திருக்குடங்களில் நீர் நிறைத்தல்



திருவருட்கலை செறிந்த திருக்குடங்களை யாகசாலையில் வரவேற்றல்

யாகசாலைக் காட்சிகள்



சிவன் கோவிலிலிருந்து சிவாச்சாரியார்களை யாகசாலைக்கு அழைத்துவருதல்.



சிவாச்சாரியார்கள் யாகமியற்றல்.

யாகசாலைக் காட்சிகள்



யாகசாலையைத் தரிசிக்கும் மேதகு ராஜகுமாரி ராஜலெட்சுமி ரெகுராஜ் அவர்களுடன்
தேவஸ்தானத்தினரும் நகரத்தார்களும்




குடமுழுக்கினை நேர்முக வர்ணனை செய்ய வந்திருந்த மதுரை வானொலி நிலயத்தார்.

யாகசாலைக் காட்சிகள்




யாகசாலை இரண்டாம் கால பூஜைக்கு நகரத்தார் பூர்ணாகுதி எடுத்துச்செல்லும் எழிலார் காட்சி.



யாகசாலை நான்காம் கால பூஜைக்கு நகரத்தார் பூர்ணாகுதி எடுத்துச்செல்லும் எழிலார் காட்சி.

யாகசாலைக் காட்சிகள்




ஆசிர்வாதத்தைச் செவிமடுக்கும் ஆண்கள் பகுதி




தீபாராதனையைத் தெரிசிக்க இருக்கும் பெண்கள் பகுதி

யாகசாலைக் காட்சிகள்




அம்மன் குண்டத்தில் 18 முழப் பட்டுப்புடவை ஆகுதி



அம்மன் குண்டத்தில் பூர்ணாகுதி

குடமுழுக்குக் காட்சிகள்




நன்னீராட்டிற்கு திருக்குடங்களை சிவாச்சாரியார்கள் எடுத்துவரும் ஏற்றமுறு காட்சி.




குடமுழுக்கைக் காணக் கூடிநிற்கும் மக்கள் வெள்ளம்.

குடமுழுக்குக் காட்சிகள்



அபிஷேகவிநாயகர் அன்னை கண்ணுடையவள் கருவறைக் கோபுர நன்னீராட்டு.



கருவறைக் கோபுர, ராஜகோபுர தீபாராதனை.

துவக்கமும் - நிறைவும்



நவக்கிரக ஹோம வழிபாட்டை தெரிசித்தல் - ஆண்கள் பகுதி



மகாபிஷேகம் நிறைவுற்று தேவஸ்தானத்தாரும் நகரத்தாரும் மரியாதை பெற்று வலம் வரும் வனப்புறு காட்சி.

கலை நிகழ்ச்சி



தேவாரப் பண்ணிசை.



"அடியார் பெருமை" கருத்தரங்கம்.



தனியுரை : சரஸ்வதி இராமநாதன்



திரைப்பட இசை நிகழ்ச்சி : மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம்.

நல்வாழ்த்துக்கள்

மணிவாசகர் நூலகம்

12பி மேலசன்னதி சிதம்பரம் - 608001

மணிவாசகர் பதிப்பகம் - தோற்றம் : 1961
அரும்பெரும் பணிகள்

- ★ வெளியிட்ட நூல்கள் - 300
- ★ பல்கலைக் கழகங்களால் பாடநூல்களாக ஏற்றுக் கொள்ளப் பெற்றவை - 30
- ★ பரிசு பெற்ற நூல்கள் - 20
- ★ புதிய ஆசிரியர்களை அறிமுகம் செய்தது
- ★ சுற்றுலா வளர்ச்சி, தகவல் தொடர்பு முதலிய துறைகளில் முதன் முதலில் நூல் வெளியிட்டது.
- ★ சிற்றிலக்கிய ஆராய்ச்சிக்கு வழிவகுத்தது.
- ★ பதிப்பக ஆசிரியர்கள் :- துணைவேந்தர்கள், பேராசிரியர்கள் பெருமக்கள், அறிஞர்கள், கவிஞர்கள், புலவர்கள்
- ★ அழகிய பதிப்புகளைச் சீரான விலையில் வெளியிடல்
- ★ துறைதொறும் தமிழுக்கு வளம் சேர்க்கும் நூல்கள்
- ★ பல்வகை அகராதிகள்
- ★ அறக்கட்டளைகள் நிறுவுதல்

  அண்ணாமலைப் பல்கலைக்கழகம். தமிழ்ப்பல்கலைக்கழகம் தஞ்சாவூர், பிருந்தாவன் கல்விக்கழகம் கோவை, கம்பன் கழகம் காரைக்குடி, மேலைச்சிவபுரிதமிழ் கல்லூரி, தமிழ்க்கல்வி இயக்கம் சிதம்பரம், தமிழ் எழுத்தாளர் சங்கம் சென்னை, குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா நினைவு அறக்கட்டளை ராயவரம், பச்சையப்பன் மேல்நிலைப்பள்ளி சிதம்பரம், ராமகிருஷ்ண மேல் நிலைப்பள்ளி சிதம்பரம்.

ஸ்ரீ கண்ணுடையநாயகி அம்மன் 108 மலர் வழிபாடு

சிவத்திரு. குப. சொக்கலிங்கம் என்ற கருப்பையா, நாட்டரசன்கோட்டை.

அண்டர்	நாயகி	அம்மையே	போற்றி	
அரவம்	ஏந்திய	அணங்கே	,,	
அவித்தநெல்	முளைக்கச்செய்	ஆற்றலாய்	,,	
அழுகண்	சித்தருக்கு	அருளினை	,,	
அறுகோண	வீதியுள்	அமர்ந்தாய்	,,	
அனலும்	புனலும்	ஆனாய்	,,	
அன்னையே	உலக	மங்கையே	,,	
ஆகமம்	அரனுரைக்கக்	கேட்டாய்	,,	
ஆடல்	வல்லானின்	ஆருயிரே	,,	
ஆயிரம்	கண்கள்	உடையாய்	,,	10
ஆயுதம்	கரங்களில்	தாங்கினை	,,	
இகபர	முக்தி	ஈவோய்	,,	
இமையவர்	இறைஞ்சும்	இறைவி	,,	
இல்லம்	தோறும்	எழுந்தவ	,,	
இளநகை	சிந்தும்	இளங்கிளி	,,	
ஈசனில்	பாதியாய்	இணைந்தாய்	,,	
ஈசனைத்	துதிசெயும்	நேரிழை	,,	
ஈன்றாய்	எங்களைக்	காப்பாய்	,,	
உடுக்கை	நாத	ஒலியே	,,	
ஊர்த்துவ	தாண்டவம்	கண்டாய்	,,	20
எங்கும்	நிறைந்த	எம்பிராட்டி	,,	
எண்தோள்	முக்கண்	இறைவி	,,	
எண்வகை	இலக்குமித்	தாயே	,,	
என்றும்	இளைய	கன்னியே	,,	
ஏகம்	சிவமென	இருப்பாய்	,,	
ஏடங்கை	நங்கை	எழிலே	,,	
ஏழிசை	விரும்பும்	ஏந்திழை	,,	
ஏழுலகு	ஆளும்	ஏகம்மை	,,	
ஐம்பெரும்	பூத	அதிபதி	,,	
ஒப்பிலா	அழகு	உருவே	,,	30
ஒளிக்குள்	ஒளியாய்	ஒளிர்பவ	,,	
ஓங்காரம்	உலகெலாம்	ஒலிப்பவ	,,	
கடைக்கண்	அருளும்	கயற்கண்ணி	,,	
கண்காணியாய்	விளங்கும்	கருமாரி	,,	
கண்ணில்	மணியாய்	விளங்குவை	,,	
கண்ணுடைய	நாயகி	கற்பகமே	,,	

கலசங்கள்	மீட்ட	காரிகை	போற்றி
கழுத்துரு	கட்டிய	கட்டழகி	,,
கழுமல	நாயகன்	காதலி	,,
களியாட்டம்	கண்ட	காரணி	,,
காமனை	எரித்தவன்	கண்மணி	,,
காளி	உருவும்	காட்டினை	,,
குடிகள்	வளர்க்கும்	குலதெய்வமே	,,
கோடி	நாமங்கள்	கொண்டாய்	,,
சங்கரனுக்கு	அன்னமிடும்	சங்கரி	,,
சச்சி	தானந்த	ரூபிணி	,,
சண்டா	சுரனை	வதைத்தாய்	,,
சண்முகனுக்கு	வேல்தந்த	சக்தி	,,
சித்தத்துள்	உலவும்	சிவசக்தி	,,
சித்தரும்	அறியாச்	செவ்வொளி	,,
சிந்துரமேனி	சிவகாரணி	சிவமங்கையே	,,
சிலம்பொலி	முழக்கிடும்	சிந்துரவல்லி	,,
சிவ	ஆனந்தச்	சிறப்பே	,,
சிவயோகவல்லி	சிவகாமி	சிற்பரை	,,
சிவையே	சிவசக்தி	சிதம்பரி	,,
செட்டி	கண்ணாத்தாள்	சேவடி	,,
செம்பட்டு	உடையுடுக்கும்	சேல்விழி	,,
தத்தை	ஏந்தும்	கரத்தோய்	,,
தென்பனசை	வீற்றிருக்கும்	தேவி	,,
தேவாரம்	உவப்போனின்	திருவே	,,
நகரத்தார்	தெய்வ	நாயகி	,,
நடன	சிங்கார	நர்த்தகி	,,
நந்தி	உருவில்	வந்தவ	,,
நமனை	உதைத்த	நற்பதம்	,,
நவசக்தியாய்	இலங்கும்	நற்றவ	,,
நவநாதர்	போற்றிடும்	நாயகி	,,
நாகம்	நத்திய	நாரணி	,,
நாதாந்த	நடனம்	நடிப்பவ	,,
நாலிரு	கரத்து	நமசிவை	,,
பசுபதி	பாசம்	உணர்த்தினை	,,
பசும்பொன்	நாடிய	பராசக்தி	,,
பரமன்	விரும்பிய	பசுங்கிளி	,,
பன்னுப்	பாட்டை	உள்ளினை	,,
பனிமலை	வல்லி	பரமேட்டி	,,
பாடகம்	உயர்த்திய	பத்தினி	,,
பார்வதி	பைரவி	பாகம்பிரியாய்	,,
பாவாணர்	பரவிய	பாவையே	,,

பாலமுது	ஊட்டிய	பராபரை	போற்றி	
பிடாரியாய்	விளங்கும்	பேரரசி	,,	
பூங்கோயில்	புகுந்த	புவனேஸ்வரி	,,	80
பூரணியே	பூங்கொடியே	புனிதவதி	,,	
பூலோக	நாயகியின்	பாதமலர்	,,	
பூஜைசெய்து	பூஜைகொள்ளும்	பூவையே	,,	
பெருந்தவக்	கொழுந்தின்	பொற்பதம்	,,	
பொங்கழலே	போகமே	பொன்முடியே	,,	
பொன்மழை	பூமியிற்	பொழிவாய்	,,	
மங்கையர்க்குத்	தனியரசி	மாதே	,,	
மண்ணரசி	விண்ணரசி	மயிலே	,,	
மலைவளர்	காதலியாம்	மலையரசி	,,	
மறை	பொருளான	மாமணி	,,	90
மன்னர்கள்	போற்றிய	மாதேவி	,,	
மாய	அரக்கனை	மடித்தாய்	,,	
மாயப்	பொன்விழி	மலரே	,,	
மானஸ	பூஜை	செய்தனை	,,	
முத்து	நாயகமுரைத்த	முதற்பள்ளே	,,	
முனிவர்களும்	அறியொண்ணா	முக்கண்ணி	,,	
மூவிலைச்	சூலம்	ஓங்குவோய்	,,	
மேதினி	காக்கும்	மேருவே	,,	
வடகலை	வேள்வி	நாடுளாய்	,,	
வடக்குவாய்ச்	செல்வி	வனிதையே	,,	100
வண்டார்	குழலி	வடிவே	,,	
வனசங்கரி	வனதுர்க்கே	வடிவாம்பிகே	,,	
வாகீஸ்வரி	ராஜேஸ்வரி	ஜகதீஸ்வரி	,,	
வாடாமலர்	மங்கை	வாழ்வரசி	,,	
வான்மழை	வழங்கிடும்	வாரணி	,,	
வெள்ளிரதம்	ஏறிவரும்	உள்ளொளியே	,,	
வேதாளம்	தொழுதிடும்	வேதமே	,,	
வையகத்தின்	அன்னையே	போற்றி!	போற்றி!	108

*

ஸ்ரீ கண்ணுடையாள் தோத்திரம்

காசிவாசி நடேசானந்த சரஸ்வதி

தண்ணுடையாள் ஞானத் தமிழ்ப்பனசை வாழ்கின்ற
கண்ணகியாம் செங்கமலக் காலுடையாள் — எண்ணுடையாள்
செட்டிமார் நன்றுவாழச் செய்யவளாய் நின்றென்றும்
கட்டியே காப்பாள் கனிந்து.

அகிலத்தின் நாயகியே !

கவிஞர். அரு. சுந்தரம் M.A.,B.Ed., (வெற்றியூர்)
தலைமையாசிரியர், ச. இராம. மே. நி. பள்ளி, நாட்டரசன்கோட்டை

பல்லவி

அகிலத்தின் நாயகியே கண்ணாத்தாள் -- உன்
அருள்வேண்டி நிற்கின்றேன் கண்ணாத்தாள் (அகிலத்தின்)

அனுபல்லவி

மகிமைகள் பலசெய்வாய் கண்ணாத்தாள் - என்
மனக்கவலையைத் தீர்த்திடுவாய் கண்ணாத்தாள் (அகிலத்தின்)

சரணம்

அவித்த நெல்லை முளைக்க வைப்பாய்
அன்புடனே உயிர்களைக் காத்திருப்பாய்
புவியில் வளங்கள் பல நிறைத்திடுவோய்
புல்லர்களை எந்நாளும் அழித்திடுவாய் (அகிலத்தின்)

கண்ணில் வரும்நோயைத் தீர்த்திடுவாய்
கவியில் நற்பொருளைச் சேர்த்திடுவாய்
மண்ணில் நாட்டரசன்கோட்டை சிறந்திடவே
மாதா உன் அருளைத்தினம் தருவாய் (அகிலத்தின்)

அவள் பாதம் சரணடைவோம்

சோம. வெள்ளையப்பன் - நாட்டரசன்கோட்டை

பாட்டரசன் கம்பனுமே பள்ளிபடைக் கோயில் கொள்ள
நாட்டரசன் கோட்டைதனை நன்னிலமாய்த் தேர்ந்தெடுத்தான்
தேர்ந்தெடுத்த நகர்தனிலே தேசிவிநயகரும்
மங்கலங்கள் பொங்கிவர மஞ்சணத்திவிநயகரும்
சோதனைகள் தீர்த்திடவே சோழீசப் பெருமானும்
வேதனைகள் நீக்கிடவே வேங்கடாஜலபதியும்
ஊருக்கு உறுதுணையாய் ஊர்காக்கும் காவலனும்
காவல்தனைக் கவனிக்க கருப்பணசுவாமியுமே
சுற்றியே அமர்ந்திருக்கச் சுந்தரமாய்க் கோயில் கொண்டாள்
காட்டிலே பிறந்துவந்து களியாட்டம் கொண்ட இவள்
நாட்டிலே வந்தமர நரபலியும் கொண்டவள்தான்
கண்ணுடைய நாயகியாய் கருவறையில் வீற்றிருந்து
கண்கொடுக்கும் அன்னையாகக் கலியுகத்தில் காட்சிதந்தாள்
ஆத்தாளின் மகிமை அவித்தநெல் முளைப்பதுடன்
ஆயிரம் குட்டிவெட்ட அணுவளவும் ரத்தமில்லை
வடக்குவாய் செல்லியை வலம்வந்து துதித்து வந்தால்
வாழ்விலே நலம்பலவும் வரிசையாக தந்திடுவாள்
மாணிக்கச் செட்டிச்சியாம் மாதரசி கண்ணாத்தாள்
காணிக்கை இல்லாமலே நம்மைக் காலமெல்லாம் காத்திடுவாள்
ஆத்தாளின் மகிமைகண்டு அவளையே வணங்கி நின்று
அனைவரும் வாழவேண்டி அவள்பாதம் சரணடைவோம்.

எங்களூர் மும்மணி

வெ. க. சு. ந. சுப. குமரப்ப செட்டியார்

நாட்டரசன்கோட்டை

நாட்டரசன் கோட்டையில் சர்வ வல்லமையுடன் வடக்கு முகம் நோக்கி வீற்றி-ருக்கும் ஸ்ரீ கண்ணுடையநாயகி அம்மனுக்கு வடக்குவாய் செல்வி என்ற பெயரும் உண்டு

முதல் மணி :- **சேங்கை வெட்டு**

நாட்டரசன் கோட்டையில் அம்மனுக்கு முதல் திருவிழா பங்குனி முதல் செவ்வாயில் நாள் வைத்து இரண்டாவது செவ்வாயில் சேங்கை வெட்டி பூர்த்தி செய்யப்படுகிறது. இது ஆதி திராவிடர்களுக்கு மிக முக்கியமான திருநாள். இந்த ஏழுநாள் வைபவத்தில், அவர்கள் வாழும் பகுதியில் உள்ள தெரு, வீடு, நடைபாதை எல்லாம் அலங்கரிக்கப்பட்டு, அப்பகுதி யின் நடுவில் உள்ள பொது மேடையில் கண்ணுடையம்மன் போல் திருஉருவம் எழுதி புஷ்ப அலங்காரம் செய்து மதுக்குடங்கள் அமைத்து, 7 நாளும் அவர்களுடைய உற்றார் உறவினர் புடைசூழ கும்மி அடித்து அதி கோலாகலமாகக் கொண்டாடுவார்கள். இரண்டாவது செவ்வாய் அன்று அதிவிமரிசையான பூஜைகள் போட்டு தங்களின் உறவினர் புடைசூழ கொட்டு முழக்கு கோலாகல வைபவத்துடன் மாலைமயங்கும் நேரத்தில் பெண்மணிகள் எல்லாம் அலங்கார ஆடை ஆபரணங்கள் மணங்கமழும் மல்லிகை சூடி வாத்திய கோஷத்துக்கு ஏற்ப குலுங்கி நடந்து வரும் கண்காட்சி (இப்புகைப்படம் இம்மலரில் உள்ளது.) பழங்காலப் பெரு-மையை எடுத்துக் காட்டுகின்றது. இந்தப் பெண்கள் மதுக்குடத்துடன் அணிஒட்டுக்கால் மண்டபத்தில் நுழைந்து தங்கள் மதுக்குடங்களை அம்மனுக்கு சமர்ப்பித்து, வழக்கமான குலவை ஸ்தோத்திரங்கள் செய்ய ஆண்கள் சாரிசாரியாக சேங்கையின் மேல்புரத்தில் உள்ள முதல் படித்துறையில் மண்வெட்டி கூடையுடன் இறங்கி வெட்டி எடுத்துத்தரும் மண்ணைப் பெண்கள் தங்கள் சேலை முந்தானையில் வாங்கி ஆள்ஓடிக்கி பக்கத்தில் போட்டுவிட்டு மறுபடியும் மண்டபத்திற்கு வந்து குலவைகள் போட்டு அம்மனை தெரிசித்து மதுக்குடங்களை எடுத்து அந்த திருக்குளத்தின் கீழ்புரம் முதல் படித்துறை அருகாமையில் உள்ள இலுப்பை மரத்தடியில் குளிவெட்டி மதுவை சேர்ப்பித்து கொட்டு குலவையுடன் தங்கள் சேரி திரும்பி குரவை கூத்துகள் ஆடி இரவு 9 மணிக்கு மறுசேங்கை வெட்டுக்கு வெகுசிலரே வந்து சேங்கை வெட்டி பண்டபத்திற்கு வந்து சந்நிதானத்தில் நின்று அவர்களுக்காக ஏற்பாடுகள் செய்யப் பெற்றிருக்கிற விசேட பூஜைகளை கண்டு களித்து விபூதி பிரசாதம் பெற்றுச் செல்வார்கள்.

முன்னர் அரிஜனங்களில் பள்ளர் என்ற பிரிவினர் இவ்வூரில் வாழ்ந்திருக்கின்றனர். அவர்கள்தான் இச்சேங்கை வெட்டுத் திருவிழாவில் கலந்து கொண்டவர்கள். அதை வைத்து தான் முத்துக்குட்டிப் புலவரும் அப்பள்ளர்களை தொடர்புபடுத்தி கண்ணுடையம்மன் பள்ளு என்ற நூலை செய்திருக்கிறார். பின்னர் எக்காரணத்தினாலோ இவ்வூரில் அப்பள்ளர்கள் குடும்பம் நலிவடைந்ததாகத் தெரிகிறது. அந்நிலையில் அப்பள்ளர்கள் இவ்வூரில் தங்களுக்கு பரம்பரையாக இருந்துவந்த சேங்கை வெட்டும் உரிமையினை அரிஜனங்களில மற்றொரு பிரிவினராகிய பரையர்களிடம் ஒத்திவைத்துச் சென்றுவிட்டார்கள் என்று சொல்கிறார்கள்.

ஊர்மக்கள் இந்தத் திருவிழா 7 நாள் காலத்தில் சேங்கை வெட்டு முதல் செவ்வாயி லிருந்து காப்புத்தடை என்று விரதம் பூண்டு நெல் அவிக்க மாட்டார்கள். ஒடுவைத்து

பயர் பச்சை வருக்கமாட்டார்கள். இந்த திருவிழாவில் இருந்து வைகாசி விசாகத் தேர்த் திருவிழா முடியும்வரை குறிப்பாக பெண்கள் நேம நிஷ்டையோடு இருந்து வருகிறுர்கள். பங்குனி முதல் செவ்வாய் முதல் வைகாசி விசாகம் முடிய அந்தக்காலத்தில் சுபகாரியங்கள் நடத்துவதை, இவ்வூர் நகரத்தார் தவிர்த்து வந்தார்கள். இப்போது சிறிது மாறிவிட்டது.

நாட்டரசன்கோட்டை மக்கள் இந்த சேங்கை வெட்டுத் திருவிழாவை ஆதிதிராவிடர்களுக்கு முன் உரிமையாக கொடுத்து சிறப்பித்து இருப்பது இந்தக்கால கொள்கைகளுக்கு உகந்ததாக இருக்கிறது. இன்றளவும் ஆதிதிராவிட மக்கள் இந்த ஊரில் மற்ற கோவில்களில் நடக்கும் திருவிழாக்களில் கலந்து கொள்வதும் ஊரில் நடக்கும் நல்லகாரியம் துக்க காரியங்களில் சம பங்கெடுத்து நடந்துவருவதும் மக்களின் ஜாதி வித்தியாசமில்லாமல் ஒற்றுமையை பராமரித்து வருகிறது. இந்தக் கூட்டுச் சேர்க்கை அம்மனின் திருவருளால் இன்றளவும் சுமூகமாக நடந்து வருகிறது.

ஸ்ரீ கண்ணுடையநாயகி அம்மன் திருவருள் என்றென்றைக்கும் ஊர்மக்களுக்கு நன்மைகள் செய்யப் பிரார்த்திக்கிறோம்.

அருள்மிகு அம்மனின் ராஜகோபுரத்துக்கு முன்னால் ஏறத்தாழ 350 ஆண்டுகளுக்கு முன் வெட்டப்பட்ட குளம்தான் சேங்கை என்று அழைக்கப்பெறும் திருக்குளமாகும். சிவகங்கை என்ற பெயர்தான் சேங்கை என்று மருவியிருக்கலாம் என்று தோன்றுகிறது. இவ்வூர் வெ.க.சு. குடும்பத்தினர் ஐந்து தலைமுறைகளுக்கு முன்னர் இந்த இடத்தை தர்மாஸனமாகப் பெற்றிருப்பதாகத் தெரிகிறது. சிவகங்கை அரசரிடமிருந்து அப்பொழுது சிறுகுளமாக இருந்த நிலையில் பெற்றிருக்கிறார்கள். பின்னர் இவ்வூரைச் சேர்ந்த ஆதிதிராவிடர்களைக் கொண்டு இக்குளத்தினை ஆழமாக வெட்டி பெரிதுபடுத்தி மூன்று அகலங்கள் வைத்து வெட்டிக் கட்டியிருக்கிறார்கள். தண்ணீரின் சுவை மாறாமலிருப்பதற்காக தளவரிசையிலிருந்து மேல் பூமி மட்டம் வரை செம்பிரான் தகட்டுக்கற்களால் நான்கு புறமும் சுவர் அமைந்துள்ளார்கள். மேல்பரப்பில் வெள்ளைக்கல் ஆளோடியும் உள்ளது. பல மாடக்குழிகள் உள்ள கைபிடி சுவரும் கட்டியுள்ளார்கள். நான்கு திசைகளிலும் எட்டுப்படித் துறைகள் அழகாக அமைந்துள்ள நிலையில் இத்திருக்குளம் பார்ப்பதற்கும் கவர்ச்சி உள்ளதாக இருக்கும். வெ. க. சு. சுப்ரமணியம் செட்டியார் செம்பிரான் கல்சுவர் வைத்துக்கட்டியவர். அவர் மகன் அண்ணாமலை செட்டியார் ஆள் ஓடி கைபிடி சுவர் எடுத்து விபூதி மடல் வைத்து அழகு படுத்தியவர்.

இக்குளத்தின் தண்ணீர் இவ்வூர் மக்களுக்கும் பக்கத்தில் உள்ள சிற்றூர் மக்களுக்கும் குடிதண்ணீராக இருந்து வருகிறது. சென்னையில் கிண்டியிலுள்ள ஆராய்ச்சி மையம் இத்தண்ணீரை சோதித்துப் பார்த்து இத்தண்ணீர் குடிப்பதற்கு தகுதி உடையதென்று சான்றளித்துள்ளது.

இக்குளத்தை வெட்டிக்கட்டி முடித்த வெ. க. சு. குடும்பத்து அறங்காப்பாளர் (ட்ரஸ்டி) இத்தண்ணீரின் சுவை குன்றாமலிருக்கவும், தூய்மை குன்றாதிருக்கவும் நீர்ப் பிடிப்புப்பகுதி, தெப்பக்குளம் ஆகிய இடங்களில் காவல் அமைத்துக்காத்து வந்துள்ளார்கள் இக்குளத்திற்கு அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை நீக்கி அழகும் அமைப்பும் குன்றாமல் காத்துவருகிறார்கள்.

இரண்டாம்மணி : செவ்வாய்ப் பொங்கல்

அருள்தரு கண்ணுடையநாயகி அம்மனுக்கு நடைபெறுகின்ற விழாக்களிலே இது குறிப்பிடத் தகுந்த ஒன்றும் இது போன்ற விழா சில ஊர்களிலே தான் நடைபெறுகின்றது.

தைமாதம் முதல்நாளான தைப்பொங்களுக்கும், அடுத்த நாளான மாட்டுப் பொங் களுக்கும் அடுத்து வருகின்ற செவ்வாய்க்கிழமை அன்று இவ்விழா நடைபெறும்.

மாட்டுப்பொங்கலன்று பொங்கல் வைத்து சாப்பிட்ட பின்னர் ஏறத்தாழ மூன்று மணியளவில் கண்ணுடையம்மனுக்கு சிறப்பு வழிபாடு செய்த பின் மஞ்சுவிரட்டில் பங்கு கொள்ளும் மாடுகளுக்கு வேட்டி துண்டுகள் கொடுப்பதற்காக நகரத்தார் அம்மன் கோயிலி லிருந்து எடுத்துக்கொண்டு மேளதாளத்துடன் அம்மன் கோவிலுக்கு அருகாமையிலுள்ள தொழுவத்திற்கு வந்து அவைகளை மாடுகளுக்கு கொடுக்க செய்து மஞ்சுவிரட்டுக்கு தொழுவத்திலிருந்து மாடுகளைத் திறந்துவிடச் செய்வார்கள். பின்னர் நகரத்தார் மேள தாளத்தோடு தேரோடு வீதியில் ஆங்காங்கே உள்ள தொழுக்களில் மாடுகளைத் திறக்கச் செய்து பின் அம்மன் கோவிலுக்கு வருவார்கள். எல்லா நகரத்தாரும் அம்மன் கோவிலில் அம்மனைச் சுற்றி உள்ள பிரகாரத்தில் அமர்வார்கள். பூசாரிகள் எல்லா நகரத்தாருக்கும் வெற்றிலை பாக்குக் காளாஞ்சி கொடுப்பார்கள். இந்த மரியாதை கொடுத்து முடிந்த பின்னர் அந்த ஆண்டு செவ்வாய்ப் பொங்கலைப் பற்றிபேசுவார்கள்.

இந்த நகரக் கூட்டத்தில் செவ்வாய் பொங்கலைத் தவிர வேறொன்றும் பேசுவதில்லை என்ற வரம்பு உண்டு. நகரத்தார்களில் சில வகைகள் ஏற்படுத்தி உள்ளார் கள். ஒவ்வொரு வஷருமும் ஒவ்வொரு வகையீல் ஒரு கார்வாரக்காரர் செவ்வாய்ப் பொங்கல் காரியங்களைக் கவனிப்பார். முந்தைய ஆண்டு பார்த்த கார்வாரக்காரர் அடுத்த ஆண்டு மார்கழி மாதம் 15உக்குள் முந்தைய ஆண்டு வரவு செலவு கணக்கினைக் கொடுத்து இருப்பையும் ஒப்பிப்பார். இந்த நகரக் கூட்டத்தில் சொல்வார். கையில் இருப்பு இருப்பதைப் பொருத்தும், சென்ற ஆண்டு பற்றாக்குறையைப் பொருத்தும் புள்ளி ஒன்றுக்கு செவ்வாய் பொங்களுக்கு இவ்வளவு வரி கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்வார்கள்.

செவ்வாய்ப் பொங்களுக்கு முதல்நாள் ஊரில் எத்தனை புள்ளிகள் இருக்கிறார்களோ அத்தனை புள்ளிகளுக்கும் அடுப்புக் கிள்ளி போடச் செய்வார்கள். இந்த ஆண்டு ஏறத்தாழ 670 புள்ளி இருக்குமென்றால் ஒவ்வொரு புள்ளியின் பெயரையும் ஒவ்வொரு சீட்டில் எழுதி குடத்தில் போட்டு குலுக்கி பெரியவர் ஒருவர் எடுப்பார். இதன் மூலம் எந்த புள்ளிக்கு எத்தானவது அடுப்பு என்பது முடிவு செய்யப்பெறும்.

ஒரு புள்ளி என்பது ஒரு குடும்பத்தில் ஆண்மகனுக்கு கல்யாணமான அன்று முதல் ஆரம்பமாகிறது. ஒவ்வொரு ஆண்டும் இப்படி வருகின்ற புதுப் புள்ளியைச் சேர்த்துக் கொள்வார்கள். ஒரு குடுப்பத்தில் ஆண்வாரிசு இறந்துவிட்டால் அந்த புள்ளியை நீக்கி விடுவார்கள். ஆண்வாரிசு இறந்து அவருக்கு திருமணமாகாத பையன் இருந்தால் அவனைப் புள்ளியாகச் சேர்த்துக் கொள்வார்கள். சுவீகாரம் எடுக்கும் நோக்கத்தில் விதவை இருந்தால் அவர்களுடைய புள்ளியும் தொடரும். பிரிவினை ஆகாத குடும்பத்தில் தகப்பன் பிள்ளைகளுக்கும் சகோதரர்களுக்கும் தொடர்ச்சியாக அடுப்பு ஒதுக்கப்படும். சம்பந்தப் பட்டவர்கள் எல்லோரும் வந்து தாங்களுக்குள் பிரிவினை செய்துகொண்டோமென்றும் தனித் தனியாக எங்களுக்குப் பிரித்து அடுப்புகள் போடுங்கள் என்றும் சான்றுடன் சொன்னால் ட்டும் ஆடுப்புகளைப் பிரித்துப் போடுவார்கள்ம.

கார்வாரக்காரர் செவ்வாய் அன்று தினம் அம்மனுக்கு சிறப்பான அபிஷேக ஆராதனைக்கு ஏற்பாடு செய்வார். இரவில் விளக்குகள் போடுதல் முதலிய சௌரியங் களுக்கும் ஏற்பாடு செய்வார்.

சீட்டுக் குலுக்கி எடுக்கப் பட்டவுடன் முதல் முட்டி சீட்டு யாருக்கு விழுந்ததோ அவர்களுக்கு முன்னரே தகவல் சொல்லி அனுப்புவார்கள். செவ்வாய்க்கிழமையன்று இராகு காலத்துக்கு முன்னர் முதல் முட்டிக்காரர் முட்டியை கோயிலிருந்து சகல மரியாதையுடன் நகரத்தார் புடைசூழ மேளதாளத்தோடு அடுப்பு இருக்குமிடத்துக்குக் கொண்டு வருவார். அம்முட்டியை அடுப்பில் அவர்வைத்துப்பால் ஊற்றியதும் வந்திருக்கும் நகரத்தார் அனைவரும் அம்முட்டியில் பால் ஊற்றியதன் பின்னரே, பெண்களும் பால் ஊற்றி அரிசி இட்டுப் பொங்கல் இடுவார்கள். முதல் முட்டிக்காரர் கண்டிப்பாக ஆட்டுக்குடிட் வெட்டி பலி கொடுக்க வேண்டும்.

முதல் முட்டி வைக்கப் பெற்றபின் மற்றவர்கள் முன்னும் பின்னுமாக முட்டி வைத்து பொங்கலிட்டு இறக்குவார்கள்.

முன்னரெல்லாம் ஒவ்வொருவரும் குட்டி வெட்டி பலி கொடுப்பது வழக்கம். பின்னர் சிலர் பார்ப்பொங்கலாகவும் சிலர் குட்டி வெட்டிப் பலியிடும் பொங்கலாகவும் இட்டு வத்தார் கள். அரசாங்கம் பலி இடுதற்கு தடை செய்ததிலிருந்து குட்டி வெட்டும் பழக்கம் குறைந்து விட்டது. ஏறத்தாழ இரவு 9 மணியளவில் கருப்பண்ணசாமி கோவிலில் இருந்து கண்ணாத்தாள் கோவிலுக்கு பேய்வெட்டிகாளைகள் என்றழைக்கப்படும் சாமியாடிகளை அழைத்து வருவார்கள். கோயிலில் பலியிட்டு வழிபாடு முடிந்த பின்னர் முதல் முட்டிக் காரருடைய குட்டியும், மற்றும் பலிகொடுக்க விருப்பமுடன் இருப்பவர்களுடைய குட்டிகளும் கருப்பண்ணசாமி கோவில் பூசாரிகளால் பலியிடப்படும். சுமார் 11 மணி அளவில் பூசாரி எல்லா அடுப்புகளுக்கும் வந்து தீபாராதனை பார்ப்பார். அதன் பின்னர் எல்லோரும் பொங்கலிட்ட முட்டி முதலியவற்றை எடுத்துக் கொண்டு வீடு செல்வார்கள்.

நாட்டரசன்கோட்டை நகரத்தார் அடுப்புகளுக்குப் பின்னர் வெளியூர் நகரத்தார்கள் வேண்டுதல் வேண்டிக் கொண்டிருந்தால் அவர்கள் அடுப்புக்கிள்ளிவைத்துப் பொங்கலிடுவார் கள். காரணக்காரர்கள் பெரும்பாலும் குட்டிவெட்டிப் பொங்கலிடுவார்கள்.

இவ்வூரில் ஏறத்தாழ 300 ஆண்டுகளாக இவ் விழா நடந்துவருவதாகத் தெரிகிறது. முன்பு அடுப்புகளை நகரத்தார்களில் ஆண்மக்கள் குழி கிள்ளப் பெண்கள் சாணம் போட்டு மெழுகிக் கோலம் போடுவார்கள்.

இந்த விழா இந்த ஊரில் நல்ல மழை பெய்து விளைவு கண்டு முதல நல்லபடியாக ஆதற்கும், ஊரில் காய்ச்சல், கருப்பு, அம்மை, வாந்திபேதி முதலிய நோய்கள் அணுகாமல் இருப்பதற்கும் அம்மன் அருள் செய்து மக்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென் பதற்கும் நடத்தப் படுகின்றது. இது இப்பொழுது உள்ள நடை முறையாகும்.

முன்காலத்தில் சிவகங்கை மன்னர் நகரத்தார்களின் ஒத்துழைப்புக்காக என்றென்றும் முட்டி ஒன்றுக்கு ஒரு பணம் (அஃதாவது அரைக்கால் ரூபாய்) வசூல் செய்வதென்று வாக்குக் கொடுத்த பிரகாரம் இன்றளவும் தேவஸ்தானம் அதைக் கடைப்பிடித்து வருகிறது.

மூன்றும் மணி :- சொக்கட்டான் சாரி என்ற அணி ஒட்டுக்கால் மண்டபம்:-

அருள்தரு கண்ணுடையம்மன் கோயிலின் முகப்பில் உள்ளத் திருக்குளத்திற்கும், கோயிலுக்கும் இடையில் அமைந்தது இந்த மண்டபம். முற்காலங்களில் சொற்கேட்டான் என்று பணயம் வைத்து ஆடும் பொழுதுபோக்கு விளையாட்டு இருந்தது. இந்த விளையாட்டிலேதான் நளன் தன் நாட்டை பணயம் வைத்து இழந்து காட்டுக்குச் சென்றான். பஞ்ச பாண்டவர்களும் இச் சூதாட்டம் காரணமாகத்தான் நாடிழந்து காட்டுக்குச் செல்ல வேண்டியதாயிற்று. அவ்விளையாட்டில் விளையாடும் காய்களை ஒவ்வொரு கட்சியாரும் நகர்த்துவதற்கு பல கட்டங்கள் அமைந்த துணிப்படத்தின் வடிவத்தில் அமைந்திருப்பதால் இந்த மண்டபத்திற்கு இப்பெயர் வந்தது.

இவ்வூரில் 350 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த நகரத்தார்கள் விவசாயிகளாகவும் வணிகர்களாகவும் இருந்து வந்திருக்கிறார்கள். அந்தக் காலத்தில் பரம்பரைக் குடும்பமாக இளையாற்றங்குடி கழனிவாசல் பிரிவினர், அருள்தரு கண்ணுடைய நாயகி அம்மன் கோயிலுக்கு கிழக்கிலும் கம்பன் சமாதியை ஒட்டிய சொக்கன் குளத்துக்கு மேற்கிலும் உள்ள பகுதியான பழைய வளவில் வாழ்ந்து வந்திருக்கிறார்கள்.

இக்கோவிலுக்கு முன் இராஜகோபுரம் கட்டி ஒரு அணி ஒட்டிக் கால் மண்டபம் எழுப்ப விரும்பினார்கள். அதற்காக 110 ஆண்டுகளுக்கு முன்னர் தச்சு செய்தார்கள். இதற்குரிய செலவிற்கு அவர்கள் ஆஸ்தி வரி எழுதி அத் தொகையினை ஒருவரிடம் கொடுத்து கட்டி முடிக்கும் பொறுப்பினையும் ஒப்படைத்தார்கள்.

அக்காலத்தில் வெ. க. சு. வகையில் அண்ணாமலை செட்டியார் என்பவர் செல்வாக்கு மிகுந்தவராக விளங்கினார். அவருக்குத் தெரிந்த சிற்பி ஒருவர் கைதேர்ந்தவராக இருந்தார் செட்டியாரின் விருப்பப்படி அவர் சொக்கட்டான்சாரி மண்டபத்திற்கு வரைபடம் வரைந்து வடிவமைப்பு எழுதியிருந்தார். இம்மண்டபத்தை இளையாற்றங்குடியில் கட்டுவதென்று முடிவு செய்து சிற்பியுடன் இளையாற்றங்குடி சென்றார். இம்மண்டபத்தைக் கட்டுவது எளிதான ஒரு செயல் இல்லையென்றோ, வேறு காரணத்தாலோ இளையாற்றங்குடி நகரத்தார் மண்டபம் கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை. மிக வருத்தத்தோடு செட்டியாரும்; சிற்பியும் திரும்பினார்கள். நீங்கள் சொல்லித்தானே பலகாலம் முயன்று சிந்தித்து இந்த மண்டபத்திற்கு வடிவமைத்தேன். இப்பொழுது இப்படி ஏமாற்றமடைகின்றார்ப் போல ஆகிவிட்டதே என்று, செட்டியாரிடம் சிறிது கவலை கலந்த கோபத்தோடு சிற்பி சொன்னார், செட்டியாரும் எப்படியும் சிற்பியினுடைய வருத்தத்தை போக்க வேண்டுமென்று முடிவு செய்தார். வண்டியில் வருகின்ற போதே இம்மண்டபத்தை கண்ணுடையாள் திருக்கோயில் முன்னர் கட்டினால் என்ன என்ற எண்ணம் உதயமாயிற்று. ஊர் வந்தார். அம்மன் கோவில் சென்றார். அம்மனிடம் உத்தரவு கேட்டார். அம்மனும் இசைவு தெரிவித்தார்.

இம்மண்டபத்தை உற்று நோக்கினால், இம்மண்டபம் ஒற்றைக் கல்லால் அமைந்த நான்கு தூண்களில் நிற்பது தெரிய வரும். இத்தூண்களுக்குரிய கற்களும் மேலே தளம் போடுவதற்கு வேண்டிய கற்களும் நாட்டரசன்கோட்டைக்கு வடமேற்கே 15 கல் தொலைவில் உள்ள திருமலை என்கிற மலைப்பகுதியிலிருந்து அரசாங்க அனுமதி பெற்று கொண்டு வரப்பட்டது. சிற்ப வேலை செய்து முடிக்கப்பட்ட தூணின் சுற்றளவு பதினாறு அடி ஆகும். இவ்வேலைக்கு முன்னர் இக் கல்லின் சுற்றளவு 28 அடியாகவும் உயரம்பதினாறு அடியாகவும் இருந்திருக்க வேண்டும்.

சிற்பிகள் மலையடிவாரஞ் சென்று தூணுக்கு வேண்டிய அகலம் நீளம் உள்ள கல்பகுதியைத் தேர்ந்தெடுத்து பக்குவமாக குழிகள் அமைத்து வேட்டு வைத்துக் கிளப்பித்தருவார்கள். இக்கல்லை நாட்டரசன் கோட்டைக்குக் கொண்டு வருவது பெரியபிரயத்தனமாக இருந்தது. இக்

கற்களை ஏற்றிவர தேர்க்கால்கள் போல் மூன்று பங்கு பெரிதான மரத்தால் ஆகிய கால்கள்செய்து இரும்பு அச்சில் பொருத்தி சங்கிலி, தாம்புக் கயிற்று வடம், ஊனான் கொடிகளால் இணைத்து மரச்சக்கர வண்டியில் மழையில்லாத பங்குனி சித்திரை மாதங்களில் கொண்டுவர ஏற்பாடு செய்தார்கள். கார்வாரக்காரச் செட்டியாரும் நகரத்தாரிடம் பணிபுரிந்த ஐயங்காரும் அவர் களின் பரிவாரங்களோடு மண்வெட்டி, கடப்பாறை, அரிவாள் முதலிய சாமக்கிரியைகளை பல வண்டிகளில் ஏற்றிக்கொண்டு திருமலை சென்றார்கள். கல்லை திருமலையில் கல் வேலை செய்யும் ஆட்கள் மரச்சக்கர வண்டியில் ஏற்றி மலையடிவாரத்தைத் தாண்டிக் கொண்டுவந்து நிறுத்தி விடுவார்கள். திருமலையிலிருந்து நாட்டரசன் கோட்டை வரை உள்ள கிராமத்தார்கள் மனம் உவந்து அருள்மிகு கண்ணுடையாளிடத்தில் அன்பு கொண்டு இக் கல் ஏற்றிய வண்டியினைத் தங்கள் கிராம எல்லையிலிருந்து அடுத்த கிராம எல்லை வரை இழுத்துக் கொண்டு வந்து சேர்ப்பார்கள். அதற்காக எந்த வித ஊதியமும் பெற்றுக் கொள் வதில்லை. அவர்கள் பணி செய்கின்ற அந்த நாட்களில் அவர்களுக்கு அறுசுவை அன்னம் படைக்க ஏற்பாடு செய்வார்கள் - நாட்டரசன்கோட்டை நகரத்தார். இவ்வுணவு தயாரிப்பதற்காக வேண்டிய அரிசி, பருப்பு, பண்டம், பாத்திரம் முதலியவைகள் உக்கிராணத் தலைவர் பொறுப்பில் பல வண்டிகளில் இக்கல் ஏற்றிவரும் வண்டிக்கு முன்னர் வந்து கொண்டிருக்கும் இது ஒரு திருவிழாக்காட்சி போல அமைந்திருக்கும்

இப்படி முதல்கல் வண்டி வந்து கொண்டிருந்த போது வழியில் உள்ள ஒரு கிராமத்தார் ஒத்துழைக்க மறுத்து விட்டார்கள். கீழப்பூங்குடி வந்து அவ்வூர் நகரத்தார் பொதுமக்கள் உதவியுடன் மேற்குறிப்பிட்ட கிராம எல்லையைக் கடந்து வண்டி கொண்டு வரப்பட்டது. அதன்பின்னர் முதல் கல் ஊர் வந்து சேர்ந்தது. மழை காலம் தொடங்கி விட்டது. எல்லா ஊர்களிலும் மழை நன்கு பெய்து விளைந்தது. ஆனால் கல்வண்டி இழுத்து வருவதற்கு ஒத்துழைக்காத கிராமத்தில் மட்டும் மழை பெய்யவும் இல்லை. விளைச்சலும் இல்லை. அவர்கள் மயங்கிப் போனார்கள். கிராமத்து வழக்கப்படி சாமி வரவழைத்து கோடாங்கி அடித்துக் கேட்டதில் இதற்குக் காரணம் அருள்தரு கண்ணுடையம்மன் குறை என்பது தெரிய வந்தது. அவ்வூர் மக்கள் பயந்து தாங்கள் செய்த தவற்றை உணர்ந்து ஊரோடு நாட்டரசன்கோட்டை வந்து பூஜை போட்டு வழிபாடு செய்து இனிமேல் இப் பணியில் முழுதும் ஒத்துழைப்பதாகவும் அம்மன் அருள்புரிய வேண்டுமென்றும் வேண்டிக் கொண்டார்கள். பின்னர் மழை பொழிந்து ஊர் செழித்தது. பின்னர் வந்த எல்லாத் தூண் களுக்கும் அவர்களும் மற்றவர்களைப் போல் உதவி செய்தார்கள்.

இம் மண்டபத்தின் முதல்த் தூண் இன்றைக்கு நூற்றி எட்டு ஆண்டுகளுக்கு முன் நாட்டப் பெற்றது. மூன்றாவது தூணை நாட்டிய பொழுது தற்சமயம் தொண்ணூறு வயதான முதியவர் நேரில் பார்த்ததாகக் கூறுகிறார். இத் தூண்களில் பல நுணுக்கமான சிற்ப வேலைகள் அமைந்துள்ளன. இச்சிற்பங்களுக்கு ஊர்வராதபடி இத்தூண்களை அக்காலத்தில் எந்திர சாதனங்கள் உதவியில்லாத நிலையில் மனித முயற்சியால் சிறிது சிறிதாக வெகு நுணுக்கமாக சாரம் அமைத்து கடப்பாறை, கம்பி, உருட்டுக்கட்டைகள், சங்கிலி, தாம்புக் கயிறு துணை கொண்டு நிறுத்தியது வியக்கத்தக்க ஒன்றாகும். இம் மண்டபத்தின் திருப்பணி ஏறத் தாழ 65 வருடங்களுக்கு முன் முற்றுப் பெற்றது.

இத்திருப்பணிக்கென்று வந்த கல்தச்சர்கள் வேலை முடித்தவுடன் வேற்றூருக்குச் சென்றுவிட்டார்கள். ஆனால் சில குடும்பத்தாரின் வழித்தொண்டர்கள் இவ்வூரிலேயே நிலை யாகத் தங்கி வாழ்ந்து வருகிறார்கள்.

கண்டவர் பார்த்து வியக்கும் கல்திருப்பணிகள் பலவற்றுள்ளும் இது ஒன்றாகும் எனில் அது மிகையாகாது.

அம்மன் அருள் வேட்டல்

காஞ்சி காமாட்சி

கல்லாக மரமாகக் காய்ந்தவர் தம்மையும் கனியாக மாற்றும் அருளே
கந்தல் உடைகட்டி அம்மா என்பார் வாழ்வில் கடலாகப் பொங்கும் அருளே
சொல்லோடு பொருளோடு சுவையோடு விளையாடச் சுகமாக வந்த தமிழே
தொடை மீதுகுருநாதன் தனைவைத்த சிவனுக்கும் சுடராக நிற்கும் அமுதே
கல்லார்க்கும் கற்றார்க்கும் காணார்க்கும் கண்டார்க்கும் கரையேற்றம் நல்கும் கலையே
கல்யாணம் இல்லாத கன்னிப்பெண் கண்ணீரைக் காலத்தில் நீக்கும் சிலையே
எல்லார்க்கும் எல்லாமும் எப்போதும் தருகின்ற ஏகாம் பரன்தே வியே
எழில்பொழியும் காஞ்சிநகர் அரசுபுரிராணியே ஏதில்கா மாட்சி உமையே !

ஊமைக்குழந்தைக்கு நின்மகன் வேல்கொண்டு ஓமென்று எழுத விலையோ
உழல்கின்ற பாண்டவர் பாரதப் போருக்கு உன் அண்ணன் உதவ விலையோ
காமனைக் கண்ணாலும் திரிபுரம் சிரிப்பாலும் கணவனே எரிக்க விலையோ
காட்டிலும் மேட்டிலும் கரையிலும் நின்பிள்ளை கவலைகள் தீர்க்க விலையோ
சாமத்தில் உன் நாதன் சிவனுக்கு எனைப்பற்றிச் சரியாகச் சொல்ல விலையோ
சரிகமவென்றே பாடிப் பார்க்கிறேன் நீ இன்னும் சங்கீத மாக விலையோ
ஏமன்நெருங்காமல் என்வாழ்வு காக்கின்ற ஏகாம் பரன் தேவியே
எழில்பொழியும் காஞ்சிநகர் அரசு புரிராணியே ஏதில்காமாட்சி உமையே!

காசி விசாலாட்சி

ஆத்தாளுன் சந்நிதியை அறியாத பிள்ளை நான் ஆனாலும் கவிதை சொன்னேன்
ஆடிவரும் கங்கையில் மூழ்காத காக்கை நான் ஆனாலும் பேறுபெற்றேன்
காத்தாளும் மங்கலக் கையோடு முகத்தையும் கற்பனையில் காணுகின்றேன்
கட்டாயம் உன் அருளைப் பெற்றே நான்வாழ்கிறேன் காலத்தில் அங்கு வருவேன்
சேர்த்தாளும் அன்னையே சேய்செய்த பாவத்தைச் சிறிதும் நீ மதிக்க வேண்டாம்
சிற்றறிவை ஆசானின் பேரறிவு காப்பதும் தேவி நீ மறந்த ஒன்று
பூத்தாமரை எனப்பொங்குசின நாகத்தைப் புரிந்தவன் கலந்த மயிலே
புகழ்பெருகு காசி நகர் தகவுடைய தேவியே பூவை விசாலாட்சி உமையே !

உள்ளநாள் வரையிலே நன்மையும் தீமையும் ஒன்றென்றே எண்ணவரம் தா
உறவோடு பகையையும் இரவோடு பகலையும் ஒருமித்துப் பார்க்கவரம் தா
வெள்ளம்போல் செல்வமும் வறுமையும் சமமென்று விளையாடும் வாழ்க்கை வரம் தா
விதியென்றும் வலியதே மதி என்றும் சிறியதே வினைதீர்த்து நல்லதுணை தா
பள்ளம்போல் இதழையும் மலைபோலப் புகழையும் பந்தாடும் வீரநிலை தா
பழிவாங்கும் பசியையும் பல்சுவை உணவையும் பதறாமல் கொள்ளவரம் தா
அள்ளியிடும் கையினால் அர்த்தசாமத்திலும் அருள் செய்யும் அன்பு மயிலே
அறமுடைய வணிகர் குலம் சிலைவைத்த தேவியே அழகு விசா லாட்சி உமையே

மதுரை மீனாட்சி

கருவிலேதிருவுடைய நல்லறிவாளர் தமது கனிவான நட்பு வேண்டும்
காசுபண ஆசைகளில் வேசையரைப்போலாடிக் கறவாத புத்தி வேண்டும்
அருளுடைய பெரியவர்கள் ஆசிவேண்டும் நெஞ்சில் அகலாத அன்பு வேண்டும்
ஆதரவில் லாதவரில் நல்லவரைப் பார்த்து நான் ஆதாரமாக வேண்டும்
மருளுடையமான்போலும் மங்கை ஒருதேவி என் மனையாட்டியாக வேண்டும்
மானமெனும் ஒன்றிலே மாறாத குறிவைத்து வாழ்க்கையைக் காக்க வேண்டும்
இருளகல ஒளி வீசும் இறைவனது தேவியே இவைசேர வேண்டும் எனையே
இனியதொரு மதுரை நகர் அரசுவிற்றிருக்கின்ற இளைய மீனாட்சி உமையே!

ஆழ்கடலில் போட்டாலும் அக்கினியிலிட்டாலும் அழியாத மேனி வேண்டும்
அடுநோய்கள் பலகூடி உடல்மீது தொடுத்தாலும் அலறாத நெஞ்சம் வேண்டும்
ஊழ்வினைகள் ஒன்றாகி உயிர்வாதை செய்தாலும் ஒளிசிந்தும் இதழ்கள் வேண்டும்
உச்சத்தில் நின்றபடி கீழே விழுந்தாலும் உலையாத திறமை வேண்டும்
பாழ்வழியிலே தூங்கிப் பசியோ டிருந்தாலும் பக்தியில் உறுதி வேண்டும்
பயமாகத் தோன்றுவதை நயமாக மாற்றுகிற பலமான அறிவு வேண்டும்
சூழ்வதெலாம் நீ என்ற துணிவுதா தேவியே சொக்கனின் அன்பு மனையே
தொல் மதுரை நகருக்குப் பல்லாண்டு பாடிடும் தூய மீனாட்சி உமையே!

தில்லை சிவகாமி

நீராடிநெய்பூசி புத்தாடை கள்கட்டி நேர்வந்த கன்னிய ரெல்லாம்
நிழல்கண்டு துணைகண்டு மகவோடு பொருள்கண்டு நிலையான வாழ்வும டைவார்
போராடிப் போராடிப் பல துன்பம் பெற்றோர்கள் புகழார்ந்த அமைதியடைவார்
புண்ணாகி மரணத்தைக் கண்ணாக நினைப்போர்கள் புதுவாழ்வு தாமுமடைவார்
வாராத படியேறி வந்தோர்கள் எல்லோரும் வளமான செல்வமடைவார்
வயதான முதியோருஞ் செயதேவி உனைக்காண மாறாத இளமையடைவார்
ஏராளர் குரலோடு எழில் நடனமிடுகின்ற இனிய நடராசன் துணையே
இதமுடைய பொன்னிநதி கரைபுரளும் தில்லை நகர் இன்பசிவ காமி உமையே!

கருவிலே நான்தூங்கிக் காலங்கழிக்கையில் காற்றாக வந்தவள் நீ
கையிலே பிள்ளையாய்ப் பையக் கிடக்கையில் கனிந்த பாலானவள் நீ
உருவிலே பெரிதாகிப் பள்ளிக்குச் செல்கையில் உடன் வந்த கல்வியும் நீ
உறவிலே ஒன்றாகித் திருமணம் நடக்கையில் ஒளிமாலை ஆனவள் நீ
திருவுடன்பிள்ளை என் மனையிற் பிறக்கையில் சீர்தந்த ஆட்சியும் நீ
தேசங்கள் யாவிலும் தொழில் செய்யச்செல்கையில் செல்வமாய் நின்றவள் நீ
குருவான குமரனின் அறிவான அன்னையே கோல நடராசன் துணையே
கோவிலிடை அந்தணர்கள் கூடிவரும் தில்லையில் கொஞ்சும் சிவகாமி உமையே!

திருக்கடவூர் அபிராமி

காவிரிப்பூம் பட்டினத்து வாணிகரைத் தாலாட்டிக் காத்தது உன் கண்களில்லையோ
கள்ளிருக்கும் சோலைகளின் உள்ளிருந்துகுலமாதர் காவல்தரும் தெய்வ மில்லையோ
கோவலனைக் கூடலிலே கொன்றவுடன் கண்ணகியின் கூட்டினுள் நீ செல்ல வில்லையோ
கொற்றவரை பத்தினியை பார்ப்பனரை விட்டுவிட்டு மற்றவரைக் கொல்ல வில்லையோ
பாவலர்க்கு நல்ல தமிழ் படியளந்து தந்து விட்டுபாடலை நீ பெற்ற திலையோ
பாலோடு சந்தனமும் பரிசாக வைத்தவர்க்கு பாவை நீ காவலில்லையோ
பூவிரிய வண்டுவர நின்முகத்தைப் பார்த்தவுடன் பூசைசெய வைத்த மயிலே
போதவிழும் திருக் கடவூர்தேவர் நகராகவந்த பொன்மேனி அபிராமியே!

கவியரசு கண்ணதாசன்

உ

ஸ்ரீ ராமஜெயம்

நாட்டரசன்கோட்டையைச் சேர்ந்த நாடுகளும் ஊர்களும்

பேராசிரியர் 'சுபராம்'

சுப. ராம. சுப. இராமநாதன் செட்டியார் MA., M. Litt.,
ஓய்வுபெற்ற இணைப்பேராசிரியர்
அண்ணாமலை, மதுரை காமராசர் பல்கலைக்கழகங்கள்
நாட்டரசன்கோட்டை.



நாட்டரசன் கோட்டையில் வீற்றிருந்து அருளாட்சி செய்யும் கண்ணுடையம்மனைப் பராவிப் புகழும் நூல் 'கண்ணுடையம்மன் பள்ளு' ஆகும். இதனை இயற்றியவர் முத்துக் குட்டிப் புலவராவார். இவர் இந்நூலில்

"வயனிருவர் பரவு முத்துவடுக நாதேந்தர துரை
மார்க்கண்டன் போலிருக்கக் கூவாய் குயிலே" (கண்ணுடையம்மன் பள்ளு—40)

என்று இவ்வரிகளில் முத்து வடுகநாத துரை மார்க்கண்டன் போல் நீண்டநாள் வாழ வேண்டுமென்று வாழ்த்துகிறார்.


முத்துவடுகநாததுரை சிவகங்கைச் சீமையை ஆண்ட மன்னர். இவருடைய அவைக் களப் புலவராக விளங்கியவர் இப்புலவர். ஒருமுறை மகா சிவராத்திரியன்று கண்விழிக்க விரும்பிய இம்மன்னர் இப்புலவரை அழைத்து, தான் கண்விழித்திருப்பதற்குத் துணையாக ஒரு கதை சொல்லு மாறும் அக்கதை இதுவரை சொல்லப்பெறாத கதையாக இருக்கவேண்டும் என்றும், புதுமாதிரியான கதையாக இருக்க வேண்டுமென்றும் சொன்னார். புலவர் அதற் கிசைந்து 'வசன சம்பிரதாயக் கதை' என்ற ஒரு புதுமாதிரியான கதையினைச் சொன்னார். (இக் கதை இம் மலரில் 153 ம் பக்கத்தில் வெளியிடப்பெற்றுள்ளது)

முத்துவடுகநாதரிடம் பணியாற்றியவர்கள் மருதுசகோதரர்கள். பெரியமருது பிறந்த ஆண்டு கி. பி. 1748 ஆகும். முத்துவடுகநாதர் காலத்தில் வாழ்ந்தவர் கண்ணுடையம்மன் பள்ளினைப் பாடிய இப்புலவர் என்பது மேற்கண்டவைகளால் தெளிவு பெறுகின்றது


முத்துக்குட்டிப்புலவர் காலத்தில் களியாட்டம் 12 ஆண்டுகளுக்கொருமுறை நடை பெற்றிருக்கிறது. தன் காலத்துக் களியாட்டத்தை 'முளைப்பாட்டு' என்ற பகுதியிற் கூறு கின்றார்.

"நிரைத்து வரும் விப வருஷம் நிறைந்த களியாட்டத்துக்கு
விருதுரைக்கும் பதின் மூன்றாம் விக்கிரம வருட மதில்
வருடமுதல் திங்களென வந்த சித்திரை மாதம்
திருவளர் ஏழாந்தேதி சேரு மூதற் செவ்வாயில்"

என்ற அடிகளில் விப வருஷத்தில் நடைபெற்ற முந்திய களியாட்டத்தையும் அதற் குப் பதின்மூன்றும் ஆண்டாகிய விக்கிரம வருடத்தில் சித்திரை மாதம் செவ்வாய்கிழமை 7ஆம்


பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்
ஆய்வுக்குரிய பகுதி
புதுக்கோட்டை மாவட்டம்
மதுரை மாவட்டம்
திருப்பத்தூர்
தேவகோட்டை
சிவ
கங்கை
மானாமதுரை
காமராஜர் மாவட்டம்
இளையான்குடி
இராமநாதபுரம் - மாவட்டம்

படம்—1


பாகனேரி நாடு
கண்டுகொண்ட மாணிக்க நாடு
பட்டமங்கல நாடு
மல்லாகோட்டை நாடு
சிவகங்கை ஒன்றியம்
ஒன்றியம்
கல்லல்
குன்னங்கோட்டை நாடு
காளையார்கோயில்
பூக்குழி நாடு
அ
ஆ
பாகனேரி நாட்டுப் பகுதி
பாகனேரி நாட்டின் நிலப்பரப்பில்
அமைந்த பாகனேரி நாட்டமைப்புக்கு
உட்படாத பகுதி
அ. கொட்டாமடப்பள்ளி
ஆ. நாட்டரசன்கோட்டை

படம்—2

தேதி பள்ளுப் பாடியபொழுது நடந்த களியாட்டத்திற்கு நாள்வைத்ததையும் கூறுகிருர். ஆண்டு என்பது 60 ஆண்டுகளுக்கொரு முறை வந்து கொண்டேயிருக்கும். முத்துவடுகநாத துரை காலத்தையும் பெரிய மருது பிறந்த கி. பி. 1748ம் ஆண்டையும் வைத்து எந்த விக்கிரம வருடம் என்று பார்த்தால் கி. பி. 1760ல் வந்த விக்கிரம வருடம் பொருந்தும். அங்ஙனமாயின் இவர் பள்ளு நூலிற் சொல்கின்ற செய்திகள் கி. பி. 1760ஐச் சேர்ந்தவை. மேலும் கி. பி. 1772ல் நடைபெற்ற போரில் காளையார் கோயிலில் முத்துவடுகநாததுரை இறந்து போய் விட்டார். அதனுல் முத்துவடுகநாதர் காலத்தில் வாழ்ந்த முத்துக்குட்டி பின் 60 ஆண்டு காலம் கழித்துவந்த விக்கிரம ஆண்டைப் பாடியிருக்க முடியாது.

புலவர் இப்பள்ளு நூலில் நாட்டரசன் கோட்டை என்கின்ற தென்பனசை நகரைக் குறிப்பிடும் பொழுது அக்காலத்தில் அது வடகலை வேள்வி நாட்டைச் சேர்ந்திருந்ததாகக் கீழ்க்கண்ட அடிகளிற் சொல்லுகிறார்.


"வந்த நாட்டரசன் கோட்டையுள்ள வடகலை வேள்வி நாடெங்கள் நாடே" (பள்ளு-18)

வடகலை வேள்வி நாடு என்று புலவர் குறிப்பிடுவது எப்பகுதியினை என்று கண்டறிய வேண்டும். பாகனேரிக்கு அடுத்துள்ளது நகரம்பட்டி. அதனைச் சேர்ந்தவர் ஆத. முத்தையா என்பவர். கள்ளர் மரபினர். அமைச்சராக இருந்த R. V. சாமிநாதனுடைய மகள் கணவனுவார். பாகனேரியில் மருத்துவராகப் பணியாற்றும் இராமய்யா என்பவருடைய இளவல் இவர். இவர் பூண்டி புஷ்பம் கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியராகப் பணிபுரிகின்ருர். முனைவர் பட்ட (டாக்டர் பட்டம் Ph.D) ஆய்விற்குப் பாகனேரி நாட்டையும் அதன் ஊர்களையும் அங்கு வாழும் கள்ளர் சமுதாயத்தினரின் பழக்க வழக்கங்களையும் எடுத்துக் கொண்டு "பாகனேரி நாட்டு மக்களின் மரபும் பண்பாடும்" என்ற தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றுள்ளார். அந்த ஆய்வேட்டிலுள்ள மூன்று வரைபடங்களும் படங்கள் குறிக்கும் செய்திகளும் அவர் இசைவுடன் இம்மலரில் வெளியிடப் பெறுகின்றன. இத்துடன் உள்ள முதலாவது வரை படம் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தையும் அதிலடங்கியுள்ள தாலுகாக்களையும், சிவகங்கைத் தாலுகாவில் பாகனேரி நாட்டையும் காட்டுவதாகும். இரண்டாவது வரைபடம் பாகனேரி நாட்டினையும் அதனையடுத்துள்ள பூக்குழி நாடு, குன்னங் கோட்டை நாடு, பட்டமங்கல நாடு, மல்லாக் கோட்டை நாடு, ஆரூர் வட்டகை நாடு, மங்கல நாடு ஆகிய நாடுகளையும் காட்டுகிறது. அதற்கடுத்துள்ள வரைபடத்தில் பாகனேரி நாட்டில் அடங்கியுள்ள 23 கிராமங்களும் சுட்டப் பெற்றுள்ளன. அந்த கிராமங்கள் 23 வருமாறு :

1. நகரம்பட்டி, 2. காடனேரி, 3. மாங்காட்டுப்பட்டி, 4. பாகனேரி, 5. நெற்புகப்பட்டி, 6. புலவன் பட்டி, 7. கற்றப்பட்டு, 8. வடக்கு காடனேரி, 9. அம்மன் பட்டி, 10. விழனேரி, 11. காளையார் மங்கலம், 12. கருங்காலக்குடி, 13. கௌரிப் பட்டி, 14. பனங்குடி, 15. கோவினிப்பட்டி, 16. கீழக் கோட்டை, 17. கீரனூர், 18. முத்தூர், 19. பையூர், 20. விராணியூர், 21. அல்லூர், 22. சித்தத்தூர் 23. பெரிய கண்ணனூர்.

இரண்டாவது படத்தில் பாகனேரி நாட்டு எல்லைக்குள் 'அ' என்றும் 'ஆ' என்றும் குறிக்கப் பெற்றுள்ள இரண்டு பகுதிகளைக் காணலாம். ஆய்வேட்டாசிரியர் 'அ' பகுதி நாட்டரசன் கோட்டையினையும் அதனைச் சேர்ந்த 8 ஊர்களையும் குறிக்கும் என்றும், அவை பாகனேரி நாட்டிற்குட்படாத தென்றும் 'ஆ' பகுதி கொட்டாமடப்பள்ளி என்ற கிராமமென்றும் அதுவும் பாகனேரி நாட்டிற்கு உட்பட்டதில்லை என்றும் அது காளையார் கோயில் தேவஸ்தானத்தைச் சேர்ந்ததென்றும் சொல்கிறார். நாட்டரசன் கோட்டையினை அடுத்து உள்ள

பாகனேரி நாட்டு ௨௩ கிராமங்கள்



எண்களால் குறிக்கப்படும்
ஊர்களின் பெயர்கள்
ஆய்வேட்டில் 31-ஆம் பக்கத்தில்
உள்ளன.

படம்—3

1) வாய்க்காட்டுப்பட்டி, 2) கருதுப்பட்டி, 3) பொன்னாம்பட்டி, 4) வஸ்தா பட்டி, 5) இலுப்பைக்குடி, 6) அரசணிப்பட்டி, 7) புதுக்கோட்டை, 8) சூரக்குளம், ஆகிய ஊர்களை வரையறுத்து இவ்வூர்களைச் சுற்றி எல்லைக் கற்களாக சூல அடையாளமிட்ட கற்கள் உள்ளன என்கின்றார்.

இரண்டாவது படத்தில் பாகனேரி நாட்டைச் சுற்றியுள்ள நாடுகள் காட்டப்பெற்றுள்ளன. அவைகளில் எதுவும் வடகலை வேள்வி நாடு என்ற பெயர் பெறவில்லை. நாட்டரசன் கோட்டையும் அதனைச் சேர்ந்த எட்டு ஊர்களும் பாகனேரி நாட்டிற்கு சேரவில்லை.

அங்ஙனமாயின் முத்துக்குட்டிப்புலவர் குறிப்பிடும் வடகலை வேள்விநாடு எது என்ற கேள்வி எழுகின்றது. ஒருவேளை நாட்டரசன்கோட்டையும் அதனைச் சேர்ந்த 8 ஊர்களும் வடகலை வேள்விநாடு என்றிருக்கலாமோ என்ற ஐயம் எழுவது இயல்பு.

சோழர்களும் பாண்டியர்களும் பேரரசர்களாக வாழ்ந்த காலத்தில் ஆட்சியினைத் திறம்பட நடத்துதற்காகத் தங்கள் ஆளுகைக்குட்பட்ட பகுதியினை "வளநாடு" என்றும் "நாடு" என்றும் பிரித்துக்கொண்டார்கள். இப்பொழுது இந்திய நாடு பல மாநிலங்களாயும் ஒவ்வொரு மாநிலமும் மாவட்டங்களாயும் ஒவ்வொரு மாவட்டமும் (ஜில்லா) பல வட்டங்களாயும் (தாலுகா) பிரிக்கப் பெற்றுள்ளன. இப்பிரிவுகள் நிர்வாகத்திற்கு எளிதாக இருக்கும். முன்பு இப்படி பிரிக்கப்பட்ட பிரிவுகள்தான் 'வளநாடு' என்றும் 'நாடு' என்றும் உள்ள கீழ்க்கண்ட தொடர்கள் இதனை விளக்கி வலியுறுத்தும்.

1) கேரள சிங்க வளநாட்டில் பிரம்பூர் நாட்டில் மாற்றூர்

2) கேரள சிங்க வளநாட்டில் பிரம்பூர் நாட்டில் இலுப்பைக்குடியான புகழிடங் கொடுத்த பட்டினம்

3) கேரள சிங்க வளநாட்டில் பாளையூர் நாட்டில் வேலங்குடியான தேசிக நாராயணபுரம்

4) கல்வாச நாட்டில் இளையாற்றங்குடியான குலசேகரபுரம் மேலே கண்டபடி பாண்டிய, சோழநாடுகள் பல நாடுகளாக ஆட்சி நிர்வாகத்திற்காகப் பிரிக்கப் பெற்றிருந்தன. இந்தப் பிரிவாகிய நாடு, 'நாடு' என்றும் 'கூற்றம்' என்றும் 'இருக்கை' என்றும் 'மூட்டம்' என்றும் அழைக்கப் பெற்றன. இப் பெயர்களை கனாப்பேர்க்கூற்றம், இரணியமுட்டம், இடைக்கழி நாடு என்ற பெயர்களிற் காணலாம். பாண்டிய நாட்டில் நிர்வாகத்திற்காகப் பிரிக்கப்பெற்ற பிரிவுகள்தான் 'வடகளவழி நாடு' தென்களவழிநாடு என்பவை. (வடஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டம் போன்று) இந்தப் பிரிவாகிய 'நாடு' என்பதற்கும் பாகனேரி நாடு, மல்லாக் கோட்டை நாடு, பட்டமங்கலம் நாடு என்பவைகளில் உள்ள 'நாடு' என்பதற்கும் பெயரொற்றுமையினைத் தவிர வேறு எவ்விதத் தொடர்பும் இல்லை. பாகனேரி நாடு, மல்லாக் கோட்டை நாடு, என்பவை கள்ளர் சமுதாயத்தினர் தங்களுடைய சமூகப் பழக்கவழக்கங்களுக்கும் சமுதாய அமைப்பிற்கும் பிரித்து வகுத்துக் கொண்டவையாகும். 'வடகள வழிநாடு 'தென்கள வழிநாடு' என்பவை அரசர்கள் நிர்வாகத்திற்காகத் தங்களின் ஆட்சிக்குட்பட்ட நிலப்பகுதியினைப் பிரித்துக்கொண்ட பிரிவுகளாகும். வடகளவழிநாடு தென்களவழிநாடு என்பதனைப்பற்றி விரிவாகக் கல்வெட்டாராய்ச்சித்துறையிற் பணியாற்றும் அறிஞர் திரு. வேதாசலம் அவர்கள் தனிக்கட்டுரையாக எழுதியுள்ளார்கள். 'வடகளவழிநாடு' என்பது வடகலை வேள்விநாடு என்று மருவி வந்துள்ளது. பாகனேரி நாடு, பட்டமங்கலம் நாடு என்பவைபோன்று வடகலை வேள்வி நாடு என்பதும் ஒரு நாடு. அதனைச் சேர்ந்தது நாட்டரசன்கோட்டை என்றால் நாட்டரசன்கோட்டை அடங்கியதாகச் சொல்லப் பெறுகின்ற வடகலை வேள்வி நாட்டுக்கு நாட்டம்பலம் இருக்க வேண்டும். அப்படி எதுவும் இல்லை. அதனால் வடகலை வேள்வி நாடு என்பது வடகளவழிநாடே. அது அரசியல் நிர்வாகத்திற்காகப் பிரிக்கப்பட்ட நாடேயாகும்.

உ சிவமயம்

"திருமகள் திருநோக்கு வேட்டல்"

கவிஞர். சிவல்புரி சிங்காரம்

ஆதிலட்சுமி

எட்டுவகை லெட்சுமியால் ஏராளமான செல்வம்
கொட்டும்வகை நானறிந்தேன் கோலமயி லானவளே!
வெற்றியுடன் நான்வாழ வேணும் ஆதிலட்சுமியே!
வட்டமலர் மீதிருந்து வருவாய் இதுசமயம்!

சந்தானலட்சுமி

சிந்தனைக்குச் செவிசாய்த்து சீக்கிரம்என் னில்லம்வந்து
உந்தனருள் தந்திருந்தால் உலகமெனைப் பாராட்டும்!
வந்தமர்ந்து உறவாடி வரங்கள்பல தருவதற்கே
சந்தான லட்சுமியே தான் வருவாய் இதுசமயம்!

கஜலட்சுமி

யானையிரு புறமும்நிற்கும் ஆரணங்கே உனைத்தொழுதால்
காணுமொரு போகமெலாம் காசினியில் கிடைக்குமென்பார்!
தேனிருக்கும் கவியுரைத்தேன் தேர்ந்தகஜ லட்சுமியே!
வானிருக்கும் நிலவாகி வருவாய் இதுசமயம்!

தனலட்சுமி

அன்றாட வாழ்க்கையினில் அனுபவிக்கும் துன்பமெல்லாம்
உன்றனருள் பெற்றுவிட்டால் ஓடுவதும் உண்மையன்றோ!
இன்றோடு துயர்விலக இனியதன லட்சுமியே!
மன்றாடிக் கேட்கின்றேன் வருவாய் இதுசமயம்!

தானியலட்சுமி

எங்கள்பசி தீர்ப்பதற்கு இனியவயல் அத்தனையும்
தங்கநிறக் கதிராகித் தழைத்துச் சிரிப்பவளே!
பங்குபெறும் வாழ்க்கையினைப் பார்தான்ய லட்சுமியே!
மங்கலமாய் என்னில்லம் வருவாய் இதுசமயம்!

விஜயலெட்சுமி

கற்றுநான் புகழடைந்து காசினியில் எந்நாளும்
வெற்றியின்மேல் வெற்றிபெற வேணுமென்று கேட்கின்றேன்
பற்றுவைத்தேன் உன்னிடத்தில் பார்விஜய லட்சுமியே
வற்றாத அருட்கடலே வருவாய் இதுசமயம்!

மகாலட்சுமி

நெஞ்சிற் கவலையெலாம் நிழல்போல் தொடர்ந்ததனால்
தஞ்சமென உனையடைந்தேன் தாமரைமேல் நிற்பவளே
அஞ்சாது வரம்கொடுக்கும் அழகுமகா லட்சுமியே!
வஞ்சமிலா தெனக்கருள வருவாய் இதுசமயம்!

வீரலட்சுமி

ஏழுவித லெட்சுமிகள் என்னில்லம் வந்தாலும்
சூழுகிற பகையொழிக்கும் தூயவளும் நீதானே!
வாழும் வழிகாட்டிடவே வாவீர லட்சுமியே!
மாலையிட்டுப் போற்றுகிறேன் வருவாய் இதுசமயம்!

உ
சிவமயம்
பாலகுருவாயர் துணை

நாட்டரசன்கோட்டை கண்ணுடையநாயகி பதிகம்

'சைவசித்தாந்த சரபம்' சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரவர்கள் — தேவகோட்டை

காப்பு

தென்பனசைக் கண்ணுடைய தேவிபதிகம் இயம்ப
முன்பு துணையாவார் மூவரே—இன்பு
ஆதி, அபிடேகக், கன்பாரும் தேசி என
ஓதும் விநாயகர்தாம் உற்று.

நூல்

திருமகளும் மதிகளும் சேர்ந்து வாழும் சிறப்புடைய தென்பாண்டிச் செல்வ நாட்டில்
உரு மருவுந் தனவனிகர் வாழ்வி னுலே உயர்வடையும் ஒருதல மிவ்வுலக மெல்லாம்
புருமருவு நாட்டரசன்கோட்டை யென்று குலவியிசைத் தேத்துபதி குளிரும் ஞானக்
கருமருவுந் தென்பனசை மேவி வாழும் கண்ணுடைய நாயகியே காத்தருள் வாயே! 1

மலையரசன் மகளாகி வந்தநீ பின் வழுதிபெறத் தடாதகையாய் மகிழ்ந்து வந்து
நிலையுடைய தென்னவர்நாட் டாட்சி கொண்டு நின்கொழுநற் கதைவழங்கி நேசஞ்
செய்வார்க்குக்
குலைவுவராப் பெருஞ்செல்வம் நோயில் யாக்கை உருவளங்கள் பலவழங்கி உயர்ந்த ஞானக்
கலைவளரும் தென்பனசை மேவி வாழும் கண்ணுடைய நாயகியே காத்தருள் வாயே 2

பரசிவத்தை அகலாமல் ஒன்றி நிற்கும் பராசக்தி யாமருளே பரவும் ஆதி
விரவுசக்தி யாய்இச்சை ஞானம் மேன்மை விளங்குகிரி யாசக்தி ஆகிப் பின்னர்
தரமிகுந்த மனோன்மணியாய்ச் சருவ பூத தமனியாய்ப் பலப்பிரம தனியாய் ஈகைக்
கரமருவுந் தென்பனசை மேவி வாழும் கண்ணுடைய நாயகியே காத்தருள் வாயே 3

சீர்ப்பலவி கரணியாய் செல்வம் நல்கும் செயற்கலவி கரணியாய்க் காளி ஆகி
ஆர்ப்புடைய ரௌத்ரியாய் சேட்டை ஆகி அணிவாமை ஆகின்ற அம்மை ஆகி
பார்ப்பணைத்து அன்புடனே வளர்க்கும் தாய்ப்புள்போலப் பரிவுடனே எமைவளர்க்கும்
பரிசு கண்டோம்
கார்பொருவும் தென்பனசை மேவி வாழும் கண்ணுடைய நாயகியே காத்தருள் வாயே! 4

ஆயிரமா மணிமகுட அரங்கி லாடும் ஆயிழையும் செங்கமலத் தமரும் மாதும்
தூயமனைக் கிழவனுரம் துடையை நீங்கி துங்கமிகும் உன் பணியே தொடர்ந்து செய்ய
ஆய்வமராவதியை தேவர்கோவை அகன்று வந்து சசிசெய் பணிக்கு அளவும் உண்டோ!
காய் பொதும்பர் தென்பனசை மேவி வாழும் கண்ணுடைய நாயகியே காத்தருள் வாயே 5

கோடியினில் மேற்பட்டு விரியும் அண்டக் கூட்டமெலாம் ஈன்றளித்த தாய்நீ யேனும்
நாடியுணர் கின்றஉன்னை ஞானம் பெற்றோர் நாகிழமைக் கன்னியென நவில்வார் உன்னை
கூடிமகிழ் பரம்பொருளை பிரமசாரி கோமானென்றே மறைகள் கூறும் கூததற்கு
ஆடிவரும் தென்பனசை மேவி வாழும் கண்ணுடைய நாயகியே காத்தருள் வாயே 6

நரிபரி யாக்கிய பரமன் நயந்து வாழும் நற்கடம்ப வனம் தொழுது வெள்ளை யானை
அரிபிரமன் அறியாதான் கானப்பேரை அன்புடனே பூசிக்க அணைந்த நாளில்
மருவி உயர் கரிகாலன் வணக்கம் கொண்ட மாதேவன் சோழீசன் மலர்த்தாள் போற்றி!
கரகமலம் துதிப்பார் தென்பனசை மேவும் கண்ணுடைய நாயகியே காத்தருள் வாயே! 7

வண்டமிழ்த் தாய்க்கோரணியாய் மருவப் பாரில் மறம் புரிந்தார்க்கு அறம்புரியும் மறத்தைக்கூறி
வண்டறையும் கொன்றைமுடி மங்கை பங்கன் மலரடிப் பூசனைமறவா மன்னர் மன்னுய்!
எண்டிசையும் களிகூற புவி புரந்த இராமபிரான் கதை சொல்லும் இனிய கம்பர்
கண்டகலா தென்பனசை மேவி வாழும் கண்ணுடைய நாயகியே காத்தருள் வாயே 8

பூம்புகார்ப் பதிவாழ்ந்த பொற்பின் மிக்கார் பொன்மகுடம் பாண்டியற்கும் புனைந்த செல்வர்
தேம்பி வருவோர்க் கெல்லாம் அள்ளியள்ளி செம்பொன்னை வளங்குகின்ற சீர்த்தியாளர்
பாம்பணியும் சிவனையலால் மற்றோர் தெய்வம் பணியாதார் தவளமலர் பயிலும் மார்பர்
காம்பீரத் தென்பனசை மேவி வாழும் கண்ணுடைய நாயகியே காத்தருள் வாயே 9

தங்கத்தாற் கலசங்கள் சமைந்த மாடம் தனிச்சிங்கக் கொடியுயர்த்திச் சார்ந்தோர்க் கின்பம்
பொங்கத்தான் அமுதருந்தி தரும மென்றும் புரிகின்ற தனவணிகர் போற்றிக் கண்ட
துங்கப்பொற் கோவிலில்மகிழ்ந்து வாழ்ந்து துணைமலர்த் தாள்தொழுவார்க்குச் சுகத்தை நல்கும்
கங்கைப் பெண் தென்பனசை மேவி வாழும் கண்ணுடைய நாயகியே காத்தருள் வாயே 10

வாழ்த்து

தென்பனசைக் கண்ணுடைய தேவி திருவடிக்கண்
அன்புடையார் இந்த அவனிதலத் — தின்பமெலாம்
கொண்டபெரு வாழ்வில் குலவி குதூகலித்து
மண்டு நலம் சேர்வார் மகிழ்ந்து.

குலம் காக்கும் நாயகி

அரு. மு. கண. முத்துராமன்
நாட்டரசன்கோட்டை

கண்ணுடைய நாயகியே கருணை உள்ள எம்தாயே
எண்ணமெல்லாம் ஈடேற இருப்பாய் துணைநீயே
குலம் காக்கும் நாயகியே கும்பிடுவோம் உனை நாங்கள்
குறையொன்றும் வாராமல் கொண்டருள்வாய் உத்தமியே
தேவி உனைக்கண்டு தெவிட்டாத இன்பங் கொண்டோம்
சோதனையை விட்டு என்றன் மனவேதனையைப் போக்கிடுவாய்
எல்லோரும் இன்புற்றிருந்திடவே என்னாளும்
எழில் அரசி எம்தாயே இருப்பாய் துணை நீயே.
அகிலமெல்லாம் கொண்டாடும் ஆயிரம் கண்ணுடையாய்
தவறுகள் செய்பவரைத்தண்டித்துத் திருத்திடுவாய்
நம்பி யுனைச் சரண் அடைந்தால் நாளும் காத்திடுவாய்
கருணைமழையாலே காத்திடுவாய் அனைவரையும்
நகரமெலாம் செழித்து நாடு விளைந்திடவே
மக்கள் எல்லாம் கொண்டாட மழையினை நீ பெய்விப்பாய்

உ

சிவமயம்

"கண்டதும் கேட்டதும்"



தொகுப்பு : சிவத்திரு. கு. சொக்கலிங்கம் என்ற கருப்பையா, நாட்டரசன்கோட்டை.

அருள்மிகு கண்ணுடைய நாயகி அம்மன் ஆலய வைகாசி விசாகத் திருவிழா

காலை உலா அலங்காரம் 1. காப்புக்கட்டு; 2. ராஜாங்க அலங்காரம்; 3. இலக்குமி; 4. காளிங்கநர்த்தனம்; 5. அம்பாள் தண்ணீர் எடுக்க செல்தல் 6. ஞானப்பால் கொடுத்தல் (1 முதல் 6 வரை கேடகத்தில் அம்மன் புறப்பாடு) 7. பல்லக்கில் அனந்தசயனம் 8. களியாட்டக் கண்ணுத்தாள் வெள்ளிரதத்தில் வேட்டைதர்பார் (மாலையில்) 9. திருத்தேரில் நின்ற திருக்கோல உலா.

இரவு மண்டகப்படி அலங்காரம் : 1. கேடகம்—சர்வாபாரணம்; 2. சிம்மம்—மகிஷாசுரமர்த்தனி 3. காமதேனு — மீனாக்ஷி 4. யானை — வேட்டைதர்பார் 5. பூதகி — அசுரசம்ஹாரம்; 6. ரிஷபம்—தபசு. 7. அன்னம் — சரஸ்வதி 8. குதிரை — வேட்டைதர்பார். 9. புஷ்பபல்லக்கு — மீனாக்ஷி. 10. குதிரை — வேட்டைதர்பார்.

திருவிழாவிற் சிறப்பு :- 7ம் திருநாள் இரவு அம்மனுக்கு நகை சாத்தி மண்டகப்படி நகரத்தார் அலங்காரமண்டபத்திற்கு தூக்கி வருவர். அம்பாள் திருவீதி உலா வந்ததும் அவர்களே திரும்ப கோவிலுக்கு தூக்கி செல்வார்கள்.

8ம் திருநாள் காலையில் களியாட்டக் கண்ணுத்தாளை அலங்கார மண்டபத்திற்கு நகரத்தார்களே தூக்கி வந்து ஆண்டிற்கு ஒருமுறை நடைபெறும் பல விதமான அபிஷேக ஆராதனைகளை மிகச் சிறப்பாகச் செய்து எல்லாவிதமான நகைகளையும் அணிவித்து நகரத்தார்களுக்கே உரிய கழுத்துருகட்டி மாலையில் அவர்களே அம்பாளைத் தூக்கி வெள்ளி ரதத்தில் ஏற்றுவர். அம்பாள் திருவீதி உலா முடிந்ததும் திரும்பவும் நகரத்தார்களே அம்பாளை வெள்ளி ரதத்திலிருந்து இறக்கி 'சோபனமாக' தூக்கிச் சென்று ஆலயத்தில் சேர்ப்பர்.

9ம் திருநாள் தேருக்கு நகரத்தார்களே அம்மனின் உலாவரும் திருமேனியை தூக்கிச்சென்றும் மாலையில் திரும்ப கோவிலுக்குத் தூக்கிவந்தும் சேர்ப்பார்கள்.

10ம் திருநாள் காலையில் முளைப்பாலிகையை அரைத்து தெப்பக்குளத்தில் அஸ்த்திர தேவருக்கு திருமஞ்சனம் செய்யப்படும். பக்தர்கள் அம்பாளுக்கு பால்குடம், காவடி எடுத்தல், பூக்குழி இறங்குதல் போன்ற பிரார்த்தனைகளைச் செய்வார்கள்.

அன்று இரவு அம்பாள் குதிரைவாகனத்தில் வேட்டைதர்பாராக 'முயற்குத்திற்கு' தீர்த்தார்குளம் செல்லும். அக்குளக்கரையில் 'முயற்குத்து' நடைபெறும்.

மண்டகப்படி அறிவித்தல் :- சுவாமி புறப்படும் சமயம் தீபாராதனைக்கு முன்னர் கொத்துக்காரி எனப்படும். வயிராவி கீழ்க்கண்டவாறு 'ஜால்ரா' தட்டி மூன்று முறை அறிவிப்பார்.

"ஒஹோ ஜெயம்! ....ந் திருவிழா ....னர் மண்டகப்படி. அவர்கள் கொடுக்கிற துப்பட்டி ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், ஒன்று, பத்து, நூறு, ஆயிரம்."

திருநாள்.	மண்டகப்படி உபயதார்	மண்டகப்படி	அரிசி படி
1.	ஸ்தானிகாள்	1	—
2.	திருகப்ப செட்டியார் வகையில் பெரிய கருப்பஞ் செட்டியார்	½	13½
	சூரக்குளம் பரஞ்சோதித் தேவர் வகையரு	½	13½
3.	கணக்கப்பிள்ளை வகையரு	½	13½
	ஐந்து காரணப்பேர் வகையரு	½	13½
4.	சூரக்குளம் நகரத்தார்	1	27
	ராம. ப. வ. முத்தையா செட்டியார்	1	27
5.	உலகப்ப செட்டியார் வகையரு	1	27
	கற்பூரஞ் செட்டியார் வகையரு	¼	6¾
	கொல்லங்குடி அம்பலகாரச் செட்டியார் வகையரு	½	13½
	ஆசாரிகள் (மானிபசிப்பந்திகள்)	½	—
6.	கடைகார கண்ணப்ப செட்டியார் வகையரு	½	13½
	பேய் வெட்டி வகையரு	½	13½
	வலையரசன் வகையரு	½	13½
7.	மீட்டப்ப செட்டியார் வகையரு	1	27
	ஆவிச்சி செட்டியார் வகையரு	1	27
8.	ச. ராம. ~~ராம. சங்கர நாராயணன் செட்டியார்~~ வகையரு	½	13½
	குப. அ. நா. மு. ராம. வகையரு	½	13½
9.	நகரத்தார்	1	—
10.	தேசத்தார்	1	27

ஐயாக்கள் மடம்

ராக்கப்ப ஐயா, ஐயா கருப்பஞ் செட்டியார், கிருஷ்ணய்யா, பெருமாள் கோவில் கண்ணப்ப செட்டியார்; மீட்டப்ப ஐயா; ஆண்டப்ப ஐயா என்ற ஐயாக்கள் அறுவருடன் சில ஐயாக்களும் சேர்ந்து இம் மடத்தை நிறுவினர்கள்.

இம் மடத்தில் கோவிலூர் ஆதீனம்; காளையார் கோவில் ஆதீனம் போன்றவர்கள் வந்து தங்கியிருக்கிறார்கள் ஆலயங்களுக்குச் செல்ல மேற்படி ஆதீனங்களை இம்மடத்தில் வைத்துத்தான் அழைத்துச் செல்வார்கள்.

கிளாமடம் (பாதரக்குடி) ஆதீனமும் மேற்படி ஐயாக்களும் இந்நகர் நகரத்தார் களுக்குப்பாடம் சொல்வார்களாம், கந்தபுராணம்; திருவிளையாடற்புராணம்; இராமாயணம் போன்ற நூல்களும் படிக்கப்படுவதுண்டு நகரக்கூட்டம் கூடும் இடமும் இதுவே தான் நம் மவர்கள் தினமும் சுமார் 40 பேர் கூடி ஆதீனகர்த்தர்கள் ஐயாக்கள் உரையைக் கேட்டு மகிழ்வர் பாதரக்குடி கிளாமடத்தைச் சேர்ந்த ஆதீனகர்த்தரின் பல்லக்கு ஒன்று இம்மடத்தி லிருந்து சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர் திரும்ப அனுப்பப்பட்டதாம்.

துலாவூர் ஓதுவாரைக் கொண்டு சமய குரவர்கள் நால்வருக்கும் சேக்கிழாருக்கும் குருபூசை மிகச்சிறப்பாக நடைபெற்றதாம். சுமார் 300 பேர் வரை கலந்து கொள்வார்களாம்.

இவ்வளவு பெருமை வாய்ந்த மடத்தில் வைத்துத்தான் மாப்பிள்ளை அழைப்பு, பெண் அழைப்பு, பிள்ளை அழைப்பு முதலிய வைபவங்கள் நடைபெறும்.

மடத்தில் சமயகுரவர் படங்கள்; ஐயாக்கள் படங்கள்; ஓலைச் சுவடிகள்; பீரோல்; பாய்; தலையணை; ஆங்குள்ள விநாயகருக்கு பூசைசெய்ய பண்ட பாத்திரங்கள்; பெரிய மணி முதலியன முன்னர் இருந்திருக்க தற்பொழுது விநாயகர் மட்டுமே ஆங்கு உள்ளார்.

ஆண்டுதோறும் செவ்வாய்ப் பொங்கல் விசாரணை பார்க்கும் வகை 20.

1) கண. மெ. வகை. 2) குப. அ. வகை 3) மீட்டப்ப செட்டியார் வகை 4) அரும்பாக் கூரார்வகை 5) சித. கண. வகை. 6) திரு. க. பெரிய கருப்பஞ் செட்டியார் 7) பழநியப்ப செட்டியார் வகை 8) கோளஞ் செட்டியார் வகை. 9) ஆவி. முத்து. க. வகை 10) வெ. க. சு. வகை 11) அடைக்கப் செட்டியார் வகை 12) ஆவி. கண. செ வகை 13) ஆவி. வீர. வி. வகை. 14) கண. உல. வகை 15) ஆண்டப்ப செட்டியார் வகை. 16) முத்து. க. சுப. வகை 17) கடைகாரச் செட்டியார் வகை 18) கண. ராம. நா. ப. ஈச. வகை. 19. ஆவி. சேவு. வகை 20) பட்டணசாமி வகை.

நாட்டரசன்கோட்டை நகரத்தார் புள்ளிகள் :

1)	இளையாத்தங்குடிக் கோயில்	310
2)	மாத்தூர்க் கோயில்	151
3)	பிள்ளையார்பட்டிக் கோயில்	80
4)	சூரைக்குடிக் கோயில்	55
5)	இரணிக் கோயில்	44
6)	வயிரவன் கோயில்	34
	ஆகப்புள்ளிகள்	674





முதல் திருநாள் ஜோல்கணியில் சர்வாபரணம்



இரண்டாம் திருநாள் சிம்மவாகனத்தில் மகிஷாசுரமர்த்தனி

மண்டகப்படி அலங்காரம்



மூன்றாம் திருநாள் காமதேனு வாகனத்தில் மீனாட்சி



நாலாம் திருநாள் யானை வாகனத்தில்வேட்டை தர்பார்.




ஐந்தாம் திருநாள் பூதகி வாகனத்தில் அசுர சம்ஹாரம்



ஆரும் திருநாள் வெள்ளி ரிஷப வாகனத்தில் தபசு




ஏழாம் திருநாள் அன்னவாகனத்தில் சரஸ்வதி



எட்டாம் திருநாள் வெள்ளிக் குதிரையில் வேட்டைத்தர்பார்

மண்டகப்படி அலங்காரம்



9ம் திருநாள் புஷ்பப்பல்லக்கில் மீனாக்ஷி



10ம் திருநாள் வெள்ளிக் குதிரையில் வேட்டைத்தர்பார்

காலைத் திருவீதி உலா அலங்காரம்



இரண்டாம் திருநாள் ராஜாங்க அலங்காரம்



மூன்றாம் திருநாள் இலக்குமி அலங்காரம்

காலைத் திருவீதி உலா அலங்காரம்




நாலாம் திருநாள், காளிங்க நர்த்தனம்




ஐந்தாம் திருநாள் தண்ணீர் வழங்குதல்

காலைத் திருவீதிஉலா அலங்காரம்




ஆரும் திருநாள் ஞானப்பால் கொடுத்தல்



ஏழாம் திருநாள் அனந்த சயனம்

காலைத் திருவீதிஉலா அலங்காரம்






அருள்மிகு களியாட்டக் கண்ணுத்தாள் உலாவரும் திருமேனி ''கழுத்துரு கட்டிய'' அலங்காரமும்,
வையகம் போற்றி வணங்கும் ''வெள்ளி ரத உலா'' வரும் ஏற்றமிகு காட்சியும்.

காலைத் திருவீதிஉலா அலங்காரம்





நின்ற திருக்கோல அலங்காரத்தில் நானிலம் போற்றித் துதிக்கும் தேரோட்டத் திருஉலாக் காட்சி.

திருவிழாவிற் சிறப்புகள்



ஏழாம் திருநாளன்று ''அம்மனுக்கு நகை சாத்தி'' மண்டகப்படி நகரத்தார் தூக்கி வரும் காட்சி,



அருள்மிகு கண்ணுடையநாயகி அம்மனை நகரத்தார் தேருக்கு தூக்கிச் செல்லும் காட்சி.



வெள்ளி ரத உலா வந்த "கழுத்துரு கட்டிய, களியாட்டக் கண்ணுத்தாளை" நகரத்தார் சோபனமாக, கோயிலுக்குத் தூக்கி வரும் காட்சி.



வெள்ளிக் குதிரை வாகனத்தில் முயற்குத்துக்குச் செல்லும் வேட்டை தர்பார் அலங்காரம்.

தொண்ணூற்றுரூரார்

தொகுப்பு : நா. சே. நாராயணன்



மன்னர் பின்னோராகவும், கோயில் சார்ந்த குடிகளாக வும் தொண்ணூற்றாரு ஊர்களில் வாழ்ந்த நகரத்தார் காலமாற்றத்தில் தற்போது எழுபத்தாறு ஊர்களில் மட்டுமே வாழ்கின்ற அவர்களால் வணங்கப்படும் சிவாலயத்தின் தொகுப்பு ஒன்றினை 2-9-1985ல் நடைபெற்ற நாட்டரசன் கோட்டை அருள்தரு சிவகாமிஅம்மன் உடனாய அருள் தரு கரிகால சோழீஸ்வரர் திருக்கோயில் கும்பாபிஷேக மலரில் வெளியிட்டிருந்தோம்.

அத்தொகுப்பில் நெற்குப்பை பொன்னமராவதி இரண்டு ஊர்களின் செய்திகள் இடம்பெறாதது பின்னர் தெரிந்தது. அதனையும் சேர்த்து 'இம்மலரில் வெளியிடுகிறோம்.

இத்தொகுப்பினை ஊன்றிக் கவனித்தால் ஓர் உண்மை புலனுகும். அதாவது நகரத்தார் யாவரும் ஒன்பது கோவில்களைச் சார்ந்தவர்கள். அந்த ஊரிலிருந்து வாழ்வின் விரிவு வேண்டித் தொண்ணூற்றுரு ஊர்களுக்குச் சென்றவர்கள். தாங்கள் சென்று வாழத்தொடங்கிய அந்தந்த ஊர்களில் முன்பு இருந்த கோயில்களாக இருந்தாலும் சரி, புதியதாகக் கட்டிய கோயில்களாக இருந்தாலும் சரி, தங்கள் பிரிவின் கோயிலில் உறையும் இறைவனின் பெயரையோ, அல்லது ஒரே விதமான வேறு ஒரு பெயரினையோ இட்டு அழைத்து வணங்காமல், இறைவனுக்கு 39 பெயர்களையும் இறைவிக்கு 29 பெயர்களையும் இட்டு வணங்கும் பாங்கு, அவர்களிடம் சைவத்தின் தத்துவம் எவ்வளவு வேரூன்றி இருக்கின்றது என்பதனையும், ''சிவமதத்திலேயே இருக்கிறது. அந்நிய மதங்களில் சேரக்கூடாது'' 'என்று ''பூங்கொன்றைக் கல்வெட்டும். துளாவூர்ச் செப்பேடும்'' கூறுவதை இன்றளவும் கைக்கொண்டு வாழுவதையும் காணலாம்.

சைவ சமயமே சமயம் என்று நகரத்தார் பெருமக்கள் வாழும் ஊர்களில் உறையும், இறைவன் — இறைவியின் திருப்பெயர்களைத் திரட்டி ஒரு சேரத் தொகுக்கத் துணைநின்ற திரு. சுப. ராமநாதன் செட்டியார், திரு. சுப. சுப்பிரமணியன் ஆகியோருக்கும், நாங்கள் கேட்டிருந்த விபரங்களைத் தந்துதவி சிவப்பணியில் ஈடுபட்ட, ''ஒரு நாமம் ஓருருவமில் லார்க்கு ஆயிரம் திருநாமம்'' கூற வாய்ப்பளிக்கும் எல்லா ஊர் நகரத்தார்களுக்கும் எந்தை-பிரான் ஸ்ரீகரிகால சோழீஸ்வரர்; எம் அன்னை ஸ்ரீ கண்ணுடைய நாயகி அம்மன் பொற்றாள் வணங்கி நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

	ஊர் பெயர்		சுவாமிபெயர்	அம்மன் பெயர்	கட்டப்பெற்ற ஆண்டு	குடமுழுக்கு நடைபெற்ற ஆண்டு
1	அமராவதி புதூர்	-623 301	வத்தருளீஸ்வரர்	வாழவந்தநாயகி	26—6—1908	1908, 40
2	அரண்மனை சிறுவயல்	-623305	மும்முடீஸ்வரர்	கருணைகடாச்சி	1780	1948 (பிறதெரியவில்லை)
3	அரிமளம்	-622 201	சுந்தரேஸ்வரர்	மீனாட்சி	5—5—1944	5-5-1944 23-5-58 2-2-65
4	அரியக்குடி	-622 202	இரத்தினபுரீஸ்வரர்	சுந்தரபரமேஸ்வரி	1915	1915:74
5	அலவாக்கோட்டை	-623564	சொக்கலிங்க சுந்தரேஸ்வரர்	மீனாட்சி	4—9—1924	4-9-1924, 1989
6	அழகாபுரி (க)		சிவன் கோயில் இல்லை			
7	அழகாபுரி (கொ)	-623 561	சிவன் கோயில் இல்லை			
8	ஆத்தங்குடி	-623 101	சுந்தரேஸ்வரர்	மீனாட்சி	24—4—1928	24-4-1928; விரோதிகிருதுஆனி மீ
9	ஆத்திக்காடு தெற்கூர்	-623 201	சுந்தரேஸ்வரர்	மீனாட்சி	01—2—1911	01-2-1911; 1-11-38; 1-9-82
10	ஆவினிப்பட்டி		சொக்கலிங்கம்	மீனாட்சி	1909	மூன்றுமுறை
11	உ. சிறுவயல்	-623 208	அயிராவதேஸ்வரர்	சௌந்தரநாயகி	1861	7 முறை
12	உலகன்பட்டி	-622 410	உலகநாதர்	உலகநாயகி	1929	3 முறை
13	ஒக்கூர்	-623 557	சிவன் கோயில் இல்லை			
14	கடியாபட்டி		பூமிஸ்வரசுவாமி	பிரம்மவித்யாம்பாள்	1895	1895; 7-12-1926
15	கண்டரமாணிக்கம்	-623 204	கைலாசநாதர்	பெரியநாயகி	1835	6-2-1976
16	கண்டவராயன்பட்டி	-623 203	சுந்தரேஸ்வரர்	மீனாட்சி	1905	1905; 12-7-72
17	கண்டனூர்	-623.104	சுந்தரேஸ்வரர்	மீனாட்சி	1835	1835; 54; 1951; 78
18	கருங்குளம்	-623 204	சொக்கநாதர்	மீனாட்சி	4.7.85	4-7-85

19	கல்லல்	-623 305	சோமசுந்தரேஸ்வரர்	சௌந்தரநாயகி	1800	1860; 1910; 25; 52; 3-7-77
20	கல்லுப்பட்டி	-623 306	கைலாசநாதர்	நித்திய கல்யாணி		
21	காரைக்குடி	-623 001	சுந்தரேஸ்வரர்	மீனாட்சி	21—4—1872	21-5-1912ம் 3வது 28-1-74
22	காளையார்மங்கலம்		ஷை	மீனாட்சி	1905	1974
23	கானாடுகாத்தான்	-623 102	சிவலோகநாதர்	ஒப்பிலாம்பிகை	1906	1906;34
24	கிழச்சிவல்பட்டி	-623 205	சுந்தரேஸ்வரர்	மீனாட்சி	1877	இராஜகோபுரம் கட்டி 20-4-1970
25	குருவிக்கொண்டான் பட்டி	-622 415	சொக்கலிங்கம்	மீனாட்சி	1920	1920; 18-6-70
26	குழிபிறை (கூழிபிறை)	-622 402	சுந்தரேஸ்வரர்	மீனாட்சி	1892	1892; 1905; 76
27	கொத்தமங்கலம்	-623 105	சூதவனேஸ்வரர்	சௌந்தரநாயகி	29—9—1909	29-9-1909; 26; 49; 7-6-79
28	கொப்பனாபட்டி	-622 401	விசுவேஸ்வரர்	விசாலாட்சி	1934	1934; 55; 22-9-85
29	கோட்டையூர்	-623 106	சுந்தரேஸ்வரர்	மீனாட்சி	1870	1870; 1940; 57; 62; 80
30	கோனாபட்டு	-622 503	ஷை	மீனாட்சி	1885	1885
31	சக்கந்தி		ஷை	மீனாட்சி	1936	1936; விசுவாவசு
32	சண்முகநாதபுரம் (ஆருவயல்)	-623 314	ஷை	மீனாட்சி	1805	மூன்றும்முறை ராக்ஷஸ பைங்குனி 20
33	சிராவயல்	-623 214	தியாகராஜமூர்த்தி	திரிலோகநாயகி	1912	1912; 27; 60; 79
34	சிறுகூடல்பட்டி		சுந்தரேஸ்வரர்	மீனாட்சி	1880	1945, கீலக, பிங்கள, ருத்ரோத்காரி
35	செம்பனூர்	-623 313	கண்டீஸ்வரர்	நித்யகல்யாணி	1905	1905; 58
36	செவ்வூர்	-622-417	சொக்கநாதர்	மீனாட்சி	21—4—1932	21-4-1932; 31-5-64; 11-11-84
37	சொக்கநாதபும்		திருக்கண்ணன்குடி நாயனார்	சிறுதேன்மொழி அம்பாள்	சாதாரண	சாதாரண 40 ஆண்டுளுக்குமுன்பு 2-2-1980

38	சொக்கலிங்கபுரம் மதகுபட்டி	-623 553	சுந்தரேஸ்வரர்	மீனாட்சி	14—6—1922	14-6-1922; 8-2-35; 2-11-79
39	சொக்கலிங்கம் புதூர்		சுந்தரேஸ்வரர்	மீனாட்சி	1920	1920-75
40	சோழபுரம்		அருள்மொழிநாதர்	அறம்வளர்த்த ஈஸ்வரி	1890	1890; 1936; 89
41	தேவகோட்டை	-623 302	சுந்தரேஸ்வரர்	மீனாட்சி	1818	1818, 71; 1968; 89
42	தேனிப்பட்டி	-622 202	அகத்தீஸ்வரர்	அகிலாண்டேசுவரி	1936	1936, 14-9-69
43	நடராசபுரம்	-623 555	இராமனுஜசுவாமி	பர்வதவர்தினி	1922	1922; 56; ஜுலை 79
44	நஞ்சாந்துபட்டி	-622 404	சிதம்பரேசுவரர்	சிவகாமி	1928	1928; 72
45	நாச்சியாபுரம்	-623 207	உமாமகேஸ்வரர்	உமாமகேஸ்வரி	1910	1910; 45, 89
46	நாட்டரசன்கோட்டை	-623 556	கரிகாலசோழீஸ்வரர்	சிவகாமி	1200	1866, 1926, 61, 2—9—85
47	நெற்குப்பை	-622 405	மனமொத்தகன்டீஸ்வரர்	மரகதவல்லி	1000	
48	நேமுத்துப்பட்டி		சிவன் கோயில் இல்லை			
49	பட்டமங்கலம்	-623 310	சுந்தரேஸ்வரர்	மீனாட்சி	21—5—1930	1930; 42; 54; 66; 21-1-83
50	பலவான்குடி		சுந்தரேஸ்வரர்	மீனாட்சி	1895	5வது கும்பாபிஷேகம் 1-5-1975
51	பள்ளத்தூர்	-623 107	சுந்தரேஸ்வரர்	மினாட்சி	1913	1913; 31; 39; 56; 73
52	பறியாமருதுபட்டி	-622 405	பரியா மருதீஸ்வரர்	பார்வதி		.
53	பனங்குடி	-623 555	சிவன்கோயில் இல்லை	பெரியநாயகி கோவில்	1835	கடைசி கும்பாபிஷேகம் 1-5-1977
54	பனையபட்டி	-622 406	சொக்கலிங்கேஸ்வரர்	மீனாட்சி	3—7—77	3-7-1977
55	பாகநேரி	-623 558	நீலகண்டேசுவரர்	கருணாகடாக்ஷி	1905	1905; 1945
56	பிள்ளையார்பட்டி	-623 207	திருவீசர்	சிவகாமி	800	1889; 1928; 51; 76

57	புதுப்பட்டி	-622 408	பூலோகநாதர்	புவனேஸ்வரி	1951	11-2-1951; 5-2-68; 29-4-82
58	புதுவயல்	-623 108	வீரசேகரர்	உமையாம்பிகை	800	இதுவரை 4 முறை
			கைலாசநாதர்	நித்யகல்யாணி	1300	இதுவரை 3 முறை
59	பூங்குடி	-623 552	சுந்தரேஸ்வரர்	மீனாட்சி	1870	6-5-1870; 5-9-1932; 3-7-77
60	பூலாங்குறிச்சி	-622 413	எரிக்கீஸ்வரர்	பூலோகநாயகி	1835	1835; 1960
61	பொன்னமராவதி	-622 407	சோழீஸ்பரர்	ஆவுடையநாயகி	1000	
62	மகிபாலன்பட்டி		சிவன் கோயில் இல்லை குடகுமலையில் ஸ்ரீ தர்மலிங்கசுவாமிமட்டும் இருக்க, மகிபாலன்பட்டியில் ஸ்ரீ பூங்கொன்றை அம்மன், மங்கள விநாயகர் கோயில் இருக்கிறது.			
63	மானகிரி	-623 307	கண்டீசுவரர்	கண்டவளநாயகி	1700	தெரியவில்லை
64	மிதிலைப்பட்டி	-622 409	ஆத்மநாதசுவாமி	சிவயோகவல்லி	1915	1915; 21-1-40; 17-3-57 12-10-94
65	ஆ. முத்துப்பட்டினம்	-623 101	விசுவநாதர்	விசாலாட்சி	1785	கடைசிகும்பாபிஷேகம் 16-5-1973
			இது லோகநாயகி அம்மன் கோயில் பிரகாரத்தில் இருக்கிறது.			
66	மேலைச்சிவபுரி	-622 403	சொக்கலிங்கேசுவரர்	மீனாட்சி	1922	1922; 42; 62; 84
67	ராங்கியம்	-622 409	பூமிநாதர்	சிவகாமி	1400	1950
68	ராயவரம்	-622 506	சுந்தரேஸ்வரர்	பிரசன்ன மீனாட்சி	6—2—1870	6-2-1870; 1914; 51; 9-2-81
69	லெட்சுமிபுரம் (கொ)		சொக்கலிங்கம்	மீனாட்சி	1902	1902, 36, 57
70	லெட்சுமிபுரம் (நெ)	-622 412	சுந்தரேஸ்வரர்	மீனாட்சி	1910	இரண்டு தடவைகள்
71	வலையபட்டி	-622 411	வலம்புரிநாதசுவாமி	வடுவகிர் விழியாள்	1892	1892; 1941; 78
72	விராமதி	-623 212	சிவன்கோயில் இல்லை	செல்வ விநாயகர்	30—4—1952	30-4-52, 30-11-79
73	விரையாச்சிலை	-622 412	சிவன் கோயில் இல்லை			
74	வெற்றியூர்	-623 305	அருந்துதி ஈசுவரர்	சௌந்தர நாயகி	1865	1865
75	வேகுப்பட்டி		சிவலோகநாதர்	சிவகாமசுந்தரி	1924	1924; 52; 69; 76
76	வேந்தன்பட்டி	-622 419	சொக்கலிங்கேசுவரர்	மீனாட்சி	12-11-1911	12-11-1911, 14-6-22, 25-1-31,
			நந்திக்கு நெய் அபிஷேகம் இங்கு விசேடம்			14-11-48, 12-9-73, 18-5 83

"எழுபத்தாறு ஊரில்" கோயில் கொண்டுள்ள இறைவன் இறைவி திருநாமங்கள்

இறைவன் திருநாமம்-38


1.	வந்தருளீஸ்வரர்	1
2.	மும்முடீஸ்வரர்	1
3.	சுந்தரேஸ்வரர்	23
4.	இரத்தினபுரீஸ்வரர்	1
5.	சொக்கலிங்க சுந்தரேஸ்வரர்	1
6.	சொக்கலிங்கம்	3
7.	அயிராவதேஸ்வரர்	1
8.	உலகநாதர்	1
9.	பூமீஸ்வரசுவாமி	1
10.	கைலாசநாதர்	3
11.	சொக்கநாதர்	2
12.	சோமசுந்தரேஸ்வரர்	1
13.	சிவலோகநாதர்	2
14.	சூதவனேஸ்வரர்	1
15.	விசுவேஸ்வரர்	1
16.	தியாகராஜமூர்த்தி	1
17.	கண்டீசுவரர்	2
18.	திருக்கண்ணன்குடி நாயனார்	1
19.	அருள்மொழிநாதர்	1
20.	அகத்தீஸ்வரர்	1
21.	இராமநாதசுவாமி	1
22.	சிதம்பரேசுவரர்	1
23.	உமாமகேஸ்வரர்	1
24.	கரிகாலசோழீஸ்வரர்	1
25.	மனமொத்தகண்டீஸ்பரர்	1
26.	பரியாமருதீசர்	1
27.	சொக்கலிங்கேசுவரர்	3
28.	நீலகண்டேசுவரர்	1
29.	திருவீசர்	1
30.	பூலோகநாதர்	1
31.	வீரசேகரர்	1
32.	எரிக்கீஸ்வரர்	1
33.	சோழீஸ்பரர்	1
34.	ஆத்மநாதசுவாமி	1
35.	விசுவநாதர்	1
36.	பூமிநாதர்	1
37.	வலம்புரிநாதசுவாமி	1
38.	அருந்துதி ஈஸ்வரர்	1

இறைவி திருநாமம்-29

1.	வாழவந்தநாயகி	1
2.	கருணாகடாச்சி	2
3.	மீனாட்சி	32
4.	சுந்தர பரமேஸ்வரி	1
5.	சௌந்தரநாயகி	3
6.	உலகநாயகி	1
7.	பிரம்மவித்தியாம்பாள்	1
8.	பெரியநாயகி	1
9.	நித்யகல்யாணி	3
10.	ஒப்பிலாம்பிகை	1
11.	விசாலாட்சி	2
12.	திரிலோக நாயகி	1
13.	சிறுதேன்மொழி அம்பாள்	1
14.	அறம் வளர்த்தஈஸ்வரி	1
15.	அகிலாண்டேஸ்வரி	1
16.	பர்வதவர்தினி	1
17.	சிவகாமி	4
18.	உமாமகேஸ்வரி	1
19.	மரகதவல்லி	1
20.	பார்வதி	1
21.	புவனேஸ்வரி	1
22.	உமையாம்பிகை	1
23.	பூலோகநாயகி	1
24.	ஆவுடையநாயகி	1
25.	கண்டவளநாயகி	1
26.	சிவயோகவல்லி	1
27.	வடுவகிர்விழியாள்	1
28.	சௌந்தரநாயகி	1
29.	சிவகாமசுந்தரி	1

சிவன்கோயில் இல்லாத நகரத்தார் ஊர்கள்

1. அழகாபுரி - க
2. அழகாபுரி - கொ
3. ஒக்கூர்
4. நேமுத்துப்பட்டி.
5. பனங்குடி.
6. மகிபாலன்பட்டி.
7. விராமதி
8. விரையாச்சிலை


வருகவென உலகினரை மகிழ்ந்தழைக்கும் பத்திரிகை

(7-9-1938)

(8-9-1938)

(12-9-1938)

அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம்.

12-9-1938 Monday

ASHTA BHANDHANA MAHA KUMBABISHEKAM.

1938-ம் வருட கும்பாபிஷேகப் பத்திரிகை

சிவமயம்
ஸ்ரீ கண்ணுடைய நாயகி அம்மன் துணை.



[illegible]

வருகவென உள்ளினரை மகிழ்ந்தழைக்கும் பத்திரிகை.

திருச்சிற்றம்பலம்.

[illegible]

ஸ்ரீ அபிஷேக விநாயகர் துதி.

[illegible]

ஸ்ரீ கண்ணுடைய நாயகி துதி.

[illegible]

ஸ்ரீ கண்ணுடையம்மன் பதிகம் (கண்ணுடையம்மன் பள்ளு)

[illegible]

ஸ்ரீமத் அகிலாண்ட கோடி பிரம்மாண்டங்களுக்கும் [illegible] காரண [illegible] சிவபெருமான் [illegible] நாட்டரசன்கோட்டை [illegible] "கண்ணுடையவள்" [illegible] சிவகங்கை [illegible] ராஜா அவர்கள் [illegible] சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானத்தினரும் நாட்டரசன்கோட்டை நகரத்தார் அவர்களாலும் திருப்பணி செய்யப் பெற்றதுமான [illegible] ஸ்ரீ கண்ணுடைய நாயகிக்கும், பரிவாரமூர்த்திகளுக்கும் [illegible] நள ஸ்ரீ ஆவணி மீ 21உ சோமவாரம் [illegible] உதயாதி நாழிகை 12 க்கு மேல் 15 நாழிகை அளவில் (6—9—1976 பகல் மணி 10-37க்கு மேல் 12-09 மணி) [illegible] அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் [illegible] கும்பாபிஷேக தெரிசனம் [illegible] பிரார்த்திக்கின்றனம்.

கும்பாபிஷேக பூர்வாங்க கிரியை விவரணம்:—

நள ஸ்ரீ ஆவணி மீ 18உ (3—9—1976) வெள்ளிக்கிழமை உதயாதி நாழிகை 4 க்குமேல் 5½ நாழிகை அளவில் கன்னியா லக்கின சுப முகூர்த்தத்தில் அநுக்ஞை, விக்னேஸ்வர பூஜை, தனபூஜை, வாஸ்து சாந்தி, மிருத்சங்கிரஹணம், அங்குரார்ப்பணம்.

19உ (4—9—1976) சனிக்கிழமை உத்திராட நக்ஷத்திரம் கூடிய சுபயோக சுபதினத்தில் உதயாதி நாழிகை 30 க்கு மேல் 31½ அளவில் (மாலை 6 மணிக்குமேல் 7 மணி) கடஸ்தாபனம் யாகபூஜை ஆரம்பம். (இந்நாள் மாலையும் ஞாயிற்றுக்கிழமை காலை மாலையும் திங்கட்கிழமை காலையும் யாகசாலை பூஜைகளும் [illegible] பாராயணங்களும் நிகழும்)

21உ (6—9—1976) திங்கட்கிழமை உதயாதி நாழிகை 12 க்கு மேல் 15 நாழிகை அளவில் (காலை மணி 10-37க்கு மேல் 12-09 மணிக்கு) அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம்.

அன்றிரவு ஸ்ரீ கண்ணுடைய நாயகி அம்மன் வெள்ளி ரதத்தில் திருவீதி பவனி எழுந்தருளும் திருக்கோலக்காட்சி.

6—9—1976 Monday, Ashta Bhandhana Maha Kumbabishekam.

நள ஸ்ரீ
ஆவணி மீ 7உ
23—8—1976

[illegible]

சிவகங்கை ராஜா & தேவஸ்தானம்.
நாட்டரசன்கோட்டை நகரத்தார்,
(திருப்பணியாளர்.)

1976-ம் வருட கும்பாபிஷேகப் பத்திரிகை

நிகழ்ச்சி விபரம்

வருஷம் மாதம் தேதி ஆங்கில ஆம் கிழமை	நேரம்	நிகழ்ச்சி
சுக்ல-சித்திரை 12 25—4—89 செவ்வாய்	மாலை 5-15 மணி அளவில்	அனுக்ஞை தனபூசை
சுக்ல-சித்திரை 13 26—4—89 புதன்	காலை 9 மணி அளவில்	பிரசன்ன கணபதி பூசை, கணபதி ஹோமம்
	மாலை 4 மணி அளவில்	வாஸ்து சாந்தி
சுக்ல-சித்திரை 14 27—4—89 வியாழன்	காலை 9 மணிக்கு	நவக்கிரக ஹோமம்
	மாலை 4 மணிக்கு	மிருத்சங்கிரஹணம், அங்குரார்ப்பணம் ஆச்சார்ய ரக்ஷா பந்தனம்
சுக்ல-சித்திரை 15 28—4—89 வெள்ளி	அதிகாலை 4 மணிக்கு	பிரசன்னாபிஷேகம்
	காலை 4-15 முதல்5மணி வரை	கலாகர்ஷணம்
	காலை 6 மணிக்கு	யாகசாலைப் பிரவேசம்
	மாலை 5 மணிக்கு	முதற்கால யாக பூசை
	இரவு 9 மணிக்கு	பூர்ணாகுதி
சுக்ல-சித்திரை 16 29—4—89 சனி	காலை 11-30 மணிக்கு	பூர்ணாகுதி
	மாலை இரவு 9 மணிக்கு	பூர்ணாகுதி
சுக்ல-சித்திரை 17 30—4—89 ஞாயிறு	காலை 12 மணிக்கு	பூர்ணாகுதி
	இரவு 7 மணிக்கு	லெட்சுமி பூசை
	இரவு 10 மணிக்கு	பிம்பசுத்தி ரக்ஷாபந்தனம்
	இரவு 10-30 மணிக்கு	பூர்ணாகுதி
சுக்ல-சித்திரை 18 1—5—89 திங்கள்	காலை 5 மணிக்கு	யாக பூசை
	காலை 7-30 மணிக்கு	மகா பூர்ணாகுதி தீபாராதனை
	காலை 9 மணிக்கு	கடம் புறப்படுதல்
	காலை 9-30 மணிக்கு	திருக்குட நீராட்டு விழா
	காலை 10 மணிக்கு	மூலஸ்தானம் மகா கும்பாபிஷேகம்
	மாலை 4 மணிக்கு	மகாபிஷேகம்
	இரவு 10 மணிக்கு	அருள்தரு கண்ணுடைய நாயகி அம்மன் வெள்ளி ரதத்தில் திருவீதி உலா வருதல்

நாதசுர இன்னிசையும், தேவார இன்னிசையும், இசையரங்குகளும் சமயச் சொற்பொழிவுகளும் கிராமியக்கலை நிகழ்ச்சிகளும் வாண வேடிக்கைகளும் நடைபெறும்.

உ
சிவமயம்
அருள்தரு கண்ணுடையநாயகி அம்மன் துணை







சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் இளைய பரம்பரை அறங்காவலர் காப்பாளர்
மேதகு ராஜகுமாரி ராஜலெட்சுமி ரகுராஜ் அவர்கள் ஆளுகைக்கு உட்பட்ட

நாட்டரசன்கோட்டை

அருள்தரு கண்ணுடையநாயகி அம்மன் திருக்கோயில்

திருக்குட நன்னீராட்டு விழா

அழைப்பிதழ்

"திருவளஞ்சேர் நாட்டரசன் கோட்டைநகர் திகழவரும்
அருள்வடிவாய் அமைந்திலங்கும் அன்னைஎழில் கண்ணுடையாள்
தெருள்வளரும் திருக்குட நீராட்டு நலம் தெரிசிக்க
வருகவென உலகினரை மகிழ்ந்தழைக்கும் அழைப்பிதழ்"

அருள்தரு அபிஷேக விநாயகர் வணக்கம்

திருவளரத் தெருள்வளரச் சிவம் வளரத் தவம் வளரப்
பொருள்வளரத் தன்னிருதாள் போற்றுமடி யவரெவரும்
பெருகிவளர் நாட்டரசன் கோட்டையினிற் பெரிதுவக்கும்
அருள்வளரும் அபிஷேக விநாயகனை யடிபணிவாம்.

அருள்தரு கண்ணுடைய நாயகி அம்மன் வணக்கம்

திங்களணி திருமௌலி யீசன் பங்கில் தினமுறைந்து காத்தலினுந் தெவிட்டாவுள்ளப்
பொங்கு மகிழ்வால் எழில்சேர் கன்னியாகிப் புவிபுரக்குங் கருணைமலர்ந் தொளிரும் பொன்னைத்
தங்கு சிவகங்கை மன்னன் துரைச்சிங்கேந்ரன் தனவணிக ரிவர்கள் சந்ததமும் வாழ
மங்களஞ்சேர் நாட்டரசன்கோட்டை மேவி வரமருள் கண்ணுடையாளை வணங்கி வாழ்வாம்.

அருள்தரு கண்ணுடையவள் பெருமை

கண்ணுடைய தாய்மகிமை காசினியோர் இவ்வளவென்
றெண்ணுடைய தாய் மதிக்க ஏலாது — மண்ணுடைய
புல்முளைக்க எத்தனை நாள் போகுமுடனே யவித்த
நெல்முளைத்தல் சான்று நிசம். (கண்ணுடையம்மன் பள்ளு)

எந்நாட்டவர்க்கும் இறைவனாய்த் தென்னாடுடைய அருள்தரு சொக்கநாதப் பெருமான் அரிய திருவிளையாடல்கள் அறுபத்துநான்கினை ஆற்றிய சிறப்பும் மண்ணுலகில் மன்னவன் மகளாய் வந்த அங்கயற்கண்ணியாம் அன்னை மீனாட்சி அருளாட்சிசெய்த சிறப்பும் உடைய மதுரையம்பதியினை மேற்கிலும், தூய்மறை பாடும் வாயால் "சொற்றமிழ் பாடுக" என்று சொல்லப்பெற்ற பெருமையுடையவராம் சுந்தரமூர்த்தி நாயனார்க்குக் காளையின் கோலம் காட்டிய அருள்தரு காளையீசுவரர் அருள்தரு சொர்ணவல்லித் தாயுடன் அமர்ந்துள்ள திருக்கானப்பேரென்னும் காளையார்கோயில் தலத்தினைக் கிழக்கிலும் நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி நற்கனகக் கிழி தருமிக்கருளிய எம்பெருமான் வீற்றிருக்கும் திருப்புத்தூரினை வடக்கிலும், வேண்டுவார்க்கு வேண்டுவன ஈயும் நாகநாதர் அருளாட்சி செய்யும் நைனார் கோயிலென்னும் தலத்தினைத் தெற்கிலும் கொண்டு நடுநாயகமாக விளங்கும் தென்பனசையாகிய நாட்டரசன்கோட்டை யென்னும் தெய்வத்தன்மை பொருந்திய தலத்தில் உலக அன்னையான அருள்தரு உமாதேவி தேவர்களின் வேண்டுகோளுக்கு அருள் சுரந்து பத்திரகாளி என்னும் திருவுருக்கொண்டு தவவலிமையால் உருமறைந்து நிற்கும் ஆற்றலுடைய சண்டாசுரனை அழிக்க அருந்தவம் புரிந்து, பூணுமெழிற் காளி எதிர் பொருந்தலர் மெய் கண்ணில் காண வரமுற்றமையால் 'கண்ணுடையவள்' என்னும் திருப்பெயர் பூண்டு தன்னைச் சிறப்புச் செய்து வழிபடுபவருக்கு வேண்டியதைத் தந்தருளும் புகழ்பெற்ற வரப் பிரசாத நாயகியாய் சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானத்தினாலும் நாட்டரசன்கோட்டை நகரத்தார் அவர்களாலும் திருப்பணி செய்யப்பெற்றதும் முத்துக்குட்டிப்புலவரால் கண்ணுடை அம்மன் பள்ளில் "பூங்கோயில்" என்று சிறப்பிக்கப் பெற்றதும் ஆன அழகுமிகு ஆலயத்தில் கோயில் கொண்டுள்ள அருள்தரு கண்ணுடைய நாயகி அம்மன், பரிவாரமூர்த்திகள் ஆகிய வற்றின் திருக்கோயில்களை நகரத்தார்கள் புதுப்பித்து, இறைவன் திருவருளை முற்கொண்டு நிகழும் சுக்ல ஆண்டு சித்திரைத் திங்கள் 18ஆம் நாள் (1—5—89) திங்கட்கிழமை ஏகாதசி திதியும் சதய நட்சத்திரமும் கூடிய சுபதினத்தில் மிதுன லக்னமும் ஜெயவேளையும் கூடிய சுப ஜெய முகூர்த்தத்தில் காலை மணி 9-15க்கு மேல் 9-30க்குள் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் செய்வதாகப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பெற்றிருப்பதால், அருட்செல்வர்கள் சுற்றமும் துணையும் சூழ்தர வந்து கும்பாபிஷேக விழாவினைக் கண்டு களித்து நற்பேறு பெற்று வாழுமாறு திருவருள் கூட்டுவிக்க அருள்மிகு கண்ணுடைய நாயகி அம்மன் திருவடிகளை வணங்குகிறோம்.

விபவ வருஷம் பங்குனி மீ 23ம் தேதி 5—4—89.
நாட்டரசன்கோட்டை.

S. ரத்னாகரன் B. A., B. L. தேவஸ்தானம் மேலாளர், சிவகங்கை
S. முத்துச்சாமி தேவஸ்தானக் கண்காணிப்பாளர், சிவகங்கை சரகம்
பெரி. அரு. கண. ராமசாமி செட்டியார் (சத்திரம்) ஹானரரி சூப்பிரண்டெண்ட்,

நாட்டரசன்கோட்டை நகரத்தார்கள்
(திருப்பணிதார்கள்)

உ சிவமயம்

நாட்டரசன்கோட்டை

அருள்மிகு கண்ணுடையநாயகி அம்மன் திருக்குட நன்னீராட்டு விழா

நிகழ்ச்சி நிரல்

சுக்ல ஞூ சித்திரை மீ 16உ 29—4—89 சனிக்கிழமை

காலை 9 மணி : மதகுபட்டி N. மீனாட்சிசுந்தரம் - நாதஸ்வரம்

மாலை 5 மணி : மீனாட்சி கல்யாணம் — சொற்பொழிவு
செல்வன் கோபி கண்ணன்

இரவு 7 மணி : **அன்னையார் அருந்தவம்**
காரைக்கால் கோ. சாரங்கபாணி

சித்திரை மீ 17உ 30 — 4 — 89 ஞாயிற்றுக்கிழமை

காலை 10 மணி : திருமதி சரஸ்வதிராமனுதன்—சொற்பொழிவு

மாலை 6 மணி ;

பொற்புடைத்தெய்வம் - பேராசிரியர் சுப. கதிரேசன்

இரவு 7-30 மணி

நாட்டரசன்கோட்டை கம்பன் கழகத்தினர் நடத்தும்

பட்டி மன்ற நிகழ்ச்சி

சித்திரை மீ 18உ 1—5—89 திங்கள்கிழமை

மாலை 5 மணி

முத்துப்பேட்டை நாதஸ்வர வித்வான்

P. A. சண்முகசுந்தரம் — நாதஸ்வரம்

இரவு 10 மணி


நகரத்தார் இளைஞர்கள் சார்பாக மருதுபாண்டியர் போக்குவரத்து கழக **திரைப்பட இன்னிசை** நிகழ்ச்சி

இரவு . . தஞ்சை இரட்டிப்பாளையம் A. செல்வராஜ் குழுவினரின் கிராமியக் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.


ஒவ்வொரு நாளும் காலை 9 மணிக்கும் மாலை 4 மணிக்கும் தேவார இன்னிசை நிகழ்ச்சி நடைபெறும்.

ஒவ்வொரு நாளும் யாகசாலை காலங்களில் நாட்டரசன்கோட்டை கண்ணுடையநாயகி அம்மன் கோவில் நாதஸ்வர வித்துவான் N. சந்திர சேகரன் நாதஸ்வர நிகழ்ச்சி நடைபெறும்.

1—5—89 இரவு வெள்ளி ரதத்தில் அம்மன் திருவீதி உலா வருதல்.




அருள்மிகு கண்ணுடையநாயகி அம்மன்
கருவறைக் கோபுரம்.




அருள்மிகு கண்ணுடையநாயகி அம்மன் கோயில்
கிழவாசல் கோபுரம்.


கோபுர்ங்கள்




அருள்மிகு அபிஷேக விநாயகர் கோபுரம்



அருள்மிகு சித்தி விநாயகர் கோபுரம்



அருள்மிகு வீரபத்திரர் கோபுரம்




அருள்மிகு பைரவர் கோபுரம்

அன்னையின் அருள்



கண்பார்வை பெற்ற யானையுடன் யானைக்காரரும்
ராம. உ. உ. கருப்பையா செட்டியாரும்

கலை நிகழ்ச்சி



குடமுழுக்கில் கிராமியக்கலை

சேங்கை வெட்டு



மங்கையர்கள் மதுக்குடம் தாங்கிவர, சூழ்ந்துவரும் மக்கள் வெள்ளம்.



"சேங்கை வெட்டி" எடுத்துத்தரும் மண்ணை மங்கை பெற்றுக்கொள்ளும் காட்சி.



கவிச்சக்கரவர்த்தி கம்பர் சமாதி



வரகவி முத்துக்குட்டிப் புலவர் சமாதி




கண்ணுநந்த சுவாமிகள் சமாதி




ஐய்யாக்கருப்பஞ் செட்டியார்

முளைக்கொட்டுத் திருவிழா - மண்டலாபிஷேகம்



“தங்க முளைப்பாலிகையை” தலையில் தாங்கி அம்மன் உலா வருதல்.



11ம் நாள் நடைபெற்ற மண்டலாபிஷேகத்தன்று மரியாதை பெற்று தேவஸ்தானத்தாருடன் நகரத்தார் வலம் வரும் மனங்கவர் காட்சி.

உ சிவமயம்

ஸ்ரீ மதுகண்ணனந்தி துணை

வசனசம்பிரதாயக் கதை

மதுரை ஜில்லா, சிவகங்கை சமஸ்தானம்

தென்பனசை யென்று பேர்விளங்கிய நாட்டரசங் கோட்டை

வைசியதனநகரத்தார் வேண்டுகோளின்படி பதிப்பிக்கப்பட்டது.

இரங்கோன் ஸ்ரீ கணேசர் பிரஸ் இதன் விலை அணா 3

முகவுரை :-

மதுரைஜில்லா சிவகெங்கை சமஸ்தானத்தை 130 வருசத்திற்குமுந்தி இராஜராஜஸ்ரீ இரவிகுல முத்துவடுகனத துரை அவர்கள் குடிகளைக் கண்ணிமைபோல் பாதுகாத்து கொண்டு வரும்நாளில், ஓர்மாசிமாதம் மகாசிவராத்திரி புண்ணிய தினத்தில் துரையவர்கள் தமது சமஸ்தான வித்துவானும் தென்பனசை என்ற நாட்டரசங்கோட்டை வாசியும், தமிழ் சக்கர வர்த்தியென்று பட்டம்பெற்ற முத்துக்குட்டி அய்யா என்னும் கவிராயரை அழைப்பித்து, ''ஐயா இன்று மகாசிவராத்திரி புண்ணியதினமாதலால், இரவுமுழுதும் நித்திரைச் செய்யாத இரண்டுவிழிக்கும் துணையாய் மற்றோர்கண் சிவசாருப்பியம் முளைக்குமென மூத்தோர்மொழி வதால், இப்புண்ணியதினம் இரவுமுழுதும் நாம் உறங்காவண்ணம் அதற்கேற்ப ஓர்கதை சொல்லவேண்டும், அக்கதையோவென்றால் இதுவரையில் கேட்டிராததும், கேள்விக்கு மிக இன்பமாயும் புண்ணியகதையாயும், 56 தேசத்திலிருக்கிற ஊர்கள், மனிதர்கள், விருக்ஷங்கள் கொடிசெடிகள், தானியங்கள், பழக்கத்திலிருக்கும் பதார்த்தங்கள் முதலியவைகளினது பெயர்களை அவ்வப்பெயர்களின் அடிநோக்கின், கதையின்கருத்திற்கிசையுமாறு உபயோகித்து பொழுதுவிடிகிற வரையிலும் தடங்கலின்றிச் சொல்லவும் வேண்டும்'' என்றுகேட்டுக்கொள்ள தமிழ்ச்சக்கரவர்த்தியும் அவ்வாறே சொல்லுகிறேனென்று சிறிதும் தடையின்றி, அரண்மனை அட்டவணைப்பிள்ளைமார்களைத்தாம் சொல்லுவதை எழுதிக்கொள்ளுவதற்கு ஏடும் எழுத்தாணி யுமாய் முன்னே ஏற்படுத்திவிட்டு, அளகாபுரி பட்டணத்தை ஆளும் குபேரனுக்குக்குடிகள் விண்ணப்பம் செய்துகொள்ளுவதுபோல் ஓர்அற்புதமான்கதையை வசனசம்பிரதாயம் எனப் பெயரிட்டு சொல்லிமுடித்தார்.

சாற்றுக்கவிகள் :- மதுரைஜில்லா நந்தனூர் நாகுபாரதியார்களியற்றிய ஆசிரியவிருத்தம்.

சீருலவு பாண்டிவளநாட்டிலுயர் மதுரையாந் திருமாதுதிலகமென்னும்
சிவகங்கையரசுபுரி சசிவர்னராஜதுரை சிந்தைமகிழ் வெய்தமுன்னாள்
தேருலவுபனசையம்பதிமேவுங் கங்கைகுல திலகமுத்துக்குட்டியாகு
செந்தமிழ்க்கவிஞனால் யாவரும் பணிமகா சிவராத்ரி நற்றினத்தில்
பாருலவுதருபறவை பதிகளின்பேர்களும் பண்பாயமைத் துரைத்து
பகர்யாமகான்கினுந் தினையளவுமிடைவிடாப் பரிவுடனிரண்டர்த்தமாம்
தாருலவுவசனசம்பிரதாயக் கதையையித் தரணியிலேயாற்றிராம
சாமிதீக்ஷதர் வயித்தினாதபாரதிகள் தந்தனர்நலச்சமைந்தே.

வையை இராமசாமி அய்யர் இயற்றியது. காப்பு விருத்தம்

நாலூர் மதவைந்நதியான்,
வேலூர் கரவீரத்தான்,
மேலூர் விதுமுடிகொண்டான்,
காலூர் கழல்புகலூரே.

(இதன் பொருள்) நால்ஊர் மத ஐ நதியான் - கீழே வழிந்து ஒடுகின்ற மதஜல மாகிய அழகியநதியையுடைய விநாயகக்கடவுள், வேல்ஊர் கரவீரத்தான்-வேலாயுதம் விளங்குகின்ற கைகளையுடைய சவுரியம் மிகுந்த குமாரக்கடவுள், மேல் ஊர் விது முடிகொண்டான்-மேலேதவழுகின்ற சந்திரனை ஜடையின்கண்ணேதரித்த சிவபெருமான் என்னும் இம்மூவர்களுடைய, கால்ஊர் கழல் புகலூர் ஏ-சரணத்தின் கண்ணே பொருந்துகின்ற வீரகண்டையானது நமக்குச்சரணமடையும் ஊராய் விளங்குகின்றது என்றவாறு.

[இன்னும் சில சாற்றுக்கவிகள் கதையின் முடிவில் உள்ளது]

உ. சிவமயம்
ஸ்ரீ மதுகண்ணனந்தி துணை

வசனசம்பிரதாயக் கதை

ஆசிரியர் : முத்துக்குட்டிப்புலவர்

[இக்கதையினைப் பற்றிய செய்தி இம்மலர் 45, 46, 47ம் பக்கங்களில் உள்ளது]

*

குபேரனிடம் குடிகள் செய்து கொண்ட விண்ணப்பம்

ஸ்ரீமது சகலகுணசம்பன்னரான அகண்டித இலக்ஷிமீ பிரசன்னரான மகாமேரு சமான தீரரான அளகாபுரிப் பட்டணத்துக்கு அதிபதியாகிய மகாராஜமான்னியஸ்ரீ குபேர மகாராஜா அவர்கள் சீர் பாதம் திக்குநோக்கி தண்டம்பண்ணி அடியேங்கள் வரனஞ்சூழ்ந்த வட்டகையில், சமுத்திரஞ் சூழ்ந்த பூமியில், மகாமேருவைச்சுற்றிக் கிடக்கின்ற நவகண்டப் பரப்பில், தெக்ஷிண பாரிசத்தில், பாரத பூமியாகிய நாவலோகம் பெருந்தீவிலிருக்கும் குடிமேரை வெள்ளாண்மைப் பெருஞ்செல்வர் கோவின் கீழ்க்குடியான அனைவோரும் தண்டநிட்டு விண்ணப்பம்.

(வயல்கள்) செய்யப்பசுவாமியவர்கள் திருவுளப்பிரசாத முண்டான படியினாலே அடியேங்களும் சுகமே இருக்கிறோம். சுவாமியவர்கள் பரிநாமத்திலெழுந்தருளியிருக்கிற சேதிக்குத்

திருமுகம்பாலிக்க கட்டளையிட்டருள வேண்டியது. சர்வஜீவதயாபரமூர்த்தியாய் சகலலோகமும் தாமாகநின்று விளங்காநின்ற அகண்டபரிபூரண சச்சிதாநந்த பரப்பிரம்மமான ஆதிபராபர வஸ்துவாகிய ராஜஸ்ரீ (சிவபெருமான்) கர்த்தாக்களானவர்கள் இந்தஜகவிலாசமான திருவிளையாடல் நடத்தும் பொருட்டாய்ச் சித்தத்திலே கொண்டருளினபடிக்கு கர்த்தாக்கள் கட்டளையிட்ட (பொக்கிஷம்) பண்டாரக்காரியத்துக்கு கர்த்தரான வாசல் அதிகாரிகளின் பிரமநயினுர் என்கிறவர், பிறப்பிவித்துவைத்த அடியேங்களை யெல்லாம் மனிதரெனப் பண்ணுவித்து எங்களுக்குத்துணையாய் (எறும்பு முதல் யானை வரைக்கும்புல்முதல் கல்வரைக்கும்) எறும்புக்குடியார் முதல்யானையூரார் வரைக்கும் புல்லங்குடியார் மலையாளத்தார் வரைக்கும் உண்டான குடிகொண்டான் நிரையூர் ஜனங்களை எல்லாம் அந்தந்தமார்க்கமாய் நடந்துக்கொள்ளச்சொல்லியும் கட்டளையிட்டு சட்டப்படுத்தி வைத்தார். அதன்பிறகு அவருடைய தகப்பனுர் (மகாவிஷ்ணு) அச்சுதப்பெருமாளய்யங்காரவர்கள் அடியேங்களையெல்லாம்கிருபைவைத்து இரக்ஷிக்கும்பொருட்டாய் அஷ்டலெக்ஷிமியும் பிரசன்னமாகித் தம்மைப்போலே இலக்ஷிமியோடுங்கூட பூலோக பரிபாலனம் பண்ணுகிற பரராஜ வர்க்கங்களை பூமிபார கர்த்தவியம் பண்ணச்சொல்லியும், அந்த இராஜவர்க்கங்களையே தெய்வமாக வணங்கசொல்லியும் கட்டளையிட்டு, அடியேங்களை கோவின்கீழ் குடியாக இருந்து வியவசாய ரஸவாதவித்தை நடத்தி வைத்து கொண்டு சகல பாக்கியங்களையும் அவரவர் சுவயகுடும்ப சுவயஜனங்கள், பிதிர் தேவதைகள், தெய்வம், அதிதிகள் முதலிய ஐவகைப் பேருடனே மற்றைப்பேரையும் விஜாரித்து நடப்பிவித்துக்கொண்டு துறவரத்திலும் அதிகமான இல்லறத்திலிருந்து குடித்தனம் பண்ணச்சொல்லியும், அப்பால் ஈ-ஸ்ரீகர்த்தாக்கள் காரணமூர்த்தியாய் வருகிற குருமூர்த்தி அய்யரிடத்திலே பக்தி விசுவாசமாக இருந்து அவர் (ஆபத்து வேளை) உத்தவேளைக்கு உதவுகிற ஆஸ்தியென்று ரகசியப் பொருளாய்ச் சொன்ன தீக்ஷிதமய்யரவர்களை மறந்து விடாமல் உள்ளீடாக வைத்துக்கொண்டு (கல்வி) கல்விநாயகம்பிள்ளை மகுத்துவமெல்லாம் விசாரித்து நிர்த்தாரிக்கமானதின் பிறகு பின்னுக்கு (எமன்) நமனப்பன் சேர்வைக்காரன் முன்னிலைக்கு கேள்வியாகி சித்தரபுத்தரபிள்ளை கணக்கிலே பதிவிக்கத்தக்கதாய் கணக்குப் பிள்ளையுடனே சேர்ந்து (பஞ்சபூதம்) ஐவகைப்பிள்ளைமாரையும் பிற்சாக்ஷிபாக வைத்து சுகலபுலனும் விசாரிக்கிற (மனது) மனக்கோலப்பெருமாள் பிள்ளையை திட்டப்படுத்திவைத்து அவருக்கு உபசாந்தமாக (விவேகம்) ஞானசம்பந்தம்பிள்ளையையும் அறிவானந்தபிள்ளையையும்வரப்பண்ணி வைத்து கொடு மூர்பாபநாசம் பிள்ளைபுறத்து புறம்போக்கு (மானியம்) உம்பளத்திலே தள்ளிப்போட்டு, நல்லாங்குடி தாமராய அய்யர் புறத்தை ஆதரித்து வைத்து கொண்டு பொய்யனூரை விட்டுப்போட்டு, மெய்யடிப்பட்டி சத்தியவாசகமய்யரை பிரதானமாக வைத்துக்கொண்டு, தானப்பமுதலியார், தவத்தாரப்பமுதலியார், ஈகரை இரங்கந்த பிள்ளை இந்தப்பெரிய மனிதர்களுக்குள்ளாக இருந்து சுகங்களைப் பெற்றுப்பிழைக்கச் சொல்லியும், அடியேங்கள் பிழைப்புப் பொசிப்புக்கிடமாக மானத்தையும் பூமியையும் காட்டி இதற் கெல்லாம் உறுதியாய் அமராவதித் (மரவர்கள்) தேவர்வரை (மேகம்) மேகனன் சேர்வை காரன் மாதம் மூன்று தரம் வந்து (மழை) வருஷக்கட்டளை கொடுத்து போம்படியாயும் கட்டளையிட்டு அச்சுதப்பெருமாளய்யங்கார் இத்தனை பலப்படுத்தி வைத்ததும் சுபாவமாமே அந்தப்படி மேகனன் சேர்வைகாரன் கொடுத்துவருகிற வருஷக்கட்டளையின் சுபிக்ஷத்தினுலடியேங்களெல்லாம் ஒன்றுலொன்று தாக்ஷியில்லாமல் சகல சம்பத்தோடுங்கூட குபேரதுல்லியத்துக்கொப்பாக சுவாமியவர்கள் பேரைச்சொல்லிக்கொண்டு சுகமாயிருக்கிறது சரியே.

பாண்டியராஜன் செங்கோன்மை திறம்

ஆகையினுலே, முன்னுளில் அக்கினிவமிசத்தில் சேரனென்றும் சூரியவம்சத்தில் சோழ

னென்றும், சந்திரவம்சத்தில் பாண்டியனென்றும் இப்படி முடிபொருத்தராஜாக்கள் மூவரும் மலை நாடு, சோழநாடு, வைகைவளநாடென்று மூன்று வகுப்பாய்க்கரை போட்டுக்கொண்டு இராச்சிய பரிபாலனம் பண்ணிவருகிறநாளிலே அந்த மேகணன் சேர்வைகாரன் இந்த வைகைவள நாட்டுக்கு ஒருதடவைவந்து வருஷக்கட்டளை விசாரியாமலிருந்துவிட்டார். அப்போது உழவு பெருங் குடியானவர்கள் எல்லோரும் முறையிட்டதினலே பாண்டியராஜன் அறிந்து, நாம் ஆறிலொரு கடமைவாங்கி அசையாமணி கட்டியாளுகிற வைகை வளநாட்டுக்கு மேகணன் சேர்வைகாரன் வந்து வருஷக்கட்டளை விசாரியாமலிருக்கிற நிமித்தமென்னவென்று கோபப்பிரியமாகி, அந்தப் பாண்டியராஜன் ராஜ ஸ்ரீ கர்த்தாக்களுக்குப் பெண்கொடுத்த மாமனுரான படியினுலும் பெண் கொடுத்த மருமகனுக்குப் பிரம்படித்தழும்பு கொடுத்த புண்ணியவானுன படியினுலும், மீனு ட்சிவல்லவரான சொக்கலிங்கத்தை மதுராபுரியிலே 64 திருவிளையாடலும் ஆடப்பண்ணி வைத்துக் கண்காக்ஷிபெற்ற நவரெத்ன கிரீடாதிபதியான படியினுலும், மேகணன் பேரில் தாக்கீதுபண்ணி மலைநாட்டிலே ஒதுங்கப்போன விடத்திலே வேவுவைத்து மேகணனைப் பிடித்துவந்து மதுரைக்கோட்டையிலே விலங்கிலடித்துக்கொண்டு (ஜாமீன்) பிணை கேள்க்கு மிடத்தில் இவன் 'அந்தரப்பக்ஷி ஆகாசப்பிரட்டன் இவனுக்கு ஒருவரும் பிணைசொல்லிக் கொள்ளக்கூடாது' என்று சகலரும் சொல்லி விட்டார்கள். பக்ஷமிருக்கிற விடத்திலே இடை யூறுவந்ததானுல் அந்த வேளைக்கு வாக்கு சகாயம் பண்ணுகிறதைப் போத்போல சிலாக்கியம் வேறில்லையென்று நினைவு பண்ணி, மேகணனுக்கு நாம் வேணும், நமக்கு மேகணன் வேணும் ஆதிகாலத்தில் முன்கையைச் சந்தனமுறைத்தவர்கள், முளவாரியன்னம் படைத்தவர்கள், ஆலிமுதுகில் சுடுசோறிட்டவர்கள். அரவின் வாயிற் கைநீட்டினவர்கள், ஆடைகீறி சிலந்தி காட்டினவர்கள், இழிகுலத்தோடுண்டவர்கள், கரும்புதின்னக் கூலிகொடுத்தவர்கள், கொழுமீது கொண்டு குவலயங்காத்த பூமிபாலகர், மேளிகொட்டி விருதுடையோர்கள், இராஜாக்களுக்குப் பொன்முடி தரிக்கில் நெல்முடி கொடுப்பவர்கள், கங்கா குலதிலகரான வம்ச முள்ளவர்கள் குடிமேறைவெள்ளாளர்கள் அனைவரும்கூடிப்பேசிக்கொண்டு முன்னமே பழயநல்லூரிலே நீலிக்காக வழக்குரைத்து வணிகனுக்கு நம்பிக்கை சொன்ன நிமித்தம் பெண்ணுக்கிரங்கும் பெருமை வெள்ளாழர். வணிகன் ஒருபழிக்கு 70வது பழி வந்ததுபோலே வந்தாலும் வரட்டுமென்றும் ''உடுக்கையிழந்தவன் கைபோலே வாங்கே யிடுக்கண்களைவதா நட்பு'' என்று திருவள் ளுவநாயனர் திருவுளம்பற்றி இருப்பதினுலும், நாம் இந்தமேகணனுக்குப் பிணை சொல்லிக் கொள்ள வேணுமென்று தர்மதேவதைக்குப் பொதுவாக தீர்க்காலோசனை பண்ணிக்கொண்டு பாண்டியராஜன் சமுகத்திற்கு வந்து சந்தித்து இனியிந்த மேகணன் சேர்வைகாரன் வருஷக் கட்டளை தவறுமல் கொடுத்து வருவதற்கு நாங்களித்தனை பேரும் பிணையென்று சொல்லிக் கொண்டார்கள். பாண்டியராஜன் சம்மதித்து 'இவர்கள் எச்சோர்வுவரினும் சொரசோர்வு வராத மானமுள்ளவர்கள் என்று அவர்கள் பிணைவசமாக மேகணனை விலங்குவெட்டிவிட்டு சிறைச்சாலைவிட்டு கூட்டிவந்து வெகுமதிகொடுத்து பிள்ளைமார்களுக்கும் வரிசைகளுஞ் செய்து அனுப்பிவித்தார்கள். மேகணன் அந்தநிதானம் தப்பாமல் மாதாமாதம் இவ்விடத்திற்கு வந்து வருஷக்கட்டளை கொடுத்து நடப்பிவித்து வந்தது சரியே.

நவக்கிரகங்கள்

அதன்பிறகு வெகுநாளைக்கப்பால் அடியேங்கள் நாளையிலே ஒரு வருஷம் வருஷக்கட்டளை விசாரியாமலிருந்து விட்டார் அப்போது மேகணன் சேர்வைகாரன் வெகுஜனங்களைக் காப்பாத்துகிறவனுன படியினுலே உடம்படிக்கைதப்பி மறந்துவிட்ட தென்ன வென்று அடியேங்கள் விசாரித்தோம். அதென்னவென்ருல் மேகணன் சேர்வைக்கு மேல் காரியக்காரர்களான ஆதித்தமய்யனென்றும் சோமசுந்தரமய்யனென்றும் இரண்டு பேருண்டு

இவர்கள் ஈ-ஸ்ரீகர்த்தாக்களுக்கு நேத்திரஸ்தானமாயிருக்கிறவர்கள். இதில் (சூரியன்) ஆதித்தமய்யன் புத்திரன் கரியமாணிக்க அய்யனென்ருெருவருண்டு. அவாயாரை வந்து தொடுத்தாலும் படுத்தாத பாடெல்லாம் படுத்தி இகத்திலே மிகுந்த சந்தோஷத்தை பண்ணி வைப்பார். சோமசுந்தரமய்யன் வீட்டுக்கு அடுத்த வீட்டுக்கார (செவ்வாய்) மங்களேசுவரய்யன் என்ருெருவருண்டு. அவர் குரூர சந்தோஷமுள்ளவர் அவர் வீட்டுக்கு அடுத்த வீட்டுக்கார (சந்திரன்) சோமசுந்தரமய்யன் (புதன்) புத்திரன் ஒருவருண்டு அவர் மகா புத்திசாலி அவர்வீட்டுக்கு அடுத்தவீட்டுக்கார (வியாழன்) குருவைய்யன் என்ருெருவருண்டு அவரை தெய்வமந்திரி என்று சொல்வார்கள். அவர் வீட்டுக்கடுத்த வீட்டுக்கார சுக்கர பட்டர் என்ருெருவருண்டு. அவர் மித்திரபேதம் பண்ணுகிற பொல்லா விகாதக்குருக்கள் அவர் வீட்டுக்கடுத்த வீட்டுக்கார (சனி) கரியமாணிக்கய்யன் சேதிதான் சொல்லவேண்டாமா அவர் வீட்டுக்கடுத்த வீட்டுக்கார இராகுவையனும் அவர் தம்பியும் இந்த ஒன்பது வீட்டுக்காரருக்கும் முகரண்மையாயிருக்கிற ஆதித்தமய்யனையும் சோமசுந்தரமய்யனையும் எடுத்து விழுங்குகிற பொல்லா விஷக்கிட்டிகள். இவர்கள் ஒருவரைப்பார்க்க ஒருவர் உயர்ந்தவரேயல்லாமல் தாழ்ந்தவரல்ல.

இதுவன்றி, அந்த சோமசுந்தரமய்யனேடு நாள் கொண்டு சேர்க்கையாயிருக்கிறவர்கள் 27 பேருண்டு அவர்கள் நக்ஷத்திரப் பிரபுவாயிருந்தாலும் அவர்களுக்குள்ளே ஜனனம் எடாதபேர்களில்லே. அவர்களைத்தவிர வேறே ஒருகாரியமுமில்லே. இதுதவிர (பிரபவ முதல் அறுபது வருஷம்) ஆண்டு கொண்டாரய்யன் வகையில் 60 பேரும், மாதவய்யன் வகையில் 12 பேரும் ராச்சிய மங்கலத்தார் வகையில் 12 பேரும் யோகீசுவரய்யன் வகையில் 27 பேரும் பக்ஷமுடையாரய்யன் வகையில் 15 பேரும், காரணமய்யன் வகையில் 11 பேரும் இந்த ஒன்பது வீட்டுக்காரருக்குள்ளே எண்ணிக்கையாயிருக்கிறவர்கள். இவர்களில்லாமற்போனல் மண்ணுமில்லே விண்ணுமில்லே.

நவக்கிரகங்களின் வக்கிரமும், மழையில்லாமையும்

இப்படியிருக்கிறபடியினலே ஆதித்தமய்யன் முதல் ஒன்பது வீட்டுக்கார கிரகஸ்தாளும் ஒன்றுக்கொன்று ஸ்தானபேதங்களாய் விகாதத்தால் வக்கிரித்துக்கொண்டிருக்கையில் இவர்களை மிஞ்சி நாம் அங்கே போகக்கூடாதென்று மேலமேற்குடி மேகனன் சேர்வைகாரன்புறம் சற்றே பின்னுக்கு வாங்கியிருக்கிருர்கள் இவர்கள் ஒருவருக்கொருவர் விரோதமில்லாமல் அவரவர்கள் எதாஸ்தானங்களில் வந்து சுபிக்ஷமானதின் பேரில், அனுபவித்துக் கொள்வோமென்று மேகணன் சேர்வைகாரன் இந்தத் தவணைக்கு வராமலிருக்கிருனென்று அவ்விடத்துக்காரியம் சீக்கிரத்திலே சமரஸத்துக்குவரும், அதற்குப்பிறகு வருவானென்று வேதியங்குடியார் சொன்னர்கள். இது எதார்த்தமே. சரியென்று எண்ணிக்கொண்டிருந்தும் விவசாயத்துக்கு வேளை தப்பிப்போகு தென்கிறபதட்டத்திலே மேகணன் எந்த முகத்திலிருக்கிருனே எப்போது இவ்விடத்துக்கு வருவானே தெரியவில்லே. என்று அடியேங்கள் ஆலோஜனைபண்ணி, ஆனல் இவர் வருகிறதற்கு காலத்திரெண்டு காரியத்திலே தானம்தெரியுமென்று ஆள்விட்டுப் பார்க்கும்போது எப்போதும்போலே வருஷக்கட்டளைக்கு அவர் கலவரமாய் வருகிறதானல் முன்னுடி காத்தவராயன் சேர்வைகாரன் வந்து சிறுகொம்பூர் வட்டகையார் எல்லாரையும் சுத்தி அடித்துப்போவார். அவரும் வரக்காணேம். பின்னும் வெள்ளைப்பூச்சி நாயக்கர் புறத்து ராணுக்கள் பதினுயிரம் பத்துலக்ஷமாக அநேகம்பேர் வடக்கேயிருந்து தெற்கேபோக வருவார்கள். அவர்களையும் காணேம். அதுவன்றியும் சந்திரசேகரமுதலியார் கோட்டைக்கரையார் மட்டுக்கும் சிங்காரித்துக்கொண்டிருப்பார். அந்த லஹணமும் காணேம்

பின்னும் யாரைக்கேட்டாலும் மேகனன் சேர்வைகாரன் வருவானென்று இடியிடித்தாற் போல் சொல்லுவார்கள். அப்படிச் சொல்லுகிறவரையும் காணேம். சீக்கிரமாய் வருகிறதானால் கொங்குநாட்டு மின்னுப்பிள்ளையும் ஈளத்துமின்னுப்பிள்ளையும் மூலைக்கு மூலைவந்து காண்பிவித்து கொள்வார்கள். அவர்களும் வரக்காணேம். அஸ்தமான நேரத்தில் ஓர் வெள்ளித்தடிக்காரன் வருவானென்று சொல்லவுங்காணேம். அவரிடத்தில் பிரட்டில்லாருந்தால் மேகனன் சேர்வைகாரன் வகை மாரியன்னசேர்வைகாரர் இவ்விடத்துக்கு நிலவரமாய் வருகிறுரென்று நம்புதலாயிருக்கலாம். வேதியங்குடியார் சொன்னது தப்பிதமில்லையென்று எண்ணிக்கொண்டு பின்னையும் மேகனன் சேர்வைகாரன் அளப்புத்தான் பார்ப்போமென்று அவர்வருகிற மானுட்டுப் பாதையப் பார்த்துக் கொண்டிருக்கும்போது அவர்மேல் நாட்டிலிருந்து மலைநாட்டிலே தூங்கிப்போட்டு வெளியாத்தூர் மார்க்கமாய் சாரி புறப்பட்டார். அவரைப்பார்த்ததில் எப்போதும் போலே கருக்குள்ளவராய் இருக்கவில்லை. மெத்தவும் வெள்ளைப்பட்டராக இருந்தார். அதுகண்டு இவர் இருக்கிற சீருக்கும் நம்முடைய அவசரத்துக்கும் வருஷக்கட்டளை தருகிறப்போலே காணவில்லையென்று மேகனன் நமக்கு இந்தவேளைமானம் பாக்கிவிட்டுக் கொடுத்தார். நாளையே அவருக்குதயவுவந்து சீராத்தக்குடியும் செம்பொன்மாரியும் விட்டுக்கொடுத்துக் காப்பாற்றுவாரென்று அடியேங்கள் திடசுத்தியாகயிருக்கையில் மேகனன் சேர்வைக்காரன் கொடுத்துவருகிற வருஷக்கட்டளை சற்று தறுகின படியினுலே குணக்குடை, குண்டாக்குடை, கேணிக்கரைப்பட்டி, நெடுங்குளம், ஓடைக்கரை செங்குழிப்பட்டி, காட்டூரணி, குளமங்கலம் இந்த வட்டகையாரெல்லாம் தங்களிடத்திலே வருகிற குருவித்துரையாருக்குள் படஜலபானம் பண்ணுகிறதற்கு ஐவேஜியிலலாமல் வற்றருப்பும், காஞ்சீபுரமுமாக இருந்தார்கள். அப்பால் அடியேங்கள் ஊர்கூட்டமாக கூடி யோஜனை பண்ணி நமக்கு எப்போதும் பிழைப்பு பொசிப்பு நடத்திவருகிற மேலைமேற்குடி மேகணன் சேர்வைக்காரன் இப்படி பண்ணினதற்கு நாம் கீழ்நிலக்கோட்டையாரை அடுத்து ஊறல் வயலாரை அழைப்பித்து வைத்துக்கொண்டு காலக்ஷேமம் பண்ணவேணுமென்று வெட்டுக் காட்டாரைக்கூட்டிவந்துமுட்டி, மண்ணங்குடியார் பேரிலே, தள்ளி நடத்திக்கொண்டு போகும்போது இடையிட்டுக் கல்லாயிரமுதலியாரும் சிறிது தளமும்வந்து குறுக்கிட்டார்கள். அவர்களுடனே கண்டித்து நாலுபார் ஆறுபார் முறியவெட்டி தண்ணீர் கண்டது பாரைக் கண்டதென்று போகும்போது திண்டுக்கல்லாரும் மணப்பாறையாரும் வந்து மத்தியஸ்தம் பண்ணினுர்கள். அவர்களையும் எதிர்ப்பாரை முறித்து அப்புறம் போம்போது ஊற்றுமலைப்பட்டியார் தானேவந்து காலிலே விழுந்தார்கள். அவர்களை கண்டமாத்திரத்தில் அடியேங்கள் வெகு சந்தோஷமாய் இவர்கள் தாகந்தீர்த்தாபிள்ளை வகைச் சனங்களென்று வெகு மரியாதையாய் அன்று முதலவர்களிருக்கும் மல்லாக்கிணத்து முகத்திலிருந்து காயத்தார்மட்டு முட்டி மூதரித்து எட்டப்பனுயக்கர் இரைவப்பனுயகரைக் கொண்டு சிறிதுநாள் ஜீவனம் பண்ணிக்கொண்டிருந்தோம். எத்தனையானுலும் ஆனை தாங்குகிற பாரம் ஆடு தாங்கமாட்டாதே பெரிய காரியக்காரரான மேகனன் சேர்வைகாரன் திரும்பிப்பாராதபடியினுலே எங்களுக்கு எப்போதும் உடந்தையாயிருந்து உதவிக்கொண்டிருக்கிற வாழவந்த மழவராயபிள்ளை புறம் சற்று பின்னுக்கு வாங்கின படியினுலே, மண்ணுடி மங்கலத்தாரிடத்தில் பசையில்லாமல் புல்லமங்கலத்தார் எடுபட்டுப்போய் (மாடு) மாடக்கோட்டையாரும் ஆட்டாங்குடியாரும் ஜீவனத்துக்கு தாவந்தப்பட்டார்கள்.

வறுமையின் கொடுமை :

அதற்குமேல் காடந்தக் குடியிலிருக்கும் கொடியிலேத் தூராரும் சருகணியும் தீவு கோட்டையுமாகப் போய்ச் சேர்ந்தார்கள். இந்தப்படி சகல இனமுறையாரும் வருத்தப் படுகிறதினாலே அடியேங்களும் தாவந்தமாயிருந்தோம். அந்தமட்டுக்கும் (தைரியம்) திராணி வட்டகை எங்களுக்குள்ளிருந்ததினாலே (சாப்பாடு) ஊட்டத்தூரில் சர்ரகமாய் நடந்துவந்தது. பிறகு எடுபட்டுப் போனதின்பேரில் அரைப்பங்கு நடந்துவந்தது. அதுவும் மாறி கால்பங்கு நடந்துவந்தது. அதுபோய் கஞ்சிக்குடி நடந்துவந்தது. அதுவும் கட்டுப் பட்டு நெல்குப்பையாரும் கைவிட்டுப் போனதின்பேரில் இனியென்ன செய்வோமென்று (புதையல்) குழிப்பாரை யாரைப்போய் அடுத்து அவ்விடத்திலிருந்த (கடுக்கன்முதலிய ஆபரணம்) கடுக்கமுத்தூரார் கண்டவராயன் பட்டியார் பொன்னமராவதி வட்டகையாரையும் (வெண்கலம் தாம்பிரம்) வட்டிலொட்டி வரலொட்டி, செம்பூராருடனே சேர்ந்த வெங்கல முடையாப்பிள்ளை வகைசனங்களையும் கொண்டுபோய் அவர்களுக்கு அடமானமாக சொல்லி வைத்து (தானியம் வைக்கும் குதிர்) துறத்துவாய்ப் பட்டியாருகுள்ளேயிருந்த சம் பயனுயக்கர், வரகுணவன்னியன், சோளங்கப்பெருமாபிள்ளை, திருவாலி சேர்வைகாரன் சாமினுதபிள்ளை முதலிய பிருஷ்ணபட்டர் தாயாதி வர்க்கத்து ஜனங்களை எல்லாம் அழைப்பித்து வைத்துக்கொண்டு சிறிது நாள் ஜீவனம் பண்ணிக்கொண்டிருந்தோம். அதுவும் தடைகட்டி உள்ளத்துக்குள்ளே மெலுக்காயிருந்த கஞ்சிவரதப்பனுயக்கரும் தட்டுக்கெட்டு ஜனங்க ளெல்லாம் கலிபிலிப்பட்டிவந்து சேர்ந்ததின்பிறகு' அவர்களிருக்கிற மெலிவினாலே ஆண்கள் மணவாளப் பெருமாள்பிள்ளை புறமும் (ஸ்திரீகள்) மங்கைக்கரசபிள்ளை புறமும் ஒருவரை யொருவர் விஜாக்கிறதற்கு யேதுவில்லாமல் காமயநாயக்கர் விஷம்மொடுங்கி (கர்ப்பம்) கருவூரில் வந்திருந்தபிள்ளைப் பாளையத்தாரும் கரைத்துக்கொண்டிருந்தார்கள். அப்படி ஜனங்கள் தொங்கிஷமாயிருப்பதுசண்டு (ஸ்திரி புருஷர்களின் தலைமயிர்) கோலக்கொண்டை குழலாவ யல் குடுமியாமலை இந்த மூன்றார் முகத்திலேயும் (ஈர்) ஈரோடு தாராபுறத்தார் வந்திறங்கி, கன்னமாபுரிவழியே நெறிச்சேரிநிற்க, கண்ணுகுளத்தாருக்கள் பூளைப்பட்டியார் வந்தடைந்து அவர்களை கொகசங்காட்டார்வந்து அரிச்சுப்பிடுங்கித்தின்னும்போது (வாய்நீர்) முகஊரணி பெருகிச் சுரிச்சுப்பல்லு தன்மம் கரைக்குமேலே தெரிய, (முதுகு) முதுகங்கிடலார் முள்ளூர் வட்டவானமட்டும் எடுபட்டு பளுவூருக்கு வழிகாண்பித்துக்கொண்டிருக்க (வயிறு) கும்ப கோணத்தார் தொக்கரனேந்தலாரையடுத்து மாராப்பட்டியாரையும் ஒட்டிக்கொண்டிக்க (கொப்பிளமுண்டாகி சரீரமிளைத்து கால்வீங்யிருந்தார்கள் கொப்பிளாம்பட்டியார்மேலெழும்பி மதங்குப்பள்ளம், வத்தலக்குண்டிலே விழுந்து காலிங்கராயர்பிள்ளை புறம் மினுமினுக் காயிருந்தார்கள். இப்படி ஜனங்கள் தாவந்தப்பட்டு ஆககைவயலார் இளைத்திருக்கிற வேளையிலே சொரிக்குளத்தார்வந்துமேலாக அருப்புக்கோட்டை யாரைவிட்டு எரிப்புபண்ன பரத்தைவயலாருக்கு மேலளப்பாயிருந்தமேனியூராரும் பாசாங்கரையாயும் மைவாலம் பட்டியாயும் போனதின்பிறகு இடைக்காட்டூரிலே தொத்துகுடியாயிருந்த கிறிவிச்சிக் கந்தவனப் பட்டருக்குள்ளேவஸ்திரக் குட்டியாபிள்ளைபுறம் வந்து பூந்து வதியறிஞ்சார்கள் (போக இடமில்லாமல் வெளுத்து மேகவியாதி உண்டாகி கால்கை முதலானவைகளைக் குடைய ஆகாரமின்றி பாக்கு வெற்றிலை புகையிலை சுண்ணும்புங்கூடப் போட்டுக்கடிக்க வகையில்லாமல் வெறும்வாயை மென்றுகொண்டிருக்க குரங்குமுகமாகி மாண்டு போகும் சமயத்தில்) பரிய ஓருக்கு இடமில்லாமல் மெலிவுக்குள்ளாயிருக்கையில் பரங்கிப்பேட்டையார் வெள்ளைக்காரராயர் புறத்து வங்காருமேகன் காலாடி வட்டகையாரெல்லாம் வந்து தலைப்பட்டு அவர்களுக்குப் பிடிப்பாயிருக்கிறவிடமெல்லாம் குடஞ்சாடியாரைவிட்டு கக்கிசம் பண்ணி நெருக்க வேறே 'பிழைப்புக்கிடமில்லாமல் கமுகூர், கொடிக்கால், கேணியார், சுண்ணும்பிருப்பாரையும் கடியாவயலாரையும், வாயுறவுபண்ணி வைத்துக்கொண்டிருக்க, இந்தப்படி பார்த்தமுகமெல்லா

மந்திமெய்யா முகத்திலேயும் அனுமந்தக்கொடி முகத்திலேயும் சேர்ந்து உருளிக்கோட்டைக்கு போகித் தாயிருக்கிற சமயத்தில் பின்னேயும் ஒரு நினைவு வந்து திக்காலுக்குத் திக்காய்ப் போய் பிழைப்போமென்று சிறிதுஜனங்கள் பாலையனுடுகிள்ளைப் பழுத்துக்கிடக்குதென்று அங்கேபோனவிடத்தில் உதடோடே உதடு ஒட்டிக்கொண்டு திரிந்தார்கள். சிலர் (விளாமரக்காடு வகையரு) விளங்கா ட்டுரிலே கொத்துக்கருத்து பச்சையும் பசுங்காயு மாய் கொண்டுவந்து குத்திப்புடைத்துத் தின்னும்போது (விக்கல்) விக்கிரமாதித்தன்சேர்வைகாரன் வந்து பிடித்துக்கொண்டு கண்முழி பிதுங்க அடிக்கிறபோது அந்நேரம் அழகிய மின்னுப் பிள்ளை ஒதுங்கிவிட்டுத் தப்பிப்பிழைத்து வந்தார்கள். அப்பால் சிலர் ஈச்சம்பட்டியிலே முட்டி தூக்கித்திரிந்து பிழைத்து வந்தார்கள். சிலர் கன்னிமாப் பட்டியாரையடுத்து கிழங்கைக் கொட்டிவிக்கிறேமென்று பேரிட்டுக்கொண்டு கவலையறப் பிழைத்து வந்தார்கள். அப்பால் சிலர் மத்தஞ்சிறு குடியிலே பில்லெடுத்துப் பிழைத்து வந்தார்கள். சிலர் (எறும்புகளை) எறும்புக்குடியிலே வெட்டுக் காராய்த்திரிந்து பிழைத்து வந்தார்கள். சிலர் புளியங்குடியிலே விரைக்கோட்டை எடுத்து பிழைத்து வந்தார்கள். சிலர் காரைக்குடி, இலந்தங்குடி, கிளாமடம், விரை, துவரைமான், பூலாம்பட்டி' இந்த வட்டகையில்போய் பழங்குளத்தாரை கொண்டு வந்து பிழைத்து வந்தார்கள். சிலர் ஆண்டிப்பட்டி, தாதன் பட்டியாருடனே கூடிவிட்டார்கள் சிலர் காரையூர் நெடுமரம், மஞ்சிக் குடி தும்பப்பட்டி, கோவானூர், முன்னைப்பட்டி, முசுட்டைக் குரிச்சி, சுண்டைக்காடு விழிமாறு இந்தவட்டகையிலே போய்த்தலைவைத்து கைக்கெட்டின மட்டும் வளைத்து பரித்துக்கொண்டு வெலுப்பித்தின்று பிழைத்துவந்தார்கள்.

வறுமையின் கொடுமை

இதற்குமுன் (மாவரைக்கும் எந்திறத்தின் கீழ் மேல்முடிகள்) கீழக்கல்லாங்குடியாற்கும் மே மேலைக்கல்லாங்குடியாருக்கும் உளிமுண்டத்தனமாய் அடிபிடிவந்து தீர்ந்ததில் மனஸ்தாபமாய் பிரத்தியேகமாயிருந்தார்கள். கீழக்கல்லாங் குடியாருக்கு நடுவே (எந்திரமுளை) முளைக்குளத்தாரை மத்தியஸ்தமாக இருக்கச் சொல்லி மேலைக்கல்லாங்குடியார் கையில் ஒரு முளையைக் கொடுத்து நாங்கள் சொன்னபடி நீங்கள் (கூழ்வரகு) கேப்பைகளாறு இவ்விடங்களிலே சுத்தித்திரியுங்களென்று கத்துவட்டகையாரைவிட்டி நெருக்கி அடிக்கிற போது அந்த இரண்டுராருக்கும் நடுவே மாக்காத்தாப்பிள்ளை வெளிப் புறப்பட்டார். அவரை வென்னியூரிலேவிட்டு மரித்துக்கொண்டு கிண்டு கிண்டென்று கிண்டுகிறபோது மேலையூர் களிக்கோட்டையார் வந்து எதிர்த்துக்கொண்டார்கள். அவர்களுக்குத் துணையாய் கருவாட்டுப் பொட்டலும், நெய்வாசலாரையும், மோர்ப்பண்ணையும், ஊமைச்சி குளமும் விட்டுக்கொடுத்து, சிறிதுநாள் சுகஜீவனமாய்ப் பிழைத்து வந்தார்கள். அப்பால் அந்த மாக்காத்தாப் பிள்ளையை வென்னியூரிலே நெகிழவிட்டு கூழப்பநாயக்கர் புறத்தை அடுத்து அவர்களுக்குத்துணையாய் சுண்டைக்காட்டாரையும், முசுட்டைகுரிச்சியாரையும் சேகரப்படுத்தி (வாய்) வாச்சான் பட்டி மார்க்கமாய் கூட்டிப்போகும் போது அவ்விடத்திலிருந்த விசைங்கநாட்டாரும், தாடிக் கொம்பு தளைச்சப்பநாயக்கரும் வந்து மரித்துக்கொண்டு அதில் இழுவையும் பரிவையுமாய் அலங்கோலப் பட்டு நெஞ்சத்தூர், கண்டனிப்பட்டி மார்க்கமாய் வயிறு கும்பங்கடிபோய்ச் சேர்ந்தார்கள். கோட்டைக்குள்ளேயிருந்த வைத்தியனுதமுதலியாருக்கும் கூழப்ப நாயக்கர் புறத்து ராணுக்களுக்கும் முசிட்டைக்குரிச்சியாருக்கும் ஒன்றுகொன்று ஆகாமல் பாதிராத்திரியில் கடாபிடாயனம் பண்ணி எழும்புகிறபோது காத்தவராயன் சேர்வைகாரன் வந்துகூட எதிர்த்துக்கொண்டு கலக்கியடித்து (இரைச்சல்) ஊளையூவாரை எழுப்பிவிட்டு முடுக்கங் குளத்தார் ரொம்பவும் துரிச பண்ணிவிட்டார்கள், உடனே துண்டுகுழாய்ச் சத்தம் பத்துவேட்டு இருபது

வேட்டுப்பறிய அதிலே யுடைத்துக்கொண்டு கீழ்வாடிக் காலாங்கரை வழியாகப் புறப்பட்டுப் போகும்போது கண்டாங்கிப்பட்டி, சேலத்தூர், கோமனும்பட்டி, சவுளிமுத்தாபிள்ளை, வேட்டியப் பஞ்சேர்வைக்காரன், கலையூர் சோமநாதபிள்ளை இவர்களையெல்லாம் நாறவடித்துப்போட்டு வசசு வாங்கி விட்டார்கள். இப்படி நாலுகை ஆறுகையாய் கூழப்பனுயக்கர் புறத்து ராணுவும் கூழப்பாளய முரிபட்டுப் போனகின்பேரில் (தேகம்) சாயாங்கோட்டைத் தாண்யத்திலிருந்த ஜீவநாயகம்பிள்ளை முதலிய காரியக்காரரெல்லாம் நாம் இனியிவ்விடத்தில் அரைக்ஷணமும் தரிபடக்கூடாதென்று ஆண்டது பூண்டது எல்லாம் போட்டுவிட்டு பிராணபுரி ஜமுதாட்டைமாத்திரம் எடுத்துக் கட்டிக்கொண்டு இயம்னேசுவர நமனப்பன் சேர்வைகாரனிருக்கும் நமன் சமுத்திரத்திற்குப் போவதற்கு லெக்கு வைத்துக்கொண்டு, மேலக்கோட்டை வாசலில் வந்து பார்க்கும் போது இன்னம் சற்றே மேலளப்புக்கண்டு போகவேணுமென்று (தொண்டை) தொண்டை மண்டலத்தார் மத்தியஸ்தத்திலே சற்று தடைபட்டிருந்தார்கள். இந்தக் கோட்டையை விட்டுப்போனல் இவர்கள் திரும்பி வரமாட்டார்களென்று சீக்கிரமாய்ச் (சுக்கு) சுக்கிலபண்டிதர் உடன்படிக்கையாய் (காது) காதர்சாயப்புராவுத்தன் வழியிலே பொடி வைத்து ஊதினபிறகு கண்ணங்குடியார் தெளிந்து கலையில்லையென்பதாய்ப் பண்ணிவைத்தார்கள். பின்பு சருக்குப்பட்டி மருதப்பிள்ளையை கோட்டைக்குள்ளே அனுப்பி வயித்தியனுத முதலியாரை சமாதானம் பண்ணினபிறகு மத்தப்பேரையும் அவரவர் எதாஸ்தானங்களிலே இருக்கச் சொல்லி திட்டப்படுத்திவைத்து. இனி மலங்கொண்டான் வாடியாரும் காத்தகுடிவகை ராணுக்களும் திட்டி வாசல் வழியே போகிறதேயல்லாமல் மற்றபடிக்கு காலாங்கரை வழியாகப் போகக்கூடாதென்றும் கீழவாடி வாசல்கதவு திறந்து கிடந்ததையும் அடைத்து ஒட்டக்கார வாதவனேரியார் முதல் மூன்றுராரையும் ஒருவரைமிஞ்சி ஒருவர் அதிக்கிரமித்து நடவாமல் சமானக்ஷியாய் நடந்துகொள்ளச் சொல்லி இந்தமட்டும் திட்டப்படுத்தினதின் பேரில் முன் தொண்டை மண்டலத்தார் மத்தியஸ்தத்தில் இருந்த ஜீவநாயகம்பிள்ளை காரியக்காரரெல்லாம் அச்சமில்லாமல் அவரவர் எதாஸ்தானங்களிலே வந்திருந்தார்கள். இப்படி வெகுஜனங்கள் நாலாவகையிலும் அவதிப்பட்டு புனர்ஜனனமாகத்தப்பிப் பிழைத்து வந்தது எப்படி இருந்ததென்றால், நாட்டரசங்கோட்டையில் கண்ணுடையநாயகியம்மன் களியாட்டத் திருநாளில் அவித்த நெல்லு முளைத்தாற்போல் போனஜீவன் திரும்பித்தப்பிப் பிழைத்து வந்தார்கள்.

மகாநாடு கூடல்

அப்பால், அடியேங்கள் ஊர்க்கூட்டாய்க்கூடி யோஜனைபண்ணி நாமெல்லோரும் இத்தனை அவதிப்பட ஆண்டவனில்லாத அடிமையல்லவே நமக்கு சகலமும் ராஜாவே தெய்வமாக இருக்கியபடியினாலே நம்முடைய மெலிவு குறைவெல்லாம் இராஜகரத்திலே அறிக்கை பண்ணவேணுமென்று ஒருதினத்திலே அடியேங்களனைவோரும்போய் அரண்மனையாரைச் சந்தித்து சேதி அட்டவணைப்படிக்கும் சகலமும் அறிக்கை பண்ணிவித்தோம். அப்பொழுது எங்களை இரெக்ஷிக்கிறதற்கு பாரகர்த்தாவாயிருக்கிற ராஜநகரத்தார் மிகவும் சந்தோஷகரமாய் ''படைகுடி கூழமைச்சு நட்பரணுறு, முடையர் னரகருளேறு'', என்பதுபோல், குடியுடையானே முடியுடையாரென்று சித்தத்திலே கொண்டருளி அடியேங்கள் பேரில் கிருபாகடாக்ஷம் வைத்துப் பார்த்து அந்தப்படியே ராஜீயத்தை சுபிக்ஷம் பண்ணிவைத்து உங்களை சகல பாக்கியத்தோடும் கூட சுகமேயிருக்கத்தக்கதாய் நாமே காப்பாற்றுகிறோம், வேறென்றுக்கும் ஆலோசனை பண்ணவேண்டாமென்று திருவுளம்பத்தி அபயஸ்தமும் கட்டளையிட்டு அடியேங்களுக்கு சிரிக்கும்படி சர்வமானியம் உம்பளமாக விட்டுக்கொடுத்து வருஷக்கட்டளைக்கு சமதியாய் களஞ்சியக்குடி நெல்லையப்ப முதலியார்வகை ராணுவையும் தவசப்புலிசேர்வைகாரனையும் (குடிவாரியாக) லாவணப்படிக்கு கொடுத்து நிர்வாகம் பண்ணச்சொல்லியும்

உத்தாரம்பண்ணி அடியேங்களை அனுப்பிவித்துப்போட்டு பிரமணயினர் அய்யர் வகை மகா ஜனங்களை அழைத்துவந்து அவர்களுக்குப் பொன்னம்பல முதலியாரைக்கொண்டு சமர்கதி பண்ணிவைத்து ஜபதபங்களினாலே (வருணன்) மேல்திசை அதிகாரிக்குத் தெரியச்சொல்லி (இந்திரன்) கீழ்த்திசை அதிகாரிபுறத்து மேகணன் சேர்வைகாரன்வகை மாரியப்பன் சேர்வை காரனை அதிசீக்கிரமாய் இவ்விடத்திற்கு வரப்பண்ணுங்களென்று நிர்த்தார்ணப்படுத்தி வைத் தார்கள். இந்தமட்டும் இராஜகரத்தார் பிரயத்தனம் பண்ணுகிறபடியினாலே இனி ராஜியம் சுபிக்ஷமாவதற்கு சந்தேகமில்லையென்றும் மகிழ்ச்சியினாலேயும் அன்னபானாதிகளுக்குத் தாழ்ச்சியில்லாமல் நெல்லப்ப முதலியாரையும் தவசப்புலிசேர்வைகாரனையும் கட்டளையிட்ட சந்தோஷத்தினாலேயும் அடியேங்கள் வேறொருகவலையும் இல்லாமலிருந்தோம்.

ஜனங்கள் தேவாராதனஞ் செய்து அநுக்கிரகம் பெறல்.

நாம் விவசாய ரசவாதம் பண்ணுகிறபேர் ஆனபடியால் குடிமுறைமைக்கு தெய்வ வணக்கஞ்செய்து ராஜ ஸ்ரீ கர்த்தாக்களுக்கு நம்மாலியன்றமட்டும் உபசாரஞ் செய்யவேணு மென்று அடியேங்கள் அனைவருங்கூடி ஒரு நியாமகம்பண்ணி ராஜ ஸ்ரீ கர்த்தாக்களுக்கு பிர திவிம்பமாக வந்து முளைத்திருக்கிற லோக சிவலிங்க முதலியார் அவர்கள் அரண்மனைக்குப் போய் ஆரைக்கொண்டு இவருக்குக் குளிரப்பண்ணுவோமென்று பார்த்து முன்னமே அவருடைய திருமேனியாப்பிள்ளைக்கு சுந்தரவாணியன் பட்டணத்து நல்லெணஞ்சேர்வை காரனைக்கொண்டு வந்து சாத்தப்பிள்ளைக் கேற்க ஒரு உடன் படிக்கை பண்ணிவைத்தோம். அப்பால் பசுக்காராம் பட்டி பால்வண்ணாத பிள்ளையையும் (கொம்புத் தேன்) இராட்டோட்டு சாத்தி தேனுக்ஷியப்ப முதலியாரையும் சக்கரையப்ப முதலியாரையும் மாங்குடி, பல்லாங்குடி, வாழைத்திடல் இம் மூன்றாரிலாமிருந்து வந்த பழம்பதினாத பிள்ளையையும் கூடக்கலந்து கொள்ளச்சொல்லி அபிஷேகம் பிள்ளைக்கேற்க இசைவித்து வைத்தோம், பின்னும் சிறிது திரவியமும் கொடுத்து ஒரு காஷ் இந்தப்படி பண்ணிவைத்து, மறுபடி முதலியாரவர்களுக்கு வார்த்தை நைவேத்தியம் பண்ணுகிற ஆருவமுதய்யங்காருக்கு அரிசிலனாத முதலியாரையும் அவருடன் பால் வண்ண நாதபிள்ளையையும் விட்டு சிறப்பாய்ச் செய்யச்சொல்லியும் அடியேங்கள் விசுவாசம் அவர்களுக்குத் தெரிந்திருக்க வேணுமென்று (பேட்டிசாமான்) உடுவரையாய் சிறிது சாம்பிராணி உருட்டையும் கொடுத்து இந்தமட்டும் சட்டப்படுத்தினதின் பிறகு அடியேங்கள் எல்லோரும் முதலியாரவர்கள் சமுகத்திற்போய் அடுத்து நின்று கொண்டிருக்கையில் நாங்கள் கொடுத்த சாம்பிராணி உருட்டையுமெடுத்து நம்பியாப் பிள்ளை என்பவர் தீத்தாரப்ப முதலியாரிடத்தில் பத்தவைத்து முதலித்து சுத்திச்சுத்திப் பார்த்தார். அப்போது சமுகத்தில் கொஞ்சம் புகைச்சலாச்சுது, உடனே எதிரேநின்ற பரிசாரகமய்யன் ஓடிவந்து இது காரியமெல்லாம் நிஜமென்று நெய்யிலே கைவிட்டுக் கொடுக் கிறோமென்றாப்போல் ஞானதீப முதலியாரை எடுத்துக் காட்டலாய்ச் செய்திசொன்னான். அப்போது நம்பியாபிள்ளை ஒரு (மணி) மணியாரனைக்கையிற் பிடித்துக்கொண்டு வாயடி கையடியாக அடித்தான் பின்பு எல்லோருங்கூடி கற்பூரம் பிள்ளை பேரிலே கொண்டு வந்து பத்தவைத்தார்கள். அவர் மெத்த நல்லவரானபடியினாலே சகலமும் தாமாகத்துலங்கி எல்லோரையும் மணம்பண்ணிவைத்து வெளியேறினார். அப்போது அடியேங்கள் சிவ சிவா இது சிவனுக்குத்தான் வெளிச்சமென்று கும்பிட்டுப்போட்டு இந்தச் சமுக விசேஷத்தினாலே அடியேங்களெல்லாம் பரிசுத்தமேயல்லாமல் எங்களிடத்தில் களங்கமில்லையென்று கற்பூரம்பிள்ளை தலைகொட்டுக் கொடுத்துப்போட்டு பக்கத்திலேபோய் நின்றோம். அதன்பிறகு முதலியாரவர்கள் சமுகத்திலே. (வேதப்பிராமணர்கள்) வேதாரணியத்தார் வந்து நின்றுகொண்டு மெத்த மெத்த ஸ்தோத்திரம் பண்ணினார்கள். கட்டியக்காரன் எச்சரிக்கை சொல்லிக்கொண்டு நின்றான்

பண்டாரத்தார் புறத்தார்வந்து நின்றுகொண்டு ஒன்றுக்கொன்று மிச்சமாய் அவருக்கு வாராத்திருப்பாட்டாய் அஞ்சாறு தேவாரமும் திருவாசகமும் ஓதிக்கொண்டு நின்றுர்கள் பின்பு மண்டபசாலையாருக்குள்ளே நட்டுவன காவனூரார் கிட்டவந்து, நின்று கைத்தாளம் பட்டியாரை சையிலெடுத்துக்கொண்டு ஒருவர்மேலே ஒருத்தரை எடுத்து அடிக்கும்போது அடித்தாப்போலே ஒரு (மத்தளக்காரன்) முட்டுப்புத்திகாரன் வந்து கழுத்தைவளைத்து இரண்டு முட்டுப்போட்டுக்கொண்டு கைசலியாமல் அடித்தான். அவனை அடுத்தாப்போல் பாடக முடையாப் பிள்ளையும் மாணிக்கனேரிச் சனங்களும் வந்து குளிர்சொரத்திலே பட்டபாட்டை பதபாகமாய் அவர்கள் பாட்டிலே பாடிக்கொண்டு நின்றுர்கள். அப்பால் பில்லங்கொளத்துச் சேவுகனெருத்தன் வெள்ளி கட்டின குழலை எடுத்துப் பிடித்து முன்னுலோந் திரமட்டும் பேசின வழியைச் சொல்லிச்சொல்லி அடைத்து ஒரு இசைவைத்துக்கொண்டு நின்றுன். அவனை அடுத்தாப்போல பின்னையுமொரு (துருத்தி ஊதுகிறவன்) தித்திரிப்புக்காரன் மெத்தவும் விம்மலும் பொருமலுமாக ஊதி உதித்துக்கொண்டு நின்றுன். இப்படி நிற்கிற கூட்டத்து நடுவே இந்தக் காரியங்களை எல்லாம் மேற்போட்டுக்கொண்டு (தாசி) வல்லியூரார் கச்சை கட்டிக்கொண்டு தவ்வித் தவ்வித் திரிந்து அபினயபுறத்தாரையும் இழுத்துவிட்டு கண்ணைக் காட்டி நெளித்துக் கொடுத்துவெகு பவந்தம் பண்ணிப்பார்த்து அங்கே நிற்கிற (சபை) களரிகுளவயல் ஜனங்களைக் கண்டு இவர்கள் நம்மை எடுத்துவிட்டுக் கேளிக்கை பார்க்கிறுர் களென்று கரணம்போட்டு தீர்ந்த காரியத்திலே மங்களமய்யன் சொன்னபடிக்கெல்லாம் நல்லதுதானென்று சந்தோஷமாய் ஒரு கும்பிடு போட்டுக்கொண்டு போனுர்கள். இந்த மட்டுக்கும் முதலியாரவர்கள் சமுகத்திலே நடந்த அதிசயங்களெல்லாங்கண்டு மிகுதியும் மகிழ்ச்சியாய் முதலியாரவர்கள் சமயம் பார்த்து அடியேங்கள் சேதிகளையெல்லாம் விண்ணப்பம் செய்தோம். அப்போது அவர் எங்களைப் பார்த்து நாமுங்களை இரக்ஷிக்கும் பொருட்டாய் மறுவில்லாத ஜாதிலிங்கம் போல் இந்த மண்ணில் வந்து முளைத்த நாள் முதல் நமக்கு நீங்களும் உங்களுக்கு நாமும் உடந்தைப் பருவமாய் ஆண்டவரும் அடிமைத் தன்மையாயு மிருப்பது சுபாவமாமே. நாமென்றுல் ஒரு வெள்ளை எருதுக்காரன் ஆனுலென்ன நமக்கு செவ்வைப்படுத்தி அனுப்பிவித்த சாத்த பிள்ளையும் அபிஷேகம் பிள்ளையும் ஆருவமுதய்யங்காரும் வந்து கிரியை பண்ணினபடியினுலே அதிக சந்தோஷமாச்சுது நாம் உங்களை பரிபாலனம் பண்ணி உங்களுக்கு கர்த்தவ்வியரான இராஜவர்க்கங்களைப் பரிபாலனம் பண்ணிவைத்துக் கொண்டிருந்தால் நமக்கு மென்மேலும் விசேஷமான பிரதிஷ்டையுண்டென்கிறது. நம்முடைய இருதயத்திலே நன்றுயிருக்கிறது. ஆனதால் அப்படியே சுபிக்ஷம் பண்ணித் தருகிறேமென்று தெக்ஷிணுமூர்த்தி அயானிடத்திலே கெவளிகரமாக திருவுளம்பத்தி சில திரவியம்பிள்ளை சந்தனப்பட்டர் மாலையப்பன் சேர்வைகாரன் இவர்களையும் கையிற் பிடித்துக்கொடுத்து சந்தோஷமாகத் தரப்பண்ணி அனுப்பினார்கள். அவரைக்கும்பிட்டு அனுப்பிவித்துகொண்டு முதலியாரவர்களுடையதேவி பார்வதியாயி அவர்களைக்கண்டு கும்பிட்டு செய்தி சொன்னேம் அப்போது ஆயியவர்கள் சொன்ன சேதி நானென்றுல் இராஜகுமாரத்தி உங்கள் முதலியாருக்கு வந்து வாழ்க்கைப்பட்ட காலம் முதலாக முதலியார் நம்மால் பசுமையாயிருக்கிறுரென்பது நீங்கள் அறியாததல்லவே. அப்படியிருக்க, தினம் இரண்டுபடி நெல்லு என்கையில் அளந்து கொடுத்து அறந்தாங்கிக்கோட்டைக்குரிய (முப்பத்திரண்டு தர்மம்) முப்பத்திரெண்டு பேருக்கும் பெரும்பண்ணைக்கும் போஜனமளிக்க கட்டளை தப்பாமல் நடத்துவிக்கச்சொல்லி உங்கள் முதலியார் என் வல்லமைபார்த்தார். அவருடைய கிருபையினுல் நானும் அவர் சொன்ன படிக்கு தாக்ஷிவராமல் இதுவரைக்கும் கிரகதிருத்தியம் பண்ணிக்கொண்டிருக்கிறேன். உங்களுக்கு நான் தாயானபடியினுலே முதலியாரவர்களிடத்தில் தனித்துச்சொல்லி உங்கள் மனதின்படியே சுபிக்ஷம்பண்ணி வைக்கிறேம்'' என்று ஆயி அவர்களும் திருவுளம் பற்றினுர் கள். நல்லதென்று கும்பிட்டனுப்பிவித்துக்கொண்டு கனகசபாபதியாரவர்களை வந்து கண்டு

கும்பிட்டுச் சேதிசொன்னோம். அவர் சொன்ன சேதி "நாம் ஓடுகிறமுயலைக் கூடிமதிக்கிற சேவுகனாயிருக்கவும் எல்லாருக்கும் ஒரு அம்பலகாரனாகவும் இருக்க நம்மிடத்திலே (பதஞ்சலி வியாக்கிரபாதர்) பாம்பும் புலியும் இடைவிடாமல் காத்துக்கொண்டிருப்பதினாலே நம்மைப் பார்த்தால் உங்களுக்கு கூத்தாடிபோலே காணும். அதுவுமல்லாமல் நாமிருக்கிற வெட்ட வெளியைக்கண்டு ஒரு பெண்ணாய் பிறந்தவள் நம்மை அம்பலத்தில் ஏத்தி வைத்ததும் அதிலே நடத்திவைத்த கூத்துகளும் நீங்கள் அறியாததல்லவே. நம்முடைய நினைவிலே உங்களுக்கல்லாமல் மற்ற பொல்லாதபேருக்கு ஒரு காரியங்களைக்கொடுத்து கால்காட்டப்போகாதென்று சீர்தூக்கிப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். பார்த்துக்கொள்ளுங்கள், அப்படியே உங்கள் காரியம் சுபிக்ஷம்பண்ணித் தருகிறோம்" என்று அபயஸ்தம் கொடுக்கிறதுபோலே கையைநீட்டிச் சேதி சொன்னார். நல்லதென்று கும்பிட்டனுப்பிக்கொண்டு அவர்குமாரர் சித்திரவினாயக முதலியாரிடத்தில் போனோம். அந்த மகாராஜன் போஜனப்பிரியரான படியினால் வயிறுவாடாமல் நிரம்பப் பக்ஷணம்பண்ணிப்போட்டுத் தொந்தியைத் தடவிக் கொண்டிருந்தார். அவரைக்கண்டு கும்பிட்டு குட்டுமார்க்கமாக சேதி சொன்னோம். அவர் சொன்ன சேதி நாம் வழிக்கரைபிள்ளை சமுசாரியல்ல யேகாங்கி நம்மைப் பார்க்கிறதற்கு நாம் பார்த்தவிடமெல்லாம் வேற்று முகமாய் இருக்கிறோமென்று எண்ணவேண்டாம். யாதொருகாரியத்துக்கும் நீங்கள் பிடித்துவைத்த இடமெல்லாம் நாம் வந்திருக்கிறோம். அதுவல்லாமல் நம்முடைய சேதிகளைக்கேட்டால் ஒரு பாரதம்போலிருக்கும். அப்படியிருந்தது நம்முடைய எழுத்து. ஆனாலென்ன நம்மைச் சந்தியிலிழுத்துவைத்தாலும் பக்ஷணம் மாத்திரம் கொடுத்தால் போதும். அஞ்சுழு அன்னியாயமானாலும் நம்முடைய சுழி நல்லதென்று எல்லாரும் அனுசரிப்பார்கள். உங்கள் காரியமே சீரிட்டு முன்னின்று நிறைவேத்தித் தருகின்றோம். என்று திருவுளம்பற்றினார், நல்லதென்று கும்பிட்டுக்கொண்டு அவருடையதம்பி சிவஷண்முக முதலியாரிடத்திற்போய் அவரையும் பக்கத்து ஆயிமார்களையும் கண்டு கும்பிட்டுச் சேதி சொன்னோம். அவர்சொன்ன சேதி 'நாம் ஒரு மகாராஜன் பெண்ணைக் கலியாணம் பண்ணியும் எத்தனையோ மயில முறைமையாக நடந்தும் நம்மை கோழி பிடிக்கியென்றும் தகப்பன் சாமியென்றும் சொல்லுகிறார்கள் ஆனாலென்ன, நம்முடைய செய்தியைக் கேட்டால் இந்தப்பொய் கந்தப்புராணத்திலுமில்லை என்பார்கள். அப்படியிருந்தும் நம்முடைய பேர்வாசனை பின்னும், நம்முடையதகப்பன் சாம்பலாண்டி, சடையாண்டி, யானதால் நம்மைப்பழனியாண்டி, குமராண்டி. முருகாண்டியென்றும், நம்முடைய தாய் மாமன் அச்சுதப்பெருமாளய்யங்காரணதினாலே நம்மை வேலாயுதப்பெருமாளென்றும், மயிலேறும் பெருமாளென்றும், சரவணப் பெருமாளென்றும் பெருமாள்பட்டங்கட்டியும் வரிசையாய் வசனிக்கிறார்கள். நீங்கள் ஆறுதலையுள்ள இடமென்று நம்மைக்குறித்து வந்ததுசரியே. நாமும் உங்கள் காரியம் சுபிக்ஷம்பண்ணிக் கொடுக்கவேணுமென்றே ஒரு வேலை வைத்திருக்கிறோம்" என்று திருவுளம்பற்றினார். நல்லதென்று கும்பிட்டுக் கொண்டு சண்டேசுவர பட்டரிடத்திலே போய்க்கண்டு கும்பிட்டுச் செய்தி சொன்னோம். அவர் மௌனம் மலையைக் காக்குமென்று எத்தனையோ மௌனமாய் நித்திரைசாத்திக் கொண்டிருந்தார். அடியேங்களாலே நிர்வாகத்துக்கு வராதென்று கைதட்டிச் சொல்லி விட்டு வந்துவிட்டோம். பிறகு எந்தலோகத்துக்கும் ஈசுவரமுகூர்த்தமாயிருந்து சகலரையும் இரக்ஷிக்கிற வயிரவத்தேவரிடத்திலே போய்க்கண்டு கும்பிட்டு விவரமாய்ச் சேதி சொன்னோம்.

அவர்சொன்ன சேதி, "நாம என்றைக்குஞ் சின்னப்பிள்ளையா யிருந்தாலும் பெரிய காரியங்களைச் சாதிக்கிற பிரதாபமிருக்கிறபடியினாலே சகலலோகமும் நாமாகியிருக்கிறது சரியே அது அறிந்து விவசாய ரசவாதம் பண்ணுகிறபேரெல்லாம் நம்மைச் சொர்ன்னவயிரவரென்று பிரார்த்தித்து பூசை பண்ணுவார்கள். அதுபோல நீங்கள் பிரார்த்தித்து வந்த காரியம் சுபாவ ம்மமே. நாம் அந்தச் சேதியறிந்து முன்னமேதானே குழந்தாபுரிதுரை சிவகங்கை பரராஜ அரசுநிலையிட்ட ராஜசிங்கத்துக்கு ஸ்ரீமது ராஜமானிய ராஜஸ்ரீ முத்துவடுகநாதேந்திரதுரைகள் சிகாமணியென்று நம்முடைய வரிசைத் திருப்பேரும் கொடுத்து ராஜஸ்ரீ கர்த்தாக்கள் சம்க்ஷேபமறிய மார்க்கண்ட வரப்பிரசாதமும் கொடுத்து மனுகுல சக்கிரவர்த்திகளைப்போலே யிருந்து பூமிபாரந்தாங்கி உலகங்களையெல்லாம் பரிபாலனம் பண்ணிக் கொண்டிருக்கச் சொல்லி அதற்குச் சகாவாய் அவர்களுடைய கெடிஸ்தலமான பிரான்மலைகிரித் துர்க்கத்திலேயும், திருப்பத்தூர்க் கோட்டை தாண்யத்திலேயும், நாம் அரசிருப்பாக இருந்து கொண்டு அந்த மகாராஜகுமாரன் சென்ற திசைக்கெல்லாந் திசைக்காவலாக நாமே முன்னின்று ஜெயக்கொடி கொடுத்து விருதுகட்டிக் கொண்டிருக்கிறோமென்று சகல தேவதைகளும் இந்த அகண்ட பூமண்டல விஸ்தீரணத்திலேயிருக்கிற ஐம்பத்தாறு தேசத்து இராஜாக்களும், சர்வசனங்களுமறிவார்கள். நாமே அந்தத்துரைகள் சிகாமணியாயிருந்து ஜெகத்தை ரெக்ஷிக்கிறபடியினாலே உங்கள் காரியத்துக்கு நாமும் கூடச் சொல்லி வைத்து உங்கள் மனதின்படியே சுபிக்ஷம் பண்ணித் தருகிறோம். என்று திருவாய் மலர்ந்து திருவுளம் பற்றினார். இத்தனை காரியக்காரர்கள் சொன்னதிலும் முத்துவயிரவத் தேவரவர்கள் சொன்னது கர்ணமிருதம் போலே யிருந்தது பூரித்து அதிக சந்தோஷமாய் அடியேங்களுக்கு வேத லிகதம்போல் நம்புதலாய் சகல இனமுறையாரும் மகிழ்ச்சியாய் நல்ல காரியமென்று கும்பிட்டுக் கொண்டு அச்சுதப் பெருமாளய்யங்காரிடத்தில் வந்தோம். அவர் வருகிறபேர்களெல்லாம் நம்மைத் துளசி தீர்த்தம் கொள்ளுகிறீர்களென்று ஒரு கையில் சங்குப்பிள்ளையையும், சாளக்கிராமத்தாரையும் ஆஜராக வைத்துக் கொண்டு சக்கிரபாணி அய்யனையும் சேத்திக்கையாய், வைத்துக் கொண்டு, நாம னூராரை நெத்தியிலே இரண்டு வகுப்பாய்ப் போட்டுக்கொண்டு, நடுவே சூராணத்தாரையும் தோன்றப் பண்ணிக் கொண்டிருந்தார். அப்போது போய்க்கண்டு கும்பிட்டுச் சேதி சொன்னோம் அவர் சொன்ன சேதி, "நாம் எல்லாவற்றிற்கும் படியளக்கிறோமென்று பேராய் நமக்கொரு இடைவெட்டுச் சக்கிரமல்லாது வேறே ஆஸ்தியுமில்லை. நாம் பிழைத்த பிழைப்பு நம்மைச் சேஷப்பையன் தாங்காமற் போனால்கடலேகதியாப் போகிறதேயல்லாமல் வேறேயிடமுமில்லை. அப்படியிருக்க முன்னமே காற்பங்கு நிலம் உழுதவிடத்திலேயும் போர்க் களத்திலே கதிரை ஒளித்தவனென்னும் காட்டிக் கொடுத்து நமக்கு ஒருவராகன் அவதாரம் வந்தது. நம்முடைய சேசட்டால் (நரசிம்மாவதாரம்) இளிச்சவாய்ப் பெத்தானென்று சொல்லுவார்கள். அப்படியிருந்தது நாம் பிறந்த விசேஷம். ஆனாலென்ன நம்மை ஆண்பிள்ளைச் சிங்கமென்று சொல்லுவார்கள். நம்மைப் பார்க்க உங்களுக்கு கண்ணுக்குக் கறுப்பாயிருந்தாலும் நம்மிடத்திலே ராஜலெக்ஷிமியிருக்கிறபடியினாலே நம்மைக்குறித்து வந்தது சரியே. நமக்கு மழையைத் தடுக்கவும் கொடுக்கவும் வல்லமையுண்டு. மேய்ப்பவன் கண்ணிலும் உடையவன் பிடரிதாழ் வில்லை, என்றது போல நாம் உங்கள் காரியத்திலே கண்ணுண்டாய்ப் பார்த்துக் கொண்டிருந்து காப்பாத்துகிறோம், பயபீதி வேண்டாம் என்று திருவுளம் பற்றினார். நல்லதென்று கும்பிட்டுக் கொண்டு சாத்தாவுடையாரய்யன் கிட்டவந்து கும்பிட்டுக்கொண்டு அவருக்குப் பரிதானமாய் குசக்குடியிலிருந்து சில குதிரைகளும் அழைப்பித்துக்கொடுத்து வருஷக்கட்டளைப் படிக்கு பத்தேறுமாடு அவர் வாசலிலே கொண்டுபோய் கட்டி சேதி சொன்னோம். அவர் சொன்ன சேதி, நாம் தாயில்லாப்பிள்ளை, தகப்பமார் ஆண்டியும் தாதனும் நாம் உங்கள் ஊர்க்காவற்காரன். நமக்கு எந்தக்குசப் பட்டணகிலும் வந்து கைகாட்டினால் ஜீவனம் பண்

ணிக்கொண்டிருக்கிறோம். நம்முடைய சங்கையைக் கேட்டால் அதொரு தெருக்கூத்துகளா யிருக்கும். நம்முடைய சேதியறிந்து வந்தது சரியே. எந்தக் காரியத்துக்கும் சாத்தா, சடையா? என்று ஒரு பானை பொங்கலிட்டு முடிச்சுப் போடுங்களென்று சகலரும் நம்மை நினைத்துச் சொல்லுகிறதினாலே நாம் முன்னின்று உங்கள் காரியம் சுபிக்ஷம்பண்ணித் தருகிறோம். என்று நம்பிக்கையாய்ச் சொன்னார். நல்லதென்று கும்பிட்டு அனுப்பிவித்துக் கொண்டு வந்து பிரம நயினார் அய்யன்வகைச் சனங்களும் ஆறுமுகப்பண்டாரத்தார் வகைப் பரதேசிராணுக்களும் பூசை போசனம் வடிப்பமாய் மத்திலிச்சு இந்த மட்டுக்கும் காரியக்காரருக்கெல்லாம் நல்ல வார்த்தை சொல்லிபோட்டு அவரவர் இச்சையிலே வந்திருந்தோம்.

மழைபெய்து நாடுசெழித்தல்

அதன்பிறகு முன்னாலே இராஜகரத்தார் வகை ஸ்தான பதிகள் சொன்னதினாலும், அடியேங்கள் உபசாரம் பண்ணின காரியக்காரர் சொன்னதினாலும் இராஜஸ்ரீ கர்த்தாக்கள் சமூகமட்டுக்கும் அறிக்கையாச்சுது. அவர்கள் அச்சுதப் பெருமாளய் யங்காரை யழைத்துத் திருவுளம்பற்றி, அவர்களும் அமராவதி தேவரிடத்திலே உத்தாரம் பண்ணி, அமராபதித்தேவர் மேகனன்சேர்வைகாரனை அழைத்து கோபப்பிரியமாகச் சேதி சொல்ல, மேகனன் சேர்வைகாரனுக்கு மேல்காரியக்காரர்களாக விருந்த ஒன்பது வீட்டு காரர்களும் ஒருவர்க்கொருவர் பகையில்லரமலிருக்கும் ஸ்தானங்களிலிருக்க அந்தச் சேதி யறிந்து நாவலோகம் பெருந்திவிலிருக்கிற குடியானவர்கள் வருஷக்கட்டளை வரவில்லை என்று முறையிட்ட சேதிராஜ ஸ்ரீ கர்த்தாக்கள் சமூகமட்டும் அறிந்து அவ்விடத்திலே விசாரிப்பாகி காரியக்காரரை கோபித்துக்கொண்டு திருவுளம்பற்றினதினாலே எல்லாருங்கூடி மேகனன் சேர்வைகாரனைப் பயணம் பண்ணி இருக்கிறோம். இப்படி ராஜகாரியம் துரிதமாய் நடக்கிற சமயத்திலே நாம் விகடித்துக்கொண்டு இருக்கப்படாதென்று இனிமேல் ஒரு சேகரநன்மையா யிருக்க வேணுமென்று யோசனைபண்ணி ஆதித்தமய்யன் முதல் ஒன்பது வீட்டுக்கிரகஸ் தாளும் சமாதானப்பட்டு அவரவர் எதாஸ்தானங்களிலே செம்மையாக வந்திருந்தார்கள். அந்தச்சேதி மேகனன் சேர்வைகாரன் அறிந்து நமக்கு மேற்காரியக்காரர்கள் உலைசல்தீர்ந்து வருஷக் கட்டளைக்கு எத்தனம் பண்ணுகிறார்கள். நாம் இனிமேல் அசந்திருக்கக் கூடாதென்று மேகனன் சேர்வைகாரன் அந்தக்ஷணமே புறப்பட்டு கடலாடிச் சந்தை வர்த்தகரிடத்திலே போய்விழுந்து நீர் தந்தால் போதுமென்று பலிசைக்கடனாக வாங்கிக் கொண்டு வந்து கெர்ப் பத்துக்குள்ளே வைத்திருந்தாற்போலே வைத்திருந்து அடியேங்களுக்கு வருஷக்கட்டளை கொடுத்துவரச் சொல்லி அவர்வகை மாரியப்பன்சேர்வைகாரனை இவ்விடத்துக்கனுப்பி வித்தார். அவர் வருகின்றபோது சும்மாவராமலிவ் வேழைக்குடியானவர்களுக்கு இத்தனை சறுவென்னவென்று வில்லியப்பன் சேர்வைகாரனை ஒரு கையிலே வளைந்து கொள்ளச் சொல்லி மின்னிட்டாய்குடியாரைப் பதுங்குப் படையாய் காட்டி மறைத்தாற் போலேயுமெளியம்பாகவும் வரச்சொல்லியும், காத்தவராயன்சேர்வைகாரனை இலைகொலுவிலே விட்டடித்துக் கொடுமுடி கொண்டு மண்டலமாணிக்கத்திலே வந்திறங்கிச் சண்டை தொடுத்தார். அவருமவர் படையும் சீறியடித்து ஒவ்வொரு எடுப்பு வந்தெடுக்கிற போது சகலமும் நடுநடுங்கி எல்லோரும் வெளிப் புறப்பட மாட்டாமலிருந்தார்கள் இப்படி மேகனன்சேர்வைக்காரனும் தளமும் வந்து தலைப் பட்டு பத்துநாள், இருபதுநாள் வரைக்கும் அடைத்துக்கொண்டு மூச்சுவிடாமல் அடிக்கிற போது நெடுமரத்தார் பயந்து நடுநடுங்கி ஆலங்காய் அத்திக்காய் கொண்டுவந்து கொட்ட கீழும் மேலும் சுராணிப் போச்சுதென்று தாங்கமாட்டாமல் கோட்டைப் பட்டணத்தாரெல்லாம் அடித்து விழுந்து உருண்டுகிடக்க குடிக்காட்டு வட்டகையிலே ஊத்துக்குளத்தார் வந்து புகுந்து நகநகத்துக் கொண்டு கிடக்கண்டவிட மெல்லாம் சேத்தூரார்கள் கொளகொளவென்று கிடக்க, பசுக்காரம்பட்டி யாரும் தமராக்கி ஆட்டாங்குடியாரும் கொடுகொடுத்துக் கொண்டு திரிய, அவர்களிடத்திலே சிறிகானப்பேயார் வந்து கட்டியேரி சாலாங்கரை வாய்க்கால் பண்ணை

கண்டவிடமெல்லாம் மொச்சுப் பிடுங்கிக் கொண்டிருக்க, கிடாவிழுந்தான் வாடியாரும் எருமைப் பள்ளத்தாரும் சட்டை பண்ணுமல் திரிந்தார்கள். இப்படி மாரியப்பன் சேர்வைகாரன் வந்து சண்டை கொடுத்து மண்டல மாணிக்கத்தாருக்கு சந்தோஷமுண்டாக வெகுமதி கொடுத்துப் போட்டுப் போனதின் பிறகு அவர் புறத்து ராணுவும் மண்டல மாணிக்கத்திலே வந்த ராணு வில் அநேகம்பேரும் முறித்துக்கொண்டு காவேரியம்பிள்ளைக்குள்ளே விழுந்து திட்டிக்கோட்டை, திடல்கோட்டை மட்டும் கரைகடந்தோடி சங்கமுகத்திலேபோய் தலைவைத்தார்கள் பின்னையும் அநேகம்பேர் வைகை காவலம்பிள்ளை, சிந்து பூந்துரையா பிள்ளைக்குள்ளேயும் விழுந்து கடற் கரை முகத்திலேபோய்ச் சேர்ந்தார்கள். பின்னும் அநேகம் பேர்கள் ஆத்தங்குடி முகத்திலே விழுந்து அகப்பட்டதுகளைச் சுருட்டிக்கொண்டு சங்கமுகத்திலேபோய் கலந்துகொண்டார்கள். பின்னும் சிலர் மதகுப்பட்டி மார்க்கமாய்ப்போய் தங்கள் புறத்தாரிடத்திலே சேர்ந்துகொண் டார்கள். மற்றப்பேர்கள் உடைகுளத்தாரும், சேத்தூராரும் நந்தை பொருக்கியுமாக இருந் தார்கள். அப்படி இளைத்தவிடங்கண்டு முறித்துக் கொண்டுபோகிற மாரியப்பன் சேர்வைகாரன் பிரளயத்தை மரிக்கவேணுமென்று சில குதிரைகளைக் கொண்டுபோய்விட்டு பிரத்தியிலே நிறுத்திக்கொண்டு (வைக்கோல்செத்தை) பாம்பன்துரையாரையும் நிலை கொலுவிலே விட்டு மரித்துக்கொண்டு ஒருவெட்டு நல்லவெட்டாய்வெட்டி மேல் பலப்படக்கட்டி உடகுளத்தாரை கெட்டிப்படுத்தி மாரியப்பன் சேர்வைகாரன் புறத்து ராணுவை இறுக்கித் திடப்படுத்தினேம். அதன்பேரில் வண்டலும்வர வணியுமாய் ஓடித்திரிந்த மாரியப்பன் சேர்வை காரன் புறத்து உபயவெள்ளமும் நின்று தத்தளித்து நமக்குப்புகலிடம் எங்கேயென்று பார்த்துத் தெளிந்து, ஸ்ரீமது இராஜாதிராஜன், இராஜபரமேசுவரன், பொறுமைக்குத் தர்மர், புகழுக்கு வள்ளல், அறிவுக்கு ஆதிசேஷன், அழகுக்கு மன்மதன், வில்லுக்கு விஜயன், மல்லுக்குவீமன் சொல்லுக்கு, அரிச்சந்திரன், தமிழுக்கு அகஸ்தியன், படைக்கு வேல்குமரன், பரிக்கு நகுலன் குடைக்குக்கர்ணன், கொலுவுக்குபோஜன், நிதிக்கு குபேரன், நிரைக்கு பரதன், மதிக்குஜனகன், வாளுக்குவிமன், இராமாவதாரன், இராஜகுலதிலகன் சோமாபிராமன், சொரிமுத்து வன்னியன், விராதிவீரன், விரகாண்டிபன், பாராளவந்த பரராஜசிங்கன், வடகரைப்புலியன், காராளகண்டன் குடதிசைக்கரசாய் குவலயம் காத்தோன், அசுபதிநரபதி அளவிலாகெஜபதி சேதுபதிமெச்சிய விஜயலெக்ஷுமிவிலாசன், மனுகுலபூமன், மனுசக்கர வர்த்தி மனுநீதிபிறக்கும் மண்டலாதிபதி, பாதாளகிரீடி, பாதாளசூரன், துரைகள் நரேந்திரன். துரைகள் சிகாமணி, புகழ்பெருராஜபுலி, புலிக்குட்டி, ஜெகராஜசிங்கம், சிங்கத்தின் கன்று, நிருபசங்கிராமன், நித்தியகலியாணன், கெருடடால்விருது கேதனசமுகன், படிநெறு நெறனப் பாரினில் நிருபர் முடிகளையிடரும் மும்மதயானை, தடதடவென தத்திமியெனவே, நடமிடுபுரவி நடத்திய சக்கிரி, உம்பளச் சீமை கொப்பமிடென்று, கம்பளத்தரசர்கப்பமிடுவர் சலான், சிங்களர் மராடர் சீனர் கரனுடர், கொங்கள வங்களர், குடகர், கலிங்கர், வடகர் கலியாணர் மதகர் யாழ்ப்பாணர், நிடதர் குச்சலர்கள் நிதியொடு விரர்கள், சிவிகை வெண் கவரி, சித்துரம் புறவி, நவநவமணிகள், ரத்தினபரணம், தொகையிடு திரைகள் சொரிந்து முன் வணங்கும், புகழ்தனையேறு புவனதெய்வேந்திரன், ரணமுகசூரன் ராயர் பால்வரினும், ரணமுக முனைசெய் ராயராணுவிரன், வாலசுஜிவகன் (வதனசந்திரோதயன், தாலிக்குவேலி சமஸ்தான பூபதி, அஷ்டலெட்சுமி விளையாடும் வாசலினன் துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனம், முத்தமிழ் பிரசங்கன் முல்லை மரலிகையான், நித்திய மார்க்கண்டன் கிதமாமேரு, நிரைதமிழ் பயிர்க்கு நிதிசொரி மேகம், திரமெனவிளங்கும் தெய்வசகாயன், வயிரவமூர்த்தி வரப்பிரசாதம்பெரு, தைரியம் வளரும் சமஸ்தானத்தரசு, பெரும்புவி பிறக்கும், பிரபலசக்கிரேசுவரன் அருங்குமந் தாபுரி ஆதிக்கம் பெற்றேன், மகாராஜமான்னியராஜஸ்ரீ, நாலுகோட்டை பாஷா சிவகங்கைக் கரசு ராஜஸ்ரீ கர்த்தாக்கள் அரசுநிலையிட்ட விஜயரகுநாத சசிவர்ணமுத்து வடுகநாதேந்திர பெரிய உடையநாயக சுவாமியவர்கள் நேத்திரவிக்ஷணகிருபாசமுத்திர மத்தியிலே நாம் அணை வாயிருந்தால் தரிகொண்டு பிழைக்கலாமென்று திடசுத்தியாய் மாரியப்பன் சேர்வைகாரன்

வகை உடையவெள்ளஞ்சேனையும் ஒருமித்து அருங்குளத்தூர் ராஜவர்க்கத்தினுடைய காலில் வந்து விழுந்து, அவர்கள் அணையிலே வந்து விழுந்து, அவர்கள் அணையிலே நெருங்குகிற குளத்தூர், பெரியகுளம், குளமங்கலம் இந்த வட்டகையிலுண்டான புறவுகளிலே எல்லாம் வந்து அமர்ந்து மிதமிஞ்சிப் போகிறோமென்று சொன்னபேரை கலிங்கத்தூர் பாதையாய் விட்டுப்போட்டு, அதிபெருக்கத்தோடுங்கூட இருந்தார்கள். ஆகையினாலே மாத்ததிகமான தங்கத்திலே வைத்த விலைமதியாத ரத்தினம் போலே அருங்குளத்தார் அணைவிலேவந்த மாரியப்பன் சேர்வைகாரன்புறம் மண்டல மாணிக்கத்து வட்டகையாருக்கு வருஷக்கட்டளை சம்பூரணமாய் கொடுத்தபடியினாலே மண்ணடி மங்கலத்தாரெல்லாரும் குளுமை பிறந்து மெத்தச் செழிப்பாயிருந்து புல்லமங்கலத்தார் முதலிய பேரெல்லாம் வளர்ந்தேறியிருந்தபடியினாலே முன்னாலேதாபந்தமாயிருந்த மாடக்கோட்டையார் ஆட்டாங்குடியாரெல்லாரும் பொசிப்புக்குத் தாக்ஷியில்லாமல், சுகஜீவனம் பண்ணிக்கொண்டு பலுகியிருந்தார்கள் பின்னையும் காட்டார் வகையில் பாலையப்பட்டி, புரசம் பட்டி; விளாங்காட்டூர். கொன்னைக்குளம், ஆத்திக்காடு காஞ்சிரவயல், கேத்தாங்கால், வாகைக்குடி, சுண்டைக்காட்டூராரும், முள்ளூரார்வகையில் உடைகுளம் வேலங்குளம், கருங்காலிப்பட்டி, வன்னிக்குடி, காரையூர், பூலாங்குறிச்சி, சூரைக்குடி, இண்டங்குளம், இலந்தைக்குளம், குமிழேந்தல், குருந்தனக்கோட்டை கள்ளிவயல், கிளாமடம், கத்தாழம்பட்டு, முள்ளிச்சேரியார் இவர்கள் முதலாகிய பேரும், கொடிக்குளத்தார் வகையில் முசுட்டைக்குறிச்சி, முன்னைப்பட்டி பசலையார், ஊலையூர், கட்டுக்கொடிப்பட்டியார், பெரண்டைக்குளம், கோவானூர், அப்பயநாயக்கர்புறமும், ஆக இந்த மூன்று வகையிலுண்டான பேரும் சோலையூரார்வகையில் ஆலம்பட்டு அரசங்குளம் இத்திக்குடி இலுப்பைக்குடி, புளியங்குடி, மாங்குடி, பலவாங்குடி, நல்வலத்தாவு நெல்லிக்கொண்டான் கரை, கடம்பங்குடி மருதவயல் வேப்பங்குடி, அத்திக்குடிபனையூரார் இவர்கள் முதலாகியபேரும், கொத்தியார் தோப்பு ஜனங்கள் வகையில் பாதரக்குடி, மகிழ்வனம், புன்னையூர், செண்பகநல்லூர், மூங்கில்பண்ணை, தென்னவராயன் புதுக்கோட்டை, கமுதி, வாழைத்திடல், கரும்பாகூட்டம் மஞ்சள்கேணி, நார்த்தமாமலை, காரையூர் பெருங்கரணை, வள்ளியூர், செங்கீரை, பூஷணிக்காடு, கத்திரிப்பண்ணை, இவர்கள் முதலாகிய பேரும் மணமேற்குடிச் சேர்வை வகுப்பில் முல்லைக்குளம், மல்லிகைப்பட்டி, அரணிக்கோட்டை, நந்தினம், சிலந்தியப்பன், பச்சையப்பன், சிவக்கொழுந்து, பிச்சிப்பிள்ளையேந்தலார், வில்வைப்பத்திரியேந்தல், கொன்னைப்பட்டியார், இவர்கள் முதலானபேரும். ஆக இந்தவகுப்பிலுண்டாகிய பேரும் வளர்த்து பராமுகமாகி முன்பட்டபாட்டையெல்லாம் உதிர்த்துப்போட்டுத் தழைத்துப் பூத்துக்காய்த்து பழுத்தபழம்போல் சுகமாய் இருந்தார்கள். அப்பால் சிங்கங்காட்டார் வகையில் புலிவலம், ஆனைவாரி, ஒட்டங்குடி' காட்டுமாடன், பன்னிமாடனுடனே முயலனிப்பட்டியார். மானூர், மரையூர், புல்வாய்க்கரை கலையூர், நரிக்குடியார் ஒரிதியூர், வெருகனூர், (ஆண்பூனை) கிளிக்குடி, உடும்பூர், ஒந்தாங்குடி அரணையூர், வெள்ளெலிப்பட்டி, அணியவயல், தேளூர், பாம்பூர், இவர்கள் முதலான பேரும், பரவைக்கரகுயிள்ளை வகையில் கொடாந்திரி பண்டிதருடனே கூடின அன்னவாசலார், கொக்கூரணியார், குருநாடிப்பட்டியார், காக்காங்குளத்தார், பிராந்தைமங்கலம், கூகைமுத்துப்பட்டி, ஆந்தைக்குடியார், மயிலாப்பூரார். கிளியூர், காடைக்குறிச்சியார், சேவலூரார், பிராப்பிறக்குப்பட்டியார், வண்டுவரை ஈகரையார், எறும்புக்குடி, விட்டிலிப்பட்டியார், இந்தவகை ஜனங்களும், அவரவர் வகுப்பிலுண்டானபேரும், அவரவர் இச்சையிலே தன்பிழைப்பாய் பிழைத்துக்கொண்டு சுகமே திரிகிறார்கள். 'அப்பால் குளத்தூரார், வகுப்பில் தாமரைக்குளத்தார். குவளைவேலியார், சிராம்பலார், கொட்டியூரார், கோரைப்பள்ளத்தார் வள்ளிக்குளத்தார், பாசிக்குடியார், இவர்கள் முதலானபேரும், அவர்களுக்குள்ளே விரால்குளத்தார். மீனாக்ஷிநாதன புறத்தார், முதலைப்பட்டியார், ஆமாத்தூரார், திருத்தவளையார், கங்கங்குளத்தாசிப்பியேந்தலார் நண்டுவெட்டி, நத்தைபொருக்கி ஊமச்சிகுளத்தார் அட்டைப்பட்டியார் முதலான

பேரும் இருக்கிற இடங்களெல்லாம்நாமே நீர்நீரே நாமென்று உறவுசெய்து ஜீவனம் பண்ணிக் கொண்டு சுகமே இருந்தார்கள். ஆகையினாலே இத்தனை இனமுறையாரும் காரணதயவு பண்ணினது அதிசயமாயிருந்தது. எப்படியிருந்ததென்றால், மதுரை மண்டலத்தில் கம்பர் வந்திருந்தபிறகு வடகலை வேள்விநாட்டு நாட்டரசங்கோட்டையில் வடக்குவாய்ச்செல்வி கண்ணுடையநாயகி அம்மன் களியாட்டத்திருநாளில் நாலாயிரம் பதினாயிரம் துள்ளு பரிகொண்டு சன்னதிவாசலில் மதுகுடங்கள் முன்னிலைக்கு பெலிகொடுக்கிறபோது அணுவளவு ரெத்தம் பொசியாத காரணம்போலே முன்னமே மாரியப்பன் சேர்வைகாரன் சற்று தரிசினபடியினாலே குளங்கள் கிணறுகளிலெல்லாம் ஒருதினையளவு தண்ணீர்பொசியாமல் அருநீர்ச்சமயமாகி ஜனங்கள் அவதிப்பட்டதினாலே மாரியப்பன் சேர்வைகாரனுக்கு தயவுவந்து சந்தத்தாரையாய் வருஷக் கட்டளை சொரிந்தது எப்படியென்றால், அந்த மகமாயி கண்ணுடையநாயகி கடாக்ஷவிக்ஷண கிருபையென்கிற வெள்ளம் பெருகிச் சொரிந்து ஜகத்தை இரக்ஷிக்கிறதுபோலே மாரியப்பன் சேர்வைகாரன் மனசுவைத்துவருஷக்கட்டளைசமர்த்தியாய் வருஷித்துகாப்பாற்றினார். ஆனபடியினாலே அடியேங்களும் இனமுறையாரும் முன்னமே வெகுதாவந்தப்பட்டு எடுபட்டுப் போகிறதாயிருக்கிற சமயத்திலே மாரியப்பன் உதவிகொண்டு ஜீவன்பிழைத்த அதிசயம் எப்படி இருந்ததென்றால் அந்தக்களியாட்டத்தில் கண்ணுடைநாயகித் தாயானவள் புதுமை காண்பிக்கும் பொருட்டாய் அவளுடைய திருநாள் தினத்திலே யாராகிலும் வீட்டிலே அவித்த நெல்லுகள் நன்றாய் ஆவி பரியும்போது ஒவ்வொரு இரைநீளம் முளைபரிந்து பானைவாய்க்குமேலே முளைநிற்கும். அப்படி அந்த அம்மாளுடைய அதிசயம் அவித்தநெல்லு முளைத்தாற்போல முன்னமே வெகுதாவந்தப்பட்டு அவித்தநெல்லுப்போலே இருந்த சகலஜனங்களும் இனமுறையாரும் அந்தநெல்லு மூன்றாங்கொம்பு முளைத்ததுபோலே மாரியப்பன் சேர்வைகாரன் தயவினாலே ஒருவருக்கும் தாவந்தமில்லாமல் புனர்ஜென்மமாகப் பிழைத்துக் கரையேறி அடியேங்களும் எங்களுக்குத் துணையாக கட்டளையிட்ட எறும்புக்குடியார்முதல் யானையூரார் வரைக்குண்டான நடக்கையுள்ள பெரும்புள்ளங்குடியார் முதல் மலையாளத்தார்வரைக்கும் நின்று நிர்வகிக்கிற நிலையூர் ஜனங்களும் இந்தவகையில் எண்ணிறந்த கோடிஜனங்களும் சூரிய உதயம் கண்டதாமரைபோலவும், சந்திரோதயம் கண்ட செங்குமுகம் போலவும், மழைமேகம் கண்ட மயில்கூட்டம் போலவும், தாய்முகம்கண்ட பிள்ளைபோலவும் மாரியப்பன் சேர்வைகாரன் முகம் கண்ட்மாத்திரமே சோபங்களெல்லாம் நிவர்த்தியாகி சந்தோஷகரமாய் ஸ்ரீமது ராஜஸ்ரீ கர்த்தாக்கள் முத்துவடுகநாதேந்திரசுவாமி கிருபாகடாக்ஷத்தினாலே சகலரும் பிழைத்து வேறு கவலையில்லாமல் அதிக மகிழ்வாய் இருந்தோம்.

விவசாயம்

அதன்பிறகு நாம் இனிமேல் விவசாய ரசவாத முயற்சி நடத்தவேணுமென்று யோசனை பண்ணி உழக்குடிக்கு எத்தனம்பண்ணி செய்யாளுரையும் திரப்படுத்த வேணுமென்று அவர்களுக்கு கிடைகிளப்பி உரப்பிலியூரும் (தழைகள்) குழைக்கட்டப்பட்டியும் விட்டுக்கொடுத்து குளமங்கலத்து வட்டகையாருக் குள்ளிருக்க திருப்புனவாசலாரை நீர்மடையூர் மார்க்கமாய் கொண்டுவந்து செய்யாளுரிலேவிட்டு காளையார் கோவிலாருடனே கிடாவிழுந்தான் வாடியார் எருமைப்பட்டியார் இம்மூன்றூரார் கழுத்திலே நகமங்கலத்தாரை வைத்துக்கட்டி ஏறியூராரை வட்டம்பட்டியாரைக் கொண்டிறுக்கி மேழியூராரைக் கலப்பையூராரிடத்திலே சேர்த்து, கலப்பையூராருக்குள்ளே கொண்டியூராரை இணக்கி கொண்டியூராருக்குள்ளே கொழுவூராரை ஒப்படைத்து, செய்யாளுரிலேவிட்டு பிள்ளையார் நத்தத்துச் சாலைப்பாதையாய்த் தெற்கும் வடக்குமாக நாலுநடமிட்டு அடிக்கும்போது தெளிச்சாத்தனூருக்குக் கரைச்சல் வந்துவிட்டது. உடனே பரம்பைக் குடியாரைவிட்டு ஒப்புறவு பண்ணினதின்பிறகு நன்றாய் வளப்பட்டார்கள் பின்புகோட்டைத் தாணயத்தில் போயிருந்த விராருயச்சிலை முதலியாரைக் கூட்டிவந்து

நீர்மடையூச ரிடத்திலே ஒப்பித்து வைத்திருந்து இரண்டுநாள் கிரமித்துப் பார்க்கும்போது அவர்களுடைய உட்புலனெல்லாம் வெளிக்கு வந்துவிட்டது. பின்பு தெளிச்சாத்தானூரிலே பொழிமிச்சம் பார்த்துப்போட்டு ஏரியெரிஞ்சாற்போலே ஒரு நிரந்தரப்படுத்திப் போட்டதின் பிறகுவயலூரார் பொன்னுத்தான் சேர்வைகாரன் புறத்தாரைச் சமயம்பார்த்து பள்ளத்தூரார் போய் பரித்தும்போட்டார்களென்று வந்து சொன்னுர்கள். அந்தக்ஷணமே புறப்பட்டுப்போய் அந்தப் பரிமுதலையெல்லாம் எண்ணிக்கைகொண்டு அவர்களுக்குச் சிறிது துகை கூலி கொடுத்துப்போட்டு கொடிமங்கலத்தாரைக்கொண்டு குப்பப்பிச்சன் புறத்தாரைப்பிடித்துக் கட்டிக்கொண்டுவந்து சேத்தூரிலேப்போட்டு இனிமேல் இவர்களை பலப்படுத்தி வைக்கவேணு மென்று செய்யாளூர் வயலூரிலே வணங்காமுடி அம்பலகாரனை நாட்டாண்மையாகப் பதிவித்து நாளுக்குநாள் தலையெடுத்துவளர்ந்து சமத்தனுனுர்கள்.' அவர்களுடனே பழங்கா நத்தத்திலேயும், வெட்டுக்காட்டிலேயும், தொண்டி வட்டகையிலேயும், புதுக்குடியாய் கம்மங்காடு சோளவந்தான், வரகுணமங்கலம், எருக்கங்காடு, எள்ளுக்கோட்டை, கொள்ளிடம், வாலிகொண்டபுறம், உளுந்தூர், துவரிமான், ஆமணக்க நத்தம், பருத்தியூர், பயத்தம்பட்டி இந்த வட்டகையாருடனே சாமினுதபிள்ளையும் வந்து குடியேறி காடுவெட்டி அம்பலகாரருக்குள்ளே பகமையாயிருந்தார்கள். இந்த இரண்டுவகைப்பேரும் கிளைப்பெருக்கமாய் வருகிற சமயத்திலே சப்பாணியென்றும், கொக்குப்பிடிக்கியென்றும், தாழையூரார், பாஞ்சாளக்குரிச்சியார், விட்டெலிப்பட்டருடனே சிறிது குழலகாரர்கள் அவர்களுக்குள்ளே வந்து புகுந்து அரைக்கப்பண்ணினுர்கள் அப்போது ராஜஸ்ரீ கர்த்தாக்கள் உத்தாரப்படி (விபூதி) விபீஷணன் சேர்வைகாரனைவிட்டு சீட்டு வாங்கிக்கொடுத்தோம். அதைக் கட்டிக்கொண்டதின்பேரில் அவர்கள் ஒதுங்கிப்போனுர்கள். அதன்பிறகு வணங்காமுடி அம்பலகாரன் புறமும் காடுவெட்டி அம்பலகாரன் புறமும் பெரிய மனுஷாளாய் பொதியப்பன் சேர்வைகாரனை சிலதுநாள் வைத்திருந்து பின்பு, கதிர்காமன் பிள்ளையை முகாண்மையாக வைத்துக்கொண்டிருந்தார்கள். இப்படியிருக்கையில் காட்டுர் மயிலப்பன் சேர்வைகாரன், பண்ணிக்கொண்டான், மானூர், மரையூர், புலவாய்க்கரை முயலனைப்பட்டி, கலியூர், காடைக்குரிச்சி, சேவலூர், கிளியூர், வெள்ளெலிப்பட்டி, சிறபிலிக்குட்டி சேர்வைகுருவி கொண்டான்பட்டியார் இவர்களெல்லாம் கூட்டம் கூடிவந்து அடித்துப்பரித்து அலம்பல் பண்ணி சிறிதுபேரையும் உரிவினகோலாய் விட்டு விட்டார்கள். அதற்கு உபாயம்பண்ணி கட்டப்பொம்ம நாயக்கரையும் தீத்தாரப்பன்சேர்வை காரனையும் நாலுதிசைக்கும் காவலாய்ப் போட்டு தொக்கிலவார் தொட்டியாரையும் சுத்திக்கட்டிக் காக்கச் சொல்லி திட்டப்படுத்தினதின்பிறகு அந்தக்கூட்டப்படைக்காரர்கள் கண்டொதுங்கிப்போனுர்கள். அதன் பிறகு காடுவெட்டி அம்பலகாரன் புறத்தார் நாளாவட்டத்திலே பசப்புமுத்தினதின்பேரில் ரொம்பவும் முளுக்கிறுர்களென்று பள்ளத்தூரார் வந்து சொன்னுர்கள். உடனே அறுப்புக்கோட்டையாரைக் கொண்டுபோய் விட்டு கவ்வைபார்த்து அடிஅடியென்று அடிக்கிறபோது துகவூரார் வந்து வெளியேறினுர்கள். அப்பால் அவர்களை வெவ்வேறே முதலாளியாகப்பண்ணி கீழ்க்கோட்டையிலேயும் தொம்பளாக்குடியிலேயும் தாணயம்பண்ணி யிருக்கச்சொல்லி திட்டப்படுத்திவைத்தோம். அவர்களுக்குள்ளே சோளராஜாவும் கம்பருங்கூட வந்திருக்கிறபடியினுலே அடியேங்கள் வேறு கவலையில்லாமல் சாப்பிட்டுப்போட்டு கும்பகர்ணப்படலம் வாசித்துக்கொண்டிருந்தோம் அந்தக்காடுவெட்டி அம்பலகாரனுக்குள்ளே இருந்த ஆமணக்கு நத்தத்தாருக்குள்ளே சொத்துக் கணக்காயிருந்த முத்துப்பிள்ளையை வெளிப்பண்ணி அவருக்கு உண்டான தொழிலைக் கொடுத்ததின்பிறகு அதிலே அவர் மெத்த மிதப்பானுர். அவரை எண்ணைக்கும் வீட்டிலே இருக்கச்சொல்லிப் பண்ணிவைத்தோம். பின்பருத்தியூராருக்குள்ளே யிருந்த உச்சிவெடிச்சான் பட்டியாரைக் கைப்பிடியாகக்கொண்டுவந்து பிச்சப்பிள்ளையேத்தலாரிடத்தில் ஒப்புவித்து வைத்ததில் அவர் நன்னிக்குன்னியெல்லாம் தள்ளிப்போட்டு மத்தப்பேரை மலைக்குடித துருவத்திலேபோட்டு நெருக்குகிறபோது பஞ்சனன் சேர்வைகாரனைப்

பிடித்து முன்னுக்குத் தள்ளிப்போட்டு கொட்டக்குடியார்பிறகே நின்றுவிட்டார்கள். அவர்களுக்கு வில்லூரார்வந்து ஒத்துக்கொண்டு வெட்டிச் செலுத்தினதின்பேரில் தெரிந்து வெவ்வேறே திரண்டு திரண்டிருந்தார்கள். ராட்டுமேல் ராட்டுவகை மாலையணன் கருக்காயிருந்து வளைய சுத்தமாய்ப்பார்க்கிறபோது இளையாங்குடியாரெல்லாம் கருதுப்பட்டியிலே வந்தொதுங்கினுர்கள். அவர்களை திரிக்களக்குடியிலே சேர்த்துநெய்வாசலாரிடத்திலே நிரையாயிருக்கட்டுமென்று ஒப்புவித்தோம். அவர்களைக்கொண்டுபோய்க் கஞ்சியும். தண்ணீருங் கொடுத்து பாவாகுடியிலே ஒடென்றுவிட்டு திரும்பபடமாத்தூரிலே கொண்டுவந்து நாடாக்கள் முன்னிலைக்குபோக்குவரத்துப் பண்ணினதின்பேரில் சிட்டைக்கட்டி சோமநாதபிள்ளை வேட்டியப்பன் சேர்வைக்காரன் சவுரிமுத்தாப்பிள்ளை இவர்களைச் சேகரப்படுத்தி உள்ளதெல்லாந் தட்டிக்கொட்டிப்பார்த்து கஞ்சிமயமாய்க் கொண்டுவந்து விடு சேரப்பண்ணினுர்கள். அவர்களை எந்தக்காரியத்திலும் மேற்போட்டுக் கொண்டிருந்தோம். அதுகாரியம் அப்படியிருந்தது. பிறகு வணங்காமுடி அம்பலகாரன் முகாண்மையாய் வைத்திருந்த சதிர்காமன் பிள்ளைக்குள்ளே பாலப்பனை சிலதுநாள் வைத்திருந்து முத்தம்பல முதலியார்வந்து தேரினதின் பிறகு பெரியகாரியக்காரர்வந்து வணக்கமொடுக்கமாயிருந்தார்கள். அப்படியிருக்க வணங்காமுடி அம்பலகாரன் புறத்திலே குலையனூரார் காய்ப்பெடுத்து மெத்த முருகுகிருர்களென்று வந்துசொன்னுர்கள். இப்போது கொத்தமங்கலத்தாரை ஆயுதமும் கையுமாய்க் கொண்டு போய்விட்டு தாருப்பிடியாய்ப்பிடித்து அறுத்துக் கவ்வை பார்க்கிறபோது அறியிட்டார் பட்டியார் வந்து விழுந்தார்கள்.

அவர்களைத் தழுமருங்கூரிலே சேர்த்து வையாபுரி பணிக்கரைக்கொண்டு சேர்த்துக் கட்டி மன்னீரிலேயேத்தி களத்தூரிலே கொண்டுபோய்ப் போடச்சொன்னேம். அப்போது கோவிலூரார், மடப்புறத்தார், கொல்லங்குடியார், தச்சனேந்தலார், வெண்ணுரவயலார் நாவிதப்பட்டியார், ஆண்டிப்பட்டியார், தாதன்பட்டியார், கூத்தக்குடியார், பள்ளங்குளத்தார் பறையனேந்தல், கோழியக்குடியார் எல்லாரும் ஒருமிக்கவந்து சூழ்ந்துகொண்டார்கள். அவர்களுக்குச் செய்யவேண்டியது எல்லாம் கட்டுமட்டாகச் செய்துகொண்டு நிற்கையிலே கொத்தமங்களத்தார் பதறி கருதப்பன் சேர்வைகாரனை எடுத்து தூக்கி வாரிப்போட்டுக் கொண்டு தலைசிதற அடித்துப்போட்டார்கள். அன்னேரமே நெல்லையப்ப முதலியார் வந்து வெளியேறி பெத்துக்கொண்டு கொத்தமங்கலத்தாருக்கு சிறுதுகைக்கூலியும் கொடுத்து கருதப் பனுக்குப் பாடுசூடு மெத்தவென்று போற்குடியார் அணையிலே வைத்து சாம்பப்பய்யன் வகையரு குறிக்காரரையும் சுத்திக்காவலாய்ப்போட்டு இலவுநயினுர் மரக்காயர் முன்னிலைக்கு விட்டுப்போட்டு அவரவர் விட்டுக்கு வந்தோம். மறுநாள் போற்குடியாரை நாலுபுறமும் பிரித்துவிட்டு மாடக்கோட்டையார், கிடாவிழுந்தான் வர்டியாரையும் விட்டு மிதிச்சேறி நடத்துகிற போது நெல்லையப்ப முதலியாரைக் காட்டிக்கொடுத்துப்போட்டு வைக்கோலாம் பட்டியார் பின்னுக்கு வாங்கிவிட்டார்கள். அதன் பிறகு நெல்லையப்ப முதலியாரைக் கூட்டி வைத்து நாலுபேருக்கும் சம்மதியாயிருக்கச்சே செதகை குத்தமிருந்ததையும் போக்குப்புகலப் பண்ணிவித்து அவரை தூத்துக்குடி முகத்திலே எடுத்துவிட்டு ஒரு விச்சு விசுகிறபோது அவருக்குள்ளேயிருந்த கொஞ்சக் காரபதர்களையெல்லாம் நல்லகாத்தவராயன் வந்து கடக்கத் தள்ளினுன். அதன்பிறகு நெல்லையப்பமுதலியாரை பார்க்கிறபோது மறுவில்லாத திருமேனியாய் எங்கள் பங்கில் குலதெய்வம்போலேயிருந்தது அதன்பிறகு அடியேங்கள் கண்குளிரக்கண்டு களிதீர்ந்து அதிக சந்தோஷமாயிருந்தோம். அவரெல்லாரையும் இரட்சிக்கிறவராகச்சே கால் பிடிக்கிறபேரும் விசிறி விசுகிறபேரும், அவரைக் குறித்து எங்களுக்கு அக்ஷதை விபூதி கொடுக்கிறபேரும் ஆடுவாரும் பாடுவாரும் தேரும் திருநாளுமாக இருந்தது. அவர்கள் நல்ல சிவபூசைக்காரராகச்சே விக்கினேசுவரனை சிரசின் பேரில் வைத்துக்கொண்டிருந்தார்கள். இதுவல்லாமலும் கொடுக்க இவரைப்போல ஒருவரும் கொடுக்கமாட்டார்கள். அந்தநாளையிலே

போர்க்களத்திலேவந்து நிற்கிறபோது கவசகுண்டலம் தியாகம் கொடுத்தான் கர்ணனென்று சொல்லுவார்கள். நெல்லையப்ப முதலியார் போர்க்களத்திலே வருகிற பேர்களுக்கெல்லாம் குத்தகைத் தொகுப்பாய் அள்ளிக்கொடுக்கிறதும் அளந்து கொடுக்கிரதும் பிடிபிடியாய்க் கொடுக்கிறதும் சிரங்கிச்சுக் கொடுக்கிறதுமே யல்லாமல் ஒருவரைப்போல எண்ணிப்பார்த்துக் கொடுக்கிற சின்னபுத்தியில்லை. இப்படி அவர் உயர்ந்த தியாகம் கொடுக்கிறதைக் கண்டு புடைபுடைத்துக்கொண்டு திரிகிற பேர்களும் கலம் பத்து மரக்கால் அளந்து கொடுப்பார். அப்படிக்கொத்த மகாராஜனைக் காணுமளவுவரைக்கும் நாங்கள் பட்ட தாவந்தங்கள் அன்று தீர்ந்து ஒரு வளர்த்தியும் வளர்ந்தோம்.

அதன்பிறகு அவருக்கு இராமலிங்க முதலியார் காளலிங்க முதலியார், வயிரலிங்கம் பிள்ளை இவர்கள் முன்னிலைக்கு உரையூர்விட்டு எண்ணிக்கையாயிருக்க அளவிளங்கள் விட்டு கொடுத்து இடமுடஞ்சல்பட்ட பொட்டிமக்களுக்குள்ளே போட்டு தள்ளினாலும் தலைமுறைக்குச் சமதலைப்படுத்தபடாதென்று பொதியப்பன்சேர்வைகாரருக்குள்ளே சேர்வைபண்ணிக் கைலாகு கொடுத்துக்கொண்டு வரத்தக்கதாய் கால் நடையிலே மெள்ள வீட்டுக்கு வந்தார். அந்தப்படி அவர் பொதியமாமலையிலிருந்து ரிஷபவாகனருடராய் எழுந்தருளி எங்கள் வளவுக்கு வந்தார். அதை சகல ஜனங்களும் கண்டு இவர்கள் நமக்குக் காக்ஷி கொடுத்து ரெக்ஷிக்கவந்த சிவனென்று கையெடுத்து கும்பிட்டுக்கொண்டு எதிராக வந்து ஆலாத்தி எடுத்து கைலாகின் பேரில் கூட்டிப்போய்விட்டதின்பேரில் அவர் வகை சனங்கள் சிலது பேர் பலபட்டடை அதிகாரத்திலே இருந்தார்கள். சிறிதுபேர் கோட்டைத் தாணையங்களிலே இருந்தார்கள். சிலர் குதிரையேத்தம் பார்த்தார்கள். வேறுசிலர் மரிசலுக்குள்ளே போயிருந்தார்கள். சிலபேர் மேல்மச்சு வீட்டிலே விடுதியாய் இறங்கியிருந்தார்கள். அந்தப்படி நிலவழிமங்கலத்து நெல்லையப்ப முதலியார் அடியேங்கள்பேரில் மிகுந்த அபிமானம் வைத்திருந்தபடியினாலே சாமய நாயக்கர், சோளங்கபெருமாபிள்ளை வரகுண வன்னியன் குதிரைக் காற்றுக்கேத்த கொள்ளிடத்துஜனங்களும் தவசப்புலிசேர்வைக்காரன் வகைராணுவங்களும் அடியேங்கள் சொன்னபடி கேட்டுக் கொண்டிருந்தார்கள். அதன்பிறகு முன்னாலே ஏருண்டுபோய் உடமைக் கட்டினோமென்று அவரவர் நகை பண்ணித் திரிந்த ஆபரண நல்லூராரைச் சேர்ந்த பொன்னமராவதியாரையும் வெள்ளிக்கட்டியாரையும், வெங்கலமுடையாப்பிள்ளை வகையரா ஜனங்களையும் மீட்டுக்கொண்டு வந்து சேர்ந்ததின்பேரில் சகலருக்கும் ஊட்டமும் பொசிப்பும் போட்டு காப்பாத்துகிற நெல்லையப்ப முதலி எங்களுக்குள்ளே இஷ்ட தேவதையாயிருந்தபடியினாலே அவர்களுக்குள்ளே சம்மந்தங்கலப்பு வேணுமென்று பொன்னம்பல முதலியாரை நெல்லையப்பமுதலியார் வகுப்பிலே கொண்டுகொடுத்து மிகுந்த உடந்தையானதின் பிறகு அந்தப் பொன்னம்பல முதலியார் வகையிலே மதுர நாயக முதலியார், திருச்சுழியார் சக்கரக்கோட்டையார் கலியராய பிள்ளை வீரராய பிள்ளை வகுப்பிலுண்டான பேரும் அடியேங்களுக்குள்ளே வந்தார்கள். அவர்களுக்குள்ளே மினுமினுப்பாய் திரிகிற பொன்னப்பன் சேர்வைக்காரன் ஊர்க் குடியானவர்கள் வகை வேவுகாரர் இவர்கள் நீங்கலாய் நாணய உடவடிக்கையாயிருக்கிற திருப்பணத்து வட்ட வகையார், சாக்கூரார், செம்பற்குடி, சருவணூரும் விட்டுக்கொடுத்தும் வெகுஜனமானபடியினாலே அதிலே அடங்காமல் கிடாரப்பட்டியும் விட்டுக்கொடுத்து அந்தப்படிக்குக் கீழச்செம்பனூரிலே இருந்தார்கள். அப்படி வருகிறபேரை கைநெகிழவிடாமல் ஆதரித்து வந்தபடியினாலே எங்களிடத்திலே பரங்கிபேட்டையார் சென்னப் பட்டணத்தார், பழையகாட்டூர், நாகபட்டணத்தார் இந்த வட்டகை யிலுண்டான மாத்தூர் ஆதிவராகப்பெருமாபிள்ளை புறமும் அப்பால் ஆற்காடு வட்டகை வெள்ளிக்குரிச்சிக்காரரும் துட்டுத் திருமலைநாயக்கர் புறமும் காசிலுதபிள்ளை வகைஜனங்களும் ஒருமிக்க வந்தார்கள். அவர்கள் வந்த முகூர்த்தமாய் அடியேங்களுக்குப் பொற்கோட்டையும், வெள்ளிக்குரிச்சியும் சொந்தமானபடியினாலே கடுக்கன்முத்தூர், கண்டவராயன்பட்டி, பதைக்கத்தூர் வட்டகை

யாரும், முருகப்பிள்ளை, ஒண்டிமுத்துசேர்வைகாரன், முத்துமாலைச்செட்டி, சிலம்பக்குட்டிஅய்யன், இப்படி ஆபரணநல்லூர் சனங்களும் வெள்ளிக்குரிச்சி சனங்களும் வெகுதனதாய் அடியேங் களுக்குள்ளே வந்து சேர்ந்தார்கள். நாங்களும் அவர்களை என்றைக்கும் பூஷணமாய் வைத் திருந்தோம் அந்த ஆபரண நல்லூராருடனே சிறப்பாய் உடையார் பாளையத்தார் வகுப்பில் பட்டுக்கோட்டை, செஞ்சி, திருநெல்வேலி, அருப்புக்கோட்டை, வீரவநல்லூர், கண்டாங்கிப் பட்டி, கீழக்கரை, பாலக்கரை, செல்லாக்கோட்டை, கம்பிக்குடி, குரிச்சிப்பட்டி, பறம்பைக்குடி பார்த்திபசேகரநல்லூர், உப்பாடை, சேலத்தார், இந்த வட்டகையிலுள்ள உடையூர் ஜனங்க ளெல்லாம் வகைக்குவகை அனேகம்பேர் வந்தார்கள் அவர்களை கண்டமாத்திரத்திலே இவர் களை நாம் போட்டு மசக்கினல் நம்மைவிட்டு அப்புறம் தப்புகிறதற்கு எத்தனம் பண்ணிக் கொண்டுபோய் மறுநாள் எல்லாம் வெள்ளைக்காரர் உடம்படிக்கையால் வருகிற ஜனங்களென்று அறிந்து அவர்களை மைசூரார் வகை தலைத்தாணையத்திலேயும் இடையாத்தூரிலேயும் இருக்கச் சொல்லி எந்தக்காரியத்துக்கும் அவர்களை மேற்போட்டுக் கொண்டு மெலுக்காய் வைத்திருந் தோம். ஆகையால் வலுக்காரியக்காரன் நெல்லையப்ப முதலியாரும் தவசிப்புலி சேர்வை காரனும் அடியேங்களுக்குள் உதவினபடியினலே அவர்கள் வகுப்பிலே பொன்னம்பல முதலி யார் வந்து கலப்பானதின் பிறகு அவரைத்தொட்டு எங்களுக்கு சகலசம்பத்தும் வந்தது. ஆபரணநல்லூராரும் உடையார்பாளையத்தாரும் எங்களிடத்தில் தாக்ஷியில்லாமல் இருந்தார்கள் பின்பு எங்களுக்கு கலியபுலிப்பட்டி மாறி சீருத்துக்குடியும் செம்பொன் மாறியுமாக இருந்தது. நெல் குப்பையார் பிரபலமானதின் பிறகு அவர் வகுப்பிலே பொன்னம்பல முதலியார் வந்து கூடினதின் பிறகு எங்களுக்குப் பூர்விகமாய் நடந்துவந்து சிறிதுநாள் ஏருண்டு பொன்திராணி வட்டகையார் பத்துப் பங்கு அதிகமாய் நடக்கலாச்சுது. ஆனதினலே கூழப்ப நாயக்கர் கம்பயனுகர், புறத்தாரை கை நீட்டின சிலவுக்கெல்லாம் கொடுக்கச் சொல்லி கஞ்சிக் குடியை மெத்தகொஞ்சமென்று தள்ளிவைத்துப் பழயபடி ஊட்டத்தூர் முழுவதும் எங்களுக்குள்ளே தாராளமாய் நடந்துவந்தது எந்தக் காரியத்துக்கும் நெல்லையப்ப முதலியாரை கைநெகிழவிடாமல் கட்டிக்கொண்டிருந்தால் ஊட்டத்தூரார் ஏற்படாமல் நடக்கிறதற்கு சந்தேகமில்லையே. ஆனபடியினலே நாளைக்கு இப்படிக் கட்டிக்கொண்டிருக்க போருமென்று ஊட்டத்தூர் நிமித்தியம் அவர்வகை ஜனங்கள் பலபட்டடை முகத்திலிருந்த சின்ன நெல்லையப்ப முதலியாரை மண்கலக்குடியிலே கொண்டுவந்து போட்டு நீர்மடையூரா ரையும் கூடவிட்டு அவதெங்கென்று போய் அடுப்பாரென்று கொண்டுபோய் ஏற்றிவித்து சிறுவயலாரையும் தீயனூராரையும் விட்டு மூட்டுகிறபோது அவருக்கு வெதுப்பம் பிறந்து வெள்ளவாய்விட்டார். அதன் பிறகு சூரியமூர்த்தியா பிள்ளை வகை வெயி லாப்பிள்ளை முன்னுக்குக் கொண்டுபோய் விட்டுக் கைவிரித்துக்கொண்டு நிற்கிறபோது அந்த முத்துவெயிலா பிள்ளை ஓரத்துப் பார்த்து ஒரு தாக்கு தாக்கினன். அப்போது அரைத்திட்டம் சுபாகத்துக்கு வந்தான். அன்றைக்குத் தெரிந்தது அவருடைய ஆலாட் டெலாம் பிறகு இன்னம் கிராமத்திலே வரட்டுமென்று திரும்ப வீட்டிலே கூட்டி வந்து வைத்திருந்து மறு நாள் முதுவெயிலாப் பிள்ளை முன்னுக்கு ஏத்திவிடுகிறபோது நிதானத் துக்கு வந்தார், இவர் இன்னம் சற்றே முறுகிவிட்டாரானல் எத்தனை சொன்னலும் தவிடுபொடியாய்ப்போய் விடுவாரென்று உரலூரிலே தாணையத்திலே கொண்டுவந்து போட்டு நாலுபுறத்திலும் உலக்கை நாயக்கர் புறத்தார் வந்து கட்டியேறினர்கள். அப்போதவருக்கு மேல் பலமாயிருந்த உமிர்பாய் ராவுத்தன் ஓடிப்போனன். தவிடஞ்செட்டி மூக்காப்பிள்ளையும் பொடைபொடைத்துக்கொண்டு ஓடிப்போய்விட்டான்.

உணவு

அதின்பேரில் நெல்லையப்பமுதலியார் வட்டத்திலே அரிசிவனுதமுதலியார் பிறந்தார். ஆளுக்குத்தக்கதாய் அமரிக்கை பண்ணிவைத்து அவரை ரட்டி சந்திக்கச்செய்து தீர்த்த

மாடப்பண்ணி அவருக்குள்ளே கலப்பாயிருந்த கல்லாயிரம்பிள்ளையை கழனிவாசலாருடன் தள்ளி
விட்டு அவரைமாத்திரம் உலையூரிலே போட்டு வைத்திருக்கிறபோது அவருடைய கொதிப்
பெல்லாம் அசப்பைச்சித்தர் வந்து ஆத்தித்தேத்தி விட்டதின்பேரில் அவருக்குள்ளே
மேலாடிக்கொண்டிருந்த கஞ்சிக்குடியார் நிமித்தம் எத்தனைவந்தாலும் இறுத்துப்போடுகிறோ
மென்றிருக்கும்போது அந்த அரிசிவணாதமுதலியார் வயிற்றிலே அன்னதானமுதலியார் நல்ல
பிள்ளையாகப்பிறந்தார். அவரைக்கண்டமாத்திரத்திலே நாங்கள் சந்தோஷமாய் இவர்
எல்லோருக்கும் வாய்க்குவழி காட்டுவாரென்று வடிப்பம்பண்ணி வைத்துக்கொண்டிருந்து
பின்பு அவருடன்சேர்ந்த சுத்தபோஜனக் காரருக்கெல்லாம் பருப்பிலாங்குடியார், நெய்ப்பு
கப்பட்டியார், பால்குளத்தார், மோர்ப்பண்ணை வழுதனேந்தலார், வாழைத்திடல், கீரனூர்,
கத்திரிப்பண்ணையார் இவர்களுடனே கூடினவர்களையெல்லாம் சேகரப்படுத்தி வைத்துக்
கொத்தியார்தோப்புச் சனங்களை அழைப்பித்து அன்னதான முதலியாரை இலைக்குடியிலே
கொண்டுவந்துபோட்டு அப்போது பால்வண்ணநாத சுவாமியையும், அன்னபூரணி அம்மனையும்
கண்டு தெரிசித்து சந்தோஷமாகவும், மைத்தவர்களுக்கெல்லாம் அந்த அன்னதான
முதலியாருக்கு சகாவேணுமென்று கலசப்பானையும் சிறிது வலைச்சேவகரையும் குளத்தூர்
வட்டகைக்கு அனுப்பித்தவிடத்திலே அவர்கள் தடவித்திரிந்து விரால்குளத்தாரையும்,
மீனாக்ஷிநாத அம்பலகாரன் புறத்தாரையும் கைப்பிடியாகப் பிடித்துக்கொண்டுவந்து சேர்ந்
தார்கள். அவர்களில் மீனாக்ஷிநாத அம்பலகாரன் புறம் மிகுந்து வந்திருந்தபடியினாலே
சிலருக்கு காஞ்சிரவயல் விட்டுக்கொடுத்து அவர்களை பூச்சிநாயக்கர்புறத்தார் சூறையாடிப்
போடாமல் உப்பிலிகண்டவ நாயக்கர்புறத்தில் கலந்துகொள்ளச்சொல்லி அவர்களுக்குள்ளே
வைத்து பிராந்தைமங்கலத்தார் கொள்ளையடித்துக் கொண்டுபோகாமல் எலந்தைமங்கலத்
தாரை மேற்பலப்படுத்திவைத்து அந்தமீனாக்ஷிநாத அம்பலகாரன் புறத்துக்கு நாறலும்
பொசுக்குணியும் விட்டுப்போட்டு சுடுவூர் ஒத்துவராதென்று முன்னாடி ஒரசூர், மஞ்சப்புத்தூர்,
மிளகுனூர், புளியாங்குடி, கருவேப்பிலாம்பட்டி, வெங்காளூர், கூட்டரப்பட்டி, இவை
யெல்லாம் விட்டுக்கொடுத்ததின் பிறகு சமையநல்லூரிலேயிருந்து சட்டி தாளித்துக்கொண்
டிருந்தார்கள் அப்படியிருந்து மணப்பட்டி தின்பேரிலே அந்த மீனாக்ஷிநாத அம்பல
காரனுடனே அன்னதானமுதலியாரையும், நெய்க்குணம், கீரனூராரையும் மற்றதின்பெருமா
பிள்ளை புறத்திலுண்டான பேரையும் வெங்கலக்குடியிலே கொண்டுவந்திறக்கி கச்சிராம்
பட்டியார் உடம்படிக்கையிலே கூட்டிக்கொண்டுபோய் பல்லவராயமுதலியாரைக் கண்டு
சந்திக்கிறபோது, அவர் வழிவிடுகிறதற்கு சற்றே மென்று மென்று பார்த்தார். அப்போது
நாக்கூரார் வந்து எத்துக்கொண்டு ஒதுக்கிவிடச்சே தொண்டமானூர்புறம் சற்றே மார்க்கம்
விட்டுக்கொடுத்தார்கள். அப்போது நெஞ்சத்தூரிலே. போயிறங்கி சிறுகுடற்பட்டி மார்க்க
மாய் கும்பங்குடி போய்சேர்ந்தார்கள். வைத்திநாதமுதலியார் த்ருப்தி போஜனமாய் அதிக
சந்தோஷமாயிருந்தார்கள். ஆதிமூலம்பிள்ளைக்கு குளுமைபிறந்து உடனே அன்னதான
முதலியாரைத் தழுவிக்கொண்டு நீர் இவ்விடத்துக்கு ஒருவேளை வராமலிருந்துவிட்டால்
நமக்கு சகிக்கச்கூடவில்லையே. ஜீவனையகம்பிள்ளைக்கும் காயாங்கோட்டைத் தாணய
மிருந்தும் தரிபடமாட்டார்களானதினாலே நித்தியம் மூன்றுவேளையும் தவராமல் வந்திருந்து
எங்களை சமரசம் பண்ணிவைத்து காப்பாத்தவேணுமென்று சொல்ல அந்தப்படி ஆதிமூலம்
பிள்ளைக்கும், அன்னதானமுதலியாருக்கும் உடந்தையாய் ஒருநாள் கண்டதுபோலே நடந்து
வருகிறபடியினாலே வயித்திநாதமுதலியார்காரியம் தாக்ஷியில்லாமல் நடந்துவந்தது. அப்படி
யிருக்க ஜனங்களுக்கெல்லாம் அதிக மனமகிழ்ச்சியாய் வயித்திநாதமுதலியார் புறத்திலே
வகைமடிப்பாய் தொந்தியாபிள்ளை வந்திருக்க தொந்தியாபிள்ளைக்குள்ளே கொப்பிளாம்
பட்டியார் உள்வீடாயிருந்தார்கள் அதன்பிறகு கஞ்சிவரதப்பநாயக்கர் கலக்கம்தீர்ந்து ஊட்ட
த்தூரார் காரியம் நிலைத்து சொஸ்தமானதின்பேரில் எல்லாருக்கும் சௌக்கியம் பிறந்து
கோலக்கொண்டை, குழலாவயல், குடுமியாமலை இந்த மூன்றூராரிடத்திலேயும் முல்லைக்

குளத்தார், சண்பக நல்லூரார் வெட்டிவயலார், மல்லிகைபட்டியார், அலரிக்கோட்டையார் முதலான மணவூர் ஜனங்களெல்லாம் வந்து வாசமாயிருக்க கண்ணுகுளம் கமலாலயத்துக்கு சமானமாயிருக்க, முசவூரணி இலக்ஷிமீபுறத்துக்கு சமானமாயிருக்க பல்லுத்தனமம் முத்துப் பேட்டைக்குச் சமானமாயிருக்க கும்பகோணத்தார் மாருப்பட்டியாரைவிட்டு எழும்பி பெரிய தனக்காரராய் இரண்டிட்டுக்கொண்டு. ஒருவர்க்கொருவர் தண்டிக்கொண்டு இருமாப்பிலே கண்கருத்து இளவட்டங்களாயிருக்க, முதுகந்திடலார் பழுவூரார் முள்ளூராரை வெளிகாண்பி யாமல் மேவிக்கொண்டிருக்க, காலிங்கராயபிள்ளைபுறம், சுபாவமாயிருக்க இத்தனைபேருக்கும் இடங்கொடுத்துவைத்துக்கொண்டிருக்கிற ஆக்கை வயலாருக்குள்ளேயிருந்த சொரிகுளத்தா ரெல்லாம் எடுபட்டுப்போய் அழகங்குளத்தார் வந்து குடியேரி அலங்காரமய்யன் புறத்தை அடுத்திருக்கபரத்த வயலாருக்குள்ளே யிருந்த பரங்கிப்பேட்டையார் முதலானபேரெல்லாம் போய் மேனியூரார் வந்து மேலாடி பழயபடி அவர்களுக்கு மைமாலம் பட்டியாரும். பாச்சாங் கரையாரும் வந்து பொன்னமராவதி வட்டகைக்கு வந்ததின்பிறகு சுகஜீவனம் பண்ணிக் கொண்டு கமுகங்காட்டார், கொடிக்கால் கேணியார் சுண்ணும்பிருப்பாரை வாயுரவு பண்ணி வைத்துக்கொண்டு இருக்க இந்தப்படி ஜனங்களெல்லாம் அதிக சௌக்கிய முண்டாகி பார்த்த முகமெல்லாம் கண்ணுக்குளம் கமலாலயத்துக்கு சமானமாகவும், மருங்குப்பள்ளம் நாகப்பட்டணத்துக்கு சமானமாகவும் முன்னிருந்த அனுமந்தக்குடி முகம்போய் லக்ஷிமி புறத்து முகமாய் உய்யக் கொண்டான் முகத்துக்குத் திரும்பியும் சுகமேயிருந்தார்கள்.

குடிகள் மகவுபெற்று மகிழ்ந்திருத்தல்

ஆகையால் அடியேங்கள் பக்ஷமாயிருந்த நெல்லையப்பமுதலியாரைத் தொட்டு பொன் னம்பல முதலியார் புறம் எங்கள் கைச்சேர்த்தியாய் வந்ததின்பிறகு முன்னாலே கஞ்சிவரதப் பனயக்கராலே தட்டுக்கெட்டுப்போன காமயனயக்கர் பழயபடி வந்துநிலைத்து அணைஞ்ச பெருமாபிள்ளை புறத்திலே தேட்டமாகி மணவாளப்பெருமாபிள்ளை புறமும் மங்கைக்கரசுபிள்ளை புறமும் அன்னியோன்னியமாய்க்கூடி இன்பவனப்பட்டரை பிரதானமாக வைத்துக்கொண்டு சுகசோபனங்கள் அனுபவிக்கிற நாளையிலே அந்தந்த வகுப்பில் சேர்ந்த பாப்பங்குளத்தார். இராஜகெம்பீரனூரார். செட்டிக்குருச்சியார் வெள்ளாமழம்புத்தூரார், குசவங்குரிச்சியார், இடைய பட்டியார், வெண்ணூரவயலார் நாவிதனேந்தலார் கள்ளனேந்தலார் கொல்லங்குடியார், தச்ச னேந்தலார், பறவனூரார் சாணனேந்தலார் பள்ளத்தூரார், பறையவயலார், சக்கிலியனேந் தலார், சகலஜனங்களுக்கும் முன்னமே கருவூரிலே அரைத்துக்கொண்டிருந்த பிள்ளைப்பாளை யத்தார் பழயபடி கருவூரிலேவந்து பாளையம் அடித்து பத்துமாதம் வாங்காத்தாணையமாயிருந்து அவர்கள் பூர்வீகத்திலே உடன்படிக்கை பண்ணின நாளும் தேதியும் சென்றதின் பிறகு பைக்குடிப்பட்டிவிட்டுக் கீழ்முகத்திலே திரும்பி நாட் கொண்டு பயணம் புறப்படுகையில் அவர்களுக்கு முன்னமே நிறைகுடம் வரத்தக்கதாய் கும்பிட்ட கையுடனே பிள்ளைகோட்டை வாசலிலே வந்து தலைவைத்து ஒருநீட்டாய் நிலவழி மங்கலத்திலே வந்திரங்கினர்கள். அப் போது அவர்களிருக்கிற சிறுபிள்ளைத்தனத்தைக்கண்டு அவர்களுக்குப் பலமாய் சிறிது சேனை யும் கூட்டிவிட்டு ஊட்டம் பண்ணத்தக்கதாய் பண்ணிவித்து கும்பகோண முகத்துக்குச் சுவையும் விட்டுக்கொடுத்து பீறுகான்வகை பாலப்பிள்ளையால் ஜீவனம் பண்ணிக் கொண்டு தொட்டியப்பட்டியும் கட்டிக்கொண்டிருந்து நாளுக்குநாள் ஆண்டுவருகிற நன்மை யினாலே வளாந்தேரிவந்து பொன்னம்பல முதலியாரும் மிகுந்த பிரபலமாகி அடியேங்களுக்கு அன்னமுதலியார் ஜீவதேக ஞாயமாயிருந்து காப்பாத்தி வருகிறது சரியே. ஆனபடியினாலே அடியேங்கள் முன்னாலே குருமூர்த்தி அய்யர் சொன்னபடிக்கு தீக்ஷமய்யரை ஆஸ்தியாக வைத்துக்கொண்டு கல்விநயகம்பிள்ளை மகத்துவத்தை விசாரித்து, மனக்கோலப் பெருமா

பின்னை அந்தக்காரணத்தை அறிந்து, ஞானசம்பந்தம் பிள்ளையை வரப்பண்ணி, அறிவானந்த பிள்ளையைத் திடப்படுத்தி, பாபவினைசம்பிள்ளையை புறம்போக்கிலேநிருத்தி, தர்மராஜபிள்ளையை சேகரம்பண்ணி, தானப்பமுதலியார், தவத்தாரப்பமுதலியார் முகாந்தரமாய் பொய்யாளுநாரை விட்டு, மெய்யப்பட்டி சத்தியவாசகமய்யரை பிரதான கூஷியாய் வைத்துக்கொண்டு அடியேங்களும் சுயஜன சுயகுடும்பங்கள், பிதிர்தேவதைகள், அதிதிகள், விருத்தர்கள் இந்த ஐந்துவகைப்பேருடனே சகலரையும் விசாரித்துக்கொண்டு சகலருக்கும் துணையாய் இல் வாழ்க்கை முயற்சி பண்ணி வைத்துக்கொண்டு இராஜகட்டளை ஊழியமும் செய்துகொண்டு கோவின்கீழ்க் குடியாய் விவசாயரசவாத வித்தையை பிரதானமாக வெள்ளாண்மைப் பெருங் குடியாய் சகலசம்பத்தும் அஷ்டைசுவரியமும் அனுபவித்துக்கொண்டு இருக்கிறோம்.

இந்தமட்டும் ராஜஸ்ரீ கர்த்தாக்களின் கிருபையினாலே மேகணன் சேர்வைக்காரன் வகை மாரியப்பன் சேர்வைக்காரன் இவ்விடத்துக்கு வந்து சம்பூரணமாய் வருஷக்கட்டளை கொடுத்து விசாரித்த முகூர்த்தமாய் நெல்லையப்பமுதலியார் பிரபலமாகி பொன்னம்பலமுதலியார்புறம் அபிமானமானபடியினாலே, நாவலோகம் பெருந்தீவிலுண்டான பறவைக்குடியார் தொட்டியப்பட்டியார், தொழுவூரார், கொல்லங்குடியார், தச்சனேந்தலார் தட்டான்குடியார், கன்னிருப்ப ஜனங்கள் கொசக்குடியார் ஈளம்புசையார் துலுக்காணியார்லாடபுறத்தார் பள்ளமடத்தார் பறைக்குளத்தார்சக்கிலியவயலார், இப்படிஅநேகம் வகுப்புவகுப்பாய் சொல்லப்பட்டவர்க்கத்து ஜனங்களெல்லாம் அவரவர்குடிக்கும் கோத்திரத்துக்கும் கற்பித்திருக்கிற ஜாதித் தொழிலைமுயற்சி பண்ணிக்கொண்டு மேல்வரம்பு கீழ்வரம்பு அறிந்து நடந்துக்கொண்டு சகல பாக்கியத்துடனேயிருக்கிறார்கள், ஆகையாலே அகண்ட பரிபூரண சச்சிதானந்த பரபிரும்மமாகிய ஆதிபரா பரவஸ்துவான சுவாமி அவர்களுடைய கிருபையினாலே மகாவிஷ்ணு பிம்பமாகப் பூலோகத்திலே வந்து அவதரித்து மனுநீதியோடுங்கூட மண்டலாதிபதியும் அடியேங்களை இரக்ஷிக்கிற இராஜவர்க்கங்களும் சுகிர்த பரிபாலன காத்தவ்வியரானபடியினாலேயும் பூலோகத்திலே தேவாலயம், சிவலிங்கப்பிரதிஷ்டை, பிர்ம்ம பிரதிஷ்டை, உபநயனங்கள், கன்னிகாதானம், அன்னசத்திரம், அதிதிபூஜை, திருப்பணி, தேவதாபிரார்த்தனை, தர்மத்தியானமான, தண்ணீர்ப்பந்தல், பிராமண போஜனங்கள், துவாதசிக்கட்டளை இதுமுதலான நித்தியதானம் நடத்திக்கொண்டு வருகிறபடியினாலே, பிராமணாள், பசுக்கள் முதலான தேவவம்சங்களை விசாரித்து இரக்ஷிக்கிறபடியினாலேயும், அத்துவைத மார்கத்துதபோதனராகிய யோகீசுவராளுக்கு வேண்டியதுங்கொடுத்து காப்பாத்தி வருகிறபடியினாலேயும், யாசகாள், பூசுராள், வித்துவஜெனங்கள் முதலாகிய பேருக்கெல்லாம் தாரித்திரியம் நிவர்த்தியாக்கி காமதேனுவும் கற்பகத்தருவும்போலே கனக வருஷமானதி யாகம் கொடுத்து இரக்ஷிக்கிறபடியினாலேயும் குடிகளுக்கு இடையூறுவாராமல் நித்தியம் விசாரித்து ஏழைக்குடியானிட்ட வெள்ளாண்மைபோலே காப்பாத்தி குடிவளத்து இரக்ஷிக்கிறபடியினாலேயும், தர்மம் தேவதை வளர்ந்தேரி ஆகாசவாணியும் பூமாதேவியும் சந்தோஷமாகத்தக்கதாய் பூமண்டலமெல்லாம் நன்றாய்ச் செழித்து கரும்புப்பயிர் வளர்ந்தது போலே நெற்பயிர் வளர்ந்து இருவகை முத்திலும் அதிகமான நெல்முத்துகள் விளைந்து நவதானியங்களும் ஒன்றுலொன்று தாக்ஷியில்லாமல் மென்மேலும் மிகுதியாய் நெய்ப்பெருக்கமெல்லாம் சொற்பபெருக்கமாகி நவதானியம் நவநிதியாக பொன்னும் முத்தும் கொழித்துக்கொண்டு அடியேங்கள் அனைவோரும் விவசாயரசவாத முயற்சியினாலே உன்னக்ஷயமான அதிக லாபங்கள் உண்டாகி சகலபாக்கியத்தோடுங்கூட இருந்து கோவின்கீழ்க்குடியாய் குடித்தனம் பண்ணிக்கொண்டு ராஜபணிவிடை ராஜகட்டளை முறைமைப்படி செய்துகொண்டு நாராயணராய் திரவியசம்பன்ன கிரகஸ்தர்களாக சுகமேயிருக்கிறோம்.

அடியேங்களை இந்தப்படி வரிசைக்குடிகளாக வைத்து ஆதரிக்கிற இராஜவர்க்கங்கள் மகாவிஷ்ணுபிம்பமென்கிறது சுபாவமாமே அதுவல்லாமல் ஒரு நிதானத்திலே எங்கள் துரையவர்கள் ஸ்ரீமதுராஜமானிய ராஜஸ்ரீ சிவகெங்கை கர்த்தாக்கள் தங்களுக்கு அதிகமென்று சொல்லலாம். அதெப்படியென்றால் தாங்கள் ஆதிபரமேசுவரனை நோக்கி தபசுபண்ணுகிற போது போன கண்ணுக்கு பொற்கண் வெகுமதி வாங்கினீர்கள். அடியேங்களுடைய துரையவர்கள் அந்தப்பரமேசுவரனுக்கு கண்ணுக்குக் கண்ணுயிருக்கிற சூரியவங்கிஷத்திலே பிறந்தவர்களானதினாலே எங்கள் துரையவர்கள் அதிகம் அதுவல்லாமல் எந்தக்காரியத்துக்கும், தேவாலயம் சிவாலயங்களிலே திருவுளம் கேழ்க்கிறது. உத்தரபாரிசந்தவிர்த்து தெக்ஷண பாரிசத்திலே சொல்லுகிறது உத்தமத்துக்கு நிஜதெரிசனம், தாங்கள் உத்தர சிம்மாஸனாதிபதிகள். ஆனதினாலே எங்கள் துரையவர்கள் தங்களுக்கு அதிகம். அதுவல்லாமல் பிரதாப இலங்கேசுவரனான இராவணனுக்குத் தமயனாகவிருந்து விமானமெடுபட்டு விமான பரி கொடுத்தீர்கள். அந்தப்பிரதாப இலங்கேசுவரனான இராவணனை சங்காரம்பண்ணி தர்ம பரிபாலனம் பண்ணின இராமசுவாமியுடைய மனுக்குலத்திலே எங்கள் துரையவர்கள் பிறந்தவர்கள். ஆனதினாலே தங்களுக்கு எங்கள் துரையவர்கள் அதிகம். அதுவல்லாமல் தாங்கள் வடகரைப்புலி எங்கள் துரையவர்கள் மேனாட்டுப்புலி, வடகரைப்புலியென்றும், மேனாட்டுப் புலியென்றும் ராஜப்புலியென்றும் சொல்லிய தருதுவர்கள். ஆனதினாலே தங்களுக்கு எங்கள் துரையவர்கள் அதிகம். அதுவல்லாமல் தங்களிடத்தில் சங்கநிதி, பதுமநிதி இரண்டு எங்கள் துரையவர்களிடத்திலே அதிகமென்னவென்றால் தானநிதி, தர்மநிதி, இரண்டு உண்டு. அப்பால் பார்க்குமிடத்தில் தானநிதி, தர்மநிதி, விசேஷம் ஆனதினாலே தங்களுக்கு எங்கள் துரையவர்கள் அதிகம். இதுவல்லாமல் தாங்கள் எட்டுத்திக்கும், 16 கோணமும் அதிகாரியாயிருக்கிறவர்களில் ஒருவராயிருக்கிறவர்கள். எங்கள் துரையவர்கள் எட்டுத்திக்கும் பதினாறு கோணமும், அதிகாரியாயிருக்கிறவர்கள் ஆனதினாலே தங்களுக்கு எங்கள் துரையவர்கள் அதிகம். இதுவல்லாமல் தாங்கள் திவ்விய சம்பன்னருமாயிருக்கிறவர்கள், எங்கள் துரையவர்கள் சகலகுண சம்பன்னராயிருக்கிறவர்கள் அதினாலே தங்களுக்கு எங்கள் துரையவர்கள் அதிகமானபடியினாலே அடியேங்களுடைய கர்த்தாக்கள் சிவகெங்கை சமஸ்தானபதிகளாகிய ஸ்ரீமதுமகாமான்னிய ராஜஸ்ரீ சேதுக்கு அரசுநிலைபட்ட ஸ்ரீல முத்துவடுக நாதேந்திர சுவாமி அவர்கள் சதந்தர வர்த்தனையாகிய மகாமாயை யோகமார்கண்ட வரப்பிரசாதம் பெற்று மண்டலாதிக்கம் பெற்று அதிராஜ்ஜிய பாரம்பரையாய் இராஜரீகம் செய்திருந்தபடியினாலே அடியேங்களனையோரும் அதிகசௌபாக்கிய சவுபரி சந்தான வாழ்க்கையுடனே எங்களிஷ்டமாகிய அஷ்டைசுவரியங்களையும் அனுபவித்துக்கொண்டு ஏர்க்குடிகளாயும் குபேரக்குடிகளாயும் குடித்தனம் பண்ணிக்கொண்டு சுகமேயிருக்கிறோம். ஆகையாலே அடியேங்கள் அன்னதான முதலியாரும், அன்ன முதலியாருக்கு அரிசிவனாத முதலியாரும், அரிசிவனாத முதலியாருக்கு நெல்லையப்ப முதலியாரும், நெல்லையப்ப முதலியாருக்கு வணங்காமுடி அம்பலகாரனும், அவனுக்கு மாரியப்பன் சேர்வைகாரனும் அவனுக்கு மேகணான் சேர்காரனும் இத்தனைபேரும் எங்களுக்குச் சகாயம் செய்தபடியினாலே, அடியேங்களும் சுகமேயிருக்கிறோம். சுவாமியவர்கள் பரிநாமத்திலேஇருக்கிற சேதியும் அடியேங்கள் செய்யும் பணிவிடை ஊழியத்திற்கும் இதுபுத்தியென்று திருமுகம் பாலிட்டருளக் கட்டளையிட்டருள வேண்டியது.

ஆகையாலே வேணும் விண்ணப்பம். வசனசம்பிரதாயக் கதை முற்றிற்று.

மகா வைத்தியனுதய்யர் சகோதரர் வையை இராமசுவாமி அய்யர் இயற்றியது. வெண்பா

ஊர்களையும் பேர்களை யுமுள்ளடக்கி யோர்கதைபோல்,
சாரும்வசன சம்பிரதா யத்தை—சீருறவே
சொன்னுன் முத்துக்குட்டிச் சுந்தரவே ளிவ்வாறு
சொன்னுரி சைத்தார் மொழி.

மதுரை ஜில்லா சிவகங்கைச்சீமை வேப்பத்தூரிலிருக்கும் இராமநாதபுரம் சமஸ்தான வித்துவான் சிலேடைப்புலி பிச்சுவய்யர் இயற்றயது. ஆசிரிய விருத்தம்.

சீர்மேவுந்தண்டலைச் சிறந்தசிவ கெங்கையில் செங்கோல்செலுத்தி முன்னுள்
திறைகொண்டகௌரிவல வேந்திரன்றமிழிசைசெனித்த தென்பனசையூரில்
ஏர்மேவுதுங்க முத்துக்குட்டியாம் புலவர் இனியவசனத்தைநோக்கி
எழில்பெருவசனசம்பிரதாயகதை யோதென விசைகாதைமகிமைநோக்கித்
தார்மேவுமகிலாண்டபுறவாசியெனுராம சாமிதீக்ஷதரினேடு
சரசகவிசொன்னுகு பாரதியியற்றிய தபோபலத்தா லுதித்த
கூர்மேவுமதிமிகு வைத்தியநாதர்பெயர் குலாவுபாரதியிருவரும்
கோலமிகுமச்சிற் பதித்துவெளியாக்கினுர் குவலயங்கொண்டாடவே.

காருகுடி C. S. நாராயணசாமி அய்யர் இயற்றியது. அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

கூர்மதியன் றென்பனசை கவிசக்கரவர்த்தி முத்ததுக்குட்டியய்யா, பேர்புலவன் சிவகங்கைப் புரவலன் முன் சொன்னவிந்தப்பிரபந்தத்தை, ஏர்பெருமையாற்று வைத்தியனுத பாரதியு மிராமசாமி, சீர்கொள்பேர் தீக்ஷிதருமுலகினர்க்கச்சிட்டு மிகச்சிறப்பித்தாரே.

திருநயம், அ. நரசிம்மபாரதிகள் இயற்றியது. அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

சீர்பழுக்குந்திறற்சீர்த்தி தென்பனசைப் பதியிலமர் செயங்கொள் கல்விப், பேர் பழுக்குந்தனி முத்துக்குட்டியியற்று வசனசம் பிரதாயத்தை, நார்பழுக்கும் வைத்தியநாதைய்ய பாரதி,ராமசாமி தீக்ஷர், பார்பழுக்கும் படி அச்சிற்பதிப்பித்தா ரெவர்க்கு முளம்பதியத்தானே

உ
சிவமயம்

அம்பாளின் மகிமை

எழுதியவர்:- தமிழ்த்தென்றல் புலவர், சுப. காளிமுத்து, எம்.ஏ., பி.லிட்., நாட்டரசன்கோட்டை

தென் பனசை என்று வழங்கப்படும் நாட்டரசன் கோட்டை நகரதனில் சக்தியின் வடிவாம் அருள்மிகு கண்ணுடைய நாயகி அருளாட்சி புரிகின்ருள். சக்தி பீடங்கள் பல வற்றுள் கண்ணுடைய நாயகியின் பீடம் ஒன்று என்கிருர்கள்.

அன்னை பராசக்தி பல்வேறு நிலைகளில், பல்வேறு உருவங்களில் பல்வேறு ஊர்களி லிருந்து மக்களுக்கு அருள்புரிந்து வருகிருள்.

நம்முடைய நாயகியும் சண்டாசுரவதத்திற்காக நம்முடைய தென் பனசை நகரதனில் தோன்றினுள். நம்பகுதியில் அன்னைசக்தி ஏழு இடங்களில் கோவில்கொண்டு அருள் பாலிக்கிருள்.

ஸ்ரீ கண்ணுடைநாயகி — நாட்டரன்கோட்டை, வாள்மேல் நடந்தாள் — காளையார் கோவில், பெரியநாயகி — உருவாட்டி, அரியநாச்சி — மரவமங்கலம், பெரியாள் — பனங்குடி புல்வாய்நாயகி — பாகனேரி, வெற்றியூரம்மன் (அன்ன பூரணி) — வெற்றியூர்,

சக்தியை வணங்கினுல் எல்லா வழிபாடுகளும் முடிந்ததாக ஆகும் என்பது வேதாகம சாஸ்திரங்களின் முடிவு. ஏனென்ருல் எல்லா தெய்வங்களும் சக்தியில் அடங்கி விடுகின்றன, ஒருவன் சக்தி இல்லையென்ருல் ஒரு வேலையும் செய்யமுடியாதவனுகி விடுகின்ருன். ''சக்தி இருந்தால் செய், இல்லை என்ருல் சிவனே என்று இரு'' என்று சொல்லி விடுகிருேம். எல்லா தெய்வங்களுக்கும் ஆற்றலை அளிப்பவள் ஆதிபராசக்திதான். எல்லாக் கடவுளரும் சக்தியுடன் தான் காட்சியளிக்கின்றனர். எடுத்துக்காட்டு — சிவகாமி உடனுறை கரிகால சோழீஸ்வரர், மீனுட்சி உடனுறை சுந்தரேஸ்வரர்.

''அன்னை வடிவமடா — இவள், ஆதிபரா சக்தியடா — அவள், இன்னருள் வேண்டுமடா பின்பு உலகில் யாவும் வசப்பட்டுப் போமடா'' என்று புரட்சிக் கவிஞன் பாரதி கூறுவதுபோல அன்னையின் கடைக்கண் பார்வை கிடைத்தால் போதும் இவ்வுலகில் யாவும் வசமாகும்.

அன்னையின் கடைக்கண் பார்வையினுல், ''இடையனுய் இருந்தவனும் மடையனுய் இருந்தவனும், பாலனுய் இருந்தவனும் ஊமையாய் இருந்தவனும் கடையனுய் இருந்தவனும் கடைத்தேறிக் கவி பாடினர் அறியாமை நிறைந்தவனுய் ஆடுமேய்க்கும் நிலையிலிருந்த காளி தாசனை உலகம் புகழும் கவிஞனுக்கினுள். அன்னை சமையற் காரனுய் இருந்த காள மேகத்தை ஆசுகவியாக்கினுள், பாலனுய் பசித்தழுத சம்பந்தனை ஞானப்பாலூட்டித் திரு ஞான சம்பந்தனுக்கினுள், கடையனுய்க் கம்பங் கொல்லை காத்துக்கொண்டிருந்த கம்பனை கவிச் சக்கவரத்தி ஆக்கினுள்.

''நெஞ்சிற் கவலை நிதமும் பயிராக்கி அஞ்சி உயிர்வாழ்தல் அறியாமை — தஞ்ச மென்றே வையமெல்லாம் காக்கும் மகாசக்தி நல்லருளை ஐயமறப் பற்றல் அறிவு!'' ஆகவே நாம் அன்னையின் திருவடிகளைப்பற்றி நல்வாழ்வும், நல்லறிவும் பெறுவோமாக.

''அன்புக்கே நானடிமை ஆகவேண்டும் அறிவுக்கே என்காது கேட்கவேண்டும்
வம்புக்கே போகாமல் இருக்கவேண்டும் வஞ்சத்தை என்நெஞ்சம் அறுக்கவேண்டும்
பண்புக்கே உயிர்வாழ ஆசைவேண்டும் பரிவுக்கே நானென்றும் பணிய வேண்டும்
என்பக்கம் இவையெல்லாம் இருக்கவேண்டும் என்ருேடு நீயென்றும் வாழ வேண்டும்'

என்று பாடி அன்னை பராசக்தியின் இன்னருளை வேண்டி நிற்போமாக.

உ
சிவமயம்

கண்ணுடையநாயகி அம்மன் துதி

"பொற்கிழிக் கவிஞர் காசிஸ்ரீ" திரு. அரு. சோமசுந்தரன்

நாடெல்லாம் புகழ்கின்ற நாட்டரசன் கோட்டையிலே கோயில் கொண்டு
வீடெல்லாம் காக்கின்ற கண்ணுடைய நாயகியே! வெற்றித் தாயே!
ஏடெல்லாம் புகழ்ந்திடலே வெள்ளிரதம் ஏறிஉலா எட்டாம் நாளில்!
காடெல்லாம் பூத்திடவே கங்கையெலாம் சுரந்திடவே காக்கும் தாயே!

செல்வமுடன் கல்வியெலாம் நாட்டரசன் கோட்டையிலே செழித்து நிற்க
வல்லமையாய் எல்லோரும் வாழ்வாங்கு வாழவென வழிகள் காட்டிப்
பொல்லாத நோய்களுடன் தீமையெலாம் எண்கரத்தால் புறத்தே நீக்கி
எல்லோர்க்கும் அருள்பொழியும் கண்ணுடையநாயகியே! எங்கள் தாயே!

மாரிவளம் குறையாமல் நீர்வளமும் நிலவளமும் மகிழ்ச்சி பொங்க
ஏரியெலாம் நீர்நிறைய எழுச்சியுடன் நகரெல்லாம் ஏற்றம் கொள்ள
ஊரினிலே உள்ளோரும் வெளியூரில் வாழ்வோரும் உயர்வு கொள்ளப்
பாரினிலே அனைவரையும் பரிந்தோம்பிக் கண்ணாத்தாள்! காப்பாய் அம்மா!

"பொங்கி வரும் கருணை நதி"

தேவக்கோட்டை S. நவநீதகிரி

பொங்கிவரும் கருணைநதி கண்ணாத்தா — அவ
பூப்போல உள்ளம் கொண்ட பெண்ணாத்தா
மங்கலங்கள் தருபவளாம் கண்ணாத்தா — அவ
மலர்பாதம் பட்டதெல்லாம் "பொன்"னாத்தா!
நாட்டரசங்கோட்டை அவள் ஊராத்தா — தினம்
நாடி அவள் பேரைத்தான் கூறாத்தா
பாட்டரசன் கம்பன் கண்ட பேராத்தா — அவ
பாதம் தொழ வாராதார் யாராத்தா?
மேன்மை மிக்க வாழ்வளிப்பாள் நம்மாத்தா — அவ
மேதினியை காத்துவரும் நல்லாத்தா
தேன்மழையில் நனையவரும் கவியாத்தா — அவ
திருவருளில் வாழும் இந்த புவியாத்தா!

உனக்கே பாரம்

கண. சுப்பையா, நாட்டரசன்கோட்டை.

எனக்குஅயன்தன் விதியிதுவோ நான்இழைத்த பவவினையோ ஏதோஅம்மா
உனக்குஅடிமையான பின்புஇங்கு ஏதுகுறை வந்தாலும் உனக்கே பாரம்
தனத்திருவே கலைமகளே நாட்டரசன்கோட்டை வளர்நயனமாதே
மனக்கவலை யார்க்குரைப்பேன் எனக்கருள வேண்டுமம்மா பனசைவாழ்வே!

முத்துத்துளிகள்

சோ. ரங்கசுவாமி, நாட்டரசன்கோட்டை.

சிவம்

பூத அக்னியால் சுடப்படும் பொருள் அனைத்தும் சாம்பலாகின்றன. பிறகு சாம்பலை எரித்தாலும் அதன் பாங்கை மாற்ற முடியாது, உலகம் அனைத்தும் ஞானக் அக்னியில் எரிந்து மறைந்து போன பிறகு எஞ்சியிருப்பது சிவம், சிவனார் ஞானக்கினியை சுமக்கிறார்.

பிரம்மன்

பிரம்ம தேவனுக்கு நான்கு தலைகள் இருப்பதற்கு உருவகமாக பொருள் உள்ளது. கிரதயும், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் ஆகிய நான்குயுக உருவக அமைப்பாகவும் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு புருஷார்த்தங்களுக்கும், பிரம்மச்சரிய ஆசிரமம், கிருஹஸ்த ஆசிரமம், வானப்பிரஸ்த ஆசிரமம் ஆகிய நான்கு ஆசிரமங்களுக்கும் உருவாக அமைந்தவைகள் பிரம்மதேவனுடைய நான்கு தலைகள்.

பசு சுபமாகிறது.

இல்லத்தில் பசுவின் பின்பாகத்திற்கு பூஜை செய்கிறார்கள். கோவில் விஸ்வரூப தரிசனத்தின்போது பகவானுக்கு எதிரில் பசுவை பின்புறமாக திருப்பி நிறுத்தி வைக்கிறார் கள். பசுவின் பின் பக்க மடுவில் மகாலெட்சுமி வாசம் செய்கிறாள் என்பது ஐதீகம், மேலும் 'பசு' என்னும் இரண்டெழுத்தை திருப்பி எழுதினால் 'சுப'மாகிவிடும். ஆகையால் பசுவைத் திருப்பி நிறுத்தி பின் பாகத்திற்கு பூஜை செய்து சுபத்தை அடைகிறோம்.

ஆத்மஞானம் அடைய வேண்டுமா ?

சுகதேவர் ஏழுநாட்கள் பாகவதத்தைச் சொல்லக் கேட்ட பரீட்சித்து மகாராஜாவுக்கு ஆத்ம ஞானம் ஏற்பட்டது. நாம் எத்தனையோ வருஷங்களாக பாகவதத்தை கேட்டு வந்தாலும் ஆத்ம ஞானத்தை அடையமுடியவில்லையே ஏன் ?

பரீக்ஷித்துக்கு உபதேசித்த சுகமுனிவர் ஆத்மஞானம் அடைந்த மகான். அதனால்தான் பாடம் கேட்ட பரீட்சித்து தெளிவுபெற்றான். எரியும் தீபத்திலிருந்துதான் மற்றொரு தீபத் திற்கு தீபத்தை ஏற்ற இயலும். பந்தத்திலிருந்து விடுபட்ட ஆத்மஞானி ஒருவரால்தான் பிறரை விடுவித்து ஞானத்தை அளிக்க முடியும்.

இயல்புகளின் தரம் !

பிறக்குத் துன்பம் கொடுத்து அதில் இன்பம் காண்பது மிருக இயல்பு அமைந்த வர்களின் குணம். பிறருக்குத் துன்பம் கொடுக்காமல் தனக்கு இன்பம் தேடுவது நாகரிகப் பண்பாடு. பிறக்கும் இன்பம் கொடுத்து தானும் இன்பமடைவது தெய்வீகம். பிறருடைய துன்பங்களை நீக்கி அவர்களுக்கு இன்பம் தருவது ஆன்மீகம்.

யாருடன் சிநேகம் கொள்வது ?

இந்து தர்ம சாஸ்த்திரத்தில் சிநேகம் கொள்வது பற்றி விளக்கமாக தெரிவிக்கிறது. பட்டணத்திலும், கிராமத்திலும் வசிப்பவர்கள் தன்னைவிட பத்து வயது மூத்தவனோடும் சங்கீத ஞானம் அறிந்தவனானால் ஐந்து வயது மூத்தவனோடும், சாஸ்த்திரம் வேதம் அறிந்தவனானால் மூன்று வயது மூத்தவனோடும் தம் இனமானால் இரண்டு வயது மூத்தவனோடும், ஜோதிடம், வைத்தியம் அறிந்தவரானால் சமவயதுள்ளவனோடும் சிநேகம் கொள்வது அவசியமாகிறது. தன் வயதுக்கு குறைந்தவர் சிநேகிதமும், அற்பர் சினேகிதமும் விபத்துக்களையும் பிராண சங்கடத்தையும், மனக்கஷ்டம், அவமானம் ஆகிய வற்றை ஏற்படுத்தும். தர்ம சாஸ்த்திரத்தை அறிந்தவன் வயதில் சிறியவனாக இருந்தாலும் அவனது ஆலோசனைகளைப் பெற தயங்கக்கூடாது.

வைரம்

திரு. சுப. ராமனுதன் செட்டியார்
நாட்டரசன்கோட்டை.

நம் ஆச்சிமார்கள் விரும்பி அணியும் நகைகளில் வைர ஆபரணங்களுக்கே முதலிடம் தருகிருர்கள். தங்கள் செல்வ மகன்கள் திருமணப் பேச்சு ஆரம்பிக்கும் போதே மூன்று நகைகள் வேண்டுமென்று கேட்ட பின்னர்தான் முறைகள் அடுத்து இடம் பெறுகின்றன.

பொதுவாக எல்லா நாட்டுப் பெண்களும் வைர நகைகளுக்கே முதலிடம் தருகின்றனர். ஏனெனில் வைர நகை அணிந்தால் பெண்களின் அழகு வைர நகையுடன் பளிச்சிடுகின்றன. "Diamonds are the best friends of Girls) என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள்.

பொதுவாக மணிகள் என்ருல் நவமணிகளேயும் குறிக்கும்- அதில் வைரமும் ஒன்ருகும். தமிழ் நாட்டு மணிகள் பழமையானவை. சங்க இலக்கியங்களிலும் மணிகளேப்பற்றி கூறப்பட்டிருக்கிறது. மனித இனம், நீண்ட நாட்களுக்குமுன்னரே மணிகளேப்பற்றி அறிந்து இருந்தது என்பதனே மகேஞ்சோதாரோ - ஹாரப்பா என்ற இடங்களில் இருந்து தோண்டப் பட்ட ஆராய்ச்சி மூலம் கண்டுபிடித்திருக்கிருர்கள். பளபளப்பும், மினுமினுப்பும் நிறைந்த அழகிய மணிகள் மனிதனின் ஆசையைக் கவர்ந்து இழுத்தன. அதை அவன் ஆசையாக எடுத்தான். அவனிடமிருந்து மற்றொருவன் மணிகளேத் தட்டிப் பறித்தான். இறுதியாக எல்லா மணிகளும் கூட்டத்தலேவனிடம் போய்ச் சேர்ந்தன. நிறைந்த மணிகள் வைத்திருந்தவன் செல்வாக்கும், செல்வமும் நிறைந்தவனுகக் கருதப்பட்டான். அதனுல் அதைக்காக்கக் கடமைப்பட்டு வீரனுகவும், அதிலிருந்து அரசனுகவும் ஆக்கப்பட்டு மணிகளேக் காக்க கீரீடங்களில் பதித்து தன் சிரசில் அணிந்து வந்தான் என்பது வரலாறு ஆகும். நம்மவர்கள் சோழ நாட்டிலிருந்து பாண்டிய நாட்டுக்கு அரசியல் காரணமாகக் குடியேறி 96 ஊர்களே பாண்டியராஜனிடம் பெற்று குடியேறிய சமயம் பாண்டியனிடம் வேண்டி, மணிகள் முத்துக்கள் பதிக்கப்பட்ட மணிமுடியைச் சூட்டும் பாக்கியமும் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. பூம்புகாரில் நம்மவர்கள் முத்து, பவளம் மணிகள் வியாபாரம் செய்தனர் என்பதனேச் சிலப்பதிகாரத்தின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

மணி என்ற சொல்லேப்பற்றிப் பார்ப்போம். துணியும் மணியும் அணிந்து கொள்வதால் "துணிமணி" என்று சொல்லுகிருேம். ஆண்களும் பெண்களும் தங்களின் பெயர்களே மணி, ரத்தினம், முத்து, பவளம், வயிரம், மாணிக்கம், நவமணி என்று சூட்டிக் கொள்கிருர்கள். திருநெல்வேலியில் மணிமுத்து ஆறும், இலங்கை கதிர்காமத்தில மணிகங்கை ஆறும் ஓடுகின்றன.

மணிகளின் மேல் மனிதன் வைத்திருக்கும் ஆசையால் மணிகளே எவ்வளவு உயர்வாக மதித்தார்கள் என்பதை இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். பொதுவாக மனிதன் உருண்டை வடிவாக (குண்டு) இருப்பதால் மற்ற தானிய மணிகளுக்கும் நெல்மணி, குன்றி

மணி, என்று பெயரிட்டனர். நஞ்சுண்ட இறைவனை "மணிகண்டன்" என்று கூறுவார்கள் 60 ஆண்டு நிறைவு விழாவை மணிவிழா என்றும், 75ஆம் ஆண்டு விழாவை பவளவிழா. என்றும் 80ஆம் ஆண்டு விழாவை முத்து விழா என்று கொண்டாடுகிறோம்.

மணிகள் எப்படித் தோன்றின? மணிகள் எரிமலைக் குழம்பில் பிறந்தன எனலாம். எரிமலைக்குழம்பில் மணிகள் உருகிக்குளிர்ந்த பொழுது படிவமாகி அழகைப் பெற்றன. மணிகளில் சிறந்தது மாணிக்கம் பொதுவாக எல்லா மணிகளின் வயது பலகோடி ஆண்டுகள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆதிகால மனிதன் 18 மணிகளை அறிந்து இருந்தான். விஞ்ஞான வளர்ச்சியில் தற்போது ஏறத்தாழ இரண்டாயிரம் கனிமங்கள் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன. இவற்றில் 85 மட்டுமே மணிகள், அதாவது முத்து, பவளங்கள் தவிர என்பதை குறிப்பிட வேண்டும். ஒளி, நிறம், அழகு ஆகிய மூன்றும் நிறைந்தவை மணி என்று கூறப் படுகின்றது. அது அரிதாகவும் கிடைக்க வேண்டும். அப்படிக் கிடைத்தால் அதன் மதிப்பு அதிகம் எந்த மணியும் அது நூற்றுக்கு நூறு சுத்தமாக இருந்தால் நிறம் கிடையாது. மணிக்குள் இருக்கும் தனிமம் (ஆக்ஸைடு) தான் மணிக்கு நிறம் தருகிறது. குரோமியம் தனிமம் சிகப்பு நிறத்தையும், அலுமினியத்தனிமம், பச்சை நிறத்தையும், டைட்டோனியம் நீல நிறத்தையும், இரும்புத் தனிமம் மஞ்சள் நிறத்தையும், தருகின்றது. வயிரக்கற்கள் ஆறுமுகம் கொண்ட கனசதுரமாக, அல்லது எட்டு முகம் கொண்ட பிரமிட்டுக்களாகத்தான் இருக்கும். வயிரம் ஒரு கரித்துண்டு, மண்ணுக்கு அடியில் புதைந்து பல ஆயிரம் ஆண்டுகள் அழுத்தப்பட்டு படிவங்களாகி ஒளிபெற்றுவிட்டன. நன்கு விளைந்த மணிகளை "தரமணி" (Precious Stones) அரைத்தர மணிகளை (Semi Precious Stones) என்றும் சொல்வார்கள்.

நவமணிகள் 9 நிறங்களில் கிடைக்கின்றன. அவைகள் ஒன்பான் மணிகள் அல்லது நவரத்தினங்கள் என்று அழைக்கப்படும். 1. வயிரம் 2. மரகதம் 3. நீலம் 4. கோமேதகம் 5. முத்து 6. பவளம் 7. மாணிக்கம் 8. புஷ்பராகம் 9. வைடூரியம் என்பனவாகும். மணிகளுக்குச் சிறப்புத்தருவது அதன் நிறமும், ஒளிவீச்சுமேஆகும். ஒளிவீச்சு அல்லது ஒளியின் வேகம் ஒருவினாடிக்கு 2லட்சத்து 93ஆயிரம் கிலோமீட்டர் ஆகும். கடினப் பொருட்களை ஊடுவிச் செல்லும் போது இவ்வேகம் குறையும். அதாவது வயிரத்தை ஊடுருவும் போது 1 லட்சத்து 23 ஆயிரம் கிலோ மீட்டர்தான். ஒளி பிரமிட்டுகளில் பட்டு பட்டைகளில் மோதி, எதிரொளித்து எதிரொளித்து ஒளி வெள்ளமாகப் பெருகி பெருக்கெடுக்கிறது. இந்த ஒளிப்பெருக்கால் மணிகள் மின்னுகின்றன.

பட்டை தீட்ட தீட்ட மணிகளில் பளபளப்பு ஏறுகிறது. வயிரத்திற்கு 58 முகப்பட்டை தீட்டுவார்கள். "பட்டை தீட்டிய வைரம் போல் பளபளத்தது" என்று உவமை கூறுவதுண்டு. மணியின் கடினத்தன்மையும் அதன் மதிப்பிற்கு ஒரு காரணமாகும். இதனை ஒப்படர்த்தி என்பார்கள். விஞ்ஞானிகள் இந்த ஒப்படர்த்தி மூலம் மணிகளின் கடினத்தன்மையைக் கணக்கிட்டு இருக்கிறார்கள். அதில் முதலிடம் பெறுவது வயிரம். அதன் எண்கள் 10 ஆகும். 7 எண்களுக்கு குறைந்த மணிகளில் நகைகள் செய்ய முடியாது. காரணம் அவைகள் உடைந்து விடும். நம் கைநகத்தின் கடினத்தன்மை 2½. இதை உதாரணமாகக் கொண்டு கடினத் தன்மையே உணர்ந்து கொள்ளுங்கள்.

வலிவும், பொலிவும் உள்ளதை வயிரம் என்றார்கள். 'வயம்' என்றால் வலிமை, ஒலி என்று பொருள். வயிரத்தை வைரம் என்று எழுதுவார்கள். ஆங்கிலத்தில் டைமண்ட் (diamond)

என்றால் "வெல்ல முடியாது" என்று பொருள்: வயிரத்தை வயிரத்தால் அறுக்கலாம் என்பது பழமொழி. "வயிரம் போன்ற உறுதி" என்ற உவமை கேட்டிருக்கலாம். "வயிரம் போல் மின்னியது" "வயிர நெஞ்சம்" "என்பன வயிரத்தின் சிறப்பைக் காட்டும். வயிரத்திற்கு வடமொழியில் "வச்சிரம்" என்று பெயர். இந்திரனின் ஆயுதத்தை வச்சிராயுதம் என்று சொல்லக் கேட்டிருக்கிறோம். வச்சிரம் என்றால் வலிமை என்று பொருள். உலகப்புகழ்பெற்ற வைரங்கள் பல இந்தியாவில் கிடைத்தவை. "கோகினூர்" "ரீஜண்டு" "ஐடிஸ்ஜ" என்ற பெயர் பெற்றவையாகும். முக்கியமான ஒன்பது மணிகளில் வைரம் மட்டும் ஒப்பில்லாததாகவும், உயர்ந்த நிலை கொண்டதாகவும் விளங்கினாலும், மக்களிடையே பரவலாக வயிரம் ஆதரவு பெறவில்லை. காரணம் விலையால் உயர்ந்தது, என்பதாலும் வயிரம் நிறமற்றதாக இருப்பதும் தான், என்று தெரியவந்துள்ளது. ஆனால் வயிரத்தின் ஒளி வெள்ளம் அதற்கு ஈடு இணையற்ற சிறப்பைத் தேடிக் கொடுத்துள்ளது. வயிரம் எப்படி எடுக்கிறார்கள் ? வயிரம் சாதாரண கரித்துண்டு. ஒருதுண்டு வயிரத்தையும், ஒருதுண்டு கரியையும் எரித்தால் மிஞ்சுகின்ற சாம்பல் இரண்டும் ஒரே எடையாகத்தான் இருக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். மண்ணுக்கடியில் புதையுண்டு கிடக்கும் வயிரங்கள் நில அதிர்ச்சி, நீரோட்டம் காரணமாக நிலமட்டத்துக்கு வருகின்றன. நிலத்திற்குள் நீண்ட குழாய்களைச் செலுத்தி பாறைகளைக்கடைந்து, மண்ணை வெளியே கொண்டு வருகிறார்கள். பிறகு நீர்விட்டு அலசி வயிரம் எடுக்கிறார்கள். சுத்தமான வைரக்கற்கள் நீரில் மிதக்கும். வயிரம் மிக மிக அரிதாகக் கிடைக்கும். உதாரணமாக ஒரு டன் மண்எடுத்தால் அதில் ½ காரட்டு வயிரம் கிடைக்கலாம். அல்லது ஒன்றுமே இல்லாதிருக்கலாம். அதனால் தான் விலை அதிகம் சொல்லப்படுகிறது. அப்படி எடுக்கப்பட்ட வைரக்கற்களில் சுத்தமானவைகள், நகைகள் ஆபரணங்கள் செய்யப்பயன்படுகின்றன. மட்டமான வைரம் தொழிற்சாலைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. வயிரம் பட்டை தீட்டவும் பயன்படுத்தப்படுகின்றன.

விற்பனை : வயிர விற்பனையில் தலை நகராக விளங்குவது ஐரோப்பாவில் உள்ள பெல்ஜியம் என்ற நாடு. பல நாட்டுச் சுரங்கங்களில் எடுக்கப்பட்ட வயிரத்தளங்கள் (Rough diamonds) இங்கேதான் முதலில் வருகின்றது. இங்கே பட்டை தீட்டப்பட்டு பின்னர் விற்பனை செய்கின்றார்கள். பட்டை தீட்டுவதில் பெல்ஜியம் முதலிடம். இரண்டாவது ரஷ்யா, மூன்றாவது இஸ்ரேல், நான்காவது இந்தியா என்று பட்டியலில் இடம் பெறுகின்றன. நிறம்: வைரத்திற்கு நிறம் இல்லை. தெளிந்த ஊற்றுநீர் போல் நிறமற்ற வயிரமே உயர்ந்த தரம் உடையது. ஆனாலும் பச்சை, சிகப்பு, மஞ்சள், நீலம், சாம்பல் நிறங்களிலும் கிடைக்கிறது. கருப்பு பழுப்பு, நிற வயிரங்கள், தொழிற்சாலையில் வயிரங்கள் வெட்டவும், மெருகிடவும் பயன்படுகின்றன. குணமும் குற்றமும் : நம்மவர்கள் நெடுங்காலமாகவே வயிரங்களின் குணம், குற்றம், அறிந்திருந்தார்கள். "இரத்தினப் பரீட்சை" என்ற நூலை தஞ்சை சரஸ்வதி நூலகம் வெளியிட்டுள்ளது. இந்நூல் வயிரத்தை ஆண், பெண் என்று பிரிக்கிறது. ஆண் வயிரம் : நல்ல ஒளி, வட்ட வடிவம், கரும்புள்ளி அல்லாத பெரிய வைரம். இதை வீட்டில் வைத்திருப்பவன் நற்பேறு பெறுவான். இதை ஆங்கிலத்தில் (INVESTMENT DIAMOND) என்பார்கள்.

பெண் வயிரம் : நல்ல ஒளியுள்ள சிறிய வைரம். இதை நகைகளில் பதித்து அணிந்து கொள்வோருக்கு நல்ல மக்கட்பேறு கிடைப்பதுடன் செல்வமும் பெருகும். கரும்புள்ளி, காற்றுக் குமிழி கீறல் உள்ள வைரங்களை அணியக்கூடாது. இவைகள் நன்மை பயக்காது.

தீமைகள் அதிகம் பயக்கும். நல்ல வயிரம் எப்படிக் கண்டு பிடிப்பது ? அவற்றின் அடையாளம் ஐந்து அவை ஆறு கோணமாக இருத்தல், கனம் இல்லாது இருத்தல். சம வடிவுள்ள எட்டுத்தளமாக இருத்தல், முனை கூர்மையாக இருத்தல், அழுக்கு (கரும்புள்ளி) இல்லா திருத்தல்: ஆகியவையாகும்.

குறைவுள்ள வயிரம் : (குறைகள் ஐந்து) 5.

1. நிறம் மங்கியிருத்தல், 2. புள்ளி இருத்தல், 3. கீறல் இருத்தல் 4. பொரிசல் போன்ற குமிழி 5. காக்காய் கால் போன்ற நீரோட்டம் ஆகியவையாகும். நிறமற்ற வயிரம் அணிந்தவர் தானம், தவம் செய்த பலன் பெறுவர். சிகப்பு வயிரம் அணிபவன் வெற்றிகளை அடைவான் சீராளனாக விளங்குவான் இவ்வயிரம் தற்போது மார்கெட்டில் ஆஸ்த்திரேலியர்களால் விற்பனைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. மஞ்சள் வயிரம் அணிந்தவர் பொருளும், புகழும் அடைவான், கலைஞனாகவும் இருப்பான். நீல நிற வயிரம் (Blue Jagger) செட்டியார்களிடையே பிரபலமடைந்தது. செல்வச் செழிப்பைக் காட்டக்கூடியது. கருப்புவயிரம் துக்கத்தை கொடுக்கும். பொதுவில் வயிரம் அணிந்தால் கெட்ட கனவுகள் தோன்ருது. வைரத்தால் பைத்தியம், குட்டம் குணம் அடையும் என்பது பல நாட்டவரின் நம்பிக்கை. பெண்கள் அணியும் மாங்கல்யத்தில் வயிரம் பதிக்கக் கூடாது என்று சாத்திரம் கூறுகிறது. இதை நினைவில் கொள்வோம். புள்ளிகள் விழுந்த, காற்றுக்குமிழ் உள்ள முனை உடைந்த வயிரங்களையும் அணிதல் நல்லதன்று.

மன்னர்கள், தெய்வங்கள் : மன்னர்கள் தங்கள் முடியில் வயிரம் பதித்திருந்தார்கள். ஆறுபடை வீடுகளில் ஒன்ருன சுவாமிமலையில் வயிரவேல் சாற்றுதல் ஒரு விழாவாக நடக்கிறது மைசூரில் வைரமுடிச்சேவை மிகச் சிறப்பாக நடக்கும். கன்யாகுமரியில் உள்ள குமரித் தெய்வம் அணிந்துள்ள மூக்குத்தி வயிரத்தால் ஆனது. மிகவும் ஒளிமிக்கது. கடலில் செல்லும் கப்பல்கள் அந்த ஒளியை கலங்கரை விளக்காக கருதி, கரையை நோக்கி வந்து, பாறைகளில் மோதி விபத்துக்குள்ளானதால் இப்போது குமரிதெய்வத்தின் கடற்கரை நோக்கி இருக்கும். சந்நிதி எப்போதும் முடியேயிருக்கும். இந்த உதாரணத்தின் மூலம் வயிரத்தின் ஒளி எவ்வளவு உயர்ந்தது என்பதை நாம் அறியலாம். திருப்பதி ஏழுமலையானுக்கும் வைரமுடி சாத்துகிருர்கள். மன்னர்கள் : வயிரத்தை விரும்பி அணிந்தனர். தெய்வங்களுக்கும் பக்தர்கள் வயிரத்தை பக்தியுடன் அணிவித்தனர். மக்களில் காதலிக்கு காதலன் வயிர மோதிரம் பரிசு அளிப்பது இப்போது முக்கியமான வழக்கமாகிவிட்டது. தற்போது மார்க்கெட்டில் பலவிதமான வைரங்கள்போன்று தோற்றமளிக்கும் (சிர்கோன் Zircon) மணிகள் விற்கப் படுகின்றன. பலர் நம்பி வாங்கி ஏமாந்த கதைகள் கேள்விப்பட்டதுண்டு.

ஆகவே வயிரத்தை அதிக விலை கொடுத்து வாங்கி அதை எப்படி சோதிப்பது என்ற கவலை வேண்டாம் வயிரத்தை சோதிப்பதற்கான கருவிகளும் அனுபவமும் என்னிடமிருக்கிறது. எனவே, என்னுல் சோதித்துக் கூறமுடியும். சோதனைக்கு ஒரு சிறு தொகை வாங்கப்படும்.

விபரம் அறிய விரும்புவோர் என்னுடன்
சுப. ராமனுஜன், ஸ்ரீ பழனி ஆண்டவர் பிரிண்டிங் பிரஸ்
51-A, திப்பிரான் தொட்டித் தெரு, திருச்சி-8.
என்ற முகவரியில் தொடர்பு கொள்க.

கரிகாலசோழீசுவரர்கோயில் கல்வெட்டுக்கள்

வெ. வேதாசலம், எம்.ஏ., செ. போசு எம்.ஏ.,
மதுரை.

நாட்டரசன்கோட்டை கரிகாலசோழீசுவரர்கோயிலில் சென்ற நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டுக்களும் பிற்காலப் பாண்டியர் காலத்தினைச் சார்ந்த கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன. இவை இக்கோயிலின் வரலாற்றினை அறியத் துணைபுரிகின்றன.

கருவறை, அர்த்த மண்டபம் ஆகியவற்றின் முன்பாக அமைந்த மண்டபத்தின் வெளிப்புறம் இரண்டு பக்கங்களிலும் சென்ற நூற்றாண்டில் பொறிக்கப்பெற்ற தமிழ்க் கல்வெட்டுக்கள் உள்ளன. இவை இக்கோயில் கருவறை, சிற்றாலயங்கள் ஆகியவற்றை நகரத்தார்கள் கட்டியமை பற்றித் 'தெரிவிக்கின்றன. மேலும் இக்கோயில் தானிகமாக சின்னச்சாமிக் குருக்கள் நியமிக்கப்பட்டமை பற்றித் தெரிவிக்கின்றன. எனவே பழங்காலத்திலிருந்து வந்த கரிகாலசோழீசுவரர் கோயிலை முழுவதுமாக நகரத்தார்கள் திருத்திக்கட்டித் திருப்பணி செய்தமையை இக்கல்வெட்டுக்கள் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது.

கோபுரக்கல்வெட்டுக்கள்

கரிகாலசோழீசுவரர் கோயிலின் வாயிலில் நிற்கும் கோபுரத்தின் அடிப்பகுதியில் (அதிட்டானத்தில்) கி.பி. 12-13ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அறுநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் எழுத்துக்களில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவை கி,பி. 12-13 ஆம் நூற்றுண்டில் இப்பகுதியில் ஆட்சி செய்த பிற்காலப் பாண்டியர் காலக் கல்வெட்டுக்களாகும்.

இக்கல்வெட்டுக்கள் அனைத்தும் இக்கோபுரத்திலேயே பழங்காலத்தில் பொறித்த கல்வெட்டுக்களாகத் தோன்றவில்லை. கல்வெட்டுப் பொறித்த கற்களைக் கொண்டுவந்து கோபுரம் கட்டியதாகத் தோன்றுகின்றது. வேறொரு கோயில்பகுதியிலிருந்து கல்வெட்டுப் பொறித்த கற்களை எடுத்துவந்து கோபுரம் கட்டும்போது சேர்த்திருக்க வேண்டும் அல்லது கோயிலின் வேறுபகுதியிலிருந்து இக்கற்கள் வந்திருக்கலாம். இவை தொடர்ச்சியாக இல்லாமலும் ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாமலும் இடைவெளிவிட்டுக் கோபுரத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. துண்டுக் கல்வெட்டுகளாக விளங்குகின்றன.

பாண்டியர் கல்வெட்டுக்கள்

இக்கல்வெட்டுக்களில் பிற்காலப் பாண்டிய மன்னர்களது புகழைக்கூறும் மெய்க்கீர்த்திப் பகுதிகள் உள்ளன. கி.பி. 13ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த சோணாடு கொண்ட மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி,பி. 1216-1238) விக்கிரமபாண்டியன் ஆகியோரது பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. மேலும் கி.பி. 12ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆட்சிபுரிந்த விக்கிரமபாண்டியன் பெயர்பொறித்த கல்வெட்டும் இக்கோபுரத்தில் உள்ளது. எனவே இக்கல்வெட்டுக்களில் பல இவர்கள் காலத்தில் பொறிக்கப்பட்டவையாக இருக்க வேண்டும்.

கல்வெட்டுச் செய்திகள்

இக்கல்வெட்டுக்கள் இவை எவ்வூரைச் சார்ந்தவை, எக்கோயிலிற்குரியவை என்பதையும் தெரிவிக்கின்றன. இவை களவழி நாட்டைச் சார்ந்த முடிகொண்ட பாண்டியபுரத்தில்

இருந்த 'திருச்சீவணமுடையமாதேவர்' என்றழைக்கப்பட்ட சிவன் கோயிலுக்குரிய கல்வெட்டு களாகும். இச் சிவன்கோயிலுக்கு அளிக்கப்பட்ட தானங்களைப் பற்றியும் அத்தானங்கள் வழங்கிய அரச ஆணையில் கையொப்பம் இட்ட அரசியல் அதிகாரிகள் பற்றியும் இக்கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

விக்கிரமபாண்டியன் கல்வெட்டு இக்கோயில் இறைவர்க்குத் திருப்படிமாற்றிற்காக (நாள்வழிப்பாட்டுச் செலவினங்களுக்காக) இறைஇறுக்கும் கோலால் முப்பதுமாநிலம் அளந்து அளித்தமை பற்றித் தெரிவிக்கின்றது. மற்றொரு ஆண்டுக் கல்வெட்டு அமுதுபடிக்காகத் தானமளித்ததைத் தெரிவிக்கின்றது. பாண்டியரின் மெய்க்கீர்த்தியுடன் விளங்கும் கல்வெட்டு ஒன்று வரி நீக்கிய நிலங்களை இச்சிவன் கோவிலுக்கு அளித்ததைக் குறிக்கின்றது. பல துண்டுக் கல்வெட்டுகளில் இக்கோயிலுக்கு அளித்த நிலங்களின் எல்லைகள் குறிப்பிடப்படுகின்றன. இவற்றில் முடிகொண்ட பாண்டியபுரத்தில் இருந்த மாணிக்கப் பேரேரி என்ற கண்மாய் ஒன்று குறிப்பிடப்படுகின்றது. இக்கோயில் ஆளுடையபிள்ளையாரை எழுந்தருளுவித்தமையைப் பற்றியும், இங்குள்ள கல்வெட்டு ஒன்றின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

[கரிகால சோழீசுவரர் கோயில் கல்வெட்டுகள் இக்கட்டுரை ஆசிரியர்களால் நேரில் வந்து படித்து ஆய்வு செய்யப்பட்டன. இவ்வூர் உடையவர் கோவிலிலும் பிற்காலப் பாண்டியர் காலத்துத் துண்டுக் கல்வெட்டுகள் உள்ளன. இவற்றில் ஒன்றில் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1216–1230) பெயர் குறிப்பிடப்படுகின்றது]

சில கல்வெட்டுகளின் வரிகள்:

(1)

1...ம பாண்டிய தேவற்கு யாண்டு.........நாள் நானூற்று முப்பத்து முன்றிலுல்...
2...செய்ய திருவாய்மொழிந்தருளினபடி இத்தேவற்கு திருப்படி மாற்றுள்ளிட்டு...
3...இறையிருக்கும் கோலால் (முப்பது) மாநிலம் இவ்வாண்டு...
4...தேவற்கு இவ்வூர் காராண்மையாய் வருகின்ற நிலம் உட்படக் கடமை...
5...டிக்கொள்கவென்று திருவாய்மொழிந்தருளினார் இவை வழுதிவ...
6...நிலம் உட்பட இவ்வூர்க் கடமை இறுக்குங்கோலால்...

(2)

1...நமக்குச் சொன்னமையில் தென்கள...
2...யும் நம் ஓலையும் தரச்சொன்னோம் பள...
3...நாராயண மூவேந்த வேளான் எழுத்து...

(3)

1...இன்னிலம் முன்றுமா...
2...ளுக்கும் திருநாட்படிக்கும்...

(4)

1 .... வாணவத.............................

2 .... இவை இராஜராஜ பல்லவராய எழுத்து இவை...

3... வழிநாட்டு..

4... ஸமானப் பல்லவரையன் எழுத்து இவை புரவுவரித்திணை

5 பலுடையான் சோமதேவன் ... நிலையான வல்லவன்...

(5)

1...புயத்திருப்ப பொருகட...நிலமகள் புணரக் கடவுள் மேருவிற் கயல் விளையாட வடபுல..

2...பெருஞ்சடைமுடிநாதன் சூடிய மதிக்குலந் திகழும் மணிமுடி சூடி விளங்கிய மணியணி வீர ஸிங்காதனத்து...

3...யபுரத்துத் திருச்சிவணமுடைய மாதேவர் கோயிலில் பதிபாத முலப்பட்டுடைய பஞ்சாசாரிய தேவகன்...

4...ராக இத்தேவற்கு இவ்வூர் பழந்தேவதான இறையிலியாய் நிக்கின நிலத்துக்கு மேல்...

5...வழிநாட்டு முடிகொண்ட பாண்டியபுரத்துத் திருச்சிவணமுடைய மாதேவற்கு...

6...ரண்டாவது முதல் கடமை அந்தராயம் உட்பட கைக்கொள்க வென்று இப்படி சந்...

7...யாண்டு யஉ வது முதல் அந்தராயம் உட்பட தேவதான இறையிலி...

(6)

1.. எழுத்து இவை புரவுவரிதிணைக்கள...

2...திணைகளநாயகம் மதுரோதை...

3...முகிய மணவாளன் சோமனுன...

4...ப்பரையன் எழுத்து...

(7)

1...னகிணற்றுக்கு விற்றுக்குடுத்த நிலம்

2...கிணற்று நீர்பாய இச்செய்வட...

3...து- சுந்தரபாண்டியதேவற்கு ஏழாவ

(8)

1...றுமா முக்காணியும் கண்ணன்கூத்தன்..
2...நியமங்குடையான் மேற்படிச் செய் நி..
3...ஞர்க்காணியும் நியமங்குடையாங்..
4...றுமுக்காணியும் கூத்தன் கண்ண..
5 ..யால் நிலம் முந்திரிகையும் அரையும் ஆ
6...விக்கிரமபாண்டியதேவற்கு யாண்டு யஉவது

(9)

1...எழுந்தருளுவித்த ஆளுடையபிள்ளையாருக்கு அமுதுபடி..
2...தலைமாறு இந்நிலம் கடமை அந்தராயத்துக்கு
3...சந்திராதித்தவற் செல்வதாக

(10)

1...மாணிக்கப்பேரேரிக்கீழ் நடுவிற்மடை
2...இறைக்கும் நாள் வாய்க்கால் போவதாகவும்
3,...திருச்சிவணமுடைய நாயனர் கோவில்

[இக் கட்டுரைகளை எழுதியுள்ள அறிஞர்களிருவரும் தமிழ் நாடு அரசாங்கத் தொல்பொருளியல், கல்வெட்டியல் துறையில் மதுரையிற் பணிபுரிகின்றார்கள். இம்மலரின் பதிப்பாசிரியர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அன்புகூர்ந்து அவர்களிருவரும் நாட்டரசன்கோட்டை வந்து, மேற்கண்ட கல்வெட்டுக்களைப் படித்து நமக்கு இக்கட்டுரையினை எழுதியுள்ளார்கள் ஊரார் சார்பில் அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்]

★★★

கலைமகள் கருணை வேட்டல்

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை – தூய
உருப்பளிங்கு போல்வாள் என்உள்ளத்தினுள்ளே
இருப்ப ளிங்கு வாராதிடர்!

வெள்ளைக் கலையுடுத்தி வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பள் – வெள்ளை
அரியாசனத்தே அரசரோ டென்னை
சரியாசனம் வைத்ததாய்!

களவழிநாடு

வெ. வேதாசலம் எம்.ஏ.
மதுரை.

இன்றையத் தமிழ்நாடு மாவட்டம், வட்டம் என்று பல பெரும் பிரிவுகளாகவும், சிறு பிரிவுகளாகவும் விளங்குவது போன்று பண்டையத் தமிழ்நாடும் பல பிரிவுகளாக விளங்கியிருக்கின்றது. சேர, சோழ, பாண்டியர் நாடுகளும், தொண்டைநாடும் இவ்வாறு பல சிறிய, பெரிய உட்பிரிவுகளைக் கொண்டிருந்தன. இந்நாடுகளிலுள்ள கல்வெட்டுகள் மூலம் இவற்றை அறிய முடிகின்றது. பெரும் பிரிவுகள் மண்டலம், கோட்டம், வளநாடு, பாடி, ராச்சியம், உசாவடி என்று அழைக்கப்பட்டன. இவற்றின் கீழமைந்த சிறிய உட்பிரிவுகள் நாடு, கூற்றம், முட்டம், இருக்கை, நிலை, கரைவழி, கண்டம், ஆற்றுப்போக்கு, குளக்கீழ் என்று பெயரிடப்பெற்று அழைக்கப்பட்டன. இவை அனைத்தும் சிறிய நாட்டுப் பிரிவைக் குறிக்கும் ஒருபொருள் குறித்த பல சொற்களாகும். (1)

தமிழ்நாட்டில் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்குப் பிறகு இத்தகைய உள்நாட்டுப் பிரிவுகள் உருவாகித் தொடர்ந்து வழக்கில் இருந்துள்ளன. கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்கு முன்பிருந்த சங்க காலத்தினைப் பொறுத்தவரை சேர, சோழ, பாண்டி நாடுகள் பல ஊர்களாகப் பிரிக்கப்பட்டிருந்தமையைப் பழந்தமிழ் இலக்கியங்களால் உணரமுடிகின்றது (2) பல ஊர்களை அடக்கிய நாடு என்ற உட்பிரிவு பழந்தமிழ் இலக்கிய காலத்திற்குப் பின்னரே ஏற்பட்டது என்பதைப் பூலாங்குறிச்சி போன்ற இடங்களில் கிடைத்த கல்வெட்டுகள் (கி.பி. 400) தெரிவிக்கின்றன. சமூக, பொருளாதார, அரசியல் அடிப்படையில் இவை உருவாகியுள்ளன.

களவழிநாடும் இவ்வாறு உருவான உள்நாட்டுப் பிரிவுகளில் ஒன்றாகும். இது பாண்டி நாட்டில் கி பி 900க்கு முன்பு நிலவிய முற்காலப்பாண்டியர் காலத்தில் உருவான நாடாகும். பாண்டி நாட்டில் விளங்கிய நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளில் இதுவும் ஒன்றாகும். களவழி என்ற ஊர்ப்பெயரின் அடிப்படையில் அதனைச் சூழ்ந்த பகுதி என்ற பொருளில் இப்பெயர் ஏற்பட்டுள்ளது. பாண்டி நாட்டில் இன்றைய பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்துச் சிவகெங்கையும் அதனைச் சூழ்ந்த பகுதிகளும் களவழி நாட்டைச் சேர்ந்த பகுதிகளாக விளங்கியிருக்கின்றன. சிவகெங்கை வட்டத்தில் அமைந்த பூவந்திக்குக் கிழக்கே காளையார் கோவிலுக்கு மேற்கே வேம்பத்தூருக்கு வடக்கே சோழபுரத்தினைக் கடந்துள்ள பகுதிகளும் களவழிநாட்டைச் சார்ந்த பகுதிகளாக நாயக்கர் காலம் முடிய விளங்கியுள்ளன. இக்களவழிநாடு என்பதே கண்ணுடையம்மன் போன்ற பிற்கால இலக்கியங்களில் ‘கலைவேள்வி’ நாடு என்று குறிப்பிடப்படுகின்றது. கி. பி. 18ஆம் நூற்றாண்டில் ‘களவழி என்பது ‘கலைவேள்வி’ என்று மாறியிருக்கின்றது.

இக்களவழிநாட்டைச் சூழ்ந்த நாடுகளாக வடக்கே கீழைத்திருத்தியூர்முட்டமும் மேலைத்திருத்தியூர் முட்டமும் தெற்கே மங்கலநாடும் மேற்குடிநாடும் கீரனூர் நாடும் மேற்கே குன்றத்தூர் குளக்கீழ் நாடும் கிழக்கே கானப்பேர் கூற்றமும் விளங்கியிருப்பதை இப்பகுதியில் கிடைத்துள்ள கல்வெட்டுக்கள் மூலம் அறியமுடிகின்றது. இக்களவழி நாட்டைப் பற்றிய முதற் குறிப்பு பராந்தகநெடுஞ்சடையன் (கி பி. 768 – 815) என்ற பாண்டியமன்னன் வெளியிட்ட சீவரமங்கலம் என்ற செப்பேட்டின் மூலமே தெரிந்து கொள்ள முடிகின்றது. தென்களவழி நாட்டில் இருந்த வேலங்குடி என்ற ஊரை சீவரமங்கலம் என்ற பெயரில் அந்தணர்களுக்குத் தானமாக

அளித்தது பற்றியே இச்செப்பேடு தெரிவிக்கின்றது. இச்செப்பேடு மூலம் களவழிநாடு என்பது இப்பாண்டியன் காலத்திலேயே தென்களவழிநாடு என்றும் வடகளவழிநாடு என்றும் இரண்டு பிரிவுகளாக விளங்கியிருப்பதைத் தெரிந்து கொள்ள முடிகின்றது.

வேம்பத்தூர் முதல் சோழபுரம் என்ற ஊரைத் தாண்டியுள்ள பகுதிகள் தென்களவழி நாடு என்றும் இதற்கு வடக்காகவும் வடகிழக்காகவும் நாட்டரசன் கோட்டையைச் சூழ்ந்த பகுதிகள் வடகளவழிநாடு என்றும் அழைக்கப்பட்டிருக்கின்றது. நாட்டரசன்கோட்டை 'வடகலை வேள்விநாட்டு நாட்டரசன்கோட்டை' என்று கண்ணுடையம்மன் பள்ளுவில் குறிப்பிடப்படு-கின்றது. இவை தவிர அளகை மாநகர், திசைசூழ்ந்தமங்கலம், புற்குழி, திருமாறனூர் போன்ற பகுதிகள் வடகளவழி நாட்டில் இருந்த சில ஊர்களாகப் பழங்கல்வெட்டுக்கள் மூலம் அறிய முடிகின்றது (3) தென்களவழிநாட்டில் இருந்த சில ஊர்களாக சோழபாண்டியநல்லூர், மானிலை வெண்மானிடம், முடிகொண்ட சோழபுரம், பெருவேம்பற்றூர், புல்லூற்றியான ஸ்ரீ வல்லபநல்லூர், வேலங்குடியான சீவரமங்கலம், நிலைகாணிமங்கலம், இளந்தியன்குடி, பெருமகற்றூர், கள்ளிக்குடி கடம்பங்குடி, குரங்குடி முதலிய ஊர்கள் இருந்திருப்பதைக் கல்வெட்டுக்கள், (4) செப்பேடுகள் (5) மூலம் உணர முடிகின்றது. கண்ணுடையம்மன் பள்ளு செந்நெற்குடி, இலுப்பைக்குடி போன்ற மேலும் சில ஊர்கள் வடகளவழிநாட்டில் இருந்திருப்பதைத் தெரிவிக்கின்றது.

இக்களவழிநாடு பாண்டிநாட்டில் சோழர் ஆட்சி நிலவியபோது இராசேந்திர சோழவள நாடு என்ற பெரும்பிரிவில் இருந்திருப்பதையும் இப்பகுதியில் கிடைக்கும் கல்வெட்டுக்கள் தெரிவிக்-கின்றன. பாண்டிநாட்டில் பாண்டிய மன்னர் ஆட்சியின்போது உருவான இக்களவழிநாடு கி.பி. 18-ஆம் நூற்றாண்டு முடிய வழக்கில் இருந்திருக்கின்றது. நிர்வாகத்தின் பொருட்டு இந்-நாடு பாண்டியர் காலத்திலேயே தென்களவழிநாடு என்றும் வடகளவழிநாடு என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. களவழி என்ற ஊரின் அடிப்படையில் அதனைச் சூழ்ந்த பகுதி என்ற பொருளில் அமைந்த இந்த உள்நாட்டுப் பிரிவு ஆங்கிலேயர் காலத்தில் புதியதாக ஏற்படுத்தப் பட்ட மாவட்டம், வட்டம் என்ற பிரிவுகளால் வழக்கிழந்துவிட்டது. களவழி என்ற ஊரும் இப்பகுதியில் எங்கிருந்தது என்று அறிய முடியவில்லை.

அடிக்குறிப்புகள்:

(1) *வெ. வேதாச்சலம், 'குளக்கீழ்' தொல்லியல் ஆய்வுத் தொகுதி, மதுரை.* (1985), பக்-278

(2) *மேலது* பக். 279

(3) ARE. No. 276 of 1929-30; S.I.I. Vol. III. No. 206A; ARE. No. 18 of 1924; S.I.I. Vol. XIV No. 234.

(4) S.I.I. Vol. XIV. Nos 145, 38; ARE. No. 47 of 1926; S.I.I. XIV. No. 103. ARE. No. 229 of 1924.

(5) *சீவரமங்கலம் செப்பேடு, வரி*, 59-69

உ
சிவமயம்
அருள்தரு கண்ணுடையநாயகி அம்மன் துணை





சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் இளைய பரம்பரை அறங்காவலர் காப்பாளர்

மேதகு ராஜகுமாரி ராஜலெட்சுமி ரகுராஜ் அவர்கள் ஆளுகைக்கு உட்பட்ட

நாட்டரசன்கோட்டை

அருள்தரு கண்ணுடையநாயகி அம்மன் திருக்கோயில்

திருக்குட நன்னீராட்டு விழா
நினைவு மலர் வெளியீட்டு விழா
அழைப்பிதழ்

நிகழும் சுக்ல ஆண்டு வைகாசி மாதம் 32உ 14-6-89 புதன்கிழமை மாலையில் நடைபெறவிருக்கும் மேற்கண்ட மலர் வெளியீட்டு விழாவில் தாங்கள் சுற்றமும் துணையும் சூழ்தர வந்து பங்கு கொண்டு அன்னையின் அருளாசியினைப்பெற்று பேரானந்தப் பெருவாழ்வு வாழ வேண்டுகிறோம்.

சுக்ல ௵ வைகாசி ௴ 24உ
6-6-89.

இங்ஙனம்
நகரத்தார்
நாட்டரசன் கோட்டை

நிகழ்ச்சி நிரல்

14-6-89 புதன் கிழமை மாலை 4-30 மணியளவில்
அருள்தரு கண்ணுடையம்மனுக்கு அபிஷேகம்

6-00 மணியளவில் தீபாராதனை
6-30 மணியளவில் மலர் வெளியீட்டு விழா

கடவுள் வணக்கம் : சிவத்திரு. குப. சொக்கலிங்கம் என்ற
கருப்பையா செட்டியார் அவர்கள்
வரவேற்புரை : திரு. சுப. ராம. சுப. இராமநாதன் செட்டியார் அவர்கள்
தலைமையுரை : திரு. கயி. ஆறு. ஞா. ஆறுமுகம் செட்டியார் அவர்கள்
மலர் விளக்கம் : திரு. நா. சே. நாராயணன் செட்டியார் அவர்கள்
மலர் வெளியீடு :
வெளியிடுபவர் : 'சைவ சித்தாந்த சரபம்' 'சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்' என்ற
பாலகவி வே. இராமநாதன் செட்டியாரவர்கள் தேவகோட்டை
முதல் மலரினைப்பெறுபவர் : திரு பழ.வீர.கண.ச. கண்ணப்ப செட்டியாரவர்கள்
உரைகள் : திரு. ஏ. சத்தியமூர்த்தி செட்டியாரவர்கள்
திரு. சோம. வெள்ளையப்ப செட்டியாரவர்கள்
திரு. இராம. சிவசுப்பிரமணியம் செட்டியாரவர்கள்
'காசிஸ்ரீ' பொற்கிழிக் கவிஞர்
அரு. சோமசுந்தரம் செட்டியாரவர்கள்
நன்றியுரை : திரு. ராம. உ. உ. கருப்பையா செட்டியாரவர்கள்
